ஸ்ரீ

# ரமண ஞான போதம்

ஐந்தாம் பாகம்

# அநுபவ விளக்கம்

## (மூன்றும் பிரிவு)

ஸ்ரீ முருகனர்

ஓம்
நமோ பகவதே ஸ்ரீ அருணாசல ரமணாய

# ஸ்ரீ
# ரமண ஞான போதம்

## ஐந்தாம் பாகம்

## அநுபவ விளக்கம்

(மூன்றாம் பிரிவு)

இயற்றியவர்

ஸ்ரீ முருகனார்

பதிப்பாளர்

ஸ்ரீ ரமண கேந்திரம் — புது தில்லி

1986

உரிமை பதிப்பாளருடையது

கிடைக்குமிடம்:—

**ஸ்ரீ ரமணாச்ரமம் புத்தக சாலை**
திருவண்ணாமலை–606 603, தமிழ் நாடு.

Ramana Kendra,
8, Institutional Area,
Lodi Road, New Delhi-110 003.

Sri Arunachala Ramana Nilayam
Sri Ramana Nagar
Tiruvannamalai–606 603, Tamil Nadu.

Ramana Kendra,
No. 1, C. P. Ramaswami Iyer Road,
Madras-600 018.

Ramana Maharshi Centre for Learning,
40/41, II–Cross, Lower Palace Orchards,
Bangalore-560 003.

**விலை ரூ. 10**

மத்திய அரசின் உதவி பெற்று இந்நூல் வெளியிடப்படுகிறது.

Published with the Financial Assistance from the Government of India, Ministry of Education & Social Welfare (Dept. of Education.)

This book has been published on the paper supplied by the Government of India at concessional rates.

அச்சிட்டோர்:
விநாயக ஃபைன் ஆர்ட் பிரிண்டர்ஸ்,
163, வெள்ளாளத் தெரு, சென்னை-600 084.

## பதிப்புரை

"ஸ்ரீ ரமண ஞான போதம்" என்ற ஒன்பது தொகுதிகள் கொண்ட பெரிய நூல் வரிசையின் பதிப்பாசிரியராகப் பல்லாண்டு அன்புப்பணி புரிந்து வந்த தவத்திரு சாது ஓம் சுவாமிகள் 1985ம் ஆண்டு மார்ச்சு மாதம் 17ம் நாளன்று விதேக கைவல்யம் எய்தினர்.

(நேரிசை வெண்பா)

இரக்தாட்சீ பங்குனி நான் கேகா தசியா
பிரவி நா(ள்) ஸோணத்தி லிங்கே—நரவுருநீத்
தத்தன ரமணனே டைக்கியமா னன்ஞான
வுத்தமனும் நம்சாது ஓம்.

ஸ்ரீ ரமண ஞான போதம் என்ற நூல் வரிசையிலே முதல் நான்கு பாகங்களைப் போலவே இவ்வைந்தாம் பாகம் முழுவதும் ஸ்ரீ சாது ஓம் சுவாமி அவர்களாலேயே வகை வகுத்து, வரிசைப்படுத்தி, தலைப்புத்தந்து அச்சகத்துக்கு அனுப்பப் பட்டது. மேலும், எஞ்சியுள்ள நான்கு பாகங்களில் வெளிவர வேண்டிய பல்லாயிரக் கணக்கான செய்யுள்களும் ஸ்ரீ சுவாமி அவர்களாலேயே பொருள் கருதித் தொகுக்கப்பட்டு, உரிய அத்தியாயத் தலைப்புகளும் தரப்பெற்றுள்ள நிலையில் உள்ளன. உருவம் கருதிச் செய்யுள்களை ஒவ்வொரு தலைப்பின் கீழும் வரிசைப் படுத்தும் வேலை மட்டுமே ஸ்ரீ சுவாமிகள் நமக்கு விட்டுச் சென்றுள்ளார்.

ஸ்ரீ முருகனரைப் போலவே ஸ்ரீ சாது ஓம் சுவாமிகளும், ஆன்ம சாந்நித்திய உலகில் சஞ்சரிப்பவர். ஆனதால், ஸ்ரீ ரமண ஞான போதமாகிய சற்போதத்தை நன்குணர்ந்து, வாலறிவாம் அந்தப் பேரின்பத்தைப் பற்பல வகையிற் பிரதி பலிக்கும் இந்தப் பல்லாயிரக் கணக்கான பாடல்களைப் பொன்னே போல் போற்றிப் பாதுகாத்து, மலையாய்க்குவிந்திருந்த பாடல்களாகிய செம்மணித்திரளை வகைப்படுத்தி மாலை மாலையாய்க் கோத்துப் பதிப்பிக்கும் திருப்பணியில் தமது

நேரத்தையும் கவனத்தையும் செலுத்தி வந்தார். தாம் பெற்ற இன்பம் பிறரும் பெறவேண்டும், பெற முடியும் என்று துணிந்து இந்த மகத்தான தொண்டினைத் தாம் மேற்கொண்டதோடு, அதைத் தொடர்ந்து நடத்தத் தகுதி பெறுமாறு சில சீடர்களையும் பயிற்றுவித்தார். இந்த ஏற்பாடு நிறைவேற இறைவன் ரமணன் அருள்புரிவாராக.

ஸ்ரீ முருகனாரின் தமிழ்நடை கடினமானது என்று சிலர் அஞ்சுவதால் இந்தத் தொகுதியில் ஓரளவு அரும் பதவுரை ஒன்றும் தந்துள்ளோம்.

ரமணா நுபூதியை வாரி வழங்கும் இந்தப் பாடல்கள் பண்டிதர்களுக்காக வல்ல, தமிழறியும் சாதகர்கள் அனைவர்க்குமாகவே பாடப்பெற்றன என்ற உறுதியான நம்பிக்கையுடன் தான் சாது ஓம் சுவாமிகள் இந்த மாபெரும் திட்டத்தை வகுத்து, தொடங்கி, முடிவதற்கும் முன்னேற்பாடு செய்து சென்றுள்ளார்.

''ஸ்ரீ ரமண வழி'' ''சாதனை சாரம்'' முதலிய எத்தனையோ நூல்களை உரைநடையாகவும் செய்யுளாகவும் இயற்றிய ஸ்ரீ சாது ஓம் சுவாமிகள், ஸ்ரீ ரமணாநுபவத்தைப் பற்றித் தாம் விவரிக்காது, ஸ்ரீ முருகனார் அருளிச் செயல்களையே போற்றிப்பதிப்பிக்க முன் வந்தது ஏன் என்று சிந்தித்தால், அவரது நற்றவமாகிய யானற்ற இயல்பு நம்மை வியக்கச் செய்யும். ஆன்ம ஞான நிலையைப் பொருந்த விளக்க ஸ்ரீ பகவானே ஸ்ரீ முருகனாரைத் தேர்ந்தெடுத்து நியமித்து, அவரது வாக்கு மூலம் தாமே பேசுகிறார் என்ற குருவாசகக் கோவையிலிருந்து தெளிவாகிறது. இதனை முழு மனதுடன் ஏற்றுக் கொண்டு ஸ்ரீ சாது ஓம் சுவாமிகள் ரமணாநுபவத்தை விளக்கும் நூல் எதுவும் வேறொருவர் எழுதத் தேவையில்லை என்று கருதினார். எனவே, கோவை உரையில் முருகனாரைப் பாட்டுவித்தவன் ஸ்ரீ ரமணனே யாதலால், அந்த பகவானுக்கே நூலின் பொறுப்பு ஏற்புடையதாகும் என்று ஸ்ரீ சாது ஓம் சுவாமிகள் விளக்குகிறார்.

அருள்வயப்பட்ட அன்பர்களிடையே ஒற்றுமை காண்பதே சிறப்பாகும். ஆன்மாவுக் கன்னியனாய் ஞானி

செயல்படுவது எங்ஙனம்? நடனனந்தர் இந்த ஒருமைப் பாட்டை உறுதிப் படுத்தி.

—யதியாஞ்
சதிரேய் முருகனாய் சாதுவோ மாயப்
பதியே படைத்ததென் பார்!

என்று பாடினர்*

ஸ்ரீ பகவானே பல துதிகளில் இறைவன் அருள் வேண்டி ஏங்கி மன்றுடுவது அன்பரோடு ஐக்கியம் ஆனதால் அன்றோ?

சித்தனே, சாதகனே என்று வினவாமல், தமதுயானந்நி யங்கும் நிலையை ஸ்ரீ சாது ஓம் சுவாமிகள் உறிய உவமையால் விளக்குகிறுர்.

இறந்தேனு வின்னு மிருந்தேனு வுன்னை
மறந்தேனு வொன்று மறியேன்—றிறந்துவா
யென்னைப் பிடித்த விறைவேங்கை யேரமணு
பின்னை நடந்த தென்ன பேசு.

(ஸ்ரீ ரமண ஸஹஸ்ரம்-960)

மீளா ஆளான அடியார்க்கு அகம் ஏது?

தர்மாலயா
சென்னை-18.

கி. சுவாமிநாதன்

* "குருவாசகக் கோவை உரை" என்ற நூலின் சிறப்புப் பாயிரம் பாடல் 10ஐக் காண்க

ஓம்

நமோ பகவதே ஸ்ரீ அருணசல ரமணய.

# முன்னுரை

'**ஸ்ரீ ரமண ஞான போத**'த்தின் ஐந்தாம் பாகமாக வெளி வருவது ஸ்ரீ முருகனரது **ஆன்மாநுபவ விளக்கத்தின்** மூன்ரும் பிரிவு ஆகும். சென்ற பிரிவின் முன்னுரையிற் கூறப்பட்டது போல் தமது சற்குருவின் பேரருளால் தாம் பெற்ற ஞானனுபவங்களை ஸ்ரீ முருகனர் சுமார் 8000 பாடல்களில் விளக்கியுள்ளவை யாவும் அநுபவ விளக்கம் I, II, III, IV, என்று நான்கு பாகங்களாக வெளியிடப்படுகின்றன. இவையாவும் ஸ்ரீ சாது ஓம் சுவாமிகளாலேயே தொகுத்து வகுக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ சாது ஓம் சுவாமிகள் தாமே ஒரு அனுபவ ஞானியான படியால், இப்பாடல்களின் உண்மை மதிப்பை அவரால் நன்கு உணர முடிந்திருந்தது. அதனல் தான் அப்பாடல்களின் பிரதிகளைத் தயார் செய்வதிலும், பத்திரப்படுத்துவதிலும், தொகுப்பதிலும், அச்சிடுவதிலும் அவர் தமது வாழ்வின் அதிக நேரத்தையும், சக்தியையும் அர்ப்பணித்திருந்தார். தவிரவும் நம் போன்ற அன்பர்களையும் இப்பாடல்களைப் படித்து அவைகளின் பெருமதிப்பைத் தானே உணர்ந்து கொள்ளும்படி ஊக்குவித்துக் கொண்டிருந்தார்.

ஸ்ரீ முருகனர் சுவாமிகளின் பாடல்களைப் புரிந்து கொள்வதில் பண்டிதர்களுக்கே யன்றி ஏனையோருக்கும் மிகவும் கடினமாயுள்ளதே என்று சிலர் குறிப்பிட்டபோது, "இப்பாடல்களின் உண்மையான மதிப்பைப் புரிந்து கொள்ளும் சமயமும் அதற்கேற்ற உண்மையான சாதகர்களும் ஒரு காலத்தில் வருவார்கள். இப்பாடல்கள் பண்டிதர்களுக்கு மட்டுமல்லாமல் பகவான் ஸ்ரீ ரமணரது வழியைப் பின்பற்றுவதற்காக பெருமளவு ஊக்கமும், உபாய செல்வங்களும் (Wealth of clues) உள்ளடக்கியுள்ளதை உணர்ந்து கொள்ளும் முமுட்சுக்களுக்காகவே யாம். தமிழ் அறியும் அன்பர்கள் பகவான் ஸ்ரீ ரமணரது வழியைப் பின்பற்றுவதில் உண்மையான ஈடு

பாடு உள்ளவர்களே யானல், சிறிது முயற்சி மேற்கொண்டு ஸ்ரீ முருகனரின் பாடல்களைப் படிக்க முற்பட்டாலே அவற்றின் மெய்ப்பொருளை சீக்கிரத்தில் அறியவும் முடியும்'' என்று ஸ்ரீ சாது ஓம் சுவாமிகள் எப்போதும் சொல்வது வழக்கம். இக் கூற்று முற்றிலும் உண்மை என்பதை ஸ்ரீ முருகனர் சுவாமிகளின் பாடல்களை ஆர்வத்துடன் படித்து வரும் அன்பர்கள் தமது சுய அனுபவத்திலேயே கண்டு கொள்வார்கள்.

''ஞானிக்கு அஞ்ஞானம் இல்லாததாலும், அவருக்கு அன்னியமாக பிறர் இல்லாததாலும், ஞானி ஒருவன் நான் ஞான மடைந்து விட்டேன் என்று சொல்ல மாட்டான் என்று ஸ்ரீ பகவான் கூறியுள்ளாரே? அவ்வாறிருக்க, ஸ்ரீ முருகனர் தாம் ஞானம் அடைந்தது பற்றி பலமுறை திரும்பத் திரும்ப எழுதுகிருரே!'' என்று ஒரு முறை ஸ்ரீ சாது ஓம் சுவாமிகளிடம் ஓர் அன்பர் கேட்டதற்கு ''நான் ஞானம் அடைந்து விட்டேன்! என்று ஞானி ஒருவன் தானே கூறத்தேவை என்று கருத மாட்டானயினும், ஸ்ரீ முருகனர் சுவாமிகள் போன்ற மெய்ஞ் ஞானிகளிடமிருந்து ஞானத்தின் நிலைமையைப் பற்றியும், ஸ்ரீ சற்குருவின் அருளாலேயே அந்நிலையை அவர் எவ்வாறு அடையப் பெற்ருர் என்பது பற்றியும் சாதகர்கள் கேட்டுத் தெரிந்து அடையத் தக்க பெரு லாபமும் உண்டு. அதனல் தான் ஆன்ம ஞானத்தின் நிலையைப் பற்றியும் சற்குருவின் அருளால் அந்நிலை எவ்வாறு அடையப் பெறுகின்றது என்பது பற்றியும் பற்பல உண்மைகளை உலகுக்கு வெளிப்படுத்துவதற்கு ஸ்ரீ பகவான் ரமணரது தெய்வீக சக்தி ஸ்ரீ முருகனர் சுவாமிகளின் பரிசுத்தமான மனே, வாக்கு, காயங்களை அகந்தையற்ற உபகரணங்களாகப் பயன்படுத்தியது. தமது சொந்த பெருமைக்காக ஸ்ரீ முருகனர் சுவாமிகள் இப் பாடல்களை எழுதவேயில்லை. மேலும், இப்பாடல்களை எழுதும்போது கர்த்ருத்வ பாவத்துடனும் எழுதவுமில்லை'' என்று ஸ்ரீ சாது ஓம் சுவாமிகள் கூறினர்.

ஸ்ரீ முருகனருடைய இந்நிலை கீழ் வரும் பாடல்களால் தெற்றென விளங்கும்.

''சுத்தசிவ மாகத் துலங்கு சொரூபவருள்
வித்தகனுக் கென்னை விலைப்படுத்தி விட்டதாற்
செத்தொழிந்த மோகச் செருக்காலே யானெனதென்
நித்தனுவைப் பற்றவெனக் கில்லை சுதந்திரமே.'' (454)

"யானே வவனடிமை யென்று லவனன்றி
யானென் றுயிர்த்தெழவோ ரேதுவுண்டோ—ஊனென்
றுயிரான பொய்த்தன்மை யோயவுணர்ந் தியானென்
செயலின்றி வாழ்வன் சிவத்து." (311)

"......யாதானும்
என்பொறுப்புச் சற்றுமின்றி யெல்லா மவன்பொறுப்பா
அன்போளிர்வ தாயிற் றகத்து." (1936)

தாம் அடைந்த பேற்றினையும் தாம்வாழும் இடத்தையும் கீழ்வருமாறு விளக்குகிறார்:

"......ஊனு
வுலவு மகந்தை யுணர்வா மயக்கற்
றிலகு முண்மைச் சிற்பரமே யான்". (2016)

"..... காலனுள்ளிட் டியாருங் குறுகவொண்ணு
மாண்பான காவலியல் வைப்புநான் வாழிடமே". (2048)

"மோனமே யுண்மை முடிபா விளங்கிதயத்
தானமே சாந்திபத சாம்ராச் சியம்." (1948)

இவ்வாறு தாம் அடைந்த அருட்பேற்றினை

"அடியேனுக் காசையென் றுண்டான் பதத்திற்
குடியேற யாவரையுங் கூட்டல்—அடியனேன்
பெற்றபே றிந்தப் பெருநிலத்தோ ரெல்லோரும்
பெற்றுய்ய வேண்டும் பெரிது." (2014)

எனவும்,

"குருபதமே மோனக்குறிப்பேயலான் மற்றொரு தவமோ ராதென் னுணர்வு" (542), "உண்ணு ரமுத வொளிப் பிழம்பா வுள்ளதகத் தண்ணு மலையானடி" (540) "சித்தந் தெளிந்த திருத்தொண்டர் கூட்டுறவே மெய்த்தவமா மேவு மெனக்கு" (1858) எனக்கொண்டு வாழ்ந்த ஸ்ரீ முருகனர் சுவாமிகளது தவப்பயனையும்

உள்ளதனை யுள்ளபடி யுள்ளத் திருந்துதேற்
றுள்ளியோ னுணா வுடையான் சொரூபவருள்
வெள்ளத் தமிழ்ந்தும் மிதந்துந் துளைதலாற்
கள்ளமனத் தாபக் கவலை கழன்றதே. (263)

எனக்கவலை கழன்றமைக்குக் காரணமும் கூறி வாழ்ந்த ஸ்ரீ முருகனுர் சுவாமிகளது வாழ்வினையும், ஸ்ரீ பகவானின் அன்பர்கள் அனைவரும் இந்நூலின் வாயிலாய் நன்குணர்ந்து வீட்டுப் பேற்றில் திளைத்து இன்புற ஸ்ரீ ரமண பகவான் அருள் புரிவாராக.

சென்னை-15.

**நா. த. கணேசபாஸ்கரன்**

**K. சுப்ரமண்யன்**

**H. வைத்யநாதன்.**

## உள்ளுறை


பக்கம்

பதிப்புரை ... iii
முன்னுரை ... vii

**பாயிரம்**

1. அவனே பாடுகின்ருன் ... 1
2. இறைவனே கரி ... 2
3. அவையடக்கம் ... 2
4. நூற் பொருள் ... 3
5. நூற் பயன் ... 3
6. மங்கலம் ... 3

**நூல்**

1. பிற வேண்டாமை ... 4
2. பிறவின்பம் நாடாமை ... 4
3. பிறபோகம் உவர்த்தல் ... 6
4. ஞான வைராக்கியம் ... 6
5. துறவு ... 6
6. அறல்

க. மய லறல் ... 7
உ. மோக மறல் ... 8
ங. புல னறல் ... 10
ச. விஷய:வேட் கையறல் ... 10
ரு. அவா வறல் ... 11
சு. அவிச்சை யறல் ... 12
எ. மருளறல் ... 12
அ. கற்பனை யறல் ... 12
கூ. மனமறல் ... 14
க0. எண்ணமறல் ... 17
கக. வேசற வறல் ... 17
கஉ. மிடிமை யறல் ... 17
கங. உலக மறல் ... 18

| | | |
|---|---|---|
| ௧௪. | உலகமயக்க மறல் | ... 18 |
| ௧௫. | ஈன மறல் | ... 19 |
| ௧௬. | ஊன மறல் | ... 19 |
| ௧௭. | ஏத மறல் | ... 19 |
| ௧௮. | ஆசார மறல் | ... 20 |
| ௧௯. | கர்ம மறல் | ... 20 |
| ௨0. | சேட்டையறல் | ... 21 |
| ௨௧. | கள்ளங்கர வறல் | ... 21 |
| ௨௨. | பேத மறல் | ... 21 |
| ௨௩. | முரணறல் | ... 23 |
| ௨௪. | விக்ஷேப மறல் | ... 23 |
| ௨௫. | அயலறல் | ... 23 |
| ௨௬. | துவந்த மறல் | ... 23 |
| ௨௭. | சலனமறல் | ... 24 |
| ௨௮. | முப்புடி யறல் | ... 25 |
| ௨௯. | சுட்டறல் | ... 26 |
| ௩0. | பாச மறல் | ... 27 |
| ௩௧. | பசுத்துவ மறல் | ... 30 |
| ௩௨. | சுற்றமறல் | ... 31 |
| ௩௩. | பற்றறல் | ... 31 |
| ௩௪. | மாயை யறல் | ... 33 |
| ௩௫. | அவித்தை யறல் | ... 34 |
| ௩௬. | பிரமாத மறல் | ... 34 |
| ௩௭. | காலதேச மறல் | ... 35 |
| ௩௮. | பொய் யறல் | ... 35 |
| ௩௯. | சித்த மல மறல் | ... 35 |
| ௪0. | கவலை யறல் | ... 36 |
| ௪௧. | இருளறல் | ... 37 |
| ௪௨. | இடரறல் | ... 37 |
| ௪௩. | துயரறல் | ... 38 |
| ௪௪. | கலக்கமறல் | ... 38 |
| ௪௫. | அச்ச மறல் | ... 39 |
| ௪௬. | ஊழறல் | ... 39 |
| ௪௭. | கடமை யறல் | ... 40 |
| ௪௮. | அன்னிய மறல் | ... 40 |
| ௪௯. | அயற்கல்வி யறல் | ... 40 |
| ௫0. | நானறல் | ... 41 |
| ௫௧. | ஆணவமறல் | ... 42 |
| ௫௨. | செருக்கறல் | ... 43 |

| | | | |
|---|---|---|---|
| ௫௩. | யானற்றுத் தானாதல் | ... | 43 |
| ௫௪. | அகங்காரம் — ஆணவம் அறல் | ... | 44 |
| ௫௫. | ஜீவோபாதி யறல் | ... | 59 |
| ௫௬. | அக-மமதைக ளறல் | ... | 59 |
| ௫௭ | கர்த்ருத்துவ மறல் | ... | 60 |
| ௫௮. | அபிமான மறல் | ... | 61 |
| ௫௯. | பிறவியறல் | ... | 61 |
| ௬௦. | அவத்தை யறல் | ... | 66 |
| ௬௧. | அவித்தை யறல் | ... | 67 |
| ௬௨. | அவச மறல் | ... | 67 |
| ௬௩. | மலமறல் | ... | 67 |
| ௬௪. | ஜனன மரண மறல் | ... | 67 |
| **7.** | **உள்ளத் துறைதல்** | ... | 67 |
| **8.** | **உள்ளத் துறைதலும் பயனும்** | | |
| ௧. | அகந்தை, யறல் | ... | 93 |
| ௨. | இருவினை யறல் | ... | 96 |
| ௩. | துன்ப மறல் | ... | 96 |
| ௪. | குறை வின்மை | ... | 96 |
| ௫. | கோச மறல் | ... | 96 |
| ௬. | பாசமறல் | ... | 96 |
| ௭. | வஞ்சமறல் | ... | 97 |
| ௮. | மயலறல் | ... | 97 |
| ௯. | எல்லாம் கற்பனா விலாசம் | ... | 98 |
| ௧௦. | மனக் கற்பனை யறல் | ... | 98 |
| ௧௧. | கிரந்தி பேதம் | ... | 99 |
| ௧௨. | மாயை யறல் | ... | 99 |
| ௧௩. | மருளறல் | ... | 99 |
| ௧௪. | வாட்ட மறல் | ... | 99 |
| ௧௫. | அயலறல் | ... | 100 |
| ௧௬. | இருளறல் | ... | 100 |
| ௧௭. | கலக்கமறல் | ... | 100 |
| ௧௮. | சலனமறல் | ... | 101 |
| ௧௯. | காலதேச மறல் | ... | 101 |
| ௨௦. | பிறவியறல் | ... | 101 |
| ௨௧. | அமுதாநுபூதி | ... | 102 |
| ௨௨. | வான்சுகம் அற்பமாதல் | ... | 102 |
| ௨௩. | தவ வாழ்வு | ... | 103 |
| ௨௪. | யோகம் | ... | 103 |
| ௨௫. | பத்தி | ... | 103 |

| | | | |
|---|---|---|---|
| ௨௬. | சொரூபானுபூதி | ... | 104 |
| ௨௭. | பிரம்மாநுபூதி | ... | 105 |
| ௨௮. | பிரம்மபதம் | ... | 105 |
| ௨௯. | அகண்டாநுபூதி | ... | 105 |
| ௩௦. | உயிர்க் குறுதி பெறல் | ... | 107 |
| ௩௧. | மெய்ந் நிறைவு | ... | 107 |
| ௩௨. | அறிவு | ... | 107 |
| ௩௩. | ஞானாநுபூதி | ... | 108 |
| ௩௪. | ஞான சமாதி | ... | 108 |
| ௩௫. | பரமானேன் | ... | 109 |
| ௩௬. | சிற்பர வாழ்வு | ... | 110 |
| ௩௭. | பரவெளி | ... | 112 |
| ௩௮. | திருவடி மாட்சியில் திளைத்தல் | ... | 113 |
| ௩௯. | பேரின்பம் | ... | 114 |
| ௪௦. | மோனம் | ... | 116 |
| ௪௧. | உலகு பரமாதல் | ... | 117 |
| ௪௨. | சிவத்துவ முறல் | ... | 117 |
| ௪௩. | கைவல்யம் | ... | 119 |
| ௪௪. | அத்துவிதம் | ... | 119 |
| ௪௫. | ஜீவன்முத்தி | ... | 120 |
| ௪௬. | இதயம் மலர்தல் | ... | 120 |
| ௪௭. | பரந்தாம வீடு | ... | 120 |
| ௪௮. | பூமா | ... | 121 |
| **9.** | **கலைகள் நிஷ்ப்பிரயோஜனம்** | ... | 121 |
| **10.** | **அருட்கல்வி** | ... | 121 |
| **11.** | **ஓதாதுணர்தல்** | ... | 122 |
| **12.** | **கண்டடைந்த கடவுள் வழி** | ... | 122 |
| **13.** | **அருளல்** | | |
| ௧. | அருள் | ... | 122 |
| ௨. | அகந்தை யழிவு | ... | 123 |
| ௩. | மாயாவிலாசம் பொய்த்தது | ... | 124 |
| ௪. | உலகமய லற்றது | ... | 124 |
| ௫. | கற்பனா பேதங் கழன்றது | ... | 124 |
| ௬. | பசுத்துவ மறல் | ... | 125 |
| ௭. | சிந்தாகுல மறல் | ... | 125 |
| ௮. | துன்பமறல் | ... | 125 |
| ௯. | விக்ஷேபமறல் | ... | 125 |
| ௧௦. | ஆணவ மறல் | ... | 125 |
| ௧௧. | செருக்கறல் | ... | 125 |

| | | |
|---|---|---|
| கஉ. | சுட்டறிவறல் | ... 126 |
| கங. | மயக்க மறல் | ... 126 |
| கச. | பாசமறல் | ... 126 |
| கரு. | மோகமறல் | ... 127 |
| கசு. | வேட்கையறல் | ... 127 |
| கஎ. | இதயம் மலர்தல் | ... 127 |
| கஅ. | சற்கதி | ... 127 |
| கக. | அருள் வெற்றி | ... 127 |
| உ0. | விழிப்பு | ... 128 |
| உக. | அகந்துலங்கல் | ... 128 |
| உஉ. | உணர்வுரு | ... 128 |
| உங. | பூரண உண்மை | ... 128 |
| உச. | மெய்யுணர்வு | ... 128 |
| உரு. | சிற்பரம் | ... 130 |
| உசு. | வாழ்வுப் பொலிவு | ... 131 |
| உஎ. | மெய்ப்பதம் | ... 132 |
| உஅ. | பூரணம் | ... 132 |
| உக. | அதீதம் | ... 123 |
| ங0. | துரீயம் | ... 132 |
| ஙக. | அறிவு | ... 133 |
| ஙஉ. | திடஞானம் | ... 133 |
| ஙங. | சொரூபாநுபூதி | ... 135 |
| ஙச. | பிரம்மாநுபூதி | ... 138 |
| ஙரு. | கைவல்யம் | ... 138 |
| ஙசு. | அத்துவித வாழ்வு | ... 139 |
| ஙஎ. | பரவெளி | ... 140 |
| ஙஅ. | பரவொளி | ... 140 |
| ஙக. | சிவ வாழ்வு | ... 141 |
| ச0. | பரமானேன் | ... 143 |
| சக. | பேரின்பம் | ... 144 |
| சஉ. | சாந்தி | ... 145 |
| சங. | அமரத்துவம் | ... 146 |
| சச. | முத்தி | ... 146 |
| சரு. | மோனம் | ... 147 |
| 14. | ஞானமுறல் | ... 149 |
| 15. | போதமுறல் | ... 150 |
| 16. | அறிவு | ... 150 |
| 17. | சும்மா விருத்தல் | ... 153 |
| 18. | சொரூபாநுபவம் | ... 154 |

19. உன்மனீபாவமுறல் ... 163
20. விசாரமும் விளைவும் ... 164
21. இதயம் ... 164
22. நிட்டையும் பயனும் ... 168
23. யோகம் ... 176
24. கிரந்தி பேதம் ... 176
25. துரீயம் ... 179
26. துரீயாதீதம் ... 180
27. தன்னிழப்பு ... 180
28. செத்துயிர்த்தல் ... 182
29. தன் மெய்யிய லறிதல் ... 182
30. தன்மயம் ... 183
31. உண்மையியல்பு ... 184
32. உள்ளுணர்வு ... 185
33. உண்மையுணர்வு - ஸத் தர்சனம் ... 185
34. யான் - நான் ... 187
35. மெய்ந் நான் ... 187
36. நித்தமுக்தி ... 190
37. ஸோஹம் ... 191
38. சிவோஹம் ... 191
39. அத்துவிதம் ... 192
40. அத்துவித பூஜை ... 197
41. சிவம் ... 198
42. எல்லாம் சிவமயம் ... 198
43. சித்தம் சிவமே ... 199
44. சிவானுபவம் ... 201
45. மாயை அனன்னியம் ... 206
46. பசு பாசம் பொய் ... 206
47. பேதம் மனக்கற்பனை ... 207
48. உலகு கற்பனை ... 208
49. பந்த முத்தி பொய்யாயிற்று ... 209
50. பரம் ... 210
51. பரந்தாமம் ... 210
52. மெய்ப்பதம் ... 211
53. வேதாந்த நிலை ... 212
54. பொறை ... 212

55. அஜாத சித்தாந்தானுபவம் .... 212
56. அதீத ஸஹஜ நிலை ... 213
57. பூமா ... 213
58. உலகு பரமாயிற்று ... 215
59. அன்பறிவு ... 217
60. மோனக்கல்வி ... 218
61. மோனத்தவம் ... 219
62. மோன வழிபாடு ... 219
63. மோனம் ... 220
64 தாள்தலை ... 226
65. கிருத கிருத்தியத் தன்மை கிளத்தல் ... 226
66. நல்லடிமை-நல்ல பிள்ளை நான் ... 227
67. அனுபவத்தை மேலிட்டுக் கூறியது

க. அடியார்க் குறுதி கூறல் ... 229
உ. அகந்தையின் விரிவான அனைத்துலகும் பொய் ... 230
ங. சக்தி விலாசம் பொய் ... 232
ச. சொரூபமே ஐசுவரியம் ... 233
ரு. இரண்டில்லை அத்துவிதமே ... 233
சா. சொரூப இயல்பு ... 235
எ. உண்மை இயல் ... 236
அ. சொரூபமே பெருந் தெளிவு ... 236
கூ. உள்ளுணர்வு ... 237
க0. அறிவுக் கண் ... 237
கக. இன்ப வெளி ... 237
கஉ. மோனமே முடிந்த சிறந்த நிலை ... 238
கங. அருள் வாழ்வு ... 239
கச. ஊனுதலே அருள் வாழ்வு ... 239
கரு. உலகு பரம் ... 240
கசா. அன்பே பேரின்ப சிவம் ... 241
கஎ. பிரமாதமே பிழை ... 241
கஅ. புறச்சின்னம் பயனின்மை ... 242
ககூ. அருளே பிரதானம் ... 242
உ0. தன்னழிவே தியானம் ... 243
உக. சிவோஹம் ... 243
உஉ. வாக்கால் கூறி வராது ஞானம் ... 243
உங. பற்றே துன்ப காரணம் ... 243

௨௪. நிட்டை பெறுக ... 243
௨௫. ஆடாமல் ஆட்டுகின்றான் ... 243

68. என்னவை.

௧. என் மனம் ... 243
௨. என் தியானம் ... 245
௩. என் உரு ... 246
௪. என் உயிர் ... 247
௫. என் உயிர்ப்பு ... 247
௬. என் உள்ளம் ... 247
௭. என் இருப்பு ... 248
௮. என் உண்மை ... 248
௯. என் கல்வி ... 249
௧0. என் நலன் ... 249
௧௧. என் விருப்பம் ... 249
௧௨. என் பற்று ... 250
௧௩. என் வியப்பு ... 250
௧௪. என் நாட்டம் ... 251
௧௫. என் கண் ... 251
௧௬. என் கருத்து ... 251
௧௭. என் குறிப்பு ... 252
௧௮. என் புலம் ... 252
௧௯. என் தொழில் ... 252
௨0. என் இறைபணி ... 253
௨௧. என் வாழ்வு ... 253
௨௨. என் உறையுள் ... 256
௨௩. என் பொருள் ... 256
௨௪. என் உடைமை ... 257
௨௫. என் ஒழுக்கம் ... 257
௨௬. என் தவம் ... 258
௨௭. என் வேண்டல் ... 258
௨௮. என் தீர்த்தம் ... 258
௨௯. என் வணக்கம் ... 259
௩0. என் வழிபாடு ... 259
௩௧. என் கையுறை ... 261
௩௨. என் ஆண்டவன் ... 262
௩௩. என் தெய்வம் ... 262
௩௪. என் துணை ... 262
௩௫. என் அருட்காட்சி ... 262
௩௬. என் யோகம் ... 263

| | | | |
|---|---|---|---|
| ௫௭. | என் தாரகம் | ... | 263 |
| ௫௮. | என சஞ்சாரம் | ... | 263 |
| ௫௯. | என் விருந்து | ... | 263 |
| ௬0. | என் பொழுது போக்கு | ... | 264 |
| ௬௧. | என் நிலை | ... | 264 |
| ௬௨. | என் பேறு | ... | 265 |
| ௬௩. | என் முக்தி | ... | 265 |
| ௬௪. | என் அரண் | ... | 267 |
| ௬௫. | என் பேரின்பம் | ... | 267 |
| ௬௬. | என் இயல் செயல் | ... | 267 |
| ௬௭. | என் அறிவு | ... | 267 |
| ௬௮. | என் கதி | ... | 268 |
| ௬௯. | என் நாடு | ... | 268 |
| ௭0. | என் அரசாட்சி | ... | 268 |
| ௭௧. | என் சார்பு | ... | 268 |
| ௭௨. | என் புகல் | ... | 268 |
| ௭௩. | என் பரந்தாமம் | ... | 269 |
| ௭௪. | என் உலகம் | ... | 269 |
| ௭௫. | என் சிறப்பு | ... | 269 |
| ௭௬. | என் பொலிவு | ... | 269 |
| ௭௭. | என்விலாசமே யாவும் | ... | 270 |
| ௭௮. | என் பதம் | ... | 270 |
| ௭௯. | எனக்கேன் கவலை | ... | 270 |
| 69. | அவ பிரத நீராட்டல் | ... | 271 |
| 70. | அம்மானை | ... | 273 |
| 71. | அச்சோவே | ... | 273 |
| 72. | கை மாறின்மை | ... | 273 |
| 73. | நன்றி மறவேன் | ... | 277 |
| 74. | நெஞ்சொடு கிளத்தல் | ... | 278 |
| 75. | கழிந்தமைக் கிரங்கல் | ... | 278 |
| 76. | எளிமைக் கிரங்கல் | ... | 282 |
| 77. | மாந்தரை யழைத்தல் | ... | 282 |
| 78. | நீர் எங்கு எவ்வா றுள்ளீர் என்றூர்க்கு | ... | 283 |
| 79. | முடிவுரை | ... | 290 |

# பிழைத் திருத்தம்

| பக்கம் எண் | பாட்டு எண் | பாட்டில் வரி எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 1 | 3 | 4 | வுல்லறே | வல்லறே |
| 3 | 9 | 4 | மான | மாண |
| 6 | 26 | 3 | தன் சொரும் | தன் சொருப |
| 8 | 41 | 4 | மானபி | மாஞபி |
| 14 | 90 | 1 | விளைந்தது | விளிந்தது |
| | 96 | 1 | பாசமான | பாசமன |
| 15 | 104 | 2 | மயற்சர்ப் | மயற்சற் |
| 16 | 112 | 4 | தெள்ளந் | தெள்ளத் |
| 18 | 133 | 3 | விசித்திரப் பொய் | விசித்திரப் பொய்ம் |
| 39 | 276 | 2 | ருருப்பரன் | குருப்பரன் |
| 71 | 556 | 1 | வொளி வொளியா | வொளி வெளியா |
| 74 | 581 | 2 | பிழை: (பொருள்விளக்கமாகப்புணர்ந்தான்) | திருத்தம்: பொருள்விளக்க மாகப் புணர்ந்தான் |
| 78 | 605 | 1 | பிழை: கள்ளமனத்தாலடியேன் | திருத்தம்: கள்ளமனத் தாலடியேன் |
| | ,, | 2 | தெள்ளியசற் | தெள்ளிய சற் |
| 86 | 665 | 2 | தாழ்சொருப | வாழ் சொருப |
| 99 | 749 | 1 | தாழ்வாத் | வாழ்வாத் |
| 129 | 934 | 4 | உணர்வு | உணர்வு |
| | 937 | 1 | பசாசப் | பசாசாப் |
| 142 | 1034 | 3 | யிடும்டை | யிடும்பை |
| 148 | 1079 | 5 | மதும்றிவா | மதுவறிவா |
| 153 | 1116 | 2 | பிழை: மென்னென்றேர்ந்தோர்ந்துணர்வு | திருத்தம்: மென்னென் றேர்ந்தோர்ந் துணர்வு |
| 164 | | | 1 இதயம் | 21 இதயம் |
| 174 | 1281 | 1 | சிற்கணமா | சிற்கனமா |
| 177 | 1300 | 1 | சிற்சடத்தை | சிச்சடத்தை |
| | 1303 | 2 | பகலத் | யகலத் |
| 197 | 1441 | 4 | மறவி | டிறவி |
| 205 | 1495 | 4 | சைவல்யத் | கைவல்யத் |
| 267 | 1912 | 4 | பிழை: காணென்னரண் | திருத்தம்: காணென் னரண் |
| 273 | 1948 | 1 | முடியா | முடிபா |
| 276 | 1967 | 5 | நட்டழிற் | தட்டழிதல் |
| 279 | 1991 | 4 | பிழை: யிரங்கியவாரும் | திருத்தம்: யிரங்கிய வாரும் |

ஓம்

நமோ பகவதே ஸ்ரீ அருணசல ரமணய

# ஸ்ரீ ரமண ஞான போதம்

## ஐந்தாம் பாகம்

# அநுபவ விளக்கம்-III

---

### பாயிரம்

### 1. அவனே பாடுகின்றன்

(வெண்பா)

1\. நாவா யுறைந்துமெய்ஞ் ஞானனு பூதியிசைத்
தோவா வுளப்பே ரொளியாக—வாழ்வான்
பரஞ்சோதி யானவருட் பார சொரூபப்
பெருஞ்சீ ருடைய பிரான்.

2\. ஊனமத்த ஞமென் னுளத்தை யலர்த்தியமெய்ஞ்
ஞானசத்தி நண்ணியென் னுடு—ஞான
நயப்பா டுடைய நறுந்தமிழ்வெண் பாவா
வுயிர்ப்பதன்றி நானே திலேன்.

3\. என்னதே யன்றிமற் றென்னையுந்தான் கொள்ளை [கொண்டு
மன்னியமெய்ப் பூரணமாய் வாழ்வித்தான்—நன்னர்ச்
செழித்தவருட் செம்மலாந் தெய்வப் பிரான்சீர்
வழுத்தவும் வல்லனே யான்.

4. ஆண்டான் சொரூப வருட்பரா சத்தியே
ஈண்டென் னிதயத் தினிதிருந்து—மூண்டுமூண்
டென்னறிவைத் தூண்டி யெழுப்பலாற் பொங்கு
பன்னுமனு பூதிவெண் பா. [வதே

(கொச்சகக் கலிப்பா)

5. ஒள்ளிய வாழ்வா வுளத்திலென் னுருயிர்க்குத்
தெள்ளிய ஞானஞ் சிறக்கவளித் தாண்டவன்சீர்
வள்ளிய வாசை வசப்பட் டிசைப்புற்றேன்
அள்ளிய சுத்த வருட்சத்தி யாலினிதே.

6. அன்னியமல் லாதசுத் தான்மசொரூ பானுபவத்
தென்னை யழுத்தியபே ரின்பப் பிரானடியிற்
சென்னி யுறவணங்கிச் சிந்தை கசிந்துருகித்
துன்னியமெய் யன்புணர்வாற் சொல்லுமென்வாய்
[நல்லிசையே.

## 2. இறைவனே கரி

(வெண்பா)

7. ஆண்டவனை நான்சென் றடைந்ததற்குந் தானு
[முவந்
தாண்டருளி யென்னை யணைந்ததற்கும்—காண்டவரு
விண்ணு விருந்தொளிரும் மிக்க சொரூபவருட்
கண்ணுன தானே கரி.

## 3. அவையடக்கம்

(வெண்பா)

8. எனக்கா வவதரித்த வெந்தை ரமணன்
றனக்கே யுரியநான் *சாற்றல்—எனக்குள்ளே
யான்பிதற்றி யானடைபே ரின்பவுரை யன்றிமற்றன்
றியான்பிறருக் கோதயா னுர்.

* சாற்றல்—சாற்றலுற்ற (இவ்வனுபூதி) நூலுக்குத்
தொழிலாகு பெயர்; 'வற்றல்' என்றுற்போல.

9. குருபதத்திற் கூறுங் குதலைமொழி கேட்கப்
பெருவிருப்புக் கொள்வர் பெரியோர்—பெருமிதத்
பேணிப் பெருமானே பிள்ளை மழலைகளில் [தாற்
மான மகிழ்கொள் வதால்.

## 4. நூற் பொருள்

(வெண்பா)

10. ஒப்பாக வுள்ளத் தொளிபெறவே யான்யானென்
றெப்போது முள்ள வியல்பாமோர்—சற்போத
மோதக் கடலான மோனமே யிந்தவருட்
*போதப் பனுவற் பொருள்.

* போதப் பனுவல்—ஸ்ரீ ரமண ஞான போதம்.

## 5. நூற் பயன்

(வெண்பா)

11. கட்டுத் தெறிக்கவகங் காரமுடி கற்பனையாஞ்
சுட்டற் றுளிர்தன் சொரூபமாய்—மட்டற்
றனுபவமா மோன வருட்பரமே ஞானப்
பனுவலிது கற்கும் பயன்.

## 6. மங்கலம்

(கொச்சகக் கலிப்பா)

12. பருவர லானவெம் பாசப் படர்தீர்
திருவருள் வாழ்வு செழிக்க வுளத்திற்
குருவுரு வாகக் குலாவு சொரூபம்
மருவு மியற்பர மங்கல மாமே.

# நூல்

## 1. பிறவேண்டாமை

(குறள்)

13. ஆண்டான் பதத்திலெனக் கார்வங் கிளர்தலால்
வேண்டேன் பிறிதோர் விழா.

(வெண்பா)

14. அகத்தா மரைமே லகமகமென் றுள்ளோன்
இகத்தோ பரத்தோ வெதிலும்—அகத்தே
செறிதலாத் துன்று சிவாத்துவிதச் சீர்மை
யறிதலா லில்லே னவா.

## 2. பிறவின்பம் நாடாமை

(வெண்பா)

15. ஆண்டான் சொரூப மளைந்துமகிழ் சித்தமினிப்
பூண்டிடுமோ வேட்கைபிற போகத்தே—ஈண்டுசிவ
கங்கைநீ ருண்டு களித்தோ னுளத்தாசை
பொங்குமோ கானற் புனற்கு.

16. ஆண்ட சிவத்தோ டளைந்துமகி ழென்னறிவுக்
கீண்டலெவன் மற்றோ ரியைபுடைமை—ஈண்டவொளி
தூண்டுபர மான சொரூபமன்றி வேணவாப்
பூண்டொழுக வெங்கே பொருள்.

17. ஆசையென்ன வாசையெனக் காண்டான் பதத்திலுறு
நேசமன்றி நீசப் புலத்திலே—வேசையாய்க்
கற்பற் றெழியக் கடவதோ வாண்டவன்பாற்
பொற்புற்ற பத்திப் புலம்.

18. அன்புக் குரிய வருட்பரமாந் தன்சொருப
வின்பத்தி லன்றிமகி ழிச்சையிலேன்—தன்பத
[மெய்த்
தண்ணிழலில் வஞ்சமனத் தாபமறச் சாந்தசுக
நண்ணியதா லன்னியத்தே நான்.

19. ஒருமை யுணர்ச்சி யுதவியவென் னுண்டா
னருமைசே ரன்பே யமைக—இருமைசே
ரெந்த நுகர்ச்சியுமற் றெம்மையிலும் யான்வேண்
சொந்தசொரூ பங்காண் சுகம். [டேன்

20. ஊனவாழ் வான வுலகவாழ் வும்பர்வாழ்
வேனையோர் வேணமட்டி லெய்துக—மோனமாய்
மீதொன் றிலாதசிவ மீதான வாழ்வன்றி
யாதொன்றும் வேண்டிலேன் யான்.

(கொச்சகக் கலிப்பா)

21. சுத்தவருட் பார சொரூபமா மோனவுணர்
வுத்தமவாழ் வாக வுதவியவென் னுண்டவன்ருட்
புத்தமுத போகம் புசித்தலால் வேட்கையறக்
கைத்தனகாண் மற்றைக் களிசேர் புலன்களே.

22. ஆண்டகுரு நாத னருட்பே றலாதுமற்
றீண்டவெதன் பாலுமோ ரிச்சையில்லேன்; என்
[னெனிலோ
காண்டகுமெய்ஞ் ஞானவருட் கண்ணு ரமுதமே
வேண்டலுற்றே னுக்கு வெறுங்கான லாம்பிறவே.

23. துட்ட வகப்பேய்த் துடுக்கறவென் னுள்ளத்து
நட்டமா டுற்றமெய்ஞ் ஞானப் பிரானடியே
இட்டமாப் பெட்டபே ரின்பமெய் யன்புணர்வால்
விட்டதுவெம் பாசவிடாய் வேற்றுப் புலங்களிலே.

## 3. பிறபோகம் உவர்த்தல்

(வெண்பா)

24. புத்திக் கொளியாகப் பொங்கு சொரூபசிவ
பத்தி ரசானுபவம் பற்றலால்—மத்தமனக்
கற்பனையூ டாடிக் கலங்குலக போகமெனக்
குப்பறுகூ ழாயிற் *றுவர்த்து.

* உவர்த்தல்—வெறுத்தல்.

25. சொருபவுண் மை யாகத் துலங்கலுற்ற நான்மற்
றெருபதத்தை மோகித் துழலேன்—குருபதத்து
நோக்கமா மோனவொளி நுட்பவொட்ப வாழ்வாகத்
தேக்கியதவ் வுண்மைத் திறம்.

26. முகத்தலா நின்றொளிர்தன் மோனமே தன்னை
யுகத்தலா முண்மை யுணர்ந்தேன்—சுகத்தியல்பு
தன்சொருய மாகவொளிர் சாந்தியே யாகலினெற்
கெஞ்சியதி லின்ப மிலை.

## 4. ஞான வைராக்கியம்

(கொச்சகக் கலிப்பா)

27. அறிவை யறிவா லறியலுற் றுங்கே
மறவிசேர் மோக மனக்கலக்கம் மங்கப்
பிறிவறவுள் ளத்திற் பிறங்கு சொரூப
வுறவாற் பிறவா முறவற் றனவே.

## 5. துறவு

(கொச்சகக் கலிப்பா)

28. புராதனமா வுள்ளசிவ பூரணநோக் கத்தாற்
றுராலெனமற் றெல்லாந் துறந்தேன்; சொரூபப்
பிரானருளே யன்றியென்னுற் பேணலுறத் தக்க
வொராநெருபே றெவ்வெவ் வுலகிலுங்கா ணேனே.

29. அவத்தையைத் தேருந்தா ஞரெனத் தேர்மெய்த்
தவத்திலே கண்டு தரித்த சொரூப
சிவத்திலே யன்றிச் செகத்திலே யாதோர்
விவத்தையில் லென்றுகை விட்டனம் யாமே.

30. தொடர்ந்தபரி சுத்தத் துறவே துணையா
வடைந்தேன் கடந்த வருட்சிற் பரத்தை ;
இடைந்தழிவே னல்லேன், இருட்பா முலக
மடந்தருபொய்ம் மாஞபி மானவலைப் பட்டே.

குறிப்பு :—விரத்திவடிவான அகத்துறவு பரிசுத்தத் துற
வெனப் பட்டது, 'தூய்மை யென்ப தவா
வின்மை ' யென்பரா கலின்.

## 6. அறல்

### க. மய லறல்

(குறள்)

31. உள்ளமுறு மோன வுணர்வுரத்தா லோய்ந்ததே
துள்ளுமன மாயைச் சுழல்.

32. இருள்விலா சஞ்சேர்ந்த வெல்லாமும் போயிற்
றருள்விலா சத்தி லகன்று.

33. அறியாமை யென்ப தறியாமை யாக
வறிவாண்மை யுற்ற தகத்து.

(வெண்பா)

34. அளத்தலரு மோன வருட்கடலிற் சித்தந்
திளைத்தலுறு சாந்தித் தறத்தால்—இளித்துழன்ற
வாழ்வு விசித்திரப்பொய்ம் மாயா விலாசமாப்
பாழ்பட் டதுசிற் பரத்து.

35. திளைத்தலா லன்புசிவச் சிற்பரத்தே சிந்தை
களைத்தலறு சாந்தி கலக்க—இளித்துழன்ற
மாயா விலாச மயக்கமறப் பொங்கியது
நேயானு பூதி நிலை.

(கொச்சகக் கலிப்பா)

36. பீடுசேர் சுத்தப் பிரம்ம சொரூபமா
நீடுதன் னுண்மை நிலைதெளிந்த மோனவியல்
வீடுகை வல்லியமா மிக்கு விளங்கலால்,
மூடியபா ழாவரண மோகங் கலைந்ததே.

37. புத்திக் கொளியாகப் பொங்கு சொரூபவருள்
வித்தகத்தாற் பாச விகற்ப மயக்கமற்றேன்,
சித்தஞ் சிவமாத் திகழ்தலால் யானென்னும்
மத்தமனக் கற்பனை மாயங் கரந்ததே.

38. அருள்விளக்க மாக வமைந்த சொரூபப்
பொருள்வளம்புந் திப்புலத்திற் பொங்கலான் மங்கிற்
றிருள்வளஞ்சேர் கற்பனையா லேங்கி யழுங்கும்
மருள்வலிசேர் பாச மனப்பேய் மயக்கே.

39. தானேதா னைகத் தழைத்தொளிர்சாட் சாற்கார
மோனனு பூதியே முத்தி பெருக்கமா
ஆனப்பே ரின்ப வருள்வாழ் வடைதலான்
மானபி மான மயக்கற் றொழிந்ததே.

40. உய்வகையா தொன்று முணரா துழன்றேற்குத்
தெய்வகதி யாகத் திருத்தக்க சுத்தவருட்
கைவல்ய வாழ்வு கலத்தலா லுள்ளத்திற்
பொய்வல்ல மாயைப் புணர்ப்பற் றொழிந்ததே.

41. யானெ ரெனத்தன் னியல்பறிந்த வுள்ளத்துத்
தானெ வொளிர்சொருபத் தத்துவமாஞ் சித்துவமே
மோனனு பூதியா முற்றலா லற்றதுபொய்ம்
மானபி மான மயக்கக் கலக்கமே.

உ. மோக மறல்

(குறள்)

42. சத்திநிபா தத்தாற் சதிர்த்தவென் னுள்ளத்திற்
பொய்த்ததுமோ கப்பாழ்ம் புலம்.

43. ஒளிவெளியா வுள்ளவென் னுண்மையிலே காணே
னிளிவரல்சேர் மோக விருள்.

44. விளங்கு சொரூப வெளியொளியிற் காணேன்
களங்கமா மோகக் கருத்து.

45. சுத்தவுணர் வான சொரூபவொளி யாலகத்திற்
பொய்த்ததுமா மோகப் புணர்ப்பு.

46. உரவுசே ருண்மை யுணர்வா லொழிந்தேன்
கரவுசேர் மோகக் கருத்து.

47. சுத்தவறி வானவருட் சூழலிலே சூனியமாப்
பொய்த்ததுமா மோகப் புலம்.

48. கண்டுகொண்ட வாற்றாற் கடவுளியற் கைவல்யம்,
விண்டதுமா மோக விகற்பு.

(வெண்பா)

49. அத்துவித மெய்யன் பறிவொளிசே ரின்பவருட்
புத்தமுத மானசிவ போகமாத்—துய்த்தலால்
வித்தகசற் பத்தி விலாசவொளி வெள்ளத்திற்
பொய்த்ததுபுன் மோகப் புலம்பு.

குறிப்பு—மெய்யன்பே சிவபோகமாத் துய்த்தலால் என்க.

50. சாந்திநான் கண்டு தரித்தேன் சொரூபவருட்
காந்தியிலே சித்தங் கலத்தலால்—நீந்திக்
கடக்கருமா மோகக் கடலினின்று தப்பி
நடக்கலுற்றேன் ஞானவொளி *நாட்டு.

குறிப்பு :—* நாட்டு - நாட்டில்.

(கொச்சகக் கலிப்பா)

51. அவ்வதனுக் கவ்வதுவா வாங்காங் கியன்றுற்போற்
செவ்விதினென் னுள்ளத்திற் சிற்பரமாச் சேர்ந்த
[பிரான்
செவ்வியமோ னனுபவச் சீர்துலங்கு சாந்தியாற்
பொய்வளர்மோ கக்கலக்கப் பொல்லாங் கொழிந்ததே.

## ௩. புல னறல்

(குறள்)

52. சுத்தவறி வாகத் துலங்கு சொரூபத்திற்
பொய்த்ததுமற் றெல்லாப் புலம்.

(வெண்பா)

53. பாழ்க்கையுரு மோனப் பரசொருப மென்னுயிர்க்கு
வாழ்க்கைவிருந் தாவகத்து மன்னலால்—ஊழ்க்கை
மூனப் புலன்களையே யுண்டுண் டுயிர்த்துமகி [யுறு
மூன மகன்ற துணர்வு.

54. அறிவிலா மூட வகப்பட்டி யாகச்
செறிவிலா வைதம்புலத்திற் சேர்ந்தேன்—பிறிவிலா
உள்ளொளியாய் நின்ற வொருத்தன் வெளிப்பட நான்
உள்ளதலாற் காணேன் புலம்.

## ௪. விஷய வேட்கையறல்

(குறள்)

55. பரத்தியல்காணே குற்றேன் பசுபாசத் தாடு
விரத்தியுற்ற வாற்று ளுளத்து.

(கொச்சகக் கலிப்பா)

56. மோனப் பரசிவ முத்திப் பயன்சுவைப்பால்
ஏனைப் பதச்சுவைநா னிச்சித் துழல்கிலேன்
வானப் பரசொருப வாழ்வா வழங்குமனத்
தூனப் பிழைசே ருவப்புவர்ப்பு மாயமே.

57. இருட்பா ழகல விதயத் தெழுந்த
புரிப்பான சுத்தவருட் போத சொரூபன்
சுரப்பான மோன சொரூபானு பூதி
விருப்பா லொழிந்தவிடயல் வேட்கை யெலாமே.

58. தொக்கபரஞ் சோதி சொரூபமென் னுள்ளத்து
மிக்கபெரு வாழ்வா விளங்குமியற் பெற்றியாற்
பொக்கமனக் கற்பனை போகப் புலநசையற்
றுக்கதுப சாந்த வுணர்வா மனுபவத்தே.

## ௬. அவாவறல்

(குறள்)

59. சுத்தமெய்ஞ் ஞான சொரூபானு பூதியால்
அற்றதயல் வேட்கை யகத்து.

60. தெளிந்த சொரூபவருட் செல்வமென் னுள்ளத்
தளைந்தா லற்ற தவா.

61. சிவையருளாற் சேர்ந்த சிவானுபவத் தற்ற
துவைகளின்மோ காசை யொழிந்து.

62. ஆசையறச் செற்ற வருட்பரையா லார்ந்ததெனக்
கோசையற்ற மோன வுணர்வு.

63. நீளப் படைத்தசிவ நேயமீக் கூர்தலான்
மாள்வுற்ற தாசை மயல்.

64. மாண்டொழிவ தாயிற்று மற்றவற்றி லாசையெனக்
காண்டவன்பா லன்பு வளர்ந்து.

(வெண்பா)

65. காக்குங் கருணைக் கடவுளாத் தன்சொருப
நோக்கமளித் தாண்டதிப்ப நுட்பவிறை—தேக்கு
சிவானந்த போதத் தெளிவாலே மோக
வவாவைந் தகன்ற தகத்து.

குறிப்பு:—இறை – ஆண்டவன்.

66. சிவத்திலே வாழ்வு செழித்தலாற் சித்தத்
தவித்தைசேர் காம மகன்றேன்—சுவத்தமா
மோனத்து நானுகர்ந்தேன் மோக முனைப்பான
நானற்ற ஞான நலன்.

67. பற்றற்ற வாழ்வாம் பரமானு பூதியுளம்
பற்றக் கிடைத்தவருட் பாக்கியத்தால்—சற்றுமுளத்
தூனமா மோக வுலகியற்பே ராசையுறு
மோனநிறை வெய்திற் றுணர்வு.

(கொச்சகக் கலிப்பா)

68. நட்டே யொழுகலின்மெய்ந் நம்பனடி யாரோடு
தொட்டே னவனடியென் சொந்த சொரூபமா
உட்டே ருணர்வா லொழிந்த வகந்தையால்
விட்டே னகிலவித வேட்கைத் திரள்களுமே.

69. கற்றிலேன் கேட்டிலேன் காதலான் மெய்வருந்திச்
சற்றுமோர் சாதனையுந் தக்காங் கியற்றிலேன்
பற்றற் றெருமுகுமனப் பான்மையே நோன்மையா
முற்றலுற்றேன் மெய்ஞ்ஞான மோன விழுத்தவமே.

70. நிச்சிந்தை யாக நிலாவு சொரூபவருட்
சச்சந்த மான சமாதியுணர் வுள்ளத்து
நிச்சலுந்தன் னுண்மையா நீடலா லாசையோ
டச்சந் தவிர்ந்தொழிந்தே னத்துவிதச் செம்பதத்தே.

## சு. அவிச்சை யறல்

(குறள்)

71. அருட்சிற் பரத்தி லறிந்தேன் அவிச்சை
யிருட்சர்ப் பனைதீ ரியல்.

## எ. மருளறல்

(கொச்சகக் கலிப்பா)

72. அருள் விளக்க மானமெய்ஞ் ஞானனு பூதிப்
பொருள்வளக்கை வல்யம் புணர்ந்ததனு லுள்ளத்
திருள்வசப்பட் டேங்கி யிரங்கியநா னென்னும்
மருள்விட் டொழிந்ததுபொய்ம் மாயமாத் தானே.

## அ. கற்பனை யறல்

(குறள்)

73. அருள்வாரி யான வகத்திலே காணேன்
மருள்வா தனைசேர் மனம்.

74. மயக்கமனக் கற்பனையை மாற்றினன் பாதத்
தியற்கதிகண் டொன்றலுற் றேன்.

75. ஒன்றலுற்ற வுண்மை யுணர்வொளியாற் பொய்த்
றுன்றியவெம் பாசத் தொகை. [ததுமுற்

76. கண்டறிந்த வுண்மையாற் கற்பனையின் மோகமற
விண்டதுவெய் யின்மஞ்சள் போல்.

குறிப்பு:—வெய்யில் மஞ்சள் போல்—வெய்யில் கண்ட மஞ்சள் வெளுத் தொழிந்தாற் போல்.

77. உள்ளம் வெளியா வொளிர்தலாற் கள்ளமனக்
கற்பனை நான் காண்கின் றிலேன்.

78. என்மெய் யுருவா விருந்தொளிர்மெய்ச் சிற்பரத்திற்
பின்னமொன் றென்று மிலை.

79. சீர்த்தவருள் வெற்றி சிறக்கலுற்றோர் கண்ணெ
பார்த்தவெலாந் தெய்வப் பரம். [டுத்துப்

80. தெய்வப் பரமாத் தெளிந்த தெனைத்தன்பா
லுய்வித்த வாண்டா னுரு.

81. ஆண்டகுரு நாத னருட்சிற் பரவுருவா
வீண்டியது காண்ப வெலாம்.

82. வெற்றறிவா முண்மை விளங்கலாற் கற்பனையிற்
சுற்றறிவின் சூதற் றது.

83. மாயமனக் கற்பனையை மாற்றி விளங்கியது
தூயசிவத் தன்மைச் சுடர்.

84. சிற்பரமா வுள்ளந் தெளிதலா லூனமனக்
கற்பனையோய் வுற்ற துணர்வு.

(வெண்பா)

85. திரண்டவனு பூதி சிறந்தொளிர வென்பா
லிரண்டுபடு மோக மிலையாய்—மருண்டமனக்
கற்பனு ஜாலங் கழன்றதுகாண் சுத்தவநுட்
சிற்பரமா மென்மெய்த் திறத்து.

(கொச்சகக் கலிப்பா)

86. எந்தரமில் லாவிவ் வெளியே னிதயம்புக்
கந்தணனு வாண்ட வருட்பிரான் கூட்டியதோர்
அந்தமிலாக் கண்ணு வவிர்சொருபக் காட்சியாற்
பந்தபா சக்கற் பனைகெட் டொழிந்ததே.

## ௬. மனமறல்

(குறள்)

87. ஊன்றலா னுள்ளத் துணர்வுருவாச் செத்ததுகாண்
மான்றவகங் கார மனம்.

88. ஆண்டவன் றுளி லடைந்த வருள்வாழ்வால்
மாண்டதுபுன் மாயை மனத்து.

89. மனக்கேத மற்றொழிய மாற்றினுன் பாச
வினைக்கேடன் விஞ்சைப் பரன்.

90. விஞ்சைப் பரன்பால் விளைந்தது நா னென்றெழுந்த
வஞ்சப் படிற்று மனம்.

91. வஞ்ச வகப்பாழ் மனமிறக்க வள்ளலருள்
விஞ்சை விளைந்த தகத்து.

92. ஆண்டபரஞ் சோதி யருள்வண்ண மாகமனம்
மாண்டடைந்த துண்மை வடிவு.

93. ஆதிக்க மான வருட்சிற் பதவுணர்வால்
வேதிக்க லுற்றேன் மனம்.

94. மருள்வஞ்ச மான மனங்கரந்த தான்ற
வருள்விஞ்சை சேர்ந்த வகத்து.

95. உள்ளங் கலந்த வுணர்வொளியாற் பாசமனக்
கள்ளங் கரந்தது காண்.

96. பாசமான வாதையறப் பற்றியது சுத்தசிவ
நேசவனு பூதி நிலை.

97. சுத்த வறிவுத் துலக்கத்தால் வெள்கிற்று
மத்த வெறிசேர் மனம்.

98. சுத்தசிவத் தன்மை துலங்கலான் மங்கியது
மத்தவகங் கார மனம்.

99. காண்டலுற்ற மோனவருட் கைவல் லியபதத்தில்
மாண்டொழிந்த தூன மனம்.

100. விரிந்தபரஞ் சோதி விலாசத்திற் பொன்றக்
கரைந்ததுபொய்ம் மாயக் கருத்து.

101. அருட்பெருவாழ் வான வகத்தின் மகத்துவத்தில்
மங்கலுற்ற தூன மனம்.

102. வாழ்வுசிவ மாக வளர்தலாற் றேய்ந்ததுகாண்
மாழ்குமகங் கார மனம்.

103. இயல்விளங்கக் கண்டாங் கிறந்ததுநா னென்னும்
மயல்சே ரகந்தை மனம்.

104. இயற்சிற் பரத்தி லிறந்ததுநா னென்னும்
மயற்சர்ப் பணைசேர் மனம்.

105. மூண்டமோ னனுபவ முத்தியுணர் வாலகத்து
மாண்டதுவெம் பாச மனம்.

106. அருட்சிற் கலையா லழிந்த தகந்தை
மருட்சிக்க லான மனம்.

107. அருட்சிற் பரா னுபவத் தற்றதுநா னென்னும்
மருட்கற் பணைசேர் மனம்.

108. அருட்சிற் பரத்தா லகன்றதுகாண் பாச
மருட்கற் பணைசேர் மனம்.

109. இயற்சிற் பரத்தா லிறந்த துலக
மயற்சர்ப் பணைசேர் மனம்.

110. பரந்தவெளி யான பரத்திற் கரந்ததுபொய்ம்
மாயவகங் கார மனம்.

111. காண்டல்கா ணமையிலாக் கைவல்யச் சிற்பரமா
மாண்டதுநா னென்னு மனம்.

112. கள்ளக் கரவுமனங் காணேன் சொரூபமாத்
தெள்ளத் தெளிந்த சிவத்து.

குறிப்பு:—சிவமாகத் தெள்ளந் தெளிந்த சொரூபத்து என மாற்றிக் கொள்க.

113. காண்டலரு மோனவருட் கைவல்யச் செம்பதத்தே
மாண்டொழிந்த தென்புன் மனம்.

114. கண்ணுருவே யாகவருட் கைவல்யங் காண்டலால்
எண்ணமற வொன்றிற் றியல்.

115. *சிவகங்கை யாகத் தெளிந்த மனத்தால்
அவசங்கை யற்ற தறிவு.

* சிவகங்கை—சிவமாகிய கங்கை.

116. யானென்னுஞ் சொல்லுக் கிலக்கியமா வோங்குபர
வானமா மன்னுமன மாண்பு.

(வெண்பா)

117. வெளியாக வுள்ள விசுத்த சொரூப
வொளியான மோன வுணர்வால்—இளிவரல்சேர்
சிச்சடமா மோகத் தெருமரல்சேர் பாசபந்தத்
துச்சமனம் பொய்த்தது தூர்ந்து.

118. பாழிற் கிடந்து பதைத்தேன் அருட்பதத்தில்
வாழக் கிடைத்துமகிழ் மல்கினேன்—ஊழ்வினையின்
கட்டறுக்கு முண்மைக் கடவு ளுணர்ச்சியெழத்
துட்டமனம் பாழ்த்தது தூர்ந்து

119. ஆதியா நின்ற வருட்பகவன் மெய்ஞ்ஞான
நீதியிலென் னெஞ்ச நிறைதலால்—ஊதியமா
மிக்க சிவானுபவ வெள்ளத்தே நானென்னும்
பொக்கமன முக்கது பொய்த்து.

(கொச்சகக் கலிப்பா)

120. கற்பனையிற் சித்தங் கலங்காது கைவல்யச்
சிற்பரமா முண்மை தெரித்தபிரான் காட்டியநல்
லற்புதமா மோன வருள்வெளியில் யானெனும்பா
ழற்பமனம் பொய்ம்மாய மாகக் கரந்ததே.

121. வஞ்ச மனோமயத்தின் மாழ்கா தடியேனைச்
செஞ்செவே யாண்டவருட் சிற்பிரான் கண்ணேக்
றுஞ்சியது கற்பனை சொப்பனவாழ் விற்சுழன்று [காற்
பஞ்சையாப் புன்புலத்திற் பாழ்த்தவகப் பேய்மனமே.

122. அண்ண லருளியசுத் தான்ம விசாரவழி
நண்ணலுற்றே னுள்ளத்தந் நாட்டத்தின் கூர்மை
எண்ண வொணாத வியற்சிற் பரசொருப [யால்
வண்ணமா வூன மனஞ்செத் தொளிர்ந்ததே.

## ௧௦. எண்ணமறல்

(குறள்)

123. தனிப்பட்ட தன்மை தலைப்படலாற் பேத
நினைப்பற் றொழிந்ததென் னெஞ்சு.

124. எண்ணக் கடவதா யாதுமில்லை சுத்தவருள்
வண்ணவொளி சார்ந்த மனத்து.

## ௧௧. வேசறவறல்

(குறள்)

125. அனுபவமா மோன வருட்சிற் பதத்தில்
வினைதருவே சாறுதீர்ந் தேன்.

(கொச்சகக் கலிப்பா)

126. கள்ளப் படிற்றுக் கலக்கமென்றுஞ் சேர்தலற்ற
வுள்ளப் பரவெளியூர் கண்டாங் குயிர்தளிர்க்கத்
தெள்ளத் தெளிந்தசிவச் சிர்பரமோ னனுபவ
வெள்ளக் களிகூர்வால் வேசாட லற்றதே.

குறிப்பு :—உயிர்தளிர்க்கக் களிகூர்வால் எனவியையும்.

## ௧௨. மிடிமையறல்

(குறள்)

127. அடிமையாப் புக்கேன் அகந்தை மனப்பாழ்
மிடிமையறச் சிற்பொருள்பெற் றேன்.

## கஃ. உலகமறல்

(கொச்சகக் கலிப்பா)

128. எங்கிருந்திங் குந்தியதோ விவ்வுலகென் றுய்ந்தேன்
றெங்கிருந்து மல்ல விதன்பிறப்பு யானென்னு [மற்
மிங்கிருந்தென் றேர்ந்திதயத் தென்னை யொடுக்கி
அங்கமகம் புத்தியோ டற்றதுல கப்புலமே. [னேன்

## கச. உலகமயக்க மறல்

(குறள்)

129. ஆர்ந்தமைந்த மோன வருட்சிற் பரானுபவத்
தோய்ந்ததுவெம் பாச வுலகு.

(வெண்பா)

130. ஈனப் பிறவிக் கிடமற்ற மோனவருட்
பான சொரூபவியல் பற்றலால்—ஊன
விவகார வாழ்க்கை வெறுங்கன வாயிற்
றவிகார மான வகத்து.

131. பொய்யாப் புலம்பவருட் போதத்தே கற்பனையா
மெய்போற்பல் பேதம் மிகவிரிந்து—கைதவப்பே
ரற்புதமாத் தோன்று மசைபடக்காட் சித்திறத்தின்
சற்பனைதேர் வுற்றேன் சதிர்த்து.

132. மோன சொரூப முகமூடி யாமுலகு
தானகலக் கண்ட தரிசனத்தால்—யானடைந்தேன்
ஜன்மசா பல்லியமாச் சச்சிதா னந்தவருட்
பொன்மயமாம் போகப் புணர்வு.

133. பரவொளியே யுள்ளமாப் பற்றலான் மோகக்
கரவென்று மில்லையாக் கண்டேன்—விரவு
விசித்திரப்பொய் மாயா விலாசமவ்வுள் ளத்தின்
மிசைப்படர்சிச் சாயையின்வே றன்று.

### கரு. ஈன மறல்

(குறள்)

134. ஈனக் கலக்கமெனக் கில்லைபே ரின்பவருள்
வானமா வாழ்வுமலர் வால்.

135. உணர்வாக வுள்ளவோ ருண்மைப் பிரானைப்
புணர்வா லொழிந்தேன் புலம்பு.

136. ஆனந்த மோன வருட்சிற் பதவெளியூ
டீனந் தவிர்ந்தொழிந் தேன்.

### கசு. ஊன மறல்

(குறள்)

137. வென்றிசேர் சுத்தவருள் வித்தகமோ னப்பதவாழ்
வொன்றினேன் ஊனமொன் றில் லேன்.

(வெண்பா)

138. தேனே யனையவருட் சிற்பரமா மோனவியல்
வானே யெனுது வடிவாக—மானுபி
மானமாம் பாச மயக்கமறக் காண்டலால்
ஊன மகன்ற துணர்வு.

139. தண்ணருளா லுண்டான சாந்தியா லவ்வருளின்
வண்ணமுற்று நின்ற மனத்தாலே—பண்ணுஞ்
செயலனைத்துஞ் சுத்த சிவமயமா யூன
மயல்வண்ண மற்றதென் வாழ்வு.

### கஎ. ஏதமறல்

(வெண்பா)

140. மெய்யன் புணர்ச்சி விளங்குசிவ ஞானவருட்
சைவம் பழுத்த தயாதருமம்—பையவெனக்
குள்ளே சொரூப வொளியாய்ப் பெருகலால்
*உள்ளேத மற்ற துணர்வு.

* உள்ளேதம்—உள்ளக்கவல், மனக்குற்றமுமாம்.

### கஅ. ஆசார மறல்

(கொச்சகக் கலிப்பா)

141\. எனதியா னென்னு மிரண்டன் மயக்கற்
றினிதா விதயத் திலகு சொரூபப்
புனித வுணர்வு புணர்தலால், யான்மற்
றனியவா சாரங்க ளாற்றகில் லேனே.

### கசு. கர்ம மறல்

(குறள்)

142\. ஆண்டவனை யெண்ணி யருட்பதத்தே வாழ்தலான்
மாண்டுவினை சாய்ந்தது மன்.

(வெண்பா)

143\. பரமனருட் பாதவொளி பற்றலா லென்பாற்
கருமநிர்ப் பந்தங் கழன்றேன்—பரம
சிவதரும மாகத் திகழ்சொருப நிஷ்டைத்
தவவியல்பா மோனந் தரித்து.

144\. புண்ணிய பாவம் பொருந்தாத சுத்தவருட்
கண்ணியமா மோனக் கருத்தியல்பால்—பண்ணினாற்
போலத் தெரிபடுமப் புண்ணியபா வங்களிலெக்
காலத்துங் கட்டுப் படேன்.

குறிப்பு.—கருத்தியல்பாற் கட்டுப்படேன் எனக் கூட்டுக; கட்டுப்படாமைக்குக் கருத்தியல்பு காரணம். பண்ணினாற் போலத் தெரிபடும் — நான் பண்ணினாற் போலப் பிறர்க்குத் தோன்றுகின்ற; நான் உண்மையில் அகர்த்தாவாதலால்; கர்த்தத்துவம் என்னிடத்திற் கற்பிதம் என்று கருத்து.

145\. துள்ளுமுனைப் பான சுழற்சியறச் சொக்கவெனக்
குள்ளபொருட் காட்சி யுளத்தூடு—வெள்ளவருள்
வாரியா வந்து மடுத்தலாற் கற்பனையிற்
காரியமேன் மாழ்கக் கருத்து.

## உ೦. சேட்டையறல்

(குறள்)

146. இமைத்தலறப் பொங்கு மிறைவனருட் போதத்
*தமர்த்தலற்ற தென்ற னறிவு.

*அமர்த்தல்—சேஷ்டித்தல்.

## உக. கள்ளங்கர வறல்

(குறள்)

147. உள்ளங் கிளரவொளி ரொள்ளியனு லற்றதுபொய்க்
கள்ளங் கரவென் கருத்து.

(வெண்பா)

148. ஆரக் கிடைத்த வருட்பெருமான் போதசுக
வாரக் கிளர்ச்சிபெரு வாழ்வாகக்—கூரவெனக்
குள்ளம்பூ ரித்த வுதார சிவாம்புதியிற்
கள்ளங் கரந்தது காண்.

## உஉ. பேத மறல்

(குறள்)

149. வேறற்ற வுண்மை விளக்கத்தாற் பொன்றியது
மாறுபட்ட பேத மயக்கு.

150. ஒன்று விளங்கலுற்ற வுண்மையா லுள்ளத்திற்
பொன்றியது பேதப் புணர்ப்பு.

151. கண்டுகொண்ட சுத்தவருட் காட்சியாற் கற்பனையா
விண்டதுபொய்ம் மாய விகற்பு.

152. விந்தைசே ருண்மை விளங்கலால் வேற்றுமைதீ
ரெந்தையார் மெய்ம்மையறிந் தேன்.

153. மோனவியற் சிற்பரமா முற்றியகை வல்லியத்திற்
போனதுபல் வேற்றுப் புலம்.

154. சுத்தப் பரமாத் துலங்கு சொரூபத்திற்
பொய்த்ததுகாண் பேதப் புலம்.

(வெண்பா)

155. பரவெளி யாகப் பரந்த சொரூப
வுரவொளி பாய்ந்த வுளத்தால்—கரவுறுவெம்
பாழிற் படர்கற் பனுஜால பேதமகல்
வாழ்விற் றிளைத்தலுற் றேன்.

156. அருட்கே வலமே யனுபவமா வுள்ளத்
திருக்கநான் பெற்ற வியல்பால்—பொருக்கென்
றெழுந்தது பேத வுணர்ச்சிக் கலக்கம்
கழிந்ததுசம் சாரக் கதை.

157. புகலடைந்த வாழ்வுபரி பூரணவாழ் வாகப்
பகல்விளக்க மாமெய்ப் பதத்தே—இகல்படுபொய்ப்
பேத விகற்பமயற் பித்தலாட் டப்பிழைசே
ரேதமறக் கெட்ட தெனக்கு.

158. முப்பொருளி ஞென்றெனவே மோக வகந்தைமனக்
கற்பனையா லெண்ணிக் கலங்கினேன்—துப்பருளாற்
கற்பனு பேதக் கலக்கமறத் தான்றனித்துச்
சிற்பரனு நின்றான் சிவன்.

159. தஞ்சமா வுற்றேனைத் தட்டழியா தாண்டவனென்
னெஞ்சமே புக்கு நிரம்பலுற்ற ஞானவருள்
விஞ்சையால் யான்றுனு விஞ்சலால் வேறுன
வஞ்சவே தாள மயக்கமறத் துஞ்சியதே.

160. அற்றமற்ற சுத்த வருள்வெளியே யுள்ளமா
முற்றலுற்ற வித்தகத்தே மோனனு பூதிபெற்றேன்;
வெற்றறிவே மெய்யா விளங்கலாற் கற்பனையா
வற்றனமற் றெல்லா வறிவுத் திறங்களுமே.

161. சிற்பரமா வுள்ள சிவக்கே வலசொருபத்
தற்பரமே பூமாவாத் தங்கலாற் புந்தியிலே
புற்புதமே போலப் புலனுகத் தோன்றிமறை
கற்பனையே யாகக் கழிந்ததுகாண் முப்புடியே.

### உ௩. முரணறல்

(கொச்சகக் கலிப்பா)

162. மருண்டவகங் கார மனங்கரக்க வுள்ளத்
திரண்டறத்தன் னுண்மை யினிது விளங்கத்
திரண்டியல்வாழ் வான சிவத்துவத்தே மோக
முரண்களுக்கெல் லாமோர் முடிவுகண் டேனே.

### உ௪. விக்ஷேப மறல்

(குறள்)

163. அத்துவித சுத்த வருள்விளக்கம் பொங்கலாற்
பொய்த்ததுவிட் சேபப் புலம்.

164. வெருவரல்சேர் கற்பனு விட்சேபப் பாழ்ஆழ்ம்
பருவரலற் றேன்சிற் பதத்து.

### உ௫. அயலறல்

(குறள்)

165. ஊனப் படாவுருவை யோர்ந்தொடுங்கி யொன்றலுற்
றேனுக் கயலறிவொன் றில்.

குறிப்பு—உரு - சொரூபம்

"தன்னை யறிந்திடிற்பின் னென்னையுளதறிய"
—பகவான்

### உ௬. துவந்தமறல்

(குறள்)

166. தருமா தருமந் தணந்தேன் சொரூபப்
பெருமா னருள்பெற்ற தால்.

167. ஒன்றும் பரமார்த்த வுண்மை யுணர்வொளியில்
இன்று வொழிந்த திரண்டு.

168. சொந்த சொரூபத் துலக்கத்தாற் பொன்றியது
பந்தமோட் சக்கற் பனே.

(வெண்பா)

169. என்னை யணைந்தபே *ரின்பவருள் வண்ணமணிப்
பொன்னொளியிற் புக்கவென் புந்தியொளி—
[அன்னியம்போ
லெண்ணியபொய்த் தன்மை யிழந்து சொருபவருள்
விண்ணியல்பெற் றோங்கியது மெய்.

* இன்பவருள் வண்ணமணி என்றது குருசொரூபத்தை.

(கொச்சகக் கலிப்பா)

170. ஞான சொரூபமே நானென் றறிந்ததற்பின்
மோனவெளி யாமந்த முற்றமுழுத் தன்மையின்மற்
றேனையெத ஞலுமெனக் கின்பதுன்பம் யாதுமில்லை
தீனவகங் காரச் செருக்கற்ற வாற்றுலே.

171. காய வகந்தை கரந்தொழியத் தன்னுடுமெய்ஞ்
ஞேய வொருமைநிலை நெஞ்சத் தொளிர்ந்திடலான்
மாய வுலக மனக்கற் பனைதுவிதம்
போயது சுத்த வருட்சிற் பொதுவெளிக்கே.

172. மிச்சைதீர் சுத்தவருள் விச்சையா லுச்சிதமாப்
பிச்சையேற் றுண்ணும் பெரும்பாக் கியத்தேனுக்
கச்சயமாப் பொங்கு மனந்தசிவத் தன்மையால்
இச்சை யனிச்சை யிரண்டுமறப் பொய்த்ததே.

173. அங்கணனு வாண்டா னருள்விலா சத்திலெனக்
கங்கமகம் புத்திசே ராணவப்பா ழற்றொழியப்
பொங்கியசற் போதப் பொலிவுசே ருள்ளத்து
மங்கியது மோக மனக்கற் பனைவிகற்பே.

உஎ. சலனமறல்

(வெண்பா)

174. கதிபலவற் றுக்கும் பரம கதியாய்ப்
புதியவற்றுக் கெல்லாம் புதிதாய்ப்—பதியெனத்த
னுள்ளசிவ பாத வொளியாலே யுள்ளமலர்ந்
துள்ளசைவு தீர்ந்த துயிர்க்கு.

175. நிர்க்குணமா மோன நிலைவிளங்கு மென்சொருபத்
தெக்குணமும் பற்று வியற்கையால்—சிற்கனமாத்
துன்றுசிவக் கேவலமாத் தொக்கசொரூ பானுபவத்
தின்றசைவு சற்று மெனக்கு.

## உ-அ. முப்புடி யறல்

(குறள்)

176. சுத்தவறி வாகத் துலங்குமியற் செம்பதத்திற்
பொய்த்ததுபல் பேதப் புடி.
குறிப்பு:—பல் பேதப்புடி—பலதிறப்பட்ட திரிபுடி பேதம்

177. சுத்தவெளி யான துரீய சொரூபத்திற்
பொய்த்ததுமுப் பேதப் புடி.

(வெண்பா)

178. ஆட்சியுறு மெய்ப்பதத்தா டத்துவித மானவருட்
காட்சியுறு மோனக் களிகூரச்—சாட்சியாங்
கேவலசச் சித்தாக் கிளர்தலான் முப்புடிதீர்
வாழ்வலரப் பெற்றேன் மனத்து.

179. நிலையான வுண்மை நிறைவான மோனக்
கலைஞான மோர்ந்த கருத்திற்—புலையான
மோகப் புரளிசேர் முப்புடியின் பேதமகன்
றேகத் துலங்கிற் றியல்.

180. என்னி லெனக்கரும்பே ரின்பவருட் பாதவொளி
தன்னிலே பாழகந்தை சாதலால்—பின்னிப்
புலப்படூஉ முப்புடிகள் போதவள வாகத்
தலைப்படலா யொன்றின தாம்.

(கொச்சகக் கலிப்பா)

181. மாயவிரு ளான மயக்கமற வுள்ளத்துத்
தூய சொரூபவருட் சோதி படர்தலாற்
பாய வருட்சிற் பரவெளியாத் தன்னிலறப்
போயதுபல் பேதப் புடிக்கலக்கக் கற்பனையே.
குறிப்பு:—பாய - பரந்த.

182. தேக மயக்கச் செருக்கறச்செற் றுண்டவனல்
ஏக சொரூப வியல்விளங்கப் பெற்றேற்கு
மோகவகப் பேயறிவா மூண்டபல முப்புடியின்
பாகங் களுங்கற் பனையாக் கரந்தவே.

183. மோன வெளியே சொரூபமா முற்றவெனக்
கூனவகப் பாழை யுடற்றியென் னுள்ளொளிர்மெய்ஞ்
ஞான சொரூபகுரு நாதனருட் சிற்பதத்திற்
போனதுமா மோகப் புடிக்கலக்கப் பூசலே.

## உக. சுட்டறல்

(குறள்)

184. சுத்த வருள்வெளியாத் துன்றுவிழிப் பார்வையாற்
பொய்த்ததயற் சுட்டுப் புலம்.

185. வெற்றறிவா வுண்மை விளங்கலாற் கற்பனையிற்
சுற்றறிவு கெட்டது சோர்ந்து.

(வெண்பா)

186. அருட்கண்ணே யாக வவிர்சொருப மோனப்
பொருட்காட்சி யாலே பொலிந்தேன்—மருட் கலக்கச்
சுட்டறிவுக் கேதுவாச் சூழுமனப் பாழவிச்சை
கெட்டொழிய வுள்ளங் கிளர்ந்து.

187. இயற்சிற் பரவாழ் விதயத்தே பாசச்
செயலற் றொழியத் திகழ்வால்—அயற்சுட்
டறிவான மோக வனர்த்தக் கலக்கம்
அறவே கழன்ற தகத்து.

188. உறக்கவிழிப் பொன்று வொளிர்சொருப மோனஞ்
சிறக்கவெனக் குள்ளஞ் செழிக்க—மறக்கமிலாச்
சிற்பரமா வோங்குசிவச் செம்பொற் பரஞ்சோதிக்
கர்ப்பணமா மென்சுட் டறிவு.

(கொச்சகக் கலிப்பா)

189. கட்டுக்கட் டானமனக் கற்பனையை முட்டமுட்ட
வெட்டுறுமெய்ஞ் ஞான விசாரவருள் வாள்கொண்டு
சுட்டறுத்தேன் சுத்தத் துரிய சொரூபவியற்
பட்டனையல் லாது பரம்வே றறியேனே.

குறிப்பு:—முட்ட முட்ட – முற்ற முற்ற;
சுட்டறுத்தல்—முன்னிலைச் சுட்டறிவை மோசித்தல்

190. அத்தகநிற் பித்த வருள்வல் லபத்தால்யான்
சுத்த வறிவே சொரூபானு பூதியாத்
துய்த்தலுற் றேனுக்குச் சுட்டறிவா மைம்புலனும்
மத்தமனக் கற்பனையா மாறிக் கழிந்ததே.

191. தீன மயக்கச் செருக்கான சிச்சடப்பா
மூனக் கலக்கமா வுற்றமனச் சுட்டுணர்வு
நானற் றெளிர்சொருப ஞானமா மோனவியல்
வானத்திற் கற்பனையா மங்குற் றொழிந்ததே.

192. எல்லாமொன் றுன வியற்சிற் பரவெளியிற்
கல்லாமை யாகக் கழிந்திடநான் கற்றவெல்லாம்
அல்லா ணவப்பா ழகந்தைமுனைப் பற்றேனுக்
கில்லா தொழிந்த தெதிர்புலப்பாழ் மாயையே.

### ௨௦. பாச மறல்

(குறள்)

193. அறிவு தெளிந்தமைந்த வாற்றுற் பிறவற்
றுறவு குலைந்த துளத்து.

194. மோனவருட் செம்பதத்து முத்தியுணர் வுற்றதால்
ஈனமயற் பாச மிலை.

195. முத்தித் துலக்கமா மூண்டவருட் சிற்பதத்திற்
பொய்த்ததுவெம் பாசப் புணர்ப்பு.

196. களிவளர்வெம் பாசக் கருத்தற் றொழிந்த
தொளிவெளியா வுள்ள வுளத்து.

197. கட்டற் றொளிர்சொருபக் காட்சியா லுள்ளத்தில்
விட்டதுவெம் பாச விடாய்.

198. முனைப்பற் றெழுந்தசுப மோன வுணர்வால்
வினைப்பற்று விட்ட துளத்து.

199. பரமசிவத் தன்மையகம் பற்றலா லற்றேன்
வெருவரல்சேர் பாச வினை.

200. நெஞ்சி லியன்றசிவ நேய வுணர்வொளியாற்
றுஞ்சியது பாசத் துயக்கு.

201. வெளியாக வீடு விளங்கலா லுள்ளத்
திளிசேர்வெம் பாசமற் றேன்.

202. உடலுயிராக் கட்டுண் டுழன்றநான் சுத்தச்
தடவெளியாப் பாசமகன் றேன்.

203. பாச மகன்றபின்பே சுத்தப் பரமசிவ
நேச மறிந்ததென் னெஞ்சு.

204. சுவானுபவ மாகத் துலங்குசிவ சத்திக்
கவானிலுறை கின்றேன் களித்து.

205. பற்றற்ற வாழ்வு பலித்தலாற் சிற்பதத்தூ
டற்றமற வொன்றிற் றறிவு.

206. அகந்தையற்ற சுத்த வறிவுருவா முள்ளத்
திகந்ததுவெம் பாச விகல்.

(வெண்பா)

207. புத்தியவிர் போதப் பொருளான தன்சொருப
சித்தியுறு வாழ்க்கைத் திறத்தாலே—நித்தியமா
மோனப் பரபத்தி மூண்டொளிரப் பாசபந்த
வூனக் கலக்கமொழிந் தேன்.

208. ஒளிநிறைந்த மோன வுளத்திலே சற்று
மிளிவரல்சேர் புன்கலக்க மின்றாய்த்—தெளிவுசால்
சுத்தவருட் போத சுவானுபவங் கூர்தலாற்
பொய்த்ததுவெம் பாசப் புணர்ப்பு.

209. உள்ளத் துறைந்தே யுயிருணர்வாற் காணவொண்
கள்ளத் தலைவனருட் கண்கொண்டு—தெள்ளத் [ணாக்
தெளிந்த சொரூபத் திறத்தா லொழிந்த
துளைந்துழல்வெம் பாச வுணர்வு.

210. பாச மனக்கடலைப் பற்றிப் பருகினான்
ஆசமன மாக வருட்கடலான்—பாசமயல்
வெட்கிநா னுட்க வெதுப்புவதா யுட்குழறிக்
கொட்குமா லென்னைக் குடைந்து.

211. மத்தவகப் பேய்கரப்ப வாழிசிவ சாந்தியொளிர்
சுத்தவருட் போத சொரூபத்தே—வித்தகமெய்க்
கைவல் லியமியல்பாக் காண்டலாற் பாசபந்தப்
பொய்வல் லபம்பொய்த் தது.

212. மன்னுவதோ ருண்மை மனத்தே தலைப்படலாற்
பின்னியபொய்ம் மாயப் பிணக்கறவே—என்னதுநா
னென்னு மிரண்டுமெனக் கேதிலவாய்ப் போதலாற்
றுன்னலில்லை பாசத் தொடர்பு.

213. ஆனந்த மான வறிவூறிப் பாசபந்த
வூனந் தமியேற் கொழிந்ததுகாண்—தானந்த
மற்ற சதாசிவமா வான்ற சொரூபவருட்
பற்றான மோனப் பதத்து.

(கொச்சகக் கலிப்பா)

214. ஐம்புலத்தின் மோக மகற்றிடத்தன் சுத்தவருட்
செம்புலமென் னுள்ளத்துத் தேற்றினான் மாண்புறுசிற்
றம்பலமெய்க் காட்சியா லற்றதுகாண் சித்திரமாய்ப்
பம்பலுற்ற பல்வகைய பாசத் திரள்களே.

215. உய்வுள்ளித் தன்னை யுறுகதியா வுற்றேற்கு
மெய்வல்ல சுத்தவருள் வித்தகன்காட் டிக்கொடுத்த
கைவல் லியபதத்திற் கற்பனையாத் தப்பியது
பொய்வல்ல மாயைப் புணர்ப்பான பாசமே.

216. என்றுமோ ரின்றாக வெங்குமோ ரிங்காகத்
துன்றுபர மார்த்த சொரூபனருட் சிற்பதத்தில்
வென்றிசேர் கைவல் லியந்துலங்கப் பெற்றதாற்
கன்றியவெம் பாசபந்தக் கற்பனைபொன் றுற்றதே.

217. மருளா லகங்கரித்த மத்த மனத்தேற்
கருளா லறிந்தடைந்த வான்ம சொரூபப்
பொருளே பொருளாகப் பொங்கலாற் பொன்றிற்
றிருள்சே ருலகொடெனக் கேய்ந்த வினையே.

218. ஊனவகப் பேய்நா னுதித்தலறப் பொங்குசுப
மோனவருட் பூரணமே முத்திப் பரவாழ்வா
நானறியத் துன்றியமெய்ஞ் ஞானானு பூதியாற்
போனதுபொய்ப் பாசப் புலமா முலகியலே.

219. மோனப் பதமே முழுமுதலா மத்துவித
ஞானவருட் செம்பதமா நானறிய, நானெனுமவ்
வூனமுனைப் பைச்செற் றுளிர்சொருப வாண்டவன்
ஈனமயற் பாச வியற்கையறக் கெட்டதே. [பால்

220. மாசுமறு வற்றகுரு மாண்பதத்திற் சிற்பரமெய்த்
தேசுபெறு சுத்த சிவானுபவஞ் சேர்தலால்,
மூசு மகப்பேய் முனைப்போடு மற்றதன்பொய்ப்
பாச மயக்கப் படருங் குலைந்ததே.

## ௨௪. பசுத்துவ மறல்

(குறள்)

221. விசுத்தமோ னத்தால் விளங்கலுற்ற மெய்யிற்
பசுத்துவம் பாழ்பட் டது.

222. உள்ளத் துணர்வா வொளிர்சொருப வுண்மையிற்
கள்ளப் பசுத்துவங்கா ணேன். [பொய்க்

குறிப்பு :—காணே னென்ற ரேனும், காணுமையாற்
பசுத்துவம் பொய்க் கள்ளம் என்பதே கருத்தாகக்
கொள்க.

(கொச்சகக் கலிப்பா)

223. அளைந்தபசு பாசப்பா ழாசையற நன்ருத்
தெளிந்தசிவ பத்தித் திறத்தால் இயல்பா
விளைந்தநுகை வல்ய விளக்கமா மோன
வளந்ததும்பு சுத்தவருள் வாழ்வென் னுளத்தே.

224. ஊனப் பசுபாச வூத்தையுணர் வோய்ந்தொழிய
ஞானப் பரசொருப நாட்டமகம் பற்றலால்
யானென்னும் மோகமுனைப் பிற்றொழிந்த வென்
மோனப் பரமசுப முத்தியாப் பொங்கியதே. [னியல்பே

க௨. சுற்ற மறல்

(வெண்பா)

225. ஆண்டவனே யன்றியெனக் கான்மபந்து வாகமற்
றீண்டவொரு சுற்றத்தார் யாவருளர்?—பூண்ட
மயற்றளையாத் தேறி மறுத்தேன் மனத்தி
லயற்பசுபா சங்க ளற.

க௩. பற்றறல்

(குறள்)

226. சந்தியா நின்ற சதாசிவத்தாற் சிந்தியத்
பந்தியா நின்றவகப் பற்று.

(வெண்பா)

227. பிளந்ததாற் பாசம் பிரம்ம சொரூப
மளைந்ததகத் தான்மாவே யாக—விளைந்த
வுபசாந்த வெள்ளத் துரையுணர்வு மாளச்
சவிசாய்ந் தகந்தைச் சதிர்.

228. துரியவெளி யாகச் சுடர்சொருப வாழ்வே
யுரியதாப் பெற்ற வுணர்வால்—விரியுமனக்
கற்பனை பேதமயற் கட்டற் றொழிந்ததுசச்
சிற்பரமே தானைத் தெளிந்து.

229. பற்றற்ற சுத்தவெளிப் பார்வையளித் தாண்டபிரான்
பற்றன்றி மற்றுமோர் பற்றில்லேன்—பற்றற்ற
பற்று மதுவே பரமபத சோபனமா
வுற்றே னுணர்வா லுளத்து.

230. பற்றற் றொளிர்சொருபப் பற்றே யலாமலெனக்
குற்றவகப் பற்றுமற றொன்றுமில்லை—உற்றபற்றும்
பற்றறுதி யான பராற்பரமா முத்தியா
வற்றதுரு வாக வலர்ந்து.

(கொச்சகக் கலிப்பா)

231. மூசு மயக்க முரண்சேர் பசாசமனப்
பாசமறச் செற்றவருட் பட்டன்பாற் பற்றியமெய்ந்
நேச மெனக்கு நிரதிசயா னந்தமா
வீசியெழுப் பொங்கலால் வீந்ததுபா ழாசையே.

குறிப்பு : முரண் – ஒன்றோடொன்று மாறுபட்ட சிச்
சடங்களின் கிரந்தி.

232. முறையாக யாதும் முயன்றிடா மூட
வெறியேனை மோனவருள் வித்தகக்கண் ணோக்கா
லறிவே சொரூபமா வாண்டவன்சீ பாத
வுறவே யலாமலெனக் கோர்பற்று மின்றே.

233. தன்பதமே யுண்மைச் சரணைச் சார்ந்தேனுக்
கின்பவாழ் வாக விளைந்தவருட் சிற்பரன்பா
என்பு தழைத்தலா லாசையறப் பொன்றியது
நன்பொன் மணிமுதலா ஞாலப் பொருள்களிலே.

234. கல்லாத வென்பாற் கருணைகூர்ந் தாண்டபிரான்
பொல்லாத மோகப் படலக்களியேற் கூட்டியதோர்
நல்ல சுவைப்படுமெய்ஞ் ஞானானு பூதியால்
எல்லாப் புலன்களினு மிச்சை யொழிந்ததே.

235. தானவிர்சற் போத சமாதியே தன்மனமாய்
மோனவருட் பார்வை முதிர்ந்து பழுத்தவிறை
ஈனவகப் பாசமற வெற்றியதா லென்னகத்திற்
போனதுவெம் பாசப் புணர்ப்பான பந்தமே.

## ௩௪. மாயை யறல்

(குறள்)

236. ஒன்றாத வற்றையெலா மொன்றுவிப்ப தன்னியமா
வின்றான மாயை யியல்.

237. மோனவெளி தானே முழுமுதலா வுள்ளபரம்
ஏனையவை *மாயமலா தில்.

* மாயம்—மாயா சத்தி விலாசம்.

(வெண்பா)

238. வாழ்வுசிவ மாக வளர்தலால் வாழ்விலுற்ற
தாழ்வுமனக் கற்பனையாச் சாய்ந்ததே—பாழ்வளர்
[பொய்ம்
மாயா விலாச மகத்துவத்தை மாய்த்ததுமெய்ந்
நேயானு பூதி நிறைவு.

239. அருள்வடிவா வுள்ளவென் னாண்டவனை யெண்ணித்
தெருள்வடிவா வுள்ளந் தெளிந்தேன்—மருள்வடிவ
மாயை வெளிவாங்க மானவ மானவகப்
பேயகன்ற தென்னைப் பிரிந்து.

(கொச்சகக் கலிப்பா)

240. தெய்வப் பிரானைச் சிவாயநம வென்றுநினைந்
துய்வகையா னுள்ளத் தொடுங்கலுற்ற வுள்ளுணர்விற்
கைவல் லியசொருபங் காண்டலாற் சிற்பரமாப்
பொய்வல்ல மாயைப் புணர்ப்பற் றொழிந்ததே.

குறிப்பு:—சிற்பரமாக் காண்டலால் எனக் கூட்டுக.

241. சித்தக் கலக்கந் தெளிந்த சிவானுபவ
முத்திப் பெருக்கமா மூண்டவருட் பேராளன்
சுத்தத் துரீய சொரூப வொளிவெளியிற்
பொய்த்தத் துவங்கள் புலம்பிக் கழிந்தனவே.

242. உடையா னுதவியதோ ருண்மை யுணர்வாற்
கடையான மோகக் கடியனே னுக்குப்
படையான கற்பனா பாசஜா லங்கெட்
டுடையா நின் றெங்கோ வொழிந்ததோ ரேனே.

## கரு. அவித்தை யறல்

(கொச்சகக் கலிப்பா)

243. காண வரிய கடவுள்வாழ் வாவகத்து
மாண வவிர்ந்தசிவ மாட்சியிலே மாய்ந்ததுகாண்,
வீணவ மான வியாகுலஞ்சேர் நானெனும்பா
ழாணவ மான வவித்தை மயக்கமே.

## கசு. பிரமாத மறல்

(குறள்)

244. மயக்க வகப்பாழ் *மனப்பிரமா தங்கெட்
டுயிர்க்கலுற்ற துள்ளத் துயிர்.

* மனப்பிரமாதம் - மனோரூபமான பிரமாதம்.

(வெண்பா)

245. உடையா னருட்பெருமை யோதுந் தரமோ!
அடியே னனுபவமா வார்ந்தேன்—இடையே
மடுத்தாலே போன்றபிர மாதமென்மாட் டென்றும்
அடுத்ததில்லா வுண்மைத் திறம்.

246. அங்கணனு வாண்டா னருளின் விலாசமே
யெங்கணுநான் காணு மெலாமென்னின்—துங்க
ஞான சொரூபகுரு நாதன் பதவொளியை [மெய்ஞ்
யானயர்த்த லெங்ஙன மே.

247. ஆவரண மற்ற வகண்டவருட் சிற்சொருப
வாழ்வரண மாவகத்தில் வாய்த்தலால்—பாவருண
மாக்கலக்க மான மரணப் பிரமாதத்
தாழ்க்கலற வுய்ந்தே னுயிர்.

குறிப்பு—பாவ ருணம்-எல்லா வுலகுந் தகையவ் வியலாற்,
"பொல்லாவினைகள் ருணமாம்......"—பகவான்

(கொச்சகக் கலிப்பா)

248. வேற்று விகார விடக்குடம்பை நானென்று
கூற்றுக்கே யாளாக் குலைந்தேன், குருவருளாற்
றேற்றலான் ஞானத் திருவடியென் னுள்ளத்திற்
கூற்றமா மோகக் கொடுமறலி பேர்ந்ததே.

249. தெள்ளத் தெளியத் திருவருட்சத் தித்திறத்தால்
உள்ளத் தொடுங்கி யுணர்ந்தசொரூ பத்திறத்தில்
துள்ளுமன மாய்மாலச் சூதாம் பிரமாதக்
கள்ளமொரு காலுங் கலந்ததின்றுக் கண்டேனே.

குறிப்பு.--சொரூபத்திறம் - சொரூபவியல்பு.

### ௧௭. காலதேச மறல்

(குறள்)

250. எங்கணுமோ ரிங்கா வியல்வதன்றி, அங்கெனவொன்
றெங்கணுநான் காண்கின் றிலேன்.

### ௧௮. பொய் யறல்

(குறள்)

251. சுத்தப் பரசிவத்திற் சொக்கலாற் சற்றுமில்லை
பொய்த்தப்பென் புந்திப் புலத்து.

252. ஆண்டவன்மெய்ப் பாதவொளி யார்தலா லென்ன
மாண்டதுபொய்ம் மாய மயக்கு. [கத்து

### ௧௯. சித்த மல மறல்

(குறள்)

253. அத்துவித மோனஞா னுபவத் திட்பத்தாற்
சித்தமல மற்றொழிந் தேன்.

254. அறிவிற் பிறந்த வமுதானு பூதிச்
செறிவிலில்லை சித்தச் செருக்கு.

(வெண்பா)

255. சுத்த மனத்திற் சுடர்சொருப மோனவருட்
பத்தியுணர் வூறப் படைத்தலால்—சித்த
மலம்போய்ப் புடத்தின் மடுத்தபொன் போல
நலம்பெற் றொளிசிறந்தேன் நான்.

## ௨௦. கவலை யறல்

(குறள்)

256. நம்பனருட் செம்பதத்து நாட்டமீக் கூர்தலால்
இம்பரும்பர்ச் சிந்தை யிலை.

257. சிந்தை யிலாத சிவச்செம் பதத்துரிய
விந்தையுணர் வோங்கிற் றுளத்து.

258. சிவத்திலே யன்றித் தெரிவரிய சுத்தத்
தவத்திலே தன்னியல்சார்ந் தேன்.

259. சார்ந்தது சாந்த சதாசிவமே யாகவகங்
கூர்ந்த சொரூபக் குலா.

260. உரையுணர்வுக் கெட்டா வொளிவெளியா முண்மைத்
தரையடைவுற் றுய்ந்த துயிர்.

(வெண்பா)

261. சிதானந்த மோனவருட் செல்வமெனக் குள்ளத்
ததாவந் தடைந்தவாற் றுலே—எதானுங்
கவல்வதற்கோர் சற்றுங் கருத்தின்றித் தன்மெய்
யவிர்வதற்கே யாயிற் றது.

குறிப்பு:—அது-கருத்து.

262. ஊனப்பொய் யான வுடலகந்தை சுத்தவருள்
வானப் பரவொளியின் மாய்தலால்—ஞானப்
பொருளாக வுள்ளசிவ போகமன்றி யுள்ளத்
திருள்சேர்சிந் தாகுலமில் லேன்.

(கொச்சகக் கலிப்பா)

263. உள்ளதனை யுள்ளபடி யுள்ளத் திருந்துதேற்
றெள்ளியோ ஞான வுடையான் சொரூபவருள்
வெள்ளத் தமிழ்ந்தும் மிதந்துந் துளைதலாற்
கள்ளமனத் தாபக் கவலை கழன்றதே.

264. உள்ளமா வுள்ள வொருத்தன் சொரூபவருள்
வெள்ளமே யாக விளைந்தஞா னனுபவத்
தெள்ளமுத முண்டு திளைத்தலால் யானெனும்பொய்க்
கள்ள மனக்கவலை கட்டோ டொழிந்ததே.
குறிப்பு:—ஒருத்தன்-ஏகான்மாவாக விளங்கு மிறைவன்.

## சக. இருளறல்

(குறள்)

265. அருள்வெளி யான வகத்தே யறிந்தேன்
இருளென்றும் பற்று வியல்.

(வெண்பா)

266. மங்கலமாம் போத மவுன மலர்ப்பதத்தே
தங்கலா லென்னறிவு சாந்தமாய்த்—துங்க
வருள்வண்ண முற்ற வனுபூதி யாலே
யிருள்வண்ண மென்று மிலே.

## சஉ. இடரறல்

(வெண்பா)

267. வாழ்வே நிவேதனமா வள்ளலடிக் கானதால்
ஊழ்வினையை வென்றுங் கொளிபெருகி—வாழ்வுதாழ்
வெல்லா மொருபடித்தா யின்பவுணர் வூறவுளத்
தில்லா தொழிந்த திடர்.

268. அன்றிநின்றே யொன்று மகிலமாத் தோன்றுபெரு
வென்றிசேர் மாய விசித்திரமெய்—மன்ற
வகந்தெளிந்த மோனஞா னனுபவத் தாலே
இகந்தொழிந்த தென்றன் னிடர்.

## சக. துயரறல்

(குறள்)

269. தனக்கே யுரிமையாஞ் சாசனத்தால் என்பாற்
றுனற்குவழி யில்லை துயர்.

270. மலட்டறி வாக மலர்ந்த மனத்தால்
அலத்த லகன்றொழிந் தேன்.

குறிப்பு:—மலட்டறிவு-கேவல வறிவு, சுத்த வறிவு. அலத்தலகன்றொழிதல்-அவ்வறிவின் மயக்க விகற்ப மற்ற சுத்தாத்துவித சொரூப வியல்பால் என்க. அலத்தல்-வருந்தல்.

271. மெய்ஞ்ஞான வாழ்வு விளைதலாற் பொன்றியது
பொய்ஞ்ஞால துக்கப் புணர்ப்பு.

(வெண்பா)

272. அருவமா வைகு மறிவுண்மை தானே
யுருவமா விவ்வுலகிற் றோன்றிக்—குருவடிவச்
செம்மலையா நின்றசிவச் செம்மலருட் சிந்தையான்
மம்ம ரொழிந்தேன் மனத்து.

## சச. கலக்கமறல்

(குறள்)

273. பகுக்கலற்ற சுத்தப் பரசிவபோ தத்தால்
அகக்கலக்க மற்ற தறிவு.

274. முகக்கலரு சொச்சொருப மோனவருட் பேற்றால்
அகக்கலக்க மற்ற தறிவு.

(வெண்பா)

275. உள்ளமா வுள்ள வுணர்வே சொரூபசுகத்
தெள்ளமுத மாகத் திளைத்தலாற்—கள்ளமனக்
கற்பனை துக்கக் கலக்கமற்ற தன்புமயச்
சிற்பரமா மோனந் தெளிந்து.

(கொச்சகக் கலிப்பா)

276. பருப்பதமா வூன்று பரஞ்சோதி யான
குருப்பரன் மோனக் குறிவழியே கூடி
இருப்பே யியல்பா விதயத் தொளிர்வாற்
கருப்படர்மோ கப்பாழ்ங் கலக்கமற் றேனே.

277. பாதமே சற்கதியாப் பற்றினே னுற்றமனக்
கேதமற வாண்டான் கிளர்வித்த சுத்தவருட்
போத சொரூபானு பூதியால் யானெனுமுன்
மாத வகந்தை மனக்கலக்கம் பேர்ந்ததே.

சஞ. அச்ச மறல்

(குறள்)

278. விஞ்சும் பரசொருப மெய்யுணர்வால், வேற்றுமைகண்
டஞ்சுங் கலக்கமற் றேன்.

குறிப்பு:—மெய்யுணர்வாற் கலக்கமற்றேன் என வியையும்.

279. அஞ்சுவே னல்லேன் அயிர்ப்பே னலேனுலகை
விஞ்சலா லாண்டவருள் வீறு.

(வெண்பா)

280. அச்சமொன்று மில்லை யடியேனுக் கத்துவித
விச்சையொன்று மோன விளைவாலே—எச்சமொன்று
மின்றித் துவித மியற்பரமாங் கைவல்ய
வென்றியிலே யொன்றி விடும்.

281. அருளே வடிவா வமைந்தசிவ பாதப்
பொருளா லகம்பொலியப் பெற்றேன்—தெருளாற்
புரணவியல் பொங்குமனு பூதியாற் சற்றும்
மரணபய மில்லேன் மனத்து.

சசு. ஊழறல்

(குறள்)

282. திருவருள்வாழ் வாகத் திளைத்தலா லுள்ளத்
தொருவியதூழ் வாதை யுணர்வு,

(வெண்பா)

283. ஆண்டகுரு நாத னருட்பதத்தே தன்னியல்பாப்
பூண்டவனு பூதியுளம் பொங்கலால்—மூண்டவறும்
பாழகந்தை மையலறப் பாழ்த்தொழியப் பற்றின்றி
யூழவிந்த தென்ற னுயிர்க்கு.

குறிப்பு:—பொங்கலாற் பாழ்த்தொழிய எனக்கூட்டுக.

சஎ. கடமை யறல்

(வெண்பா)

284. கடமை யுணர்ச்சியறக் கர்த்தத் துவங்கூர்
மடமையறப் பேர்ந்த மனத்தால்—கடமைதீர்
தன்னிழப்பா மோன சதாசிவமாந் தற்பரவாழ்
வென்னியற்கை யாயிற் றிகத்து.

சஅ. அன்னிய மறல்

(குறள்)

285. வெற்றறிவு தானு விளங்குசொரூ பத்திலெனக்
குற்றறிய மற்றென் றிலே.

(வெண்பா)

286. தன்னிலென்னைப் பேதமறத் தான்கண்ட வெம்பெரு
றன்னையே நானுத் தரிசித்தேன்—துன்னியசற் [மான்
போத சொரூபவருட் பூரணமாந் தற்பரத்திற்
பேதவுணர் வெல்லாம் பிழை.

287. யாதுமினி யென்று லியற்றலா காதுமனஞ்
சாதலுறக் கண்ட சதிராளன்—பேதமறு
போதானு பூதியிற் புத்தி யழுந்தலால்
யாதானு ஞானமொழிந் தேன்.

சகூ. அயற்கல்வி யறல்

(குறள்)

288. கற்பதற்கு யாதொன்றுங் காண்கிலேன் கைவல்யச்
சிற்பரமா வுள்ள சிவத்து.

(வெண்பா)

289. வெற்றவெளி யாக விளங்கு சொரூபவருட்
பற்றன்றி மற்றுமோர் பற்றில்லேன்—கற்றவெல்லாங்
கற்பனையா முற்றுங் கழன்றொழியக் கைவல்யச்
சிற்பரமாச் சிந்தையற் றேன்.

## ௩0. நானறல்

(குறள்)

290. சிற்பரமாந் தன்சொருபத் தேற்றத்தே நானெனுமவ்
வற்பமாந் தன்மையகன் றேன்.

291. மோனவருட் சால்பு முயங்கலால் யானெனும்பா
ழீனவகைப் பாசமற் றேன்.

292. மோனமா நிற்றலே முத்திக் கலப்பெனக்கண்
டேனமுனைப் பற்ற துணர்வு.

(வெண்பா)

293. மங்களமாந் தன்சொருப மாட்சியென் னுள்ளத்திற்
கங்குகரை யற்றுக் கலத்தலாற்—பொங்கு
மகண்டசிவா னந்த வருள்வெள்ளத் தாலே
தகர்ந்தது நா னென்னுந் தனே.

294. மறந்தொழிய வொண்ணு வகையா லெனக்குட்
சிறந்தொளிர்சச் சித்தாஞ் சிவத்தை—அறிந்தறிந்து
நானதுவாய் வேற்று நினைப் பற்றொழிந்த வாற்றலே
போனதுநா னென்னும் புணர்ப்பு.

295. தானன மோனந் தழைத்தலுமென் னுள்ளத்து
நானெனும்பொய்ஞ் ஞான நழுவியதே—ஊனவுடற்
பற்றன பேயகந்தைப் பாழறிவெவ் வாறுநிற்கும்
முற்றன சிற்பரத்தின் முன்.

296. ஆண்டான் சொரூப வருள்வெளியாம் பூரணத்திற்
பூண்டோ டகந்தையறப் போன்றலால்— ஆண்டா
னருட்குறியா லன்பர்க் கனுபவமா மோனப்
பொருட்புணர்வால் வாழ்ந்தேன் பொலிந்து.

(கொச்சகக் கலிப்பா)

297. தேறுக் கலக்கச் செருக்காம் பசுத்துவத்தை
நீருக்கு(ம்) ஞான நெருப்புருவா நெஞ்சகத்தே
வீருக் கலந்து விளங்குசிவ பூரணத்தில்
வேருக யாளுெருவன் மேவல் அசங்கதமே.

298. மஞேமயத்தி லன்றி மனமற்ற சுத்த
இஞேதயமாங் கேவலத்தில் யாதுமறப் பொங்கும்
எஞேது சொரூப வியல்விளங்கப் பொன்றிற்
றெஞேதுநா னென்னு மிருட்பாழ் மயக்கே.

299. யான்யானென் றெண்ணி யிரங்கலுற்றே னுள்ளத்துத்
தான்றுஞ முற்றமுழுத் தத்துவஞ்சார் வுற்றதால்,
யானென்ற வென்னையான் காணேன்பே ரின்பவருள்
வாஞ வளைத்தெழுந்த வைப்பான தன்னிலே.

300. காந்தமா வென்னைக் கவர்ந்தபிரான் கூரருள்கொண்
டோர்ந்துநா ஞரென் றுசாவுதலுந் தற்பரமாச்
சார்ந்த சொரூபசாட் சாற்காரத் தாலகத்திற்
பேர்ந்ததுநா னென்னுமகப் பேய்முனைப்பாம்
[பீடையே.

301. கலக்கமனக் கங்குல் கழன்றொழிய வுண்மைத்
துலக்கமா வுற்ற சொரூபன்சீ பாத
நிலக்கணே யூன்றலுற்ற நிஷ்டானு பூதி
நலக்கணே யொன்றியது நானெனும்பொல் லாங்கே.

302. தெளிந்தவருட் பார்வை சிறக்கவென் னுள்ளத்
தளைந்துநிற் கின்றநல் லங்கஞன் ருளில்
விளைந்தஞா ஞனுபவ வேகக் கடுப்பால்
விளிந்ததுநா னென்னும் வியாமோகப் பேயே.

௩௧. **ஆணவமறல்**

(குறள்)

303. உடையா னருட்சீ ரொளியா லொழிந்த
தடியே னகத்தா ணவம்.

(கொச்சகக் கலிப்பா)

304. இல்லா ததனை யிருப்பதுபோற் றோற்றுவிக்கும்
பொல்லா மயக்கமறப் புல்லியே னுள்ளத்து
நல்லான் புகட்டியமெய்ஞ் ஞானனு பூதியால்
அல்லா ணவப்பா ழறக்கெட் டொழிந்ததே.

305. அல்லதுவே றில்லா வதீதப் பரமார்த்தன்
சொல்லருமோ னத்தாற் றுரீயமாத் துற்றுவித்த
நல்லதோ ரத்துவித ஞானனு பூதியாற்
புல்லியமோ காணவப்பாழ்ம் புன்கலக்கம் போனதே.

306. எத்தகைய வூனக் குறையுமெனக் கின்றாக
அத்துவித மோன வருள்வெளியாப் பொங்குசுப
வித்தகமெய் வாழ்வு விளைத்தான் பதவொளியிற்
செத்தது நா னென்னுஞ் செருக்கான வாணவமே.

௯௨. செருக்கறல்

(வெண்பா)

307. செருக்கற் றிடலே சிவாய நமவென்
றிருக்குமுப சாந்த வியலென்—றொருக்கமுறச்
சித்தந் தெளிந்து சிவானுபவச் செம்பதத்திற்
செத்தது நா னென்னுஞ் செருக்கு.

௯௩. யானற்றுத் தானுதல்

(வெண்பா)

308. என்னுருவே யாக விதயத் தொளிர்ப்ரத்திற்
றன்னியல்பா மோனந் தரித்தலால்—அன்னியம்போல்
யானென்றுந் தானென்று மெண்ணுமனக் கற்பனையா
லூனமற்ற தென்னுள் ளுணர்வு.

309. யானென் றொருவ னிருப்பினன்றோ வென்மதியால்
யானவனென் றோர்சொல் லியம்பவொண்ணும்—[மோனவருள்
விண்ணாக வென்னை விழுங்கினு னந்தமிலாக்
கண்ணாகக் கண்டேன் கலந்து.

310. என்செயலென் றென்னறிவில் யாதுமில்லை முற்றுமவன்
றன்செயலே யாகச் சரிப்பதுயிர்—தஞ்சமெனத்
தன்னருளே பற்றித் தனையடைந்த தக்கணமே
யன்னவன்மெய் யாயிற் றறிவு.

311. யானே வவனடிமை யென்று லவனன்றி
யானென் றுயிர்த்தெழவோ ரேதுவுண்டோ—ஊனென்
றுயிரான பொய்த்தன்மை யோயவுணர்ந் தியானென்
செயலின்றி வாழ்வன் சிவத்து.

312. நெஞ்ச மெனக்குத்தன் னேசவுணர் வேயாக
விஞ்சியமெய்ஞ் ஞான விழிப்பாலே—சஞ்சலத்துக்
கேதுவா முன்னெழுந்த யானெனதென் னுஞ்செருக்
பேதகன்ற தென்னிற் பெயர்ந்து. [கின்

313. ஞானனு பூதி நடத்தலாற் பேரின்ப
வானகை வாழ்க்கை வழங்குவதாம்—ஊனை
நானெனும்பொய்த் தன்மை நழுவவுற நல்லசிவந்
தானெனுமெய்த் தன்மை தழைத்து.

(கொச்சகக் கலிப்பா)

314. ஞானவொளி யாவகத்து நண்ணியது சுத்தசிவ
மோனவியல் பான முழுமுதற்பே ராட்சியால்,
ஈன வெளிமைசேர் யானெனதென் னும்மனப்பேய்
வான வருள்வெளியா வைகிதயத் தல்கியதே.

௫௪. அகங்காரம்–ஆணவம் அறல்

(குறள்)

315. கருணை விலாசங் கலத்தலா லற்ற
திருளா ரகந்தை யிளி.

316. சாவாத சுத்தசிவத் தன்மையா லாண்டவனுக்
காவா வகந்தையற் றேன்.

317. சுத்தசச் சித்தாத் துலங்கனுபூ தித்திறத்தால்
மத்தவகம் மாய்ந்தது மன்.

318. கழல்விளங்கப் பெற்ற கருத்திற் கழன்ற
தழல்வுறுவெம் பாச வகம்.

319. சுட்ட வொணுத சொரூபவருட் பார்வையாற்
கெட்டதகங் காரக் கிறி.

320. வெளியா மலர விரிந்த வுளத்தால்
இளிசே ரகந்தை யிலேன்.

321. வெறிசே ரகந்தை விளிதலா லுள்ளத்
தறிவா வொளிர்ந்த தகம்.

322. தேறத் தெளிந்தசிவச் சிற்பரத்தில் வேறற்
றெழிந்ததகப் பேய்மா லுணர்வு.

323. உண்மை யுணர்வா லொழிந்த தனுதிமலத்
திண்மைசேர் வஞ்சச் செருக்கு.

324. சொரூப வொளியாற் றுலைந்ததுநா னென்னுங்
குரூப வகப்பேய் குலைந்து.

325. மோன வுணர்வே முழுமுதல்வாழ் வாவொளிர்வால்
யானென்னு மீனமற் றேன்.

326. மோனந் தெளிந்த முகூர்த்தமே நானெனும்பா
ழூனந் தவிர்ந்த துயிர்க்கு.

327. மோன வசீகரஞ்சேர் முற்றமுழுச் சிற்பரத்திற்
போனதுநா னென்னும் புலம்பு.

328. தானுன வுண்மை தழைத்தலா லுள்ளத்திற்
போனதுநா னென்னும் புணர்ப்பு.

329. குலவுறுஞா னத்தாற் குலைந்ததுநா னென்னச்
சுலவுறுபாழ் மோகச் சுழல்.

330. சுத்தவருட் போத சொரூபானு பூதியாற்
பொய்த்ததுநா னென்னும் புணர்ப்பு.

331. சிற்பரமா வுள்ள சிவத்திலே செத்ததுபொய்க்
கற்பனு மோகக் கருத்து.

332. இயற்பரமா வுள்ளத் திலகலால் யானென்
மயர்ப்பறப்பொன் றிற்று மனத்து.
குறிப்பு:—யானென் மயர்ப்பு—யானென்னும் மயக்கம்.

333. விசாரஞா னத்தால் விளிந்தது நா னென்னு
மசார வகப்பா ழறிவு.

334. யானற் றெழுந்தாங் கிலகியது சுத்தவருள்
வானப் பெருமிதமெய் வாழ்வு.

335. நானதுவா நின்றெளிர்மெய்ஞ் ஞானனு பூதியாற்
போனதுதே கோகப் புணர்ப்பு.

336. சுத்தவருட் பார்வை துலங்கலாற் செத்ததுபொய்ம்
மத்தவகப் பாழ்ம்பேய் மனம்.

337. யானவனு வுள்ளத் தியல்சொருப மெய்யுணர்விற்
போனதுநா னென்னும் புணர்ப்பு.

338. அனுபூதி ஞானத்தா லற்றதகத் தானத்
தனுவாதி மோகத் தடை.

339. தெளிய விளங்குசிவச் சிற்பரத்து டாழ்வால்
விளிந்ததுநா னென்னும் வெறி.

340. தெளிந்தமெய்ஞ் ஞானத் திறத்தா லகத்தில்
விளிந்ததுநா னென்னும் வெறி.

341. பரந்த வருட்சிற் பரத்திற் கரந்ததுகாண்
பேத மயக்கவகப் பேய்.

342. விசுத்த சொரூபம் விளங்கலால் வெட்கி
முசித்ததுபாழ் மோக முனைப்பு.

343. சுத்தசிவத் தன்மை துலங்கலா னுள்ளத்திற்
பொய்த்த தகப்பேய்ப் புணர்ப்பு.

344. விளியதுற்ற ஆணவப்பேய் வித்தகமெய்ந் நோக்காற்
றெளியலுற்ற சுத்த சிவத்து.
குறிப்பு:—சிவத்து ஆணவப்பேய் விளியலுற்றது எனக் கூட்டுக.

345. சுத்தவெளி யாகத் துலங்கு சொரூபத்திற்
செத்ததுமா மோகச் செருக்கு.

346. அருள்வெளியா வாண்டா னடிக்கூடு வற்ற
திருள்வளர்யா னென்னுஞ் செருக்கு.

347. குருபரன்பால் வாழ்வு குலாவலா வில்லேன்
பருவரல்சேர் மாயப் பதைப்பு.

348. தெளிந்தபரஞ் சோதித் திறத்தா லகத்தில்
விளிந்ததகங் கார வெறி.

349. திரண்ட விசுத்தவருட் சிற்பரத்தைச் சாரக்
கரந்ததகங் காரக் கருத்து.

350. கள்ளவகங் காரக் கடுப்பற்ற துள்ளுணர்வாத்
தெள்ளவிளங் குற்ற சிவத்து.

351. பளிச்சிட்ட சொந்தப் பரவொளியா லுள்ளத்
தொளிச்சதகப் பாம்பே யுரு.

352. தேறத் தெளிந்தசிவச் சிற்பரமோ னப்பதத்திற்
பாறிற் றகந்தைமனப் பாழ்.

353. வாலறிவா வுள்ளம் மலர்வால் அகந்தைமன
மாலறிவு மங்குற் றது.

354. புகலாக வுற்றவருட் போத சொரூபம்
பகலாக அற்றதகப் பாழ்.

355. அத்துவித மோன வருட்சிற் பரவெளியிற்
செத்ததுநா னென்னுஞ் செருக்கு.

356. மெய்யறிவா லுண்மை விளங்கலால், ஊனவகப்
பொய்யறிவு வெள்குற் றது.

357. வெள்குற்ற தொன்றோ விளிந்தே யொழிந்ததகக்
கள்ளத் தனப்பேய்க் கலி.

358. சுத்தத் துரீய சொரூபவியற் காட்சியிற்
பொய்த்ததுநா னென்னும் புணர்ப்பு.

359. சிவத்திலென் னுண்மை தெளிதலாற் றீர்ந்த
தவத்தமா மோகவகப் பாழ்.

360. சிவசொருப வுண்மை திளைத்தலா லுள்ளத்
தவசவகப் பேயற் றது.

361. அத்துவித மோன வறிவுண்மை காண்டலாற்
செத்ததுநா னென்னுஞ் செருக்கு.

362. போதமா வான்றசிவ பூரணமே நானெனதாச்
சேர்தலா லற்றேன் செருக்கு.

363. விசுத்தசிவத் தன்மை விளங்கலால் அற்ற
தசுத்தவகப் பேயா ணவம்.

364. துங்கவியற் சிற்பதத்திற் சொக்கலால் உக்கதுபா
ழங்கமகப் பாசா ணவம்.

365. துங்கக்கை வல்ய சொரூப வுணர்வொளியாற்
பங்கமுற்ற தாணவப் பாழ்.

366. பற்றப் படாதவருட் பார்வையகம் பற்றலால்
அற்றதகப் பாழா ணவம்.

367. ஆணவப் பாழை யறக்குலைத்தாண் டான்சொரூபம்
மாணவென் சொந்த வடிவு.

(வெண்பா)

368. ஒப்பிலி யப்ப னுடையான் பதவொளியிற்
கற்பனை முற்றுங் கழிந்தொழியச்—சிற்பரமா
மோனந் தெளிதலான் மோகவகப் பேயாட்ட
வூனந் தொலைந்த துளத்து.

369. அருட்பூ ரண மா வவிர்சொரூ பத்தில்
விருப்பூர்பே ரின்ப விளைவால்—இருப்பாக
வுள்ளவுணர் வாமவ் வொருகடவுட் செம்பதத்திற்
கள்ளமன மற்றது காண்.

370. அற்றமற்ற வுண்மை யறிவொளியா லிவ்வுலகைச்
சுற்றமுற்றுஞ் சூழ்ந்த சொரூபமாய்ப்—பற்றுமுற்றத்
தன்னடிக்கே யாகவெனைத் தான்கவர்ந்த தற்பரத்து
முன்னிலைக்கே முற்றவிளிந் தேன்.

371. இருத்தலே ஞான வியல்பன்றி நானென்
றுருத்துணர்தல் கற்பனையென் றோய்ந்தேன்—
[உருத்துணர
வன்னியம்பொய் சுத்தஞா னுன்ம சொரூபமோ
வுன்ன விரண்டிலா வொன்று.

372. இருப்பதா யென்று மிலகும்பே ரின்பத்
தொருப்பட்டு வாழ வுவந்தேன்—உருப்பதாம்
பொய்யகந்தை யானமருட் புன்மதியோய்ந் தன்புமய
மெய்யகந்தா னுமறிவு மிக்கு.

373. என்னை யழித்தலா லென்னையளித் தாதரங்கூ
ரென்னியல்பா வென்னி லியல்சொருபன்—மன்னிய
[செம்
பொற்பதத்தில் வாழ்வு பொருந்தியதே பூரணச்
சிற்பதவாழ் வாயிற் றகத்து.

374. செழிக்கலுற்ற வாழ்வெனக்குச் சிற்பரமா மோன
வொழுக்கமா வுள்ளத் துறலால்—பழிக்கிடமாத்
துன்றியமோ காணவங்கூர் சொப்பனவாழ் வூரகந்தை
பொன்றியது சிற்பரத்திற் புக்கு.

375. ஞானவெயிற் செஞ்சுடரா நண்ணியமெய்ப் பாதவொளி
மோனவியற் பார்வையா மூண்டதே—ஊனவகப்
பேயறிவா மோகப் பெருங்கற் பனைஜாலச்
சாயமஞ் சள்வெளுக்கத் தான்.

376. மங்கலவாழ் வாக மனத்திலேசாந்தசுகத்
துங்க சொரூபஞ் சுடர்தலால்—அங்கமாக
மான மயக்க வனர்த்தவகப் பேயறிவு
போனதுமெய்ஞ் ஞானப் புலத்து.

(கொச்சகக் கலிப்பா)

377. ஆண்டவனுக் கேநா னடிமையா வுள்ளத்து
மூண்டொழுகப் பெற்றவென் முற்றவத்து நற்றிறச்
காண்டலுற்ற சுத்தவருட் கைவல்யக் காட்சியிலே [தாழ்
மாண்டதுநா னென்னும் மயக்கப்பா ழாணவமே!

378. களந்தருபொய்ம் மோகக் கருத்தற் றொழிந்தோர்
உளந்ததும்பும் மோன வுணர்வொளியா முற்றத்
தெளிந்த சொரூப சிவாத்துவித வுண்மை
அளைந்ததா லற்ற தகந்தை முனைப்பே.

குறிப்பு:—ஒழிந்தோர் தெளிந்த உண்மை அளைந்ததால் அற்றது என வியையும்.

379. விந்தைசே ருண்மை விளங்கவென் னுள்ளம்புக்
கந்த ரியாமியா வாண்டவனைக் காண்டலுமென்
புந்தியிலே பூமாவாப் பொங்கலுற்ற சிற்பரத்திற்
சிந்தியது மோகச் செருக்கா மனர்த்தமே.

380. அனர்த்தங்கட் கெல்லா மடிப்படை யாக
முனைத்த வகந்தையா மோக மனக்கார்
தனித்தொளிர் சுத்த சதாசிவ மான
கனத்தற் பரத்திற் கரந்த துருவே.

381. திறந்தவெளி யாகச் சிறந்தசிவந் தானே
நிறைந்தபர மார்த்த நிலையாக வுள்ளத்
துறைந்தொளிர்சாந் தானுபவ வுண்மை யுயிர்ப்பால்
இறந்ததுநா னென்னு மகப்பேய் முனைப்பே.

382. ஆன்ம சொரூப வருட்பார்வை யாலகத்துத்
தான்மலிந்த ஞான சகஜ சமாதியால்
ஊனமகன் றோங்கு முதாரப் பரசொருப
மோனமய வாழ்வில் முனைப்பற் றொழிந்ததே.

383. நாயனு ளுள்ளலர்ந்த நாட்டத்தா லென்னகத்து
ஞேயமா நின்றொளிசெய் நிஷ்டானு பூதிநிலைத்
தாயகமா மன்னுமியற் றற்பரமாங் கேவலத்திற்
போயதுமா மோகமனப் புல்லறிவாங் கற்பனையே.

384. பற்றொழிவு தானே பரசொருப ஞானவருள்
வெற்றிதரு கைவல் லியவியல்சேர் முத்தியாப்
பற்றியநீள் சுத்தப் பரபோக சாந்தியா
லற்றதுநா னென்னுஞ்சிந் தாகுலங்கூர் பொய்ம்
[முனைப்பே.

385. இருட்புலங் காணு விதயத் தலத்துத்
தெருட்பிழம் பான சிவானுபூ திச்சீ
ரருட்பர சித்தி யடைந்தவாற் றொற்பொய்ம்
மருட்கற் பனைசத்தி மாய்ந்துபோ யிற்றே.

386. பொதுவெளியா(ம்) மோனவருட் போத சொரூப
மதுவருந்த லுற்ற மனத்தால் உலகத்
திதுவதுவென் றன்னியச்சுட் டேன்ற வகந்தை
மதிகுலைந்து நான்கே வலப்பொருளா னேனே.

387. கலக்கமற வென்னுட் கலந்தியன்ற மோனத்
துலக்கமாம் போத சொரூபமே என்று
மிலக்கமாக் காட்சிக் கியல்வதால் உள்ளத்
தலக்கழிவாஞ் சிந்தைதீ ராக்கமுற் றேனே.

388. அடர்வதா(ம்) மோக வகந்தையறச் செத்துப்
படர்வதா(ம்) மோனவருட் பார வுணர்வாற்
கடவதா வொன்று(ம்)நான் காணேன் கருத்திற்
சுடர்வதாம் போத சொரூபம் பரமே.

389. யானற்ற நானே யெனக்குறுதி யாகவுணர்ந்
தூனப் புலவுலகோ டொட்டுமனச் சுட்டறுத்தேன்
தீனக் கருத்தாஞ் செருக்கற் றொழிதலால்
வானப் பெரும்பதமே வாழ்வாக வைகியதே.

390. தெள்ளத் தெளிந்த சிவானுபவஞ் சேரவெனக்
கள்ளிக் கொடுத்தஞா னாசிரியன் காட்டியமெய்
யுள்ளமா வுள்ள வுணர்வுருவில் யானெனும்பொய்க்
கள்ளவுணர் வானமனக் கட்டற் றொழிந்ததே.

391. இங்கங் கெனலறவெங் கெங்கும் பரந்தொளிர்மெய்த
துங்கப் பிரானே சொரூபமா வுள்ளுணர்விற்
பொங்கக் கிளர்தலாற் பொக்கமனக் கற்பனையா
மங்கியது நானென்னும் மத்த வகந்தையே.

392. சுட்டறிவா மோகச் சுழற்சியற வுள்ளுணர்விற்
பட்டனருட் பார்வை பதிந்தாங் கியற்பரமெய்ந்
நிட்டையாச் சேர்சொருப நேயானு பூதியாற்
பட்டதகங் காரப் பசாசமன மாயமே.

393. என்றுமொன்ரு வுள்ள விறையோன் சொருபமாத்
துன்றுணர்வா லற்றதுபொய்ச் சூதா மகந்தைமயல்;
மன்ற விளங்குசிவ மாட்சிசேர் சுத்தவருள்
வென்றியிலென் மோகமனோ வேகவிடங் கெட்டதே.

394. ஒன்ருக வுள்ளத் தொளிர்சொருப வுண்மையின்முற்
றுன்ரு தொழிந்ததுபொய்ச் சூதாந் துவிதமயல்;
குன்ருத சுத்தவருட் கோமானைச் சென்றடைந்த
வன்றே யகன்ற தகப்பேய் மயக்கமே.

395. இரந்தமெய் யன்பர்க் கிரங்கி இறையோன்
சுரந்தருள்வாழ் வான துரீயவிலா சத்திற்
பரந்தமோ ஞனுபவப் பற்ருல் அகத்திற்
கரந்ததுநா னென்னுமகங் கார முனைப்பே.

396. என்ஞ ருயிரா விதயத் தொளிர்சொருபச்
செந்நா யிறுபரப்புந் தேசொளியிற் காண்கிலேன்
இன்ஞைமைக் கெல்லாமோ ரேதுவா யானென்று
முன்ஞ வியன்ற முனைப்பான பொய்ம்முதலே.

397. கட்டென்று மில்லாக் கடவுட் பரத்திலுயிர்க்
குட்டுறவு பற்றலுற்ற வுள்ளுணர்வா லுள்ளத்தில்
விட்டதுநா னென்னும் வியாமோகப் பீடைமதி
பட்டனருட் பார்வை பதிந்தவடி யேனுக்கே.

398. பூண்டபசு பாசப் புணர்ப்பறவென் னுட்புக்குக்
காண்டலரு சுத்தவருட் கைவல் லியவொளியா
லாண்டவன்பா தத்தி லடைக்கலம்புக் கேனுக்கு
மாண்டதுநா னென்னும் மயக்கப்பா மூணவமே.

399. தொடர்ந்து விளங்கு சொரூபானு பூதி
யடைந்ததா லுள்ளத் தகன்சிற் பரமாப்
படர்ந்தியல்சற் போதவருட் பார்வையிலே பொன்றிற்
றடந்தருமோ காணவப்பா மூனவகப் பேயே.

400. காரா ணவத்தாற் கலங்கிமலங் குற்றமனப்
போராட்டந் தீரவருட் பூரணமாப் பொங்குசிவச்
சீரா லகந்தைமனஞ் செத்தொழியப் பெற்றதால்
ஆரா வமுதசொரூ பானுபவங் கூடியதே.

401. அன்னியமா மாய வறிவுகளை மெய்போலப்
பின்னியவெம் பாசப் பிணக்கா மகந்தையறத்
தன்னறிவே சுத்தப் பரமார்த்தத் தத்துவமா
மன்னியதா லுள்ளத்து மாட்சி மலர்ந்ததே.

402. சொல்லவொணு மோனத் துரீயவியல் பாகவொளிர்
நல்லவே தாந்தமெய்ஞ் ஞானனு பூதியாற்
புல்லவொணு தூனமனப் புன்கலக்கம் போகவகத்
தல்லியல்சேர் மோக வகப்பா ழகன்றதே.

குறிப்பு:- ஞானனுபூதியால் அகப்பாழகன்றது எனக் கூட்டுக.

403. கயங்குமகங் காரக் கருத்தற் றெழிவால்,
தியங்கலோ வன்றித் தெளிதலோ சிந்தை
யுயங்கலோ வன்றி யுவத்தலோ ஓராங்
கியங்கலோ வன்றி யிருத்தலோ வின்றே.

404. அவிசார மான வகப்பா ழளைவால்
அவஞான மாக வளைத்து மறக்காண்
சிவஞான மோனத் திறத்தாற் செருக்கோ
டவஞால மோகப்பா ழாசையற் றேனே.

405. இரண்டற்ற வுண்மை யிதயத் தலத்துத்
திரண்டு விளங்கு சிவோகத் திறத்தால்
மருண்டவகங் கார மனஞ்செத் திடலின்
வெருண்டு கலங்கு விதிர்ப்பொன் றிலேனே.

406. சார்ந்தே னறிவுலகில்; தட்டுளுப்புப் பட்டழியா
தார்ந்தே னகத்தி லமுதசொரூ பானுபவம்;
தீர்ந்தே யொழியத் தெருமரல்சேர் பொய்த்துவிதம்,
பேர்ந்தே யொழிந்ததுநா னென்னுமகப் பேய்மனமே.

407. கட்டுப்பா டாகக் கலந்தமயற் சிச்சடத்தை
வெட்டலுற்ற ஞான விசாரவருள் வாட்கிரையாய்த்
துட்டப் படிற்றுத் துராசாரப் பேயகந்தைப்
பட்டிமனங் காணப் படாது கரந்ததே.

408. போதவடி வாஞ்செம் பொருளே பொருளாக
ஆதனே னுள்ளத் தருளா லனுபவமாச்
சேர்தலா லெல்லாமே சின்மயமாய், யானிதுவென்
பேத மயக்கமனப் பீழையறப் பேர்ந்ததே.

409. விவத்தைசே ரான்ம விசாரத்தா டாழ்ந்து
சுவத்தமா வுள்ளந் துலங்கு சொரூப
சிவத்திற் பரமார்த்தந் தேறலான் மோக
வவத்தைக் கலக்க வலமரலற் றேனே.

குறிப்பு:- ஆழ்ந்து தேறலால் எனவியையும்.

410. மூடார்ந்த பாச முனைப்பா லெதிர்தோன்றும்
கேடார்ந்த மாயக் கிறிசே ருலகமயல்
பீடார்ந்த வுண்மைப் பெருவெளியா மோனவுணர்
வூடார்ந்த வாழ்க்கை யொளியா லொழிந்ததே.

411. மோனவியற் கைவல்ய முத்திப் பரசொருப
ஞானவொளி யுள்ளத்து நண்ணலால், யானெனும்பா
மூனமயற் பேயுணர்வற் றேய்ந்ததுசுத் தத்துரிய
வானவெளி யாக மலர்ந்திடவென் வாழ்க்கையே.

412. அறப்பொய்த் தொழிந்த வவிச்சையால் வேற்று
மறப்புநினைப் பான மயக்கவிகற் பற்றேன்;
இறப்புப் பிறப்போ டியைந்த வகந்தைப்
பிறப்பற் றொழிந்தேன் பிரம்மப் பதத்தே.

413. களிவளர்பொய்ம் மாயமனக் கற்பனைதீண் டாமெய்
யொளிவளர வுள்ளத் துறுசொருப வாழ்வாத்
தெளிவளர்சற் போதத் திருவருளிற் பாச
விளிவரல்சேர் தன்மை யிகந்ததுதோன் றுதே.

414. ஒள்ளியபே ரின்ப வுணர்வுருவா முண்மையே
வள்ளியதோர் சுத்தவருள் வாழ்வா மனுபவத்தால்
எள்ளினேன் யானென்ற வென்னை, இடையூருத்
துள்ளி யெழுந்து துடித்தலா லுள்ளத்தே.

குறிப்பு:—யானென்ற அகந்தை வடிவான நான் இடையூருத் துடித்தலால் அவ்வென்னை எள்ளினேன் என்பதாம்.

415. கொல்லவே தக்கமயற் கோலா கலவகப்பே
யல்லலினின் றுய்ந்தேன் அதுதானே விட்டொழிவால்
வெல்ல வொணுதவருள் வீருப் பளிப்பதோர்
நல்ல சிவபதத்து நாளை முந்த லுற்றுங்கே.

குறிப்பு:—அழுந்தலுற்றுங்க அதுதானே விட்டொழி வால் அல்லலினின் றுய்ந்தேன் என வியை யும்.

416. உள்ளபரஞ் சோதியா வோங்கு சொரூபத்திற்
கள்ளமனக் கற்பனைசேர் காரா ணவங்கழன்றேன்;
தள்ள வொணுதசிவ தத்துவத்திற் பொன்றியது
துள்ளி யெழுந்தவகச் சூதாஞ்சீ வத்துவமே.

குறிப்பு:—சொரூபத்திற் கழன்றேன் என வியையும்.

417. அத்துவித வுண்மை யறிவா லகந்தைமயல்
செத்தொழிந்த வாழ்வே சிவானுபவ மோனமென்பர்;
மத்தவகங் காரமறே மாயா விலாசமறப்
பொய்த்தொழிய வாழ்வுசிவ பூரணமாப் பொங்கியதே.

418. அருளால் வளம்பட்டா லல்லதுமற் றெந்தப்
பொருளாலும் வாழ்வு பொலிவுறு தென்று
தெருளா லறிந்தொழுகு செந்நெறிக்கட் சேர்ந்து
மருளா ணவப்பாழ் மனக்கவலற் றேனே.

419. பன்னருமோ னுனுபவம் பற்றவென் னுள்ளத்துத்
தன்னியலே யாகத் தழைத்தொளிர்மெய்த் தத்துவத்தில்
அன்னியமே நோக்கி யலமரல்சேர் சுட்டுணர்வாத்
துன்னுமகங் காரமயற் சூதற் றெழிந்ததே.

குறிப்பு:—மெய்த்தத்துவத்தில் சூதற்றெழிந்தது என வியையும்.

420. சுத்தப் பரவெளியாத் துன்று சொரூபவருள்
வித்தையாற் கைவல் லியமகத்தில் விஞ்சுதலும்,
மித்தையாத் தோன்று விசித்திரமா யாஜாலம்
பொய்த்ததுமோ காணவப்பாழ்ம் பூசல்சே ராசை
[யொடே.

421. ஆனியில் லாத வருட்பரமார்த் தப்பதத்தில்
யானெனதில் லாத வியல்விளங்கப் பெற்றதாற்
போனதுமா மாயப் புலக்கலக்கப் போராட்டம்
மோனவெளி யாக முடிந்த சொரூபத்தே.

422. உயக்கக் கலக்கத்துக் கேதுவா வுற்ற
மயற்கற் பனையற மாற்றித் தெளிவா
வியற்சிற் பரவாற் விதயந் துலங்க
முயற்சிசேர் மோக முனைப்பகன் றேனே.

423. என்றென் றுமொன் றுவியல்சிற் பரசொருப
நன்றென்ற வூற்றமெய்ஞ் ஞானனு பூதியாற்
பொன்றியது மோகப் புலக்கலக்கக் காரணமாத்
துன்றியநா னென்னுமனச் சூதான கற்பனையே.

424. சித்தக் கலக்கச் செருக்கா வுருத்தெழுந்த
கர்த்தத் துவப்பாழ்ங் கலிக்கார் கரந்ததுகாண்
சுத்தப் பரசிவமாத் துன்று சொரூபவருள்
வித்தைத் திறத்தால் விளங்கலுற்ற மெய்யகத்தே.

425. அன்றியொன் றற்றசுத் தாத்துவித வுண்மையாத்
துன்றியமெய்ஞ் ஞான சொரூபானு பூதியாற்
கன்றியவெம் பாசமனக் கற்பனை பேதமறப்
பொன்றியது சுத்தவருட் பூரணமாந் தன்னிலே.

குறிப்பு:— அனுபூதியாற் பொன்றியது என வியையும்.

426. பவமா மனக்கற் பனைதீர் பரதத்
துவமா முடிந்த சுவானுபவச் சீர்சால்
சிவமான சுத்தவருட் சிற்பரத்திற் செத்த
தவமான மோக வகப்பேய் முனைப்பே.

427. சித்தத் திலகு சிவத்திலென் னுண்மைதெளிந்
தத்தகநிற் கின்ற வனுபூதி வாய்த்தலாற்
கர்த்தத் துவத்தாற் கலங்கியபாழ் மோகமதி
பொய்த்துக் கழிந்ததுசற் போத சொரூபத்தே.

428. சுத்தசிவ போதந் துலங்கலா லுள்ளத்திற்
செத்ததுநா னென்றபாழ்ஞ் சீவபோ தக்கலக்கம்;
வித்தகமா மோன விசுத்தப் பரசிவத்தில்
மத்தவகங் கார மனோவேகம் மாய்ந்ததே.

429. கற்றறிய யாதுமிலாக் கைவல் லியமாகப்
பற்றலுற்ற வாற்றாற் பரஞான மோனவொளி
சுற்றுமுற்றுந் தோன்றுந் துவிதமனக் கற்பனையோ
டற்றதுமா மோக வகப்பேய்க் கலக்கமே.

430. தஞ்சமாத் தன்னையே சார்ந்தேன் சொரூபவருள்
விஞ்சையா லுண்மை விளங்கலுற்றேன்; கற்பனைகண்
டஞ்சி யவாவி யலமந் துழல்வுற்ற
வஞ்ச வகந்தைமனம் மாய்ந்ததுசச் சிற்பரத்தே.

431. வீணிற் கலங்கலுற்ற மித்தையைக்கொல் வித்தையாற்
காணக் கடவவருட் கைவல்ய வாழ்வாக
மாணத் துலங்குசிவ மாட்சியின்முற் றுனுயிர்க்க
நாணத்தா லுட்கி நசித்ததகப் பேய்முனைப்பே.

432. மாறுற் றெழுந்தகொடு மாயைப் படையடங்க
வீறுற் றெழுந்தவருள் வெற்றிமீக் கூரகத்துத்
தேறத் தெளிந்த சிவானுபவத் திட்பத்தாற்
பாறுற் றொழிந்ததகப் பாழ்ங்கலக்க வாதனையே.

433. முழுதுமாத் துன்றுசிவ மோனானு பூதி
இழுதையே னுள்ளத் திறையருளாற் சேர்வாற்
பழுதுபடா வுண்மைப் பதத்தே சொரூபத்
தழிதலுற்றேன் மோக வகப்பேய் முனைப்பே.

434. சுத்தவருள் வானுத் துலங்கு சொரூபமே
முத்தியா வுள்ளத்து மோனானு பூதிவளர்
வித்தகவாழ் வுற்றேன் விசுத்தசிவச் செம்பதத்திற்
செத்ததுநா னென்னும்பாழ்ஞ் சீவபோ தச்செருக்கே.

435. தெள்ளத் தெளிந்த சிவச்சிற் பரசொருப
வெள்ளக் கடலா விளைந்தவருட் பார்வைசே
ருள்ளம் பரவெளியா வுற்றதால் யானெனும்பொய்க்
கள்ளக் கருமாயக் கட்டற் றெழிந்ததே.

436. வெற்ற வெறும்பாழ் வெளியிலே கற்பனையாற்
சுற்றி யலைந்துழன்ற சுட்டறிவு கெட்டொழியப்
பற்றியதோர் சுத்தவருட் பார்வையின் கூர்மையா
லற்றதுநா னென்னு மகப்பாழ் மயக்கமே.

437. காண்பான் முதலான கற்பனு பேதந்தீர்
மாண்பான சுத்தவருள் வைப்பா மிதயமாக்
காண்டலுற்ற வுண்மைக் கடவுட் பரசிவத்தில்
மாண்டதுநா னென்னும்பொய்ம் மாய மயக்கமே.

438. சுத்தவருட் கேவலமாத் தொக்க துரீயமே
வித்தகமெய்த் தன்மையா விஞ்சலா லுள்ளத்து
மித்தையா வெல்லா விகற்பங் களுங்கரக்கப்
பொய்த்ததுநா னென்னுமகப் புன்கலக்கப் பூசலுமே.

439. வஞ்சவிருட் கப்பாலே வைகும் பரமார்த்த
விஞ்சைசே ருண்மை வெளியொளியே தன்னுருவாச்
செஞ்செவே யென்னகத்திற் சேர்ந்து விளங்கலாற்
றுஞ்சியது நானெனும்பாழ்ஞ் சூனியக்கா ரணமே.

440. நானற்ற வுண்மை நலனே நலஞக
மோனப் பரவெளியா மூண்டதுபே ரின்பநிலை;
யானெனதென் றேங்கி யிரங்கலுற்ற வாணவப்பா
ழூன வகப்பே யுருக்கரந்த மாயமென்னே.

441. அயர்ச்சிதீ ருண்மை யனுபவம் பொங்க
வியற்சிற் பரவாழ் விதயத் தொளிர
முயற்சிசேர் மோக முனைப்பா மகப்பேய்ச்
செயலறச்செத் துய்ந்தேன் சிவச்செம் பதத்தே.

442. இரண்டற்ற வொன்ற னியைபென் னுளத்துத்
திரண்டொளிர்வாழ் வான சிவக்கே வலத்தா
டிருண்ட வகப்பா ழிகந்தமையா வில்லை
மருண்ட வகந்தை மனக்கற் பனையே.

## ௬௬. ஜீவோபாதி யறல்

(குறள்)

443. தெளிந்தசிவ போதத் திறத்தா லகத்தில்
விளிந்ததுஜீ வப்பேய் வெறி.

(வெண்பா)

444. கலந்தசிவ போதமுகங் காணப் பொருமற்
புலந்தகன்ற தென்ஜீவ போதம்—புலர்ந்து
துயிலுணர்ந்த பின்னுந் தொடருமோ மோகத்
துயிலிடைத்தோன் றுற்ற கனு.

445. தெளிந்து விளங்கு சிவானுபவ மோன
மளைந்தபெரு வாழ்வா லகத்தே—உளைந்துவருந்
தூன மயக்க வுணர்வா மகந்தையறப்
போனதுஜீ வோபாதி *பொய்த்து.

*ஜீவோபாதியான அகந்தை அறவே பொய்த்துப் போனது எனக் கூட்டுக.

(கொச்சகக் கலிப்பா)

446. மத்தவகங் கார மனக்கற் பனையினின்று
சித்தம் பரம சிவசொருப மாகவெனக்
கத்தன் பணித்த வருட்சீ ரனுபவத்தாற்
செத்ததுபொய்த் தோற்றமாஞ் சீவபோ தப்பிழையே.

## ௬௭. அகமமதைக ளறல்

(குறள்)

447. தன்னுண்மை யாகத் தழைத்தனா னனுபவத்
தென்னது நான் சற்று மிலே.

448. தானே தனதே யலாம வெனக்கெனவோர்
யானே வெனதோ விலே.

(கொச்சகக் கலிப்பா)

449. இல்லதுள தென்னு மிரட்டையிற்சே ராதகத்துத்
தொல்லேயே தான்ருனுத் துன்றுவதோர் சிற்பரத்தைப்
புல்லியே சுத்தவருட் போதானு பூதிபெற்றேற்
கில்லேயே யானெனதென் றேங்குமனக் கற்பனேயே.

### ௩௪. கர்த்ருத்துவ மறல்

(கொச்சகக் கலிப்பா)

450. நயக்கவெனக் குள்ளிருந்து நாதனே யென்னே
இயக்குமவ் வுண்மை யினிதுணர்ந்த வாற்ருல்
மயக்க வகந்தைமனக் கர்த்தத் துவங்கூர்
உயக்கமிலேன் எல்லா முடையான் பரமே.

451. சுவச்சமாத் துன்று துரீய சொரூபக்
கவர்ச்சியாற் பாசக் கவர்ச்சி யகன்றேன்;
சிவச்செய லாகத் தெளிந்த மனத்தால்
அவச்செய லான வனர்த்தமற் றேனே.

குறிப்பு:– கர்த்தத்துவ புத்தி வடிவான ஜீவபோதச் சேஷ்டையாற் செய்யுஞ் செயல் பந்தவேதுவாகலின் அனர்த்தமான அவச் செயலாம்.

452. நயக்கலுற்ற ஞானகுரு நாதனருட் சத்தி
இயக்கலுற்ற வாறே யியங்குகின்றே னுக்குத்
* துயக்கமொன்று மில்லே தொழிற்படலால் யாது
மியற்றிடுகர்த் தத்துவமெற் கில்லாமை யாலே.

* துயக்கம் - பந்தம்.

453. இயல்பாக வுள்ளத் திருந்தொளிரெம் மான்மாட்
டயலற்ற சுத்தஞா னுனுபவ மார்வால்
முயல்சே ரகங்கார மோகமுனேப் பான
செயல்விட் டொழிந்ததுசச் சிற்பூ ரணத்தே.

454. சுத்தசிவ மாகத் துலங்கு சொரூபவருள்
வித்தகனுக் கென்னே விலேப்படுத்தி விட்டதாற்
செத்தொழிந்த மோகச் செருக்காலே யானெனதென்
றித்தனுவைப் பற்றவெனக் கில்லே சுதந்தரமே.

## ௩அ அபிமான மறல்

(கொச்சகக் கலிப்பா)

455. இடம்பச் செருக்குக் கிடமா வியன்ற
வுடம்புநா னல்லா தொழிய வுளத்துத்
திடம்படுமெய்ஞ் ஞானஞ் சிறத்தலா லில்லேன்
மடம்படுபொய்ம் மானுபி மானப் பிழையே.

## ௩௯. பிறவியறல்

(குறள்)

456. இன்பவீ டாமெய் யிதயவுணர் வாற்பிறவித்
துன்பமகன் றுய்ந்தேன் சுபம்.

457. மாயவழக் கான மயக்கப் பிறவியினின்
றோயவுற்ற தென்னு ருயிர்.

458. அறிவே யகமா வறிந்தாங் ககந்தை
பிறிவாற் பிறப்பிறப்பற் றேன்.

குறிப்பு:—அகம்-ஆன்மசொரூபம்; அகந்தை-சித்துரு வாந் தன்னைச் செடவுடல் வடிவாகக் கருதுஞ் சீவபோதச் செருக்கு-சிச்சடக் கிரந்தி.

459. அறிவா லடியே னகப்பாழ் மயக்கப்
பிறவிதீர் வாழ்வுபெற் றேன்.

460. சிவத்தி லழுந்தச் செறிந்த மனத்தாற்
பவத்துயர் பாழ்பட் டது.

461. சிவத்திலே தேறத் தெளிந்தவென் மெய்யாற்
பவக்கிலே சங்கெட் டது.

(வெண்பா)

462. உயிர்க்கும் பொழுதே யுளத்தே மரித்து
வியக்கத் தகவாழ்ந்த மெய்யன்—மயக்க
விருட்காரியமா வெழுந்த வகந்தைச்
செருக்காம் பிறப்பறச்செற் றுன்.

463. நாடக் கிடைக்கருமெய்ஞ் ஞான திரவியமாக்
கூடக் கிடைத்த குருமணியே—தேடிக்
கிடைத்த சொரூபவருட் கேமநிதி யாகப்
படைத்தேன் பிறவிப் பயன்.

குறிப்பு :—கேமநிதியாகக் கண்டு என, அவாய் நிலையால் வருவித்து முடிக்க.

464. தனிப்பெரிய மோன சதாசிவமென் னெஞ்சில்
நினைப்பரிய தாக நிறைவால்—முனைப்புற்
றெழுஞ்சீவ போத மினிப்பிறக்க வொண்ணு
தழிஞ்சதுவாழ் வான வகத்து.

465. எங்கு நிறைந்தொளிர்பே ரின்பவருட் சிற்பரமாத்
தங்கு சொரூப சதாசிவமே—துங்கஞா
னுனுபவ வாழ்வா வகத்திற் சுடர்தலாற்
போனதுவெம் பாசப் புணர்ப்பு.

466. ஆண்டா னளித்த வருட்காட்சி யென்கருமக்
காண்டா வனமெரியக் கண்டதால்—மீண்டாகும்
ஈண்டவோ ரேதுவில்லை யிப்பொழுதே சிற்பரமாப்
பூண்டதனு பூதிப் புலம்.

467. அருளாள னனபே ராண்டா னருட்செம்
பொருளான போதப் பொலிவால்—தெருள
வொருங்கெனக்குத் தீர்ந்த தொழிவில் பிறவி
வருங்கணக்கு மன்ற மனத்து.

468. ஊறுபடா வுண்மை யுணர்வொளியாற் சற்றுமியல்
வேறுபடாக் கைவல்யம் மேவலால்—மாறுபடு
வஞ்சச் சதிசெய் மயக்கப் பிறவியிடர்
துஞ்சிற் றதுவே சுகம்.

குறிப்பு:—உணர்வொளியாற் கைவல்யம் மேவலால் எனக் கூட்டுக ; கைவல்யம் மேவல், கண்டத்தில் நழுவாதிருக்கச் செய்தே மறதியால் இழந்தாற்போன்ற கண்டாபரணம் அம்மறதி நீக்கமான ஞாபகத்தாற் பின்னரடையப் பெற்றாற்போல்வது.

(கொச்சகக் கலிப்பா)

469. வெறிசே ரகந்தைமயல் வேட்கையற வுள்ளத்
தறிவான வுண்மையா வான்ற சொரூப
நிறைவான மோன நிலையொளிர்வால் ஊனப்
பிறவி மயக்கமறப் பேர்ந்தொழிந்த தாமே.

470. துரியவெளி யாகத் துலங்கு சொரூப
வுரவொளியா லற்ற துடல்வடிவ மோகம்;
பரம சிவானுபவம் பற்றலா லுள்ளத்
தொருவியதவ் வூன வுடற்பிறவித் துன்பே.

471. அவிச்சை யிருட்பா ழகல வகத்திற்
சுவச்சமாத் தூன்று சொரூபமே சுத்த
சிவச்செம் பொருளாத் தெளிந்தியல் வாழ்வாற்
பவச்சுழ லாங்கற் பனைகழன் றேனே.

472. யானற் றெழுிய வெழுந்த சிவானுபவ
மோனவருட் செம்பதத்தே முத்திநலன் கண்டுகொண்
வானப் பரசொருப வாழ்வான சாந்தியிலே [டேன்;
போனதுபொய்ம் மாயமாப் பொல்லாப் பிறப்பிறப்பே.

473. உண்மை விளக்கமா வுள்ள சொரூபவருள்
வண்மையே மிக்கசுப வாழ்வா விதயத்துத்
திண்மைசேர் சுத்த சிவானுபவஞ் சேர்தலால்
உண்மயல்சேர் வெம்பிறவித் துன்ப மொழிந்ததே.

474. மிக்க வருளே விழுத்துணையா வுள்ளத்திற்
சிக்கெனநா னூன்றிச் சிவாயநமச் செம்பொருளாத்
துய்க்கலுற்ற சுத்த சொரூபானு பூதியின்முற்
பொய்க்கலுற்ற தூனவகப் புன்பிறவித் துன்பமே.

475. யானற்ற தானும்பே ரின்பவியற் சிற்பூரண
மோனத்தி னின்று முகூர்த்தமு(ம்)நான் பேர
ஞானத் தகவுகுரு நாதனுற் சேர்தலால் [வொண்ணு
தீனப் பிறவி மயக்கமறத் தீர்ந்ததே.

476. ஆதிக்கங் கொண்டென்னை யாண்டபிரான் சுத்த [வருட்
போதக் கழல்காட்டிப் புன்கலக்கம் போக்கினன்
மேதக்க வுண்மை விலாசத்தில் வாழ்தலாற்
சாதற் பிறவியறத் தப்பியதென் னுயிரே.

477. பொறுக்க வொண்ணத புழுக்கமாந் துன்ப
மறுக்கஞ் செயும்பிர மாத மனத்து
மறப்பற் றெழிய மடுத்த வுணர்வாற்
பிறப்பென்னும் பேதைமை பேரக் கழிந்ததே.

குறிப்பு:—

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு". —குறள் 36-8.

478. கள்ளமனப் புன்கலக்கக் கற்பனையோர் சற்றுமற
உள்ளதே தாஞ வொளிருமென் னுள்ளத்தில்
தெள்ளியவாழ் வான சிவானுபவ மன்றிமற்
றெள்ளளவு மில்லை யிளிவரவுத் துன்பமே.

479. என்புருகு மன்ப ரிருக்கவுமென் பாலிரங்கிப்
புன்பிறவித் துன்பப் புழுக்கமறத் தண்ணளிகூர்
அன்பறிவு சான்றவென் னுண்டா னருட்பதப்பே
ரின்புணர்வு பொங்கவகத் தேசறவு தீர்ந்ததே.

480. அருட்சிற் பரத்தை யலாமல் எனக்கோ
ருருச்சற்று மின்று வுணர்ந்தாங் ககப்பே
யுருச்செத் தொழிய ஒழிந்தது பொய்யா
மருட்சொப் பனமா மயக்கப் பிறப்பே.

481. சிவத்தில் விளங்கியவென் னுண்மைத் திறத்தால்
பவத்திற் கலங்கியவெம் பாசமறப் பெற்றேன்
விவத்தையே யில்லா விவகார மோக
வவத்தைநோக் கங்கூ ரனர்த்தமற் றேனே.

482. விவசாய மான விருத்தி சிவத்திற்
சுவிசாரத் தாலழுந்தத் தோய்தலாற் சுத்த
சிவமே சொரூபமாத் தேர்ந்தேன் மனத்திற்
*பவமோக மாயப் படர்விடுபட் டேனே.

*பவமோக மாயப் படர் - மாயாமோகமான பிறவித் துன்பம்.

483. வெளியான மோனமே வீடுபே ருகத்
தெளிவா வியல்சொருப சித்தியா லுள்ளத்
திளிவா மகப்பே யியக்கமாம் பாசக்
களிசேர் பிறவிக் கலக்கமற் றேனே.

484. மோனவெளி யாக முடிந்தபர முத்திநிலை
நானடையக் கூட்டியமெய்ஞ் ஞானப் பிரானடியில்
வானப் பரசொருப வாழ்வு மடுத்தலாற்
போனதுவெம் பாசமயற் புன்பிறவித் துன்பமே.

485. ஊறுபா டற்றவுணர் வுண்மை விளங்கலால்
வேறுபா டற்ற விசுத்தசொரூ பானுபவப்
பேறுபெற்றே னுக்குவெறும் பேதைமையாத் தீர்ந்தது
மாறுபா டாவுழன்ற மாயப் பிறவியே. [முன்

குறிப்பு:—உணர்வுண்மை – உணர்வுருவான வுண்மை.

486. தெளிந்த சொரூபத் திருவருளா லுள்ளத்
தளைந்தபே ரின்ப வமைதிசேர் வாழ்வில்
விளிந்ததுகா ராணவப்பாழ் வேக முளைப்பால்
விளைந்த சுழற்சிசேர் வெம்பிறவித் துன்பே.

487. கள்ளக் கலக்கவகங் காரமறக் கண்ணேக்கா
லுள்ளத்து நீங்கா தொளிர்சொருபப் பெம்மானுற்
றெள்ளத் தெளிந்த சிவானுபவந் தேக்கலுற்றேற்
கெள்ளத் தனையு மிலைபிறவித் துன்பமே.

488. மித்தையாத் தோற்று வெறும்பா முடல்வடிவாஞ்
சித்த மலப்பாழ்ஞ் செருக்கைக் கரக்கலுற்ற
சுத்தமெய்ஞ் ஞான சொரூபானு பூதியாற்
பொய்த்ததுமோ கக்கலக்கப் புன்பிறவித் துன்பமே.

489. தூண்டா மணிவிளக்காத் துன்றுபரஞ் சோதிபதத்
தீண்டாது மோக விருட்பா றறக்கெடலால்,
வேண்டார்வ மான வியன்பரபோ கந்ததும்ப
மாண்டதகங் கார மயற்பிறவித் துன்பமே.

490. காண்டலரு சுத்தவருட் கைவல்யக் காட்சியா
மூண்டசொரு பானுபவ முத்தி முகப்பவகத்
தாண்டகுரு நாத னருட்சிற் பதவாழ்வில்
மாண்டதுநா னென்னும் மயற்பிறவித் துன்பமே.

491. சுற்றிலுமிக் காரந்த துரீய விலாசவொளிப்
பெற்றி பிறர்க்கரிய பெம்மான் குருரமணன்
வெற்றிசேர் சுத்தவருள் வித்தையான் மித்தையா
வற்றதுபாழ் மோக வனர்த்தப் பிறவியே.

492. ஆற்றப் பெரிய வரும்பிரான் றன்னடியர்
பாற்றற் கரியவெம் பாசமறப் பாற்றடியைப்
போற்றக் கிளர்ந்தவருட் போதத்தாற் பொன்றியது
மாற்றற் கரியவெம் மாயப் பிறவியே.

493. எம்பிரா னுன விறைவன் சொரூபவியற்
செம்பிரான் சீரமணன் சேவடியே தாரகமா
நம்பலா லுற்றமெய்ஞ் ஞானனு பூதியால்
வம்பியல்வாழ் வான மயற்பிறவி தீர்ந்ததே.

494. சுட்ட வொணுத துரீய சொரூபமா
நட்டமா டுற்றமெய்ஞ் ஞானப் பிரானடியேற்
கிட்டமா நல்கியபே ரின்பவருள் வீட்டுணர்வாற்
பிட்டனேன் மோகப் பிறவித்துன் பற்றதே.

## ௨0 அவத்தை யறல்

(குறள்)

495. சிவத்திலே சித்தந் தெளிந்தடங்க லுற்றுங்
கவத்தையினின் றுய்ந்த தறிவு.

496. சிவத்திலென் னுண்மை தெளிந்தேன் அருளா
லவத்தை கழன்றொழிந் தாங்கு.

(வெண்பா)

497. சிவத்தையே பற்றித் தெளிந்தசித் தத்தா
லவத்தைக் கலக்க மகன்றேன்—தவத்துக்
குருவான மோன வொளியாலே யுண்மை
யுருவேதா ஞயிற் றுணர்வு.

### ௬௪. அவித்தை யறல்

(குறள்)

498. சுவச்சமாத் துன்று சொரூப வுணர்வால்
அவிச்சையறக் கெட்ட தகத்து.

### ௬௨. அவச மறல்

(குறள்)

499. சிவசத்தி யாகத் தெளிந்த மனத்தால்
அவசத்தி னின்றகன் றேன்.

### ௬௩. மலமறல்

(குறள்)

500. அமலவறி வாமெய் யகமே பரமா
நிமலவாழ் வுற்றதென் னெஞ்சு.

### ௬௪. ஜனன மரண மறல்

(குறள்)

501. இறப்போ பிறப்போ வெதுவுமெனக் கில்லேன்
மறப்புநினைப் பற்றேன் மனத்து.

502. மறப்புநினைப் பான மயக்கமே துன்பப்
பிறப்பிறப்பாத் துன்றும் பிணக்கு.

### 7. உள்ளத் துறைதல்

(குறள்)

503. போதவெளி யாகப் பொருந்திஞ ஞண்டவனிவ்
வாதஞ மென்ற னகத்து.

504. தாரகமா வாண்ட தலைவ னிரண்டிலா
வோரகமா வுற்று னுளத்து.

505. பிறிதாகக் கற்பனை பேதமனம் பெம்மா
னறிவாக நின்று னகத்து.

506. குன்றுத ஞானவருட் குன்றமா வென்னுளத்து
நின்றான் நெடியோன் நிமிர்ந்து.

507. *வடிவாக வென்னகத்தில் வந்து மடுத்தான்
படிவே றிலாமெய்ப் பரன்.
* வடிவு – சொரூபம்.

508. உள்ளமே கோயி லுணர்வேதன் சந்நிதியா
உள்ளலற வாண்டா னுளன்.

509. அருளா லகம்புக் கமர்ந்தான் சொரூபப்
பொருளான போதப் புமான்.

510. சிந்தையற்ற மோனவருட் செல்வஞ் செழிக்கவகத்
தெந்தையமர் வுற்று னினிது.

511. ஊற்றமா வுள்ளானென் னுள்ளத்தே மெய்ஞ்ஞானத்
தேற்றமார் சுத்த சிவன்.

512. உள்ளுணர்வா வுள்ளத் தொளிர்ந்தான் வெளியுலகக்
கள்ளமனங் காணு விறை.

513. ஓரன் புருவா வுளம்புக்கான் அத்துவிதப்
பேரின்ப மோனப் பிரான்.

514. மயற்சற் பனையறவே மாற்றியென் னுள்ளத்
தியற்சிற் பிரானிலகுற் றுன்.

515. உறங்கலுற்றே னுள்ளத் துணர்வுருவா வீண்டிப்
பிறங்கலுற்று னுண்மைப் பிரான்.

516. தன்னிலே வாழ்வு தழைக்கவருட் பேரொளியா
என்னில்வாழ் கின்று னிறை.

517. அரியதோ ராருயிர்தா ஞெ னகத்திற்
பெரியபே ரின்பப் பிரான்.

518. மருட்கலிசே ராதொழித்த வாலறிவன் சுத்த
வருட்கடலா வுள்ளா னகத்து.

519. அருட்பார்வை யாலென் னகம்புக் கமர்ந்தான்
விருப்பார்வம் பொங்கமேன் மேல்.

520. தப்பாத வுண்மையாத் தங்கெற் றிறைவனருட்
பொற்பாதம் புந்திப் புலத்து.

521. இருப்பாக வுள்ளா னிறைவன், சொரூப
வருட்பார்வை பொங்க வகத்து.

522. உள்ளா னுடையானென் னுள்ளத் துணர்வொளி
தள்ளாத வாழ்வு தழைத்து. [யாத்

523. எக்காலு முள்ளா னிதயத் தருள்வடிவா
எற்கார்வம் பொங்கு மிறை

524. தானுன தம்பிரான் சச்சிதா னந்தவருள்
வானு மலர்ந்தான் மனத்து.

525. எண்ணற்கு முன்னே யிதயத்து நானென்
றண்ணிக்க லுற்றா னவன்.

526. வெளிமயமா வென்னுள் விளங்கலுற்றான் சுத்த
வொளிமயமா வுள்ள பிரான்.

527. மறக்க வொண்ணுதே மனங்கோயி லாகச்
சிறக்கவாழ் கின்றான் சிவன்.

528. பொங்குசிவ பூரணமே போற்றவென் னுள்ளத்துத்
தங்கியது சற்குருமெய்த் தாள்.

529. தற்பரமா மோனந் தழைக்கவென் னுள்ளத்திற்
சிற்பரமா நின்றான் சிவன்.

530. அன்பறிவா வான்ற வனுபூதி யாவிதயத்
தின்புருவா வுற்றா னிறை.

531. ஊதியமா வுள்ளா னுடையான் சொரூபவருட்
பூதியாற் புந்திப் புலத்து.

532. ஊதியமா வுற்று னுடையானென் னுள்ளுணர்விற்
பேதைமைசே ரேதங் கடிந்து.

533. மோனவெளி யாவகத்து மூண்டொளிர்கின் றானடியே
னீனமறக் கண்ட விறை.

குறிப்பு:– ஈனமாவது யானென்னுஞ் செருக்கு.

534. நிசிக்கண்ணே வந்தொளியா நெஞ்சிலுற்றான் சற்று
மிசைக்கவொண் ணாத விறை.

535. ஆண்ட பிரானே யருந்தெய்வ மாகவெனக்
கீண்டலுற்று னுள்ளத் தினிது.

536. அணவு சொரூபமா வாண்டபிரான் மெய்யன்
புணர்வுருவா வுள்ளா னுளத்து.

537. அருட்பு ரணமான வம்மானென் னுள்ளத்
திருப்பதே சாலு மெனக்கு.

538. உறுதிசே ருண்மை யுணர்வொழுக்க மாக
வுறைதலுற்று னுண்டா னுளத்து.

539. பேரின்ப மோனவருட் பெம்மானென் னுள்ளுணர்வு
டோரன் புருவா வுளான்.

540. உண்ணு ரமுத வொளிப்பிழம்பா வுள்ளதகத்
தண்ணு மலையா னடி.

541. அழுந்தலுற்றே னுள்ளத் தருட்பரமெய்ஞ் ஞானக்
கொழுந்தா வெழுந்தான் குரு.

542. குருபதமா மோனக் குறிப்பே யலான்மற்
றொருதவமோ ராதென் னுணர்வு.

543. நன்றிசேர் வாழ்வா நடப்பதென் னுள்ளத்துத்
துன்றுசீ பாத வுணர்வு.

544. தெளிவுறு ஞா னுபவஞ் சேர்த்தபிரான் சுத்த
வொளிவெளியா வுள்ளத் துளான்.

545. கள்ள மயக்கமனக் கட்டழிய வாண்டவனென்
னுள்ளொளியா வுள்ளத் துளான்.

546. அருள்வெளிகாட் டிக்கொடுத்த வங்கணன் சுத்த
வருள்வெளியா நின்ற னகத்து.

547. அகத்தே விளங்குசுத் தான்ம சொரூபத்
துகைத்தே னுணர்வை யொருங்கு.

548. இருள்வழங்கு மோகமனைக் கென்றுமின்மை கண்
அருள்வெளியா முண்மை யகத்து. [டேன்

549. மோக வகந்தையற முற்ற வகங்கலந்தான்
ஏக சொரூப விறை.

550. அருட்போத வாழ்வலா வாண்டான் இதயத்
திருப்பாக வுள்ளா னினிது.

551. ஏழையே னுள்ளத் தியற்கிற் பரசொருப
மாழையா வுற்றதருள் வாழ்வு.

552. அகந்தையற வென்னகத்தென் ஞன்மாவே யாகப்
புகுந்தனன்பே ரின்பப் புமான்.

553. கள்ள மனக்கார் கழன்றொழியக் கண்டபிரான்
உள்ளமே யாக வுளான்.

554. தடையான பாசமறத் தங்கியதென் னுள்ளத்
துடையான் சொரூப வொளி.

555. அருட்போத மாக வலர்ந்தவென் னுள்ளத்
திருப்பாக வுள்ளா னிறை.

556. உலகைக் கடந்த வொளிவொளியா வென்னுட்
குலவலுற் றன்சற் குரு.

557. வாழ்வுதாழ் வென்ற மயக்கமறப் பொங்குசுட
வாழ்வொளியா நின்றான் மனத்து.

558. நெஞ்சமே யாக நிறைந்ததுசற் போதவருள்
விஞ்சையா லாண்டவன் மெய்.

559. அறிவே சொரூபமா வாண்டபரஞ் சோதிக்
குறையுளென் னுள்ளத் தவிசு.

560. உள்ளங் கலந்த வுணர்வா மொருத்தனவ்
வுள்ளமே யானு னுரு.

561. தருமநிதி யாகத் தழைத்தொளிர்வ தென்னுட்
குருமணியின் கோலப் பதம்.

562. அருள்வெளியா முற்ற வலர்ந்ததென் னுள்ளத்
திருளறவாண் டான்மெய் யடி.

563. தேடரிய வுண்மைத் திருவாம் பரவடிவே
ஊடுருவ லுற்ற துளத்து.

564. கண்டறிந்த வாற்றாற் கடவுட் பரவடிவை
விண்டதுபொய்ம் மாயை விகற்பு.

565. உண்மைப் பரவடிவா வுள்ள சொரூபத்திற்
கண்மயல்காண் பல்கற் பனே.

566. கற்பகமா வுள்ளக் கருத்திற் கலந்ததுசச்
சிற்பரமா வுள்ள சிவம்.

567. உள்ளமே கோயிலா வுள்ளுணர்வே தன்னுருவாத்
தெள்ளவொளிர் கின்றான் சிவன்.

568. விழலனு மென்னுள் விளங்கியது கண்ணார்
கழலின் சொரூபங் கலந்து.

569. ஒழிவுறு துள்ளத் துணர்வுருவா வுள்ளான்
பிழைபடா வுண்மைப் பிரான்.

(வெண்பா)

570. உள்ளினேன் யானே வுடையானை யென்னுள்ளத்து
டுள்ளலாத் தானே யொளிர்கின்றன்—வெள்ளமாத்
தானே விளங்குமொளித் தற்பரமா மோனவருள்
வானேற வென்றன் மனத்து.

571. அருட்சத்தி யாடலென் னுருயிர்மேற் காட்டி
மருட்சத்தி யாடலற மாற்றிப்—பொருட்சித்தி*
பொங்கிப் பொலியவென் புந்தியுள்ளே புக்கியல்பாத்
தங்கிற் றபாரசிவந் தான்.

*பொருட்சித்தி — உண்மையான சொரூபசித்தி

572. யவரும் யவையுந்தா னுக யிரண்டற்
றவிரும் பரஞ்சோதி யண்ணல்—அவரமா
மங்கவவை தன்சிற் பரசொருப மாட்சியாற்
பொங்கலுற்று னென்னுட் பொலிந்து.

573. யாது மினியிதயத் தென்னுத் தரவின்றிப்
போதரவொண் ணதுட் பொருந்தினன்—சூதுசூ
ழூனவசத் தெவ்வையடர்த் துள்ளுணர்வா வாண்ட
மோனவருட் சிந்முத் திரை. [குரு

குறிப்பு:-யாதும் - எவ்விஷயமும்; போதர (புகுதர என்பதன் விகாரம்) உட்புக; சூதுசூழ்தல் - சதியெண்ணல்: அகத்தெவ் - அகந்தைப் பகை, காமாதி உட்பகையுமாம்.

574. ஆண்டவா வாண்டவா வாண்டவா வென்னகத்தா
டீண்டவா வென்றென் றிறைஞ்சினேன்—ஈண்ட
வருதலெவன் முன்னமே மன்னியுளேன் சும்மா
விருதுலங்கு மென்று னிறை.

575. பூண்டபே ரின்பவருட் போதசொரூ பஞ்சுடரத்
தூண்டுகோ லானவொரு சொல்லிலெனை—யாண்
எங்குற்று யென்றே னிதயத் திதயமா [டவா
விங்குற்றே னென்று னிறை.

குறிப்பு:-"பங்கத்தை மாற்றிய" என்னும் ஸ்ரீ ரமணநுபூதி இரண்டாம் பாகச் செய்யுள் ஒத்து நோக்கற்பாலது-(பாடல் 396.)

576. தருமதயா மூர்த்தி சதாசிவமாப் பொங்கும்
பெருமிதமா மோனவொளிப் பெம்மான்—அரு
[கதையா
தொன்று மிலாமலுமென் னுள்ளத் தருட்செம்பொற்
குன்றமாக் கூடிநின் றான்.

577. ஆடாதே யாடுமென் னம்மா னருட்கூத்தாற்
கூடாத யோகங்கை கூடநான்—நாடாத
நாட்டமாந் தன்சொருப ஞானமோ னனுபவ
வீட்டமா நின்று னிறை.

578. அன்புமீ தூர வடியேன்பால் வற்கடமாத்
துன்பவினை யென்றுந் தொடராதே—இன்பம்
பிழையா விளையுள் பெருக வளிக்கும்
மழைவளமா நின்றான் மனத்து.

579. அறிவிற் கலக்கமுறு தாண்டா னுயிருக்
குறவுத் துணையா முடையான்—பிறிவுற்
றொழியாது நின்று னுளத்தே யுணர்விற்
பிழைபா டுறுமற் பெயர்த்து.

580. அழகான போதசொரூ பானந்த மோனக்
குழகனெனைத் தன்னடிக்காட் கொண்டோன்—பழு
றுற்ற வினிக்கு மதிமதுர சாந்தவுணர் [குந்தோ
வூற்றுக வுள்ளா னுளத்து.

581. அருளா லகத்தே யகம்பதத்தி னுண்மைப்
பொருள்விளக்கமாகப் புணர்ந்தான்—அருள்வெளியா
வெங்குமுளா னென்றுமுளா னென்னிதய கேந்திரத்
பங்கமிலா னுண்மைப் பரன். [தான்

582. அருட்பித்துக் கொண்ட வடியேனைத் தன்பா
லிருப்பித்து வாழ்வளித்த வீசன்—விருப்புற்றுத்
தோன்றுத் துணையான சொந்த சொரூபமா
வான்று னடியே னகத்து.

583. வெளியாக வுள்ள விசுத்த சொரூப
வொளியாக வாண்ட வுடையான்—எளியேற்கு
வற்ருப்பே ரின்பவருள் வைப்பாம் பெருவளமா
வுற்ரு ருெளிசே ருளத்து.

584. வியத்தற் கரிய வியன்பே ரருட்கோர்
ஐயத்தம்ப மாகவகஞ் சார்ந்தான்—மயர்த்தனமாம்
பாழைக் கடந்தவருட் பார சொரூபமா
வேழையரைக் காக்கு மிறை.

585. மோனக் கரும்பா முளைத்தென் னுளத்திலே
வானமுற வோங்கி வளர்ந்துநின்ருன்—போனகமாத்
தக்க சிவானுபவ சாந்திரசம் பொங்கவகம்
புக்கொளிர்சற் போதப் புமான்.

586. மெய்ஞ்ஞான சத்தி விலாசம் பரக்கவியல்
சுஞ்ஞான மோன சொரூபகுரு—அஞ்ஞானப்
பாழிருளை மாற்றும் பதவொளியாற் சிற்சொருப
வாழ்வருளி நின்ருன் மனத்து.

587. வாஞய் வளைத்தவருள் வாரியா வுள்ளொளிரும்
மோனனு பூதியே மூர்த்தியாய்—மானுபி
மானமா மோகமற மன்னு சொரூபவதிஷ்
டானமா நின்ரு னகத்து.

குறிப்பு:— மூர்த்தி – வடிவம்; சொரூப வதிஷ்டானம் – அதிஷ்டான சொரூபம்.

588. வண்மைசேர் தன்சொருப மாட்சிநான் றேருது
மண்மயவாற் சிந்தை மயங்கினேன்—உண்மைப்
பொருள்விளக்க மாகவுளம் பொங்கினுன் மைய
லருள்விளக்கத் தாலே யழித்து.

589. மூட ரினத்தின் முதன்மைசேர் மூர்க்ககுண
ஏட னிதயத் தெழில்பெறவே—ஓடவிட்ட
செம்பொன் னொளிசேர் சிவஞான மோனபதத்
தம்பமா வாண்டவன்நின் ருன்.

590. பொன்முத்த மாதிப் பொருள்பலவுந் தானேயா
வென்மனத்தி லுள்ளா னிறைரமணன்—கன்மனத்
முற்றக் கனிவித்து முத்திப்பே ரின்பவொளி [தை
பற்றக்கண் ணேக்கும் பரன்.

591. மனத்தாலே சற்றும் மதிக்கவொணு மோன
கனத்தாலே யோங்குங் கழலான்—மனத்தாப
மற்ருெழிய முற்று மமுத சொரூபமா
வுற்ருெளிர்கின் ருனென் னுளத்து.

592. பொலிவான வாழ்வுசிவ பூரணத்தி லன்றி
யிலையாவ துண்டாக வென்பால்—கலியாண
சுந்தரமாம் போத சொரூபவருட் பூரணனே
மந்தணமா வாழ்ந்தான் மனத்து.

593. பொய்வல்ல மாயை புலம்ப விளங்குசிவக்
கைவல் லியமெய்க் கடவுளான்—மொய்வல்ல
கற்பனு மோகக் கலக்கமற வென்கருத்திற்
சிற்பரமா நின்ருன் சிறந்து.

594. மண்ணேக்க மாக மடுத்தமனம் புன்புலம்விட்
டுண்ணேக்க மாகவுளத் தூடுருவிக்—கண்ணேக்காற்
காரா ணவங்கடிந்தான் கள்ளந்தீ ருள்ளமே
யூராக வுள்ளா னுறைத்து.

குறிப்பு:- உண்ணேக்கம் ஆக (ஆகும்படி) க் கடிந்
தான் என இயையும்.

595. பொய்யலா வுண்மையே பொங்கவொளிர்ந் தாற்போல
வையுணர்வுங் கூடியனுபவிக்கத்—தெய்வ
வருள்வடிவா லாண்டா னடியே னறிவிற்
பொருள்வடிவா வுள்ளான் பொலிந்து.

596. புலனென்று மோகவுடற் பொய்யகந்தை மீதூர்
நிலனென்று வாழ்க்கை நினைவால்—இலனென்னு
மெய்வமனப் பான்மையற வென்னகத்து மன்னியது
செவ்வியமெய்ஞ் ஞான சிவம்.

597. பரங்கருணை யான பரஞ்சோதி யென்பால்
இரங்கியருள் வாழ்வளித்த வீசன்—பரங்கிளர
நோக்கினுன் கண்ணிமையா நோக்காலென் னெஞ்
நீக்கமற நின்ற னிறைந்து. [சத்து

598. நீதி தழைக்கவென் னெஞ்சத்தே தன்சொருப
சோதியா நின்று துலங்கினுன்—நேதியால்
ஆன்றோர் பிறவற்றை யன்றென் றெதுக்கியருட்
பூன்றமாக் கண்ட புமான்.

599. நீக்கமறு மோன நிறைவாகி யுள்ளத்தூ
டாக்கமா நின்ற னறிவகமா—நோக்கலுற்ற
எங்கு மெலாந்தன்பே ரின்பநிறை வாகவொளிர்
துங்க சொருபமாத் தொக்கு.

600. தெள்ளத் தெளிந்த சிவானுபவச் செம்பதத்திற்
கள்ளவகங் காரக் கருவழிய—உள்ளத்
திராப்பகலா வுள்ளா னினிச்சற்றும் பேரான்
பிராப்பியமா வுள்ள பிரான்.

601. துறவாக வெல்லாத் தொடர்புமற நெஞ்சி
லுறவாக நின்ற னொருவன்—அறவே
மறந்தொழிய யாவும் மனத்தினின்று தானே
சிறந்தொளிர்கின் றன்சிற் பரன்.

602. துலக்கங் கிளர்தன் சொருபதிட்டி யாலே
நிலைக்கநெஞ் சூடுருவி நேரே—கலக்கந்தீர்
வாழ்வுக்கு வாழ்வா மருவினு னென்னகத்துத்
தாழ்வுக்குத் தாழ்வுறவே தான்.

603. தானந்த மற்ற சதாசா ரியரமணன்
மோனந் தமியேற்கு முற்றவளித்—தானந்த
நேசானு பூதியா நின்றனென் னெஞ்சிலிகல்
கோசபா வத்தைக் குலைத்து.

604. களந்ததும்பு மோகக் கருத்தா லடியே
னுளேந்தழுங்கி மாழ்க லுருது—வளந்ததும்பு
வாழ்முதலா வென்னுளத்து மன்னினன் மோகமனப்
பாழ்முதலாம் பாசம் பறித்து.

605. கள்ளமனத் தாலடியேன் கண்கலங்கா தென்னருமைத்
தெள்ளியசற் போத சிவசொருபம்—வெள்ளவருட்
பாற்கடலா வெங்கும் பரந்தெழுந்தெல் லாந்தானு
நீக்கமற நின்றதென் னெஞ்சு.

606. தாயிற் பெரிதுந் தயாவுடையான் றன்னருமைச்
சேயிற் பெரிதுமெனேச் சீராட்டி—நாயிற்
கடைபட் டிழிந்த கருத்தாடு தானு
வடைபட் டணேந்தா னவிர்ந்து.

607. தன்னேயே கற்றறிந்து தன்சொருபச் சிற்பரத்து
மன்னியான் மல்குவழி காட்டினேன்—பின்னியபல்
தொந்தங் களேந்து துலங்குசிவக் கேவலமா
வந்தங் களேந்தான் மனத்து.

608. கலிவசப் பட்டுக் கலங்கிய வென்னே
நலிவகற்றி யாண்டகுரு நாதன்—உலேவகல்சற்
போதவொளி யானவருட் பூரணவாழ் வோங்குசொரூ
* பாதவனு நின்று னகத்து.

*ஆதவன் ஈண்டு ஞான சூரியன்.

609. கலியி லுழன்ற கருத்தைக் கழற்கே
பலியாக்கிக் கொண்டவருட் பார்ப்பான்—உலேவில்சச்
சிற்பரா னந்த சிவசொருப வாழ்க்கையுளத்
துற்பவமா வோங்கலுற் றன்.

610. தற்பரமாந் தானேநீ சாந்த சதாசிவமாய்க்
கற்பனேயற் றுள்ளங் கலந்திடென்றே—சிற்பரமாந்
தன்சொருபக் காட்சி சதாவிளங்கத் தன்மயமாய்
நெஞ்சுருவி நின்று னிலேத்து.

611. கருக்கொண்ட வென்னுயிரைக் கட்டறுக்கத் தானே
உருக்கொண்ட வென்மெய் யுடையான்—கருக்
பாசக் கலக்கமறப் பாற்றிப் பரசொருப [கொண்ட
வோர்சத்தா நின்ற னுளத்து.

612. சோதியா நின்ற சொரூபமன்றித் தொக்கபிற
நீதியொன் றின்றியென் னெஞ்சகத்தே—ஆதியோ
டந்தநடு வற்ற வதீத வருட்பரமாப்
புந்தியிடை யொன்றினன் புக்கு.

613. கண்மூடி யாகக் கலங்கியவென் பாழறிவிற்
கண்மாய மான கலக்கமறக்—கண்மணியா
மெந்தை ரமண னிரண்டற் றொளிர்சொருபத்
தந்தையாத் தானொளிர்கின் றான்.

614. சொல்லவொண்ணு மோன சொரூபவருட் போதத்தாற்
கல்லாக் கடையேன் கருத்தொளிர—நல்லசிவ
புண்ணியத்தார்க் கன்றிப் புலப்படாச் சிற்சொருப
வண்ணமாத் தோய்ந்தான் மனத்து.

குறிப்பு:- போதத்தாற் கருத்தொளிர என இயையும்

615. கண்ணுக வுள்ளங் கலந்தபிரான் மெய்ஞ்ஞான
விண்ணுக நின்று விளங்குபிரான்—எண்ணுத
வெண்ணமா மோன விலக்கியமா வென்சொருப
வண்ணமா வுள்ளான் மகிழ்ந்து.

616. கண்ணுக நின்றவென் கண்ணுளன் மெய்யுருவைக்
கண்ணுலே காண்ட லெவன்கொலோ—பெண்ணு
ணலியல்லான் கேவலஞா னன்ம சொரூபன்
உலேவில்லா னுள்ளா னுளத்து.

617. சுருங்க வுரைக்கிற் சுடர்வெளியாத் துன்று
பெருங்கடவுட் காட்சி பிறங்கத்—தரங்கமிலாத்
தண்ணாங் கடல்போன்று சாந்தியுறத் தற்பரமா
வெண்ணாங் கலந்தா னிறை.

618. ஓதாதே யோது முடையா னுயிர்த்தொகைக்கு
மூதாதை யானமுழு மூத்தப்பன்—சூதான
மோகமில்சுத் தாத்துவித மோன வருட்பரமாய்
ஆகமிசைத் தானிவர்ந் தான்.

619. ஊனமின் றுக வுழையே னுளத்திலருள்
வானமா மன்னுபெரு மாட்சியான்—ஞான
நிதியமா நெஞ்சை நிரப்பியே சாந்த
மதியமா வூர்ந்தான் மனத்து.

620. உள்ளமா வுள்ளத் துள்ளு மொருத்தனருள்
வெள்ளமா மிக்கு வெளிப்பட்டான்—கள்ளக்
கரவான மோகமனக் கற்பனைதீ ருண்மைப்
பரமான மோனம் பழுத்து.

621. உள்ளமா மென்றன் னுடையா னுணர்வூடு
கள்ளமாத் தோன்றுங் கனுநனவா—வுள்ளி
வெருள்வதா மோக வெளிற்றுமனம் பொய்ப்ப
வருள்வெளியா நின்று னகத்து.

622. ஒருவண்ண மற்ற வுணர்வே சொரூபப்
பெருவண்ண மாகவொளிர் பெம்மான்—குருவண்ணக்
கோலவொளி யாலே குணங்கடந்த மோனவருள்
வாலறிவா நின்றுன் மனத்து.

623. ஏதமில்பே ரின்ப நிறைவா வியல்வதன்றி
யாதுங் குறைவில்லே னிச்சையிலேன்—போத
வருள்வெள்ள மாக வடியே னகத்தூ
டொருவள்ளி யான்மிக் குளன்.

624. உலகளந்தாற் போலே யுலாவும் பெரியா
னுலகடங்க வுக்கு முடையான்—உலகப்
புலந்தன் சொரூபவருட் போதமாப் பொங்க
வலர்ந்தென் னகத்துநின் றுன்.

625. என்பா விரங்கி யெழில்சேர் குருவுருவாய்
அன்பா வகம்புக் கமர்ந்துள்ளான்—இன்பாப்
பதம்பரவு மெய்யன்பர் பாக்கிய மான
சிதம்பர நாத சிவன்.

626. எங்குநிறை மோன வியற்பரமா யன்பரகம்
பொங்குசிவ மானவருட் போதரவி—மங்குமனப்
புல்லியே னுள்ளுமொக்கப் பொங்குசிவக் கேவலமா
யல்லையுண் டாவிநிறைந் தான்.

627. உய்விச் செனையாண்ட வுத்தமனென் னுள்ளத்தே
தெய்வச் சிலையாச் செறிந்துநின்றான்—மெய்விச்சை
வல்லவருள் வீரசிவன் மன்னுபரந் தாமவொளி
தொல்லமரர் சூளா மணி.

628. ஆரா வமுத வறிவா வகந்தெளிய
வாரா வரத்தாய்வந் தென்மனத்தான்—ஓரா
வுணர்ந்தா ருளத்தே யொளிசேர் களியாப்
புணர்ந்தருள்சற் போதப் புமான்.

629. ஆனந்த மான வருட்பெருங் காட்சியெனக்
கூனந் தொலைய வுதவினோன்—மோனந்
துலங்கு துரீய சொரூப விளக்காய்
மலங்குலைய நின்றான் மனத்து.

630. துணையாக வுள்ளசுயஞ் சோதியென் புத்திக்
கணையாக நின்று னகத்தே—புணையான
சுத்தவருட் பாதத் துணையா லடியாரை
முத்தியுறக் கூட்டும் முனி.

631. சிறப்புற்ற வாழ்க்கை சிவத்திலே சிந்தை
யுறைப்புற்று நின்ற வுணர்வே—மறப்பற்
றொளிரநா னுள்ளத் துணர்வுருவா மோனக்
களிரமணன் வாழுங் கதிர்த்து.

632. கைந்நழுவித் தன்னைக் கழன்றொழியா தென்னுளத்து
மெய்ந்நனவாத் தானே விளங்கலுற்றான்—எந்நிலையும்
தன்மயமே யாகத் தழைத்ததுதன் சிந்மயத்திற்
பொன்மயமாம் பொன்னணிகள் போல்.

633. அருட்பார்வை யாள னனுதிமல முத்தன்
விருப்புக் குரியவென் மெய்யன்—இருப்பான்
இலாதகலா னென்னெஞ்சத் தென்றுமெனக் கின்பன்
குலாவுங் குருரமணக் கோன்.

634. மிடிகூ ரவாவால் வெறும்பாழ் படாம
லடியே னகத்தே யமர்ந்தான்—படிமேற்
கழிவிலாச் செல்வக் கழல்விளக்கம் பொங்க
வழிவிலா மெய்ப்பொருளம் மான்.

635. நலந்தருந்தே னைமெய்ஞ் ஞானகுரு நாதன்
கலந்திருந்தா னுள்ளக் கருத்தில்—புலந்தொழிந்தேன்
மற்றப் புலவிடய வாழ்க்கையறப் புற்கென்று
பற்றறற் றெளிர்சிற் பதத்து.

636. சுத்த வருட்பரமாத் தொக்கோ னிதயத்து
மெத்த விளக்கமா மேவலுற்ருன்—புத்திக்
கலக்கமற வாண்ட கருத்தன் கருத்தே
துலக்கமா மோனச் சுடர்.

637. வேதப் பொருளா விளங்கும் பரசொருபன்
மேதக்க ஞான விபூதியால்—ஓதி
யுணர்ந்தடைய வொண்ணு வனுபூதி யாகப்
புணர்ந்திதய மானுன் பொலிந்து.

638. பத்தியளித் தாண்டவருட் பாதப் பிரானுக்கென்
சுத்தவுளத் தேயோர் சுடர்க்கோயில்—மெத்த
விளக்கமா மோனவருள் வித்தகத்தாற் கட்டிக்
களிக்கலுற்ற தென்றன் கருத்து.

639. ஒன்றுமிலா னெல்லா முடையா னெனையாளாத்
தோன்றுடையான் சொந்த சொரூபமா—மன்ற [வெனக்
குள்ளுணர்வா மோன வொளியா லகமகமென்
றுள்ளமே யானு னுளத்து.

640. யானென்னுஞ் சிந்தை யிறந்தொழியப் பெற்றவவ்
யானே யிதயத் தியற்பொருளா—மோனஞா
னுபவ வாழ்வென் னகத்திற் படரவருட்
பானுவா நின்ருன் பரன்.

641. தனையன்றித் தானறியத் தத்துவம்வே றில்லான்
முனைவன் குருரமண மூர்த்தி—அனியமற்
ரேங்கு சொரூப வுணர்வொளியாங் கைவல்ய
வான்கிளர்வாழ் வானுன் மனத்து.

642. அங்கமகம் புத்தி யகன்று சிவானுபவ
மங்கலவாழ் வோங்கத்தன் மாணடியார்—எங்கணுஞ் [செங்
கோலொளிபா லோச்சுங் குறிப்பா லெனுதகத்து
வாலறிவா நின்றுன் மலர்ந்து.

643. அறிவான மோனவெளி யாவென் னகத்தே
நிறைவாக நின்ற நிமலன்—தறைவாழ்
உயிர்த்தொகையைத் தானே ருபசாந்த வாழ்வுக்
குயர்த்துமெய்ஞ் ஞான வொளி.

644. அயர்வகற்றி யென்னை யருட்பதத்துக் காண்ட
வுயர்பெருமை சான்ற வுடையான்—உயிருக்
கிருக்கையா மோன வியல்பான சாந்தி
யுருக்கிளர வுள்ளா னுளத்து.

645. உள்ளலரு மோன வுளமே சொரூபமா
வுள்ளா னுளத்திலெனக் கொண்பொருளான்—கள்ள
கேவலசச் சித்தாக் கிளர்சொருபப் பார்வையால் [மரு
வாழ்வலரக் கண்டவென்னம் மான்.

646. இனிதாக வென்னிதயத் தென்றென்று முள்ளான்
முனிதா ரகமான மூர்த்தி—அனியாய
மோகமருட் பார்வை முடிந்தொழியச் சிற்பரமா
மேகசொரூ பத்தா லிகந்து.

647. செறிந்திடிலே யன்றிமனஞ் சிற்பரமா மோனத்
தறிந்தடைய லாகா வதீதன்—அறிந்தடையச்
சற்றுமிரண் டில்லாச் சதாசிவமாங் கேவலவாழ்
வுற்றுளிர வென்னு ளான்.

648. கோசமறக் காண்பதே கூர்மைசேர் ஞானமெனப்
பாசமெறிந் தோங்கு பரஞ்சுடராய்—நேசமெனக்
குண்மைசேர் பேரின்ப வூற்றுப் பெருக்காமவ்
வண்மைபெற வுள்ளான் மனத்து.

(கொச்சகக் கலிப்பா)

649. உள்ளமே கோயிலா வுற்றபிரான் புன்மயக்கக்
கள்ள வகந்தையறக் கண்டபிரான் பேரின்ப
வெள்ளமார் சாந்த வெளிப்பிரான் உள்வெளிதீர்
உள்ளமா(ம்) மோன வொளிவெளியா நின்றானே.

650. பிணக்குற் றெழுந்தவகப் பேய்முனைப்பைச் சாடி
இணக்கமுற்ற மோன வியற்கையே உண்மை
வணக்கமாத் தன்னை வழிபட் டொழுகும்
கணக்கறிவித் தானென் கருத்துருவா னே.

651. வெள்ளவுணர் வான விழுப்பதத்தில் யானென்னுங்
கள்ளவுணர் வான கருத்தே கரந்தொழியத்
தெள்ளமுத மான சிவானுபவச் சீர்மையால்
உள்ளமே யாக வொளிர்ந்தா னுடையானே.

652. உள்ளப் படாத வொருமைசே ருண்மையா
லுள்ளக் கருவா வுளசொருபன் சுத்தவருள்
வெள்ளக் கடலா விளைந்தானென் னுள்ளுணர்விற்
றெள்ளத் தெளிந்த சிவோகமாத் தேசுறவே.

653. குருக்களா வாண்டவருட் கோமான் அகந்தைச்
செருக்கழிவே யுண்மை வணக்கமாத் தேற்றி
உருக்கொளா வாற்று லகந்தைமுனைப் போயத்
திருக்குருவா வுள்ளஞ் செழித்துநின் றானே.

654. கள்ளங் கலந்தமனக் கற்பனை சொப்பனந்தீர்
வெள்ளவொளி யான விசுத்தப் பரவெளியா
வுள்ளந் தெளியவுணர் வூடுருவி யாண்டவனவ்
வுள்ளமே யாக வொளிர்தலுற்று ஞேராங்கே.

655. நன்னெறியாத் துன்றுமெய்ஞ் ஞான விசாரவருட்
செந்நெறியா வுள்ளத்திற் சேர்ந்தங் குறைகின்றான்
அன்னியமல் லாதசுத் தான்ம சொருபமா,
என்னில்யா னகமற் றென்னையினி தாண்டவனே.

656. ஏங்கலின் ருக விதயத்திற் பேரின்பப்
பூங்கழல் காட்டியசெம் பொன்னுன வென்னம்மான்
வீங்கு துரீய வெளியா வுளம்புக்கான்
பாங்கனேன் சுத்தவருட் பார்வையால் வாழவே.

657. மலங்கலந்த வூத்தை மனத்தா னுலகத்
தலந்தொழிந்தே னுட்புக் கனுபவமெய்ஞ் ஞான
நலந்துலங்க வாண்டவிறை நல்லசிவப் பெம்மான்
இலங்கலுற்ரு னென்னையழித் தென்னுருவாத் தானே.

658. அத்தமன மற்ற வருட்சிற் பரவெளியா
மத்தமனக் கட்டறுத்த மாட்சிசே ராட்சியாற்
புத்தமுத போகமாப் புந்தியிலே பொங்கலுற்ருன்
சுத்தவருட் போத சொரூபப் பெருமானே.

659. காண்டலரு நுட்பவொட்பக் கைவல் லியவுணர்வால்
வேண்டுதல்வேண் டாமையற வெற்றவெளிச் சிற்பரயா
வாண்டுகொண்ட சுத்த வருட்பிரான் பாதவொளி
யீண்டலா வுள்ளத் தியன்றதுசற் பத்தியே.

குறிப்பு:—சற்பத்தி யெனினும் பரபத்தி யெனினும் ஒக்கும்.

660. மாயாதி கார வசப்பட்டு மெய்ஞ்ஞானத்
தாயான தன்னைச் சரண்புக்கேற் கான்றசிவ
நேயானு பூதி நிரம்பலுற நெஞ்சத்து
மேயா னருள்வெளியா வித்தகநல் லாண்டவனே.

குறிப்பு:—மேயான்-மேவினன்.

661. உள்ளத் தொளிவெளியா வுள்ளான் மயக்கமனக்
கள்ளக் கலக்கமறக் கண்ணு ரமுதமாத்
தெள்ளத் தெளிந்த சிவானுபவ மோனவருள்
வெள்ளத் தமிழ்த்தி விடாய்தணித்த வாண்டவனே.

662. சிட்டரா லென்றுஞ் சிவாயநம வென்றிதயத்
திட்டமா நிட்டை யியற்றப் பெறுகின்றேன்
சுட்டுந் துவிதங்கள் சூனியப்பாழ்ங் கற்பனையாக்
கெட்டொழிய வென்னுட் கிளர்சொருபப் பெம்மானே.

663. வெருளும் மருளும் விசாரத்திற் பொய்க்க
இருளினுந்தன் னுண்மை யிலகு சொரூபன்
அருளே வடிவா வடியே னகக்கா
ரிருள்செற் றிதயத் தினிதமர்ந் தானே.

664. ஊனே நா னாக வொழுகலுற்ற வென்னை அருள்
வானே நா னாக வழங்கலுறக் கண்டபிரான்
தானே பரமார்த்தத் தத்துவமாந் தற்பரமாய்
யானேதா னாக விதயத்தி லுற்றானே.

665. உலப்பில்பே ரின்ப வுணர்வான மோன
நிலப்பரப்பில் தாழ்சொருப நேயனருட் காயன்
வெலப்படா வெற்றியால் விஞ்சுந் துரீய
நிலைப்படர்வாழ் வாகவென் னெஞ்சிலுற் றானே.

666. கண்டவெனக் காண்டவனைக் கண்ணா ரமுதமா
உண்டுவக்க வுண்ணா ரமுதமா வுண்ணிறைந்தான்
விண்டொழிய வொண்ணா விசுத்த சொரூபன்மெய்த்
தொண்டருக் கன்றிமற் றண்டருக்குந் துல்லபனே.

667. எள்ளத் தகா தபே ரின்பப் பரசிவவாழ்
வுள்ளத்தே யுள்ளமா வுள்ளதைநீ யுய்த்துணரென்
றுள்ளத்தை நோக்க வுணர்த்தினான் பாதம்என்
னுள்ளத்தே மோன வுணர்வொளியா வுள்ளதே.

668. கருப்படர்மோ கக்கலக்கக் கற்பனைதீர் சுத்த
வருட்பரவாழ் வாக வளைந்தென் னகத்தே
இருப்பதுபே ரின்ப வியற்பெற்றி யான
குருப்பதமோ னனுபவங் கூர்மெய்க் குலாவே.

669. உள்ளத்தை முற்றத் தனக்கே யுடைமையாக்
கள்ளத் தனத்தாற் கவர்ந்துகொண்ட தோடுதனை
எள்ளிக் கரந்துநான் யாதோர் பிழையுமனத்
துள்ளவுமொண் ணும லொளிர்ந்தா னிமையாதே.

670. வெற்றிசா கித்தருள் வேந்தன் சொரூபவியற்
பெற்றியா லென்னிதயம் பேராள் பிறங்குசிவப்
பற்றிஞ லெற்றிப் பசுபாசப் பற்றனைத்தும்
முற்றினன் மோன முழுமுதல்வாழ் வாகவே.

671. முகக்க வொண்ணுத முழுமுதல்வாழ் வாகத்
தொகக்கிளர்சற் போத சொரூபன் அடியே
னுகக்கவென் னுள்ளத் தொரேமுதலா வுள்ளான்
அகக்கிலே சஞ்செய் யகப்பேய் கடிந்தே.

672. ஒன்றாக வுள்ளத் தொளிர்சொருப மாட்சிக்குப்
பொன்று வுதாரணமாப் பொங்கும் குருரமணன்
நன்று வவிர்சொருப ஞானப் பிழம்பாக
நின்றனென் னெஞ்சத்துஃநீ நானென் றென்னவே.

673. அலந்து படாம லடியே னறிவிற்
கலந்த சொரூபக் கடவுட் பெருமான்
அலர்ந்த வருள்வெளி யாக வகத்தே
மலிந்துநின் ருனை மறப்பதெவ் வாறே.

674. மறக்கவே யன்றி நினைக்கவு மொண்ணுன்
உறக்க விழிப்போ டுடன்படான் சற்றுந்
துறக்க வொண்ணுத சொரூபமா வுள்ளஞ்
சிறக்க விளங்கு சிவக்கே வலனே.

675. குன்றுத மோனவருட் கோமான் எனக்குமிகத்
தொன்றுன சொந்த சொரூபன் சுயஞ்சோதி
நன்றாக நாளுமென் னள்ளிதயத் தூடியல்பா
நின்றனேர் தன்மயமெய்ஞ் ஞேயமா நேர்படவே.

676. ஒரியல்பே யல்லா துபயவுணர் வின்மையாற்
கோரியடை யக்கடவ கோரிக்கை யொன்றுமின்றாய்
நேரியவாழ் வாக நிறைந்திருப்ப தென்னகத்திற்
கூரியமெய்ஞ் ஞானவருட் கோமான் சொரூபமே.

677. கடந்தொழிந்தா னல்லன் கடவுட் பிரானென்
னிடந்துலங்கா நின்று னிதயத்தில் யானை
மடந்தருபா ழான மனக்கற் பனையை
யுடங்கிடந்து சுத்த வுணர்வொளியாத் தானே.

678. கண்ணு ரமுதமாக் கண்களிக்க முன்னின்றுங்
குண்ணு ரமுதமா வுண்ணிறைந்தான் சுட்டறிவா
லெண்ணவொண் ணாத வியற்பரமோ னனுபவ
வண்ணவருள் வாழ்வா வளர்சொருப மாட்சியனே.

679. *யானென் னறிவுக்கோ ரெல்லையா வுள்ளத்தில்
வானவடி வாக வளர்சொருப வாலறிவை
மோனவறி வூற்று முயங்குவித்த வாண்டவன்மெய்ஞ்
ஞானவடி வென்றுமென் னள்ளிதயத் துள்ளதே.

* யானென்னறிவு - கற்பனுபேதத்திற் கலங்கலுற்ற அகந்தை அறிவு.

680. பரமனருட் பாரமா யாவும் பரிப்பான்
சிரமிசைநா மேற்கச் சிறிதுமிலை யென்னும்
உரமதிகூ ருள்ளுணர்வா லுய்வித்த வாண்டான்
இரமியவாழ் வாக விதயத் துளானே.

681. தேடவொண் ணாத திரவியமா வென்னகத்திற்
கூடியமெய்ஞ் ஞான குருநாதன் மோனவியற்
பீடுசேர் சுத்தப் பிரம்மானு பூதிவளர்
வீடுவெளி யாக விளங்கலுற்று ணேர்தகவே.

682. சான்றுக வெங்குந் தழைத்தொளிர்சற் போதமாத்
தான்றோன்றி யானபெருந் தக்கான் சதாசிவமா
வான்றான் றளப்பரிய வம்மான் அகத்தகமா
வூன்றுநின் றுனென் னுணர்வூ டொருப்படவே.

683. தடுக்க வொணுதபர தத்துவமா மோனம்
மடுக்கலுற் றேனகத்தில் வாலறிவா வுள்ளான்
அடக்க வொடுக்கமா வாழ்ந்தறியத் தக்க
சுடர்க்கொழுந் தான சொரூபப் பிரானே.

684. சொந்தத் துரீய சொரூபமா வுட்கலந்தான்
பந்திக்க லுற்றவகப் பாசக் கலக்கமறச்
சிந்திக்கப் பெற்றதன்றிச் சிந்தையுவந் தன்புபொங்கப்
புந்திக் கமுதமாப் போற்றவும்பெற் றேனகத்தே.

685. கற்பனை காணுக் கடவுளாங் கைவல்யத்
தற்பர மாகத் தழைத்தசிவத் தம்பிரான்
சிற்பரமா வென்னுள்ளஞ் சேர்ந்தான் சிதாபாசக்
கற்பிதநான் வெள்கிக் கரப்பத்தன் சிற்பதத்தே.

686. கள்ளமற்ற சுத்தவருட் கைவல்யச் செம்பதத்தா
டுள்ளுணர்வா லென்னை யுணர்த்தலுற்ற வாற்றுலென்
னுள்ளமே யாக வொளிர்தலுற்றுன் பேரின்ப
வெள்ளவெளி யான விசுத்த சொரூபனே.

687. ஆணவப்பா ழான வகந்தை மயக்கமறச்
*சோணகிரி யான சொரூபசாட் சாற்காரங்
காணலுற்ற தெய்வக் கடவுட் பரசொருபன்
பேணலுற்றே னுள்ளம் பிறங்கவாழ் கின்றுனே.

*"உண்ணு டுளத்தொளிரும் அண்ணுமலையெனுன்மா காணுமே" என ஆன்ம வித்தைக் கீர்த்தனத்திற் பகவானே கூறுதல் காண்க.

688. மண்டிக் கிடந்தவருள் வாழ்வாம் பரவெளியைக்
கண்டிக்க லுற்றுமனக் கற்பனையாற் கெட்டொழிந்
அண்டர்க் கரியபரஞ் சோதியென் ஞருயிரில் [தேன்
மண்டிக் கலந்துமன மாயையறக் கண்டதே.

689. கருதன் மறத்தல் கழன்றொழிய வுள்ளத்
தொருதன் மயமா வொளிர்சொருபச் செம்மல்
விரிதலுற்ற சுத்த வெளியான மோனத்
துரிய மதீதமாத் துன்றலுற் றுனே.

690. உறுதிப் பொருளாந்தன் னுண்மையையுள் ளோரர்
தறிவு பறிபோ யயற்கற் பனையில்
வறிதிற் படர்சேர் மனப்பா ழிருள்செற்
றறிவொளியா வுள்ளவிர்கின் றுனெம் பிரானே.

691. அடர்ந்தமா மோக வகப்பா ழிருளைக்
கடந்தவருட் கைவல்யக் காட்சியால் என்றுந்
தொடர்ந்தொளிர்கின் ருன்சிற் சொரூபமா வாண்
படர்ந்த வபாரப் பரவெளியாத் தானே. [டான்

692. தொலைவிலா ஞானத் துரிய சொரூப
நிலையிலே யென்னை நிறுவியே உள்ளத்
தலகில்பே ரின்ப வருட்பெரு வாழ்வாக்
குலவலுற் ருன்சற் குருமா மணியே.

693. எங்கெங்கு முள்ளான்மற் றெங்கும் புலப்படான்
செங்கேழ்வன் னத்தான் செழித்தவருட் கண்ணேக்
[கால்
இங்கே யிதயத் தியைந்தொளிரென் ஞண்டவன்தன்
பங்கே ருகச்செம் பதமெங்கும் பேரானே.

குறிப்பு:—மற்றெங்கும்-இதயமல்லாதமற் றெவ்விடத்தும்.

694. கவிச்சமா மோகக் கரவுசேர் வன்பா
ழவிச்சையூ டாழ்ந்த வடியே னகத்திற்
சுவச்சமாத் துன்று சொரூபமெய்ஞ் ஞானத்
தவச்சுடராச் சார்ந்தான் சதாசிவப்பெம் மானே.

695. அவிரோத மானஞா ஞன்ம சொரூப
சிவமேவாழ் வாகத் திளைத்திடநான் ஞானத்
தவமா விதயத்துத் தங்கலுற்ருன் பாழி
லவமே யுழன்றேனை யாண்ட பிரானே.

696. ஜீவபோ தங்கெடவே செற்றருளி யுள்ளுணர்விற்
பாவஞ தீதப் பரசொருபங் காட்டினேன்
யாவரா லுந்தன் னியல்கா ணெணுதசிவக்
கேவலமா வென்னுட் கிளரா நிற் கின்ருனே.

697. ஓங்கார மோதுபர வுண்மையே தன்னுருவா
நீங்கா துறைந்தானென் னெஞ்சத்து நானெனும்பா
ழாங்கார மோக மறக்கடிந்தாட் கொண்டபிரான்
பாங்கா வொளிர்சொருபப் பார்வை பரக்கவே.

698. ஏதுவேண் டாத வியல்பாங் கருணையாற்
றீதுசே ரென்னையருட் செந்நெறிக்கே யாண்டவனெப்
போதுமே சுத்தசற் போத சொரூபமா
யாதுமோர் பேதமற வேய்ந்தா னிதயத்தே.

699. வென்றிசேர் சுத்தவருள் விஞ்சையா லென்னகத்திற்
கன்றியநா னென்னுமகங் கார மயல்கடிந்து
துன்றினன் சொந்த சொரூபமா நானுனென்
றென்று மொளிவளர்பே ரின்பவியல் பொங்கவே.

700. ஆண்டவனை யன்றியெனக் காருந் துணையிலையென்
ருண்டவனை முற்ற வருந்துணையாப் பற்றலுற்றேற்
காண்டவனென் னுள்ளம்புக் காருயிருக் கோருபிரா
வீண்டலுற்ருன் யான்யானென் றென்னுருத்தா
[ஞகவே.

701. வாலறிவா வுள்ளவருள் வள்ளற் பிரானெனக்குட்
சாலவொளிர் கின்ருன் சதோதயமா நானுனென்
றேலவே தன்னையன்றி யானென் றெருமுதலெக்
காலுமில்பே ரின்பவருட் கைவல்யம் பொங்கவே.

702. அருளொளியா லன்றிமற் ருராலுந் தன்னைத்
தெருளவொணு வத்துவிதச் சீர்மை விளங்க
மருள்வடிவ மான மனத்தே னகம்புக்
கருள்வெளியா நின்ரு னயற்புலமில் லாதே.

703. சோகக் கவலை தொடராது சுத்தசிவ
போகமார் சாந்தியென் புந்தியிலே பொங்குறத்தா
னேக சொரூபமா வேய்ந்தொளிர்கின் ருனடியேன்
மோக வகந்தை முனைப்பறச்செற் ருண்டவனே.

704. கள்ளமனக் கற்பனைசேர் காரிருளுக் கப்பாலா
யுள்ளவனை யாவரெவ்வா றுள்ளுவார்? சிற்பரமா
வுள்ளா னவனேயென் னுள்ளுணர்விற் பேரின்பத்
தெள்ளாறு பாயத் திருவருட்கண் ணேக்காலே.

705. தாழ்வான வெல்லாந் தவிர்ந்தொழியத் தற்பரமெய்
வாழ்வாக வென்னகத்தில் வைகலுற்றான் கற்பனையின்
மாழ்காநின் றேனை மயக்க வகங்காரப்
பாழ்வா தனையின் பரிசறச்செற் றாண்டவனே.

706. ஆராதிக் கின்றமெய் யன்பிலாப் பேயேனைக்
காரா ணவப்பாழ்ங் கலியறச்செற் றாண்டபிரான்
சீரான சுத்தவருட் செல்வவாழ் வோங்கவுளத்
தோரா தொளிர்சொரூப வுண்மையா வுள்ளானே.

707. சீர்மைசேர் தன்செம்பொற் சேவடிக்கு மிக்கவருட்
கூர்மைசேர் நோக்காற் குறிக்கொண் டெனையாண்
[டான்
கார்மயல்சே ராணவப்பாழ்ங் கட்டறவென் னுள்ளு
[ணர்வு
டோர்மைசேர் சுத்த வொளிவெளியா வுள்ளானே.

708. ஆராத னைக்குரிய வம்மானென் னுள்ளத்து
நேராக வென்னுருவா நின்று விளங்குகின்றான்
**ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியாமந்**
**நாரா யணன்வடிவு** ஞாலத்தார் காண்பரிதே.

709. ஆக மகமென் றழுங்கலுற்ற வாணவப்பாழ்
மோக வகப்பேய் முசித்தொழியக் கண்டபிரான்
ஏக சொரூப வியல்விளங்க மெய்ஞ்ஞான
யோகவுரு வாக வொளிர்கின்றா னுள்ளத்தே.

710. ஆன்றபரஞ் சோதி யடிக ளருள்வாளான்
மான்றவகங் கார மயக்கமனக் கட்டறுத்தேன்;
ஊன்றியது சுத்த வொளிவெளியா வுள்ளத்திற்
பூன்ற சொரூபவருட் புண்ணியன்செம் பொன்னடி
[யே.

711. எள்ள வொணாத வியற்பரமா வுள்ளுணர்விற்
கள்ளமில்சற் போதக் கழல்காட்டி யாண்டபிரான்
தெள்ளத் தெளிந்தவருட் சிற்பரமோ னானுபவ
வெள்ளக் கடலா விளைந்தா னுளந்தனிலே.

712. மயர்க்கலக்க மானபொய்ம் மாயப் பிறவித்
துயர்க்கடலின் மூழ்கிநான் துஞ்சாது நாயே
னுயிர்க்கொளிசே ருண்மைப் புகலா வுளத்தே
நயக்கவொளிர் கின்றான்மெய்ஞ் ஞானப் பிரானே.

713. தன்னைத் தவிரமற் றெல்லாந் தணந்தொழியத்
துன்னும் பரமார்த்த சொந்த சொரூபவருள்
வன்ன வுணர்ச்சி வளம்படவென் னுள்ளத்து
மன்ன வெழுந்தருளி வாழ்கின்றா னண்டவனே.

714. துன்று துரிய சொரூபானு பூதியெழ
வென்றனுே டொன்றி யியல்பா விளங்கலுற்ற
நன்றிசேர் சுத்தமெய்ஞ் ஞானகுரு பாதமுளத்
தென்றுமென் னுருயிருக் கேமவருட் செல்வமே.

715. தாக்கறமற் றொன்றேடுந் தங்கலுற்ற சுத்தவெளி
நோக்கத்தா லென்னை நுனித்தாண்டு கொண்டபிரான்
வாக்குக்கோ வன்றி மனத்துக்கோ சற்றுமெட்டா
மோக்கவுணர் வாக முளைத்தானென் னுள்ளத்தே.

716. கருணை விலாசக் கதிர்மா முகத்தால்
இருளா ணவப்பா ழிகப்பவென் னுள்ளத்
தருண சலசொருப வம்மா னமர்ந்தான்
மருளா தடியேன் மனப்பொருளாத் தானே.

717. மாலறிவாத் தோன்றலுற்ற மற்றனைத்தும் மங்கவருள்
வாலறிவா வுள்ளொளிர்செம் மாண்பொருள்யா [தென்னிலோ
ஏலவென் னுள்ளத் திலகுவது சுத்தவருட்
சீல குருநாதன் செல்வத் திருவடியே.

## 8. உள்ளத்துறைதலும் பயனும்

### க. அகந்தை யறல்

(வெண்பா)

718. பருப்பதமா ஞானப் பரஞ்சோதி யான
திருப்பதமே யென்னகத்திற் சிக்கென்—றிருப்பதால்
ஆணவமா மோக வகந்தைமுனைப் பற்றொழியத்
தாணுவா நின்றதகந் தான்.

719. தனுவகம்புக் காண்ட சதாசிவமே நானு
வனுபவித்துச் சிந்தை யமைந்தேன்—எனதகத்தவ்
வாண்டா னருளா லகந்தைநா னற்றொழிய
மூண்டா னகமா முனைந்து.

720. தொல்லையிருள் சாயச் சுடர்சொருபப் பார்வையா
லொல்லையுயி ரூடுருவுற் றானுடையான்—நல்லசிவந்
தானென்று மோனந் தலைப்படலாற் கீழ்ப்பட்ட
தானென் றகந்தை யுணர்வு.

721. சாந்தானு பூதியாற் றன்னொடுநா னென்றகச்
சேர்ந்தானென் சித்தத்துட் சிற்பரமாய்—வேந்தா
முடையான் சொருப வுணர்வு தலைப்பட்
டடியே னகந்தையற் றேன்.

722. சிக்கெனவந் தாண்டசிவச் செம்மலா னென்னுளத்து
மிக்கநன வாக விளங்கலால்—தொக்கபே
ருண்மையொளி யாமென் னுடையான் பதப்பகலில்
வெண்மதியாய் நான்வெள்கி னேன்.

723. என்னிதயத் தென்றுங் கொலுவீற் றிருக்குமிறை
சந்நியா வெங்குந் தழைத்தொளிர்வான்—மெய்ந்நிதி [யாம்
பூரணமா வென்னுளவன் பொங்குங்கால் யானென
ரோரெணமுண் டாமோ வுளத்து. [தென்

(கொச்சகக் கலிப்பா)

724. சஞ்சலமற் றேயவொரு தன்மயமா மோனவருள்
விஞ்சையாற் பொய்ம்மாய வேற்றுமையை மாற்றியே
நெஞ்சிலியல் பாக நிரந்தரமாத் தங்கினான்
வஞ்சவியல் பானவறும் பாசமனம் மாய்ந்ததே.

725. கல்லா மனப்புன் கடையே னிதயத்து
நல்லான் குருரமணன் ஞான வொளிவளர்செஞ்
சொல்லாற் றுரீய சொரூபந் துலங்கலால்
அல்லார்ந்த மோக வகப்பா ழகன்றதே.

726. முன்னு ளியைந்தமதி மோகக் கலக்கமறப்
பொன்னன சுத்தவருட் பூரணவாழ் வாகவகத்
தென்னுண் டவனங் கியைதலா லென்னேடு
துன்னு தொழிந்ததுபொய்ச் சூதா மகந்தையே.

727. செறிவாக வுள்ளசிவச் செம்பிரான் சற்றும்
மறவா நினையா மனேதீத வுண்மை
யறிவான சுத்த வருட்பிரான் என்னுட்
பிறியா துறைவாற் பிறிந்ததகப் பேயே.

728. இருட்கற் பனைமுற் றிகந்தொழியத் துங்க
வருட்சிற் பரவெளியா வாண்டபிரான் சேமப்
பொருட்பொலிவு சான்றசிவ பூரணமா வுள்ளத்
திருப்பதால் யானென்னு மேழைமையற் றேனே.

729. வீடுபே ருக வி்ளங்குஞா னனுபவப்
பீடுசேர் மோனம் பெருகவளித் தாண்டவன்ருள்
ஊடுபே ராமலென் னுள்ளத் தொளிர்தலான்
மூடுமோ காணவப்பாழ் முக்காலும் பொய்த்ததே.

730. ஞான சொரூப நலங்கிளர்மோ னத்திறத்தாற்
ருனென்னை யாண்ட சதாசிவமெய்த் தம்பிரான்
வானமா முற்ற வளைத்தலா லுள்ளத்திற்
போனதுநா னென்னும் புணர்ப்பா மகந்தையே.

731. புங்கமாப் பொங்குசிவ போகமென் னுள்ளத்துத்
தங்க நிரந்தரமாத் தானங்குத் தங்கலால்
எங்குமாப் பொங்கு மியற்சிற் பிரான்றிருமுன்
மங்கியது நானென்னும் மாயக் கலக்கமே.

732. ஒளிவெளியா வுள்ளவென் னுண்மைப் பிரான்சீ
ரளைதலா லுள்ளத் தருட்பூ ரணமா
விளைதலுற்றேன் பாழ்த்தமனே வேகமற்ற சாந்தி
வளைதலால் யானென் வயமிழந் தேனே.

## உ. இருவினை யறல்

(கொச்சகக் கலிப்பா)

733. களைகணு வுள்ளான் கருத்தில்வெம் பாசம்
அளையொணு ஞான வருட்பெருங் குன்று;
எளியநா னல்லேன் இருவினை யான
விளைவினுற் சுற்றும் விதிர்க்கிலேன் யானே.

## ங. துன்ப மறல்

(கொச்சகக் கலிப்பா)

734. ஆண்டவருட் பெம்மா னகத்தே யமர்தலாற்
றூண்டவேண் டாத சொரூபானு பூதியாக்
காண்டலுற்ற சுத்தசிவக் கைவல்யச் செம்பதத்தின்
மாண்டதகங் கார மனக்கலக்கத் துன்பமே.

## ச. குறை வின்மை

(வெண்பா)

735. சுத்த வருட்பரஞ் சோதிப் பதத்தியற்
பத்தியெனக் காரப் பழுக்கவே—யத்தன்
அருட்கடைக்கண் ணேக்கா லகமகமென் றுள்ளத்
திருக்கவெனக் கென்னே குறை.

## ரு. கோச மறல்

(கொச்சகக் கலிப்பா)

736. பாசங் களைந்தவருட் பார்வையாற் றன்சொருப
நேசந் திளைக்கவென் னெஞ்சத் தினிதமர்ந்தான்;
கோசங் குலைந்தொழியக் கூடிற் றருள்வெளியாப்
பேசற் கரியபெரும் பெற்றிசேர் தன்மையே.

## சு. பாசமறல்

(குறள்)

737. அறிவொளியா வாண்டான் அகத்தே யமர்வால்
உறவுபிறி தற்ற துணர்வு.

738. ஒளிவெளியா வுள்ளத் துடையா னுறைவால்
இளிவரல்சேர் பாச மிலை.

(வெண்பா)

739. பாசக் கடலிற் படிந்தநான் சுத்தசிவ
நேசக் கடல்பெருக நெஞ்சத்தே—பாசக்
கடல்சுவற மெய்ஞ்ஞானக் கண்ணாக நின்றான்
அடல்சே ரருளாண் டவன்.

(கொச்சகக் கலிப்பா)

740. பம்புலக மாங்கற் பனையிற் களித்துழலுந்
துன்பவெம் பாசத் தொடரற் றொழிந்ததெனக்
கின்ப வுணர்வா விதயத் தியல்சொருப
நம்பன்பா லன்புறவு நண்ணலுற்ற வாற்றாலே.

எ. வஞ்சமறல்

(வெண்பா)

741. தஞ்சமா வென்னுயிரைத் தாங்கியே யாண்டவனென்
னெஞ்சமே கோயிலா நீடினன்—வஞ்சக்
குறும்பராந் தெவ்வர் குலைந்தொழிந்தார் சாந்தித்
திறம்பராய் நின்றேன் சிவத்து.

அ. மயலறல்

(குறள்)

742. அடங்காத வுண்மை யடங்கிற்றென் னுள்ளத்
திடங்கொண்ட வாற்றா லிறை.

குறிப்பு:— உண்மை, உள் + மை = உள்ளத்தில் இருள், அஞ்ஞானம்.

(வெண்பா)

743. உறக்கவிழிப் பின்றி யொரேவிழிப்பா நீடு
பிறக்கமாஞ் சிற்சொருபப் பெம்மான் சிறக்கவே
உண்மை யுணர்வுருவா வுள்ளத் தொளிர்தலால்
உண்மயல் போயிற் றொழிந்து.

744. குருக்களா நின்றுன் குலவுமெய்ஞ் ஞான
வருக்கனுச் சேர்ந்தா னகத்தே—செருக்குமகப்
பேயாட்ட மானமயற் பித்தலாட் டக்கனவு
மாயமாத் தீர்ந்தது மன்.

### ௪ எல்லாம் கற்பனு விலாசம்

(கொச்சகக் கலிப்பா)

745. மூன்றையுமோர் தன்மயமா முற்ற விழுங்கியகத்
தான்றசிவந் தானே யருட்சிற் பரவெளியா
ஊன்றலாற் றேற வுணர்ந்தே னனுபவமாத்
தோன்றுமவை முற்றவெறுந் தோற்றமாந் தன்னி
[லென்றே.

### ௬0. மனக் கற்பனை யறல்

(வெண்பா)

746. தஞ்சமுனக் கென்றேன் சதாவாச மாவதுநின்
னெஞ்சமெனக் கென்னவென் னெஞ்சுபுக்கான்—
[வஞ்சமனக்
கற்பனைபோய் மாண்டவிடங் காண்கிலேன்
யப்பனையாய் கின்றே னகத்து. [சிற்பரமெய்

(கொச்சகக் கலிப்பா)

747. எந்தவிதத் தொந்த வினையுமெனக் கென்றுமற்ற
சொந்த சொரூபன் துலங்கலா லுள்ளத்திற்
பந்தமுத்தி யாகப் படருமனக் கற்பனைகள்
சிந்தியது சுத்தவருட் சிற்பரமாந் தற்பரத்தே.

748. இங்கெனக்கு நானெனும்பொய் யெட்டுணையுந்
[தோன்றுது
நன்கிலக்க மாகவென் னள்ளிதயத் துள்ளுறையுந்
தன்கழற்கண் ணேக்கமொரு தன்மைத்தாத் தங்க
புன்கலக்கக் கற்பனைகள் பொன்றக் கரந்ததே. [வாற்

## கக கிரந்தி பேதம்

(கொச்சகக் கலிப்பா)

749. துரியவருள் தாழ்வாத் துலங்குசுப மோனக்
குரிசிலென் னுள்ளமே கோயிலாக் கொண்டான்
விரிய மலர்ந்த விசுத்தவெளி யாகப்
பெருகியதவ் வுள்ளம் கிரந்திபே தித்தே.

750. குருக்களா வாண்டவருட் கோமான் குலாச்சே
ரருக்கனு வுள்ளத் தரசிருக்கை கொண்டான்,
செருக்கலுற்ற நானென்னுஞ் சிச்சடப்பா ழான
கருக்கலிகெட் டெங்கோ கரந்ததுகா ணுதே.

## கஉ மாயையறல்

(கொச்சகக் கலிப்பா)

751. அன்புசிவ மானமோ னுனுபவ வாழ்வளித்த
நம்பனுரு சுத்தமெய்ஞ் ஞான வருள்வெளியா
இன்பமெழ வுள்ளத் தியல்பா விலகலால்
வம்பியல் பொய்ம் மாயமனே மாயை கரந்ததே.

குறிப்பு:—இலகல்—விளங்கல்.

## கங. மருளறல்

(வெண்பா)

752. உபயந்தீ ருண்மை யுணர்வளித்து நாயேற்
கபயமா நின்று னகத்தே—விபவ
வருட்சிற் பரவொளிசே ரம்பலமே யாக
மருட்சியற்ற தென்புன் மனம்.

## கச. வாட்டமறல்

(கொச்சகக் கலிப்பா)

753. தன்னைச் சரணடைந்த சாது ஜனங்களை நல்
லன்னையினும் மிக்கபே ரன்பா லருளமுதூட்
டின்னியல்சே ரெம்மா னிதயத் திருக்கையாற்
றன்னியனுய் வாட்டந் தவிர்ந்துவாழ் கின்றேனே.

### கரு. அயலறல்

(கொச்சகக் கலிப்பா)

754. நீண்டநெடுங் காலமா நீசமனத் தாலடியேன்
காண்டலுற்ற வெல்லாமே காதலித்தே ஞயிடினும்
வேண்டலுற விப்பொழுதோ வேறெதுவுங் காண்கி
ஈண்டலா லுள்ளத் திறைவனருட் சிற்பதமே. [லேன்

### கசு. இருளறல்

(குறள்)

755. அருள்வெளியா வாண்டா னவிர்தலா லுள்ளத்
திருள்வெளிநான் காண்கின் றிலேன்.

(கொச்சகக் கலிப்பா)

756. அடியே னுயிருக் கருங்காவ லாக
உடையா னுளத்தே யொளிர்தலாற் பாசப்
படைசே ரிருட்பாழ் பரவெளியின் மாய்வுற்
றிடவே யருட்சீ ரினைத்தெனக்கண் டேனே.

### கஎ. கலக்கமறல்

(வெண்பா)

757. வேதத் தலையில் விளங்குங் குருபாதப்
போதென் னகத்திற் பொலிவதால்—கேத
வலமரல்சேர் பொல்லா வவிச்சைக் கலக்கந்
தொலைவுற் றறிவுதெளிந் தேன்.

(கொச்சகக் கலிப்பா)

758. தந்தையா வுள்ள சதாசிவமெய்த் தம்பிரான்
எந்தையா வென்றன் னிதயமே கோயில்கொண்டான்
சிந்தையார் மோகச் சிலுகாங் கலக்கமற்றேன்
விந்தையார் சுத்தவருள் வெற்றித் திறத்தாலே.

### ௧௮. சலனமறல்

(குறள்)

759. மஞ்சனென் னுள்ளத்து வாலறிவா வூன்றலால்
உஞ்சலாட் டந்தீர்ந் தது.

760. உள்ளக் கலக்கஞ்சே ருஞ்சலற வாண்டவருற்
றெள்ளத் தெளிந்தேன் சிவம்.

குறிப்பு:—உஞ்சல் உஞ்சலாட்டத்துக்கும், ஆண்டவன்
ஆண்டவன் அருளுக்கும் ஆகுபெயர்.

### ௧௯. காலதேச மறல்

(கொச்சகக் கலிப்பா)

761. ஆங்கார மோக முனைப் பற்றொழிய வாண்டபிரான்
ஈங்காக வுள்ளத் திருப்புணர்வு மாத்திரமாம்
பாங்கான சுத்தப் பரவெளியாப் பற்றலால்
ஆங்கென்னுஞ் சொல்லெனக்கோ ரர்த்தமின்றுப்
[பொய்த்ததே.

### ௨௦. பிறவியறல்

(வெண்பா)

762. இளிவரல்சேர்ந் தேங்கியவென் னேழைமனஞ் செத்
[துக்
களிவரவென் னுட்கலந்து நின்றான்—தெளிவாச்
சிவத்துக்கூ ஞனவருட் செம்மனத்தா லின்றும்
பவத்துக்க மானமருட் பாழ்.

763 சிவத்துக் கலாது செகத்திலே சேர்ந்த
வவத்தைக் குறவுநா னல்லேன்—பவத்தைக்
கெடுக்கலுற்ற வுண்மைக் கிளரொளியா வாண்டா
னடுக்கலுற்று னென்றன் னகத்து.

764. சீராற் பெரியவருட் செல்வத் திருவருணை
யூரா னடியே னுயிர்க்குடையான்—பேராப்
பெருவாழ்வா வுள்ளம் பிறங்கலர் லூனக்
கருவாழ்வு காண்கிலேன் யான்.

(கொச்சகக் கலிப்பா)

765. மரணங் கடந்தோங்கு மாட்சிசே ருண்மைச்
சரணமென் னுள்ளுணர்விற் றற்பரமாச் சார்வாற்
கரணங் களின்மோகக் கற்பனையே யாம்பொய்ம்
மரண ஜனன மயக்கமற் றேனே.

766. மறப்பு நினைப்பு மடாத சொரூபன்
உறைப்பவென் னுள்ளத் துணர்வா வொளிர்வாற்
பிறப்போ டிறப்பென்ற பேதைமை பேரச்
சிறப்பென்ற செம்பொருள் சேர்ந்தது செவ்வே.

குறிப்பு:— 'மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கு' என்னும் திருவாசகமும், 'பிறப் பென்னும் பேதமை பேரச் சிறப்பென்னும், செம்பொருள் காண்ப தறிவு' என்னும் குறளும் ஈண்டு கருதற் பாலன.

### உக. அமுதானுபூதி

(கொச்சகக் கலிப்பா)

767. இன்பமா மோன வியல்வடிவு காட்டியெனக்
கன்புசிவ மாமெய் யருட்பே றளித்தபெரு
நம்ப னகத்தொளிர்மெய்ஞ் ஞான சொரூபமாய்
அன்பளைய வூறிற் றமுதானு பூதியே.

### உஉ. வான்சுகம் அற்பமாதல்

(வெண்பா

768. ஞானப் பொருளான நம்பனென் றன்னகத்து
மோனப் பரமாக மூண்டொளிர்வான்—வானப்
பதங்களுமே யந்தப் பரசொருபத் திற்புற்
புதங்களே போல்வ புலத்து.

## உக. தவ வாழ்வு

(கொச்சகக் கலிப்பா)

769. ஆன்றபரஞ் சோதி வடிகளென் பாலருளி
யூன்றலா னுள்ளத் துபாசனு யோகமுற
மான்ற மயக்கமன மாசற் றருள்விளக்கஞ்
சான்றசதா சாரத் தவவாழ் வியன்றதே.

## உச. யோகம்

(கொச்சகக் கலிப்பா)

770. ஏக சொரூபமா வேய்ந்தா னிதயத்து
மோகச் செருக்கறவே மோசித் தருளினேன்;
பாகம் படாதவருட் பான்மையா மெய்யுணர்ச்சி
யோக வியல்வளம்பொங் கோம்படையா வுள்ளதே.

## உரு. பத்தி

(வெண்பா)

771. ஒன்றுவதா முண்மை யுணர்வொளிசேர் பத்தியின்
சென்றெவரு ந் தேர்வரிய சீரமணன்—என்றும் [றிச்
மனக்கருத்தா வென்னுளத்தே மன்னலா லோவா
தெனக்கருத்தி பொங்கிற் றினிது.

772. இன்பவெளி யான விறைவன் சொரூபமெனக்
கன்புமய மாகவகத் தார்தலால்—அன்புசிவ
மாக விளங்கு மபரிமித மோனவருட்
போகமாம் புந்திப் புலம்.

773. ஒரந்தரமின் றுண வுணர்வொளியா வுள்ளத்
திருந்தருள்கின் றுனென் னிறையோன்—நிரந்தரசற்
போத சொரூபவருட் பூரணமாப் பொங்குகுரு
பாதமே பற்றுமெய்ப் பற்று.

774. பேராள னுனபிரான் பேயனேன் வஞ்சநெஞ்ச
வூராள னுக வுறைதலாற்—போராடு
வாசனைக்கா டானவவ் வஞ்சநெஞ்சஞ் சீர்திருந்தி
யீசனைக்கா முற்ற தினிது.

(கொச்சகக் கலிப்பா)

775. அகந்தைமுளைப் பற்ற வருட்சிற் பரவாழ்
வுகந்து திளைக்கவென் னுள்ளங் கலந்தான்;
இகந்தொழியத் தன்னி னிரண்டற்ற வொன்று
முகந்துகொண் டன்பின் முயங்கலுற் றேனே.

குறிப்பு:—ஒன்று - ஏகான்மா.

776. மைத்தவகங் கார மதோன்மத்தப் பேயனேன்
சுத்தவருள் வண்மை துலங்கவென் னுள்ளத்து
மெய்த்தவவாழ் வாக விளங்கலுற்ற வாண்டவன்சற்
பத்தியா லுற்றேன் பரமோப சாந்தியே.

777. துன்பந் தொடராத் துரீய சொரூபப்பே
ரின்பப் பிரானென் னிதயத் தெழுந்தருளி
வம்பனேன் வஞ்ச மனத்தைக் கரைத்தலால்
அன்புசிவ மாக வளைந்ததனு பூதியே.

குறிப்பு:—அளைந்தது - அவிர்ந்தது எனவும் பாடம்.

## உசு. சொருபானுபூதி

(வெண்பா)

778. அருள்வெளியா மண்ண லகண்ட சொரூபப்
பொருள்விளங்க வென்னிதயம் புக்கான்—மருள்
புத்திக் கலக்கமறப் பொங்குசற் போதத்தால் [வழங்கு
மித்தையறத் தோன்றிற்று மெய்.

779. முத்த சொரூப முழுமுதலென் னுள்ளத்தே
சுத்தசை தன்யவருட் சோதியாய்—மத்த
வகங்கார பந்த மறக்கிளர்த லாலென்
னகந்தானே யாயிற் றது.

குறிப்பு:—அதுதானே என்னக மாயிற்று எனக் கூட்டுக,

780. தெளிந்தஞா னனுபவத் தேற்றத்தா லன்றி
யளந்திடவொண் ணாத வதீதம்—விளந்திடவென்
னுள்ளத்தே தங்கி யொளிர்சொரூ பானுபவ
வெள்ளத்தென் மெய்விளக்கி னன்.

(கொச்சகக் கலிப்பா)

781. தவமே யுருவாத் தழைத்தவென் னண்டான்
சிவமேயா வுள்ளஞ் சிறக்க வொளிர்வாற்
பவமான மோகவகப் பாழ்ங்கற் பனைவிட்
டவிர்தலுற்ற வென்மெய் யருட்கே வலமே.

782. வளந்தருபே ரின்ப வனாகமா முற்றத்
தெளிந்தசிவ போதவருட் செம்பதமென் னுள்ளத்
தளந்ததால் ஆன்றமோ னனுபவ வாழ்வா
விளந்ததுகாண் மிக்க வியன்சொருப வீடே.

783. மூடிகா ராணவப்பாழ் மோகத் தழுங்குங்கா
லூடுபே ராதென் னுடையா னுளம்புகலால்
வீடுபே றுக விளங்குவதென் னுள்ளத்திற்
பீடுசேர் சுத்தவருட் பெம்மான் சொருபமே.

784. எங்குமே யன்றி யிதயத் தொளிசிறக்கத்
தங்கலுற்று னங்கென்னைத் தானாக வாண்டபிரான்
அங்கமே நானென் றகங்கரித்த வாணவப்பேய்
மங்கவே யென்சொருப மாட்சிவெளி யானதே.

785. கல்லாத மோகமனக் கட்டறவென் னுட்புக்கு
நல்வா னொருத்தன்மெய்ஞ் ஞானவொளி பாய்ச்ச
எல்லாமோ ரின்ப வியற்சிற் பரவெளியாத் [லால்
தொல்லே யமைந்த சொருபவுண்மை தேர்ந்தேனே.

786. மோகக் கலியகற்றும் மூர்த்தி விசாரவருள்
யோகத் திறத்தா லுளம்புக் கொளிர்தலால்,
யாகத் திறங்களா லெய்த வொண்ணாதவவ்
வேக சொரூப வியல்வாழ் வடைந்ததே.

787. நிராலம்ப மானமெய்ஞ் ஞேய சொரூபன்
ஒராலம்ப மாக வுணர்வூ டுறலாற்
புராண சொரூபவருட் பூரணவாழ் வொன்றிற்
றுராசங்கை யற்ற வொளிவெளியாத் தானே.

788. தற்பரமா வுள்ளசிவந் தானேமெய்ஞ் ஞானவருட்
கற்பகமா வுள்ளங் கலத்தலாற் கைவல்யத்
துப்புரவா நீடு சொரூபானு பூதிநலம்
பொற்புறுவாழ் வாகவொளிர் பூமாவாப் பொங்கியதே.

789. குருவாக வென்னையாட் கொண்டபிரான் மோகக்
கருவா தனைகடியுங் கண்ணேக்கால் யான்று
னிருவே றறவிதயத் தேய்ந்தொளிர்வால் ஏக
சொருபானு பூதியாத் துன்றியது வாழ்வே.

## ௨எ. பிரம்மாநுபூதி

(வெண்பா)

790. சிவசொருப மானவருட் சிற்சத்தி யென்றன்
சுவசொருப வாழ்வு துலங்கத்—தவிசிருக்கப்
பெற்றவென் னுள்ளம் பிரம்மானு பூதிவளர்
வுற்றதியல் பாக வுறைத்து.

## ௨அ. பிரம்மபதம்

(கொச்சகக் கலிப்பா)

791. காரா ணவமனப்புன் கற்பனையைக் கண்டித்துச்
சீரா வொளிர்சொருபச் சிற்பதவாழ் வாகவெனக்
கோரா வெருத்தனுளத் துள்ளுணர்வா நிற்கையாற்
பேரா வியல்பாம் பிரம்மபதங் கூடியதே.

## ௨௯. அகண்டாநுபூதி

(வெண்பா)

792. அகத்திலே யாண்டா னருட்சோதி யாக
மிகத்துலங்கு கின்ற விலாசம்—இகத்தி
லடைதற் கரும்பே ரகண்டானு பூதி
நடைதரக் கூட்டியது நன்கு.

(கொச்சகக் கலிப்பா)

793. புன்கண்மை போகவென் புத்திப் புலந்தெளியத்
தன்கழலென் னுள்ளந் தலைப்படலாற் கண்டுகொண்
எங்கணுமாந் தன்மெய் யிதயத் தலம்பொங்க [டேன்
அங்கணனு வாண்டா னகண்ட சொரூபமே.

### ௯0. உயிர்க் குறுதி பெறல்

(கொச்சகக் கலிப்பா)

794. உள்ளமா வுள்ளவருள் வெள்ளப் பிரானொளியிற்
கள்ளவகங் காரக் கலக்கமறப் பேர்தலாற்
றெள்ளத் தெளிந்த சிவானுபவச் சீர்மைசே
ருள்ளமே வீடா வுயிர்க்குறுதி வாய்த்ததே.

### ௯௧. மெய்ந் நிறைவு

(கொச்சகக் கலிப்பா)

795. அறிவனு வென்னைமுற்ற-வாண்டுகொண்ட மோன
விறைவனென் னுள்ளத் திருந்தொளிர்வாற் பாச
வுறவனைத்தும் பொன்ற வொளிவெளியா முண்மை
நிறைவு சொரூபமா நீடியது நெஞ்சே.

### ௯௨. அறிவு

(குறள்)

796. உயிருக் குடையா னுளம்பொங் கருளால்
அயர்வற் றொளிர்ந்த தறிவு.

(வெண்பா)

797. பரமாக வுள்ளவருட் பார்ப்பான் சொரூபம்
உரமான வுண்மை வுணர்வாய்த்—திரமா
வகமகமென் றுள்ளத் தசலநடஞ் செய்ய
அகமகமே யாயிற் றறிவு.

798. இனிப்பேர கில்லா திதயத்தே யாண்டான்
றனிப்பே ருயிராத் தழைத்தான்—மனப்பேயாம்
போலியுயிர் சுத்தவருட் பூரணத்தே பொய்த்தொழிய
வாலறிவாய் மன்னியதென் வாழ்வு.

## ௩௪. ஞானநுபூதி

(வெண்பா)

799. இன்பமே யன்பா வியல்சொருப வாழ்க்கைதரு
நம்பனருட் சீரகத்து நண்ணலால்—செம்பரமே
நானைத் திகழ்சொருப ஞானனு பூதிமயத்
தேனைத் தெளிந்தியலு மின் றேன்.

800. இருள்வடிவ மாமென் னிதயத்தே யாண்டா
னருள்வடிவ மாக வடைந்தான்—பொருள்வடிவ
ஞானனு பூதிபகம் பொங்கிற் றிருள்வடிவ
நானென் றன்மை நசித்து.

801. உல்லாச மாக வொளிர்சிற் பராசத்திக்
கல்லா விடமென் னகத்திலில்லை—எல்லாமுந்
தானா வியல்சொருப சாந்த சதாசிவமெய்ஞ்
ஞானனு பூதிநண் ணலால்.

802. முத்தித் துலக்கமுறு மோனமா மெய்ஞ்ஞான
சித்தித் திறந்தாற் செழிப்புற்றேன்—புத்திக்
கதீதமா நின்ற வருட்பெருஞ் சோதி
சதோதயமா வென்னுளத்திற் சார்ந்து.

## ௩௫. ஞான சமாதி

(வெண்பா)

803. எந்தை யிருப்ப திதயத்தே யூனமனச்
சந்தை யிரைச்சலங்குச் சற்றுமில்லை—சிந்தை
சிவசொருப மாகத் திளைப்பா லவன்பால்
அவசமாய் வாழ்கின் றது.

804. மோனவொளிப் பார்வைகூர் முத்தன் குருரமண
ஞானவெளி யாவுளத்தே நண்ணலால்—ஊனவியற்
சுட்டறிவாங் கற்பனைதீர் சுத்தவருட் கேவலத்தே
நிட்டையுறப் பெற்றதென் னெஞ்சு.

(கொச்சகக் கலிப்பா)

805. அறிவாக வென்னை நன் காண்டவனென் னுள்ளத்
துறைவா லெனக்குமற் றோர்துணை நான் வேண்டேன்;
மறதியற்ற சுத்தவருள் வாலறிவா மோன
நிறைவே சொரூபமா நிஷ்டையுற் றேனே.

806. தங்குதடை யற்ற சதாமோனத் தன்மையால்
எங்குமாத் தங்கு மியற்பரமெய்த் தம்பிரான்
மங்கலவாழ் வாக மடுத்தலா லுள்ளுணர்விற்
பொங்கியது சுத்தவருட் போத சமாதியே.

807. மாயாமோ கத்தின் மதந்தொலைய வுள்ளத்தூ
டோயா வுணர்வா வுடையா னொளிர்தலால்
சாயாத ஞான சமாதியே தன்னியல்பா
நேயானு பூதி நிரம்பியது நெஞ்சமே.

௩௫. பரமானேன்

(வெண்பா)

808. அம்பரமா நின்ற வகண்ட வருட்பரன்சிற்
றம்பலமா வென்மெய் யகமானன்—பம்பறிவால்
யானு வுழன்றநான் யானெனுமப் புன்மயல்போய்த்
தானு நிலைத்தேன் றழைத்து.

809. சுத்தவறி வாகச் சுடர்தற் பரசொருபம்
மெத்தவியல் பாவகத்தின் மேவலால்—ஒத்த
பரமாத் துவிதசிவப் பண்பிலே யூறிப்
பரமாப் படிந்தேன் பதத்து.

(கொச்சகக் கலிப்பா)

810. * மூன்றுமொன் றாக முயங்குபர மோனவொளி
யான்றவருட் கண்ணேக் கருளி யகம்புக்கான்
மான்ற மயக்க மனஞ்சிற் பரவெளியா
வூன்றலா லுள்ளத் துயிர்பரமா வுய்ந்ததே.

*மூன்று - திரிபுடி; திரிபதார்த்தமுமாம்.

### ௩௬. சிற்பர வாழ்வு

(குறள்)

811. எம்பிரான் முளிதயத் தெய்தலா லெய்தியது
சம்பிரம வாழ்வு சதிர்த்து.

812. கற்பனையாஞ் சித்தக் கலக்கமற வாண்டவன்சச்
சிற்பரமாச் சேர்ந்தா னகத்து.

(வெண்பா)

813. உலப்பிலா வொன்றுய்மற் றென்றேடுஞ் சற்றுங்
கலப்பிலா னென்னுட் கலந்தான்—மலைப்பிலா
தெல்லாவற் றேடு மியைந்தே யசங்கமாய்
வல்லாங் கியல்வதென்மெய் வாழ்வு.

814. பொன்றலற்ற போதவருட் போகமிகப் பொங்கவுளத்
தொன்றலுற்று நானு வொளிர்சொருபன்—ஒன்றலால்
என்று மிரண்டற் றியலும் பரமார்த்தம்
மன்றவொளிர் வாழ்வுபெற் றேன்.

815. வறியனு மென்மனத்தில் வள்ளியனு மோனி
யறிவொளியாச் சேர்ந்த வதனுல்—அறிவுதெளிந்
தற்குருக் கற்ற வருட்பரிசாம் பூரணத்தில்
வற்று வளம்படைத் தேன்.

816. ஈச னருளா லிதயத்தே தன்மயமெய்ந்
நேசவுணர் வூற்றெடுத்து நிற்றலால்—பாசவுணர்
வாங்கே யழிந்திடமெய் யன்புமய மானசிவ
மோங்கியது வாழ்வா வுளத்து.

(கொச்சகக் கலிப்பா)

817. கள்ளவகங் காரமனக் கட்டறக்காண் கூர்விழியா
லுள்ளமே புக்கங் கொளிவெளியாத் தங்கியே
தெள்ளியபே ரின்பவருட் சிற்பரவாழ் வார்வித்தான்
எள்ள வொழுத விறைமைசால் சற்குருவே.

818. குருக்களா மோனக் குறிதுலங்கக் காட்டி
யருக்கனு வாண்ட வருட்சிற் பிரானுர்
இருக்கையா வுள்ளத் தினிதமர்வால் யானென்
செருக்கெழா தொட்பநுட்பச் சிற்பரம்பொங் கிற்றே.

819. வெளியாக வுண்மை விளங்கவென் னுள்ளத்
தொளியாக வாண்டா னுறைவால், அகந்தைக்
களியான மோகக் கலக்கமறத் தெற்றத்
தெளிவா வியன்றது சிற்பூ ரணமே.

820. கள்ளமகற் றுருள்ளியான் கண்ணேக்கா லூடுருவி
யுள்ளமரப் புக்காங் குளந்தெளிந்த வொட்பத்தால்
வெள்ளமயற் பாச விடாய்தணிய வித்தகமெய்த்
தெள்ளமுதச் சிற்பரமாச் சேர்ந்ததென் ஜீவியமே.

821. கற்பனைதீ ருண்மைக் கடவுளின்சற் போதவருட்
பொற்பதமென் னுள்ளத்திற் பொங்க விளங்கலாற்
சற்பனைசேர் மற்றனைத்துந் தாங்கரக்கக் கைவல்யச்
சிற்பரமே தற்பரமாச் சேர வுறைத்ததே.

822. வஞ்சியா நின்ற மயக்கச் சுழலினின்று
விஞ்சையா லென்னை வெளியாக்கி யாண்டவனென்
னெஞ்சிலே மோன நிறைவாகத் தங்கலாற்
செஞ்சவே சுத்தசிவச் சிற்பரவாழ் வுற்றதே.

823. பம்புலக மாயப் படக்காட்சி மோகமற
எம்பிரா னாக விதயத் தெழுந்தருளித்
தம்பிரான் சுத்த சதாசிவமாத் தங்கலால்
வம்பனே னுய்ந்தேன் வரம்பிலா வாழ்வுபெற்றே.

824. குருமணியைக் கண்டேன் குவலயத்தில் யான்மற்
றுருமணியைக் காமித் துழன்று வருந்தேன்
குருமணியென் னுள்ளத்திற் கோமளமாக் கூடிப்
பெருமிதவாழ் வோங்கப் பெருநலஞ்செய் தானே.

825. கன்றியபா ழாணவப்பேய்க் கள்ளமனத் துள்ளலறத்
துன்று துரீய சொரூபசற் போதகுரு
மன்ற வகத்தறிவா வாழ்தலாற் பாசவிருள்
பொன்றியது சுத்தவருட் பூரணவாழ் வோங்கவே.

## ௬௭. பரவெளி

(குறள்)

826. ஆற்றவகல் வானு வகன்றதகம் பாரவிறை
வீற்றிருக்க லாலே விரிந்து.

827. உளங்கலந்து நின்ற உடையா னருளால்
விளங்கியதென் சுத்த வெளி.

குறிப்பு:—என் சுத்தவெளி - என் இயல்வடிவான இதய வெளி; அதி நுட்ப வொட்பமான அருட் சிற்பர வெளி.

828. பரவெளியா நின்றவருட் பார்ப்பான் சொரூப
வுரவொளியே யாயிற் றுலகு.

(வெண்பா)

829. நயப்புறவா லென்னுளத்து நண்ணரியே ஞான
வியற்பரமாத் தேற்றினு னென்னை—மயற்படுபொய்
யூனவுயி ராக வுழன்றநான் ஞானவருள்
வானகமா நின்றேன் மலர்ந்து.

830. அருள்வெளியாத் துன்று மனுபூதி ஞானப்
பொருள்வளமென் புந்தியிலே பொங்கத்—தெருள் [விழியாற்
கூர்த்தவருட் கோமான் குருரமணன் சிற்குறிப்பே
யோர்த்தொழுகத் தக்க துயிர்க்கு.

831. தற்பெருமை காணுத் தனித்தற் பரசொருபச்
சிற்பதமென் னுள்ளே செழித்தலாற்—கற்பிதமா
மூடவகங் கார முனைப்பற் றருள்வெளியாக்
கூடலுற்ற தென்றன் குறிப்பு.

832. போதகுரு பாதம் பொருந்தலாற் புத்தியிலே
மேதகுமெய்ஞ் ஞானவொளி மேவினேன்—சூதகல்சுத்
தான்ம சொரூப மகங்கிளர வான்றவருள்
வான்மயமா வைகிற்று வாழ்வு.

(கொச்சகக் கலிப்பா)

833. துறக்க வொணாத சொரூபமா வுள்ளத்
துறைக்கலுற்ற வாண்டா னொளியால் அகப்பே
யறக்கழன்று சுத்த வருள்வெளியா வுள்ளேன்
மறுக்கவொணா தந்த மனோதீத மாண்பே.

834. மோனப் பரசொருப முத்தித் துலக்கத்தால்
ஈனப் பசுத்துவத்தை யெற்றியென் னுள்ளமர்ந்தான்
ஊனக் களிசே ருயிர்ச்செருக்காம் பாசமற
ஞானப் பரவெளியா நண்ணிற் றனுபவமே.

835. ஞான குருபாத நாட்டமென் னுள்ளத்து
மோன வருள்வாழ்வா மூண்டொளிர வாணவப்பா
மூனமற்ற சுத்த வொளிவெளியாப் பொங்கியது
தீனச் செருக்காலே சேட்டித்த சித்தமே.

836. தொக்கவருட் பூரணமாத் துன்றுங் குருரமணன்
சிக்கெனவென் னுள்ளஞ் சிறக்க வுறைதலாற்
பொக்க மயக்கமனப் புன்கலக்கந் தீர்ந்தொழிய
மிக்க வொளிவெளியென் மெய்யாத் துலங்கியதே.

837. சுரந்தவுப சாந்தத் துரீய சொரூபன்
பொருந்தலா லுள்ளம் *புரணவுணர் வாகப்
பரந்தியல்கின் றேன்சிற் பரவெளியா முற்றக்
கரந்தொழிய நானென்னுஞ் சிச்சடப்பொய்க் கட்டே.
*புரணம் - ஸ்புரணம், விளக்கம்.

## ௩அ. திருவடிமாட்சியில் திளைத்தல்

(கொச்சகக் கலிப்பா)

838. அருட்பார்வை யாலென்னை யாண்டுகொண்ட பெம்
இருப்பா விதயத் தினிதமர்ந்த வாற்றுற் [மான்
புரிப்பா வுளங்கிளர்சற் போத சொரூபத்
திருப்பாத மாட்சி திளைக்கலுற் றேனே.

## கக. பேரின்பம்

(வெண்பா)

839. சொரூபமாம் போதத் துரியப் பெருமான்
வரோதயனு வுற்றுன் மனத்தே—திரோதமாம்
பொல்லா வவிச்சையறப் பொங்கிற் றுபசாந்தத்
தொல்லியல்பா மோனச் சுடர்.

840. தயாமயமாப் பொங்கு சதானந்த மூர்த்தி
நியாமகனு நின்றுனென் னெஞ்சில்—அயாவருசற்
போதமய சாந்தி புலங்கொண்ட வாற்றுலே
சாதனையற் ருேய்ந்தது தான்.

841. வெளியா வுளத்தில் விளங்கலால் வாழ்வுக்
கொளியாக வுள்ள வுடையான்—இளிவரல்சே
ரூனவகங் கார வுணர்ச்சியாம் பந்தமகன்
றியானமைதி யுற்றே னினிது.

குறிப்பு:—உடையான் விளங்கலால் எனக் கூட்டுக.

(கொச்சகக் கலிப்பா)

842. அருள்வசிய நோக்கங்கூ ரம்மான் அகப்பா
ழிருள்விலக வுள்ளத் தெழுந்தருள்வா சத்தால்
மருள்வளர்விட் சேபமற மன்னு சொரூபப்
பொருள்வளர்சாந் தானுபவம் பொங்கியது நன்கே.

843. ஆளவந்த தெய்வமென் ஞன்ம சொரூபமா
நீள வகத்து நிரந்தரமா நிற்றலால்
வாளரவாச் சீறுகொடு வல்வினைவே கங்கெடுத்து
மூளலுற்ற சாந்திசிவ மோனனு பூதியே.

844. ஆனந்த மோன வருட்பிரான் தன்னடியே
னீனந் தவிர விதயத் தொளிர்தலால்,
ஊனங்க மென்றபா மூத்தையகப் பேய்மனங்கெட்
டானந்த மேவடிவா வற்றெழிந்தேன் றன்னடிக்கே.

845. துன்பமா மோகமனச் சுட்டறக்கண் ஞேக்கினன்
றன்பதமென் னூடு சதோதயமாப் பொங்கலால்
அன்புசிவ மான அருட்பெருவாழ் வாகவிளங்
கின்பவுணர் வூற்று வியைந்த திதயமே.

846. சற்பத்தி யான சதாசார மோனவுணர்
வற்பத் தியேனுக் களித்த வருட்பிரான்
முற்படவென் னுள்ளத்து முற்றமுழுச் சிற்பரமா
நிற்பதா லின்பநிலை நீக்கமறப் பற்றியதே.

847. தெள்ளத் தெளிந்தசிவச் செம்பிரான் றன்னடியேன்
கள்ளப் புலன்கள் கழன்றொழிய நானுனென்
றுள்ளத் துணர்வுருவா வுற்றொளிரப் பெற்றதால்
வெள்ளக் கடலா விளைந்ததுபே ரின்பமே.

848. எள்ளவே தக்க விழிசினேற் காண்டவன்முற்
கள்ளமன மாயை கழன்றொழியச் சிற்பரமா
வுள்ளத் தொளிர்ந்த வுடையான் சொரூபத்தாற்
றெள்ளியபே ரின்பவருட் செல்வஞ் செழித்ததே.

849. துள்ளு மகப்பேய்த் துடுக்கடக்கி யாண்டவருள்
வள்ளலென் னுள்ளத்தில் வாலறிவா வாழ்தலால்,
உள்ள வொணுத வுதாரவருட் பேரின்ப
வெள்ளவெளி யாக விளைந்ததென் னுள்ளமே.

850. நள்ளுறுமெய் யன்பே நலஞ்சே ருபாசனையா
உள்ளுவகை கூர்ந்தா னுளத்தொளியா வுள்ளபிரான்
உள்ளலறு மோன வொளிசே ருபசாந்தத்
தெள்ளமுத வாழ்வாத் திருவருட்சீர் பொங்கியதே.

851. இகவாது சுத்த வியற்செம் பிரானென்
னகவா ரிஜமே யரசிருக்கை யாக
உகவா லுறைவால் உபசாந்த மோன
மகிழ்வாழ் வடைந்ததுவா லாயமாத் தானே.

852. சுட்டறிவாத் துன்றுமனச் சூரு வளியிலகப்
பட்டுழன்றேன் சாந்திப் பதங்கண்டேன் சிச்சடப்
[பொய்க்
கட்டறவே வாள்விழியாற் கண்டமெய்ஞ் ஞானகுரு
நிட்டையுரு வாவகத்து நின்றொளிரு மாற்றலே.

853. நிறைவான வுண்மை நிலைதுலக்கி யாண்ட
விறையோ னிதயத் திதயமா வுள்ளான்;
வெறிசே ரகங்கார வேகமற வுள்ளத்
தறிவான சாந்தி யளையலுற் றேனே.

## ௬0. மோனம்

(குறள்)

854. குருத்துவமோ னனுபவங் கூடவென் னுள்ளத்
திருத்தலுற்ற தாண்டா னியல்.

855. உயங்கலற்ற வாழ்வா வுடையானென் னுள்ளம்
முயங்கலுற்ருன் மோனமுற் றேன்.

(வெண்பா)

856. அறிவிலாப் பேதை யகங்கோயி லாகப்
பிறிவிலா தீண்டினன் பெம்மான்—உறையுளாப்
பெற்றதாற் பேதையகம் பேதமனக் கற்பனைதீர்ந்
துற்றதுகாண் மோன வொளி.

857. பிதற்றுவதெல் லாந்தன் பெரும்புகழே யாகப்
பதற்றமறு மோனம் படைத்தேன்—முதற்றலைமை
சான்றகுரு மூர்த்தி சதாசிவமா மெய்ப்பதத்து
டீன்றவுணர் வுற்று னுளத்து.

858. வள்ளியோ னன வரோதயனென் னுள்ளம்புக்
கொள்ளியே னக வொளிர்வித்தான்—தெள்ளியே
னகநா னண்டா னருட்பதமாஞ் சிற்பரத்தே
மூகனாய் மோனமுற் றேன்.

859. யானென்ற வென்னை யெடுத்து விழுங்கிவெறு
வானவனு வென்னகத்து மன்னினன்—ஊனென்றி
யானென் றவனென் றிரண்டுபட்ட கற்பனைதீர்
மோனம் படர்ந்தது மூண்டு.

(கொச்சகக் கலிப்பா)

860. பொய்த்தத் துவங்களின் பொக்கமறத் தன்னடியேன்
சித்தத்தே சுத்தசச் சித்தாச் சிவனொளிர்வால்
மைத்த வகப்பாழ் மனங்கெட் டருள்வெளியே
முத்தியாத் துன்றுசுப மோனவுணர் வுற்றதே.

861. சுத்தப் பரசிவமாத் துன்றுங் குருரமணன்
மத்தக் களியனு மாழ்கலுற்ற வென்னகத்தில்
வித்தகசற் போதவொளி வீசலாற் கைவல்ய
முத்தித் துலக்கமா மோனவுணர் வுற்றதே.

862. மற்றுவமை யில்லா மகேசன் சதோதயமா
நிற்றலா லுள்ளத்து நிஷ்டானு பூதிபெற்றேன்;
எற்றென் றிரங்கவினி யாதோர் பிழையுமற
முற்றமுழுப் பெற்றிசேர் மோனங் கிளர்ந்ததே.

863. ஊன வவிச்சையற வூத்தையே னுள்ளத்து
ஞான சொரூபகுரு நாத னுறைதலால்
ஈனமில்பே ரின்ப வியற்சிற் பரவெளியா
மோனவருள் வாழ்வு முகந்துகொண்டேன் முட்ட
[றவே.

## ௬௧. உலகு பரமாதல்

(வெண்பா)

864. பொக்கமற வென்னுள்ளம் புக்கு நிரம்பினன்
தொக்க சொரூப சுயஞ்சோதி—சிற்கனமாப்
பொங்குமொளிப் பார்வைப் பொலிவிலே தன்மயமாத்
தங்கிற் றுலகனைத்துந் தான்.

(கொச்சகக் கலிப்பா)

865. பம்பர மாகப் பரந்துசுழல் சிந்தையற
நம்பி யடைந்தமட நாயினேன் பாலருளி
எம்பெரு மானென் னிதயத் தொளிர்தலாற்
செம்பர மாகத் திகழ்ந்த துலகமே.

## ௬௨. சிவத்துவமுறல்

(வெண்பா)

866. குருபாத மென்னுணர்விற் கூடியதா லுண்மைத்
திருவார் சிவானுபவஞ் சேரக்—கருவா
ருலகவாழ் வாக வுருத்த மயக்கங்
கலகலத்துப் போனது காண்.

(கொச்சகக் கலிப்பா)

867. *அந்தணர்மெய்ஞ் ஞானத்துக் காதரிச மானவிறை
சொந்த சொரூபமாத் தோய்ந்தவாற் றுலகத்து
நிந்தைதீ ருண்மை நிலையிற் பதிந்துமனம்
சிந்தைதீர் சுத்த சிவத்துவவாழ் வுற்றதே.

*அந்தணர் - வேதத்தின் அந்தத்தை உணர்வோர்.

868. கார்சான்ற மோகக் கடும்பாழ் குலைந்தொழியக்
கூர்சான்ற நோக்கவருட் கோமா னுறைதலால்
ஊர்சான்ற மோன வொளிவெளியா வோங்குசிவச்
சீர்சா லிதயச் சிறப்பு விளங்கியதே.

குறிப்பு:—ஊர் - ஊர்தல், பரவுதல்.

869. கற்பனைதீ ருண்மைக் கடவுளாஞ் செம்பிரான்
பொற்பவென் னுள்ளுணர்விற் புக்கான் சொரூபமா
நிற்பதால் யானவனு நெஞ்சத் தியல்பாகச்
சிற்பரவாழ் வான சிவத்துவஞ்சேர் வுற்றதே.

870. களிசேர் மயக்கமறக் கண்ணோக்கா லுட்புக்
கொளிசேர் வெளியா வுடையா னொளிர்வால்
அளையாநின் றேனகப்பா ழாணவந்தீ ருண்மைத்
தெளிவான சுத்த சிவக்கே வலமே.

871. கள்ளக் கலக்கமனக் கற்பனையற் றேய்ந்தொழிய
வுள்ளத்தே யாண்டா னொளிவெளியாப் பொங்கலாற்
றெள்ளத் தெளிந்த சிவானுபவ மோனவருள்
வெள்ளக் கடலா விளைந்ததுகா ணுள்ளமே.

872. ஆசை மயக்கத் தழுங்கலுற்றே னுக்கிரங்கிப்
பாச வகந்தைப் பசாசமற நாதனென்
றீச னியல்வால் இதயத் திதயமாத்
தேசியல்வாழ் வான சிவானுபவம் பொங்கியதே.

873. மிக்கபெருங் கோயில் விளங்கவென் னுள்ளத்திற்
சிக்கெனநான் கண்டேன் சிவனங் குறைகின்றான்;
சொக்கலுற்றே னுள்ளுணர்விற் சுட்டறிவாம் பேதமறத்
தொக்க சிவானுபவஞ் சூழப் பரந்ததே.

874. அளக்க வொண்ணுதா னடியே னகந்தைக்
களக்கமற வுள்ளக் கருத்திற் கலந்தாங்
குளக்கமலக் கட்டற் றொளிவெளியாப் பொங்கத்
திளைக்கலுற்றேன் சுத்த சிவோகவியல் வாழ்வே.

## சசு. கைவல்யம்

(கொச்சகக் கலிப்பா)

875. சால விளங்கு சதோதயமெய்த் தத்துவமா
வேலவென் னுள்ளத் திருந்தொளிர்பே ரின்பவருட்
கோலமே நோக்குங் குறியாலே கைவல்ய
மூலபண் டாரமென்முன் முற்றக் கிளர்ந்ததே.

876. தெளிந்தா ருணர்விலன்றித் தேறவொண்ணு உள்ளத்
தளைந்ததா லுண்மை யறிவு படைத்தேன்
தளைந்தவெம் பாசத் தடையா மகந்தை
களைந்துநான் கைவல்ய வாழ்வுகண் டேனே.

877. கதிர்சேர் சொரூபக் கழலென் கருத்திற்
சதிர்சேர வைத்த சதாசா ரியன்சீர்
மதியேற வைத்தேன் மடுத்தேன் பரம
கதியா விளங்குசிவக் கைவல் லியமே.

## சச. அத்துவிதம்

(குறள்)

878. மஞ்சமா நெஞ்சமே வந்தணைந்தான் பாலறிந்தேன்
விஞ்சைசே ரத்து விதம்.

(வெண்பா)

879. வாழ்வே வருகமற்றுத் தாழ்வே வருகவினி
யாழ்வே னவேனு னதன்கண்ணே—வாழ்வுதாழ்
வானமயற் றொந்த மறக்கடிந்து வாழ்தலால்
ஊனமற வாண்டா னுளத்து.

880. ஞானகுரு வாநடந்த நல்லசிவ மிப்பொழுது
ஞானவிளக் காவகத்து நண்ணிடவே—ஞான
விளக்கொளியால் வேற்றுமைபோய் நானதுவே யாகக்
களக்கமறக் கண்டுகொண் டேன்.

## சரு. ஜீவன்முத்தி

(வெண்பா)

881. மறவா நினைவா மனத்திற் புகுந்தான்
அறிவே யுருவான வாண்டான்—சிறவாப்
பிறப்பிறப்பாத் துன்றும் பிரமாத மற்றுச்
சிறப்பதுஜீ வன்முத்திச் சீர்.

(கொச்சகக் கலிப்பா)

882. ஊன வியல்பா வுருத்தெழுந்த நானெனும்பா
ழான மயக்கமற வாண்டான் சொரூபமெய்ஞ்
ஞான விளக்கமா நண்ணவா லென்னகத்து
மோனவுணர் வானபர முத்திசித் தித்ததே.

குறிப்பு:—ஆண்டான் - ஆண்டவன் என வினையாலணை
யும் பெயர்; மயக்கமற நண்ணலால் எனக்
கூட்டுக.

## சசு. இதயம் மலர்தல்

(கொச்சகக் கலிப்பா)

883. அகிலங் களு(ம்)மெய்* யகட்டி லடங்கத்
திகழும் பரசிவ தெய்வப் பெருமான்
அகலமென் னெஞ்சு ளடங்கப் பெறலால்
விகலமற் றுள்ளம் விபுவா மலர்ந்ததே.

*மெய் - சொரூபம்.

## சஎ. பரந்தாம வீடு

(கொச்சகக் கலிப்பா)

884. செம்பிரா ஞனசிவச் சிற்பிரான் அன்புகூர்ந்
தெம்பிரா ஞக விதயத் தியைதலால்
உம்பருக் கும்பரா வோங்குபரந் தாமவீ
டிம்பருக் கிம்பரா வெய்திற் றனுபவமே.

சஅ. பூமா

(கொச்சகக் கலிப்பா)

885. பக்குவமில் லேனைப் பரிந்துவந் தாண்டவருட்
சிற்குணன் சுத்த சிவக்கே வலசொருபன்
மிக்கொளிர்மெய்ஞ் ஞான விபூதியால் வேதகமாப்
புக்காங்கென் னுள்ளமே பூமாவாய்ப் பொங்கியதே.

## 9. கலைகள் நிஷ்ப்பிரயோஜனம்

(வெண்பா)

886. கற்கவினி மற்றென்றுங் காணே னருள்வெளியா
நிற்குமனு பூதி நிறைவாலே—கற்கின்ற
நானென்னு மம்முதலே நாணித் தலைகரப்ப
மோனமுற்ற தான முனைப்பு.

887. ஜீவியமா மோன சிவானுபவம் போதவருட்
காவியமா வுள்ளங் கலத்தலால்—ஆய்வறமற்
றேர்சாத் திரமுமதிக் கொவ்வா தொளிர்சொருபத்
தேசாத் திகழ்வதென் சீர்.

(கொச்சகக் கலிப்பா)

888. ஒன்றான வுண்மைமையுள் ளோர்த்துணர லுற்றேற்
றோன்றான சுத்தத் துரீய விலாசமா [குத்
மன்ற வொளிர்சொருப வாலறிவாற் கற்கவெனக்
கின்று வொழிந்தனமற் றெல்லாக் கலைகளுமே.

## 10. அருட்கல்வி

(குறள்)

889. பற்றியதல் லாதிறையைப் பற்றுக்கோ டாகநான்
கற்றிலேன் மற்றோர் கலை.

(கொச்சகக் கலிப்பா)

890. குருப்பத மோனக் குலாவால் அடியேன்
விருப்புக் குரிய விசுத்த சொரூப
வருட்புத் தகங்கற் றறியலுற் றேனுக்
கிருப்பது தானு வியல்சிற் பரமே.

## 11. ஓதா துணர்தல்

(கொச்சகக் கலிப்பா)

891. பிரமாத மானவகப் பேயகல ஞான
குருபாத மென்னுட் குலவலால் யான்சாத்
திரவேத மொன்றுந் தெரியாதே போதத்
தொருபேத மற்ற வுபநிடமோர்ந் தேனே.

## 12. கண்டடைந்த கடவுள் வழி

(வெண்பா)

892. சுடர்வெளியாத் துன்று சொரூப குருவா
கடவுள் வழியகத்திற் கண்டேன்—கடவுளோ
டந்தவழி முற்று மபேதமாய் மோனவருள்
விந்தைவிழி யான வெளி.

(கொச்சகக் கலிப்பா)

893. கற்பனையை முற்றக் களைதலின்றிக் கல்வியாற்
கற்பனையை மேன்மேற் கணக்கிட்டுக் கொண்டிருந்
[தேன்
அற்பனைநன் காண்டா னருள்விளக்கத் தாலகத்திற்
கற்பனையற் றேயக் கடவுளியல் கண்டதே.

## 13. அருளல்

### க. அருள்

(குறள்)

894. அருளே சொரூபமா வாண்டா னருளால்
அருளா விளங்கிற் றகம்.

(வெண்பா)

895. ஈண்டாக மற்றினி யாண்டாக யாண்டுமெனக்
காண்டா னருளடைந்த வாற்றலே—ஈண்டாநின்
றெல்லா நலனு மிதயத்திற் பொங்கலுற்றேன்
பொல்லாமை யில்லை புலத்து.

## உ. அகந்தையழிவு

(குறள்)

896. ஆண்டான் சொரூப வருள்விளக்கத் தாலகத்து
மாண்டதுநா னென்னும் மயல்.

(வெண்பா)

897. ஈண்டு மயக்க விருட்பா ழகத்திலுயிர்
மாண்டுபோய்ச் சிந்தையற மாழ்கினேன்—ஆண்டா
னருள்வெற்றி யாலே யடியே னகத்து
மருள்வற்றி மாய்ந்தது மன்.

898. அறிவான சுத்த வருள்விலா சத்திற்
பிறிவற் றிருக்கப் பெறலால்—குறிகுணஞ்சேர்
மோகவகங் கார முனைப்பான சஞ்சலப்பாழ்ம்
பேய்கழிந்த தென்னிற் பிரிந்து.

(கொச்சகக் கலிப்பா)

899. அத்தனடிக் காளா வடைந்தேற் கவனருளாற்
சுத்தப் பரசிவமே சொந்த சொரூபமா
வித்தகசற் போதம் விளைதலுமென் னுள்ளத்து
மொய்த்தவகப் பாழ்ம்பேய் முனைப்பற் றொழிந்ததே.

900. அத்த னருளா லடியேற்குக் கற்பனைதீர்
சுத்த வறிவே சொரூபானு பூதியா
வித்தகமெய் வாழ்வு விளைதலா லுள்ளத்திற்
பொய்த்த தகந்தைப் புணர்ப்பான பூசலே.

901. வேற்று விகார விடக்குடம்பே யென்னுருப்போற்
போற்றலுற்ற மாயமனப் புன்பிறப்பை மாற்றினேன்
ஆற்றப் பெரிய வருட்பிரான் சிற்பதத்திற்
றேற்றலுற்ற வுண்மைத் தெளிவா மொளியாலே.

902. அந்தணு ளன்கூ ரருள்விளக்கத் தாலகத்திற்
சந்தியா நின்ற சதாசிவமெய்த் தற்பதமென்
சொந்தவடி வாகத் துலங்கலால் யானென்னும்
பந்தமா மோகமனப் பாசங் கழன்றதே.

903. என்றுமொன் றுன வியற்சிற் பிரான்சொருப
வென்றிசேர் சுத்தவருள் விஞ்சையால் ஆணவப்பாழ்
பொன்ற வருள்வெளியாப் பொங்கியவென் னுண்மை
[யிவ் யா
னென்றமனக் கற்பனை நா னென்ன ளவுங் காணேனே.

904. தீண்டா வியற்கைசேர் சிற்பரயோ கத்திறத்தாற்
றூண்டா நின் றென்னைத் துரீயவியற் செம்பதத்துக்
காண்டான் சொரூப வருள்விலா சத்திலெனக்
கீண்டா தொழிந்தது நா னென்னுமகப் பாழ்மு
[னைப்பே.

குறிப்பு:— தீண்டா . யோகம் - அஸ்பர்சயோகம் என்னும் ஞானயோகம்.

## ௨. மாயாவிலாசம் பொய்த்தது
(கொச்சகக் கலிப்பா)

905. புத்தியிற்புக் காண்டகுரு புங்கவன்சற் போதவருள்
வித்தையா வென்னுள் விளங்கலால், நித்தசுத்த
புத்தமுத்த மாகவகம் பொங்கு சொரூபமன்றி
மற்றனைத்தும் மாயா விலாசமாப் பொய்த்தவே.

906. பிறவி மயக்கமறப் பேர்ந்தொழிய வுள்ளத்
தறிவுருவா வாண்டவென் னம்மா னருளால்
இறவியகன் றேனுக் கெதிர்படுப வான
மறுமையிம்மை யெல்லாம்பொய்ம் மாயக் கனவே

## ௩. உலகமய லற்றது
(கொச்சகக் கலிப்பா)

907. காழ்வளர்மெய்ஞ் ஞானவருட் கண்ணன் கருணையாற்
றாழ்வற்ற வுண்மைத் தவவாழ் வகங்கிளரப்
பாழ்வளர்மா மோகமனப் பைத்தியத்தாற் சேருலக
வாழ்வுதாழ் வான வறுங்கலக்கம் போயதே.

## ௪. கற்பனு பேதங் கழன்றது
(கொச்சகக் கலிப்பா)

908. கள்ள வகத்தைக் கவர்ந்துதனக் கூனுகத்
தெள்ளத் தெளிந்த சிவானுபவஞ் சேர்வித்தான்
உள்ளவிரண் டற்ற வொருத்த னருளொளியாற்
கள்ளமனக் கற்பனு பேதங் கழன்றதே.

### ௬. பசுத்துவமறல்

(கொச்சகக் கலிப்பா)

909. விசுத்தவெளி யாக விளங்கு சிவத்திற்
பசுத்துவமா மோகவகப் பாழறக்கெட் டுய்ந்தேன்;
புசித்துமண் ஞான புலங்களிலே யூழ்த்த
வசுத்தனே ஞண்டா னருட்டிறத் தாலே.

### ௭. சிந்தாகுல மறல்

(குறள்)

910. திருவருள்வா ளாலகத்திற் செற்றேன் அகந்தைத்
தெருமரல்சேர் சிந்தா குலம்.

### ௮. துன்பமறல்

(வெண்பா)

911. உடலிற் பிரிந்த வுணர்ச்சியா மின்பக்
கடலாக் கருத்துட் கலந்தான்—மடமைசேர்
துன்பக் கலக்கந் தொலைந்தேன் சொரூபமெய்
யன்பனருட் சீரா லகத்து.

### ௯. விக்ஷேபமறல்

(கொச்சகக் கலிப்பா)

912. தூண்டலரு சுத்தத் துரீய சொரூபமா
வாண்டகுரு நாத னருள்விளக்கத் தாலகத்திற்
காண்டலரு கைவல்யக் காட்சி மடுத்தலான்
மாண்டதுபா ழான மயக்க விகற்பமே.

### ௧௦. ஆணவமறல்

(கொச்சகக் கலிப்பா)

913. கோசாபி மானங் குலைந்தொழியக் கண்டஞா
ஞசா னருளா லறிவுதெளிந் தான்றசிவ
நேசானு பூதி நிரம்பலால் என்னகத்திற்
பாசா ணவமயக்கப் பாழ்கெட் டுடைந்ததே.

### கக. செருக்கறல்

(கொச்சகக் கலிப்பா)

914. பவத்திலே யாழப் படிந்த வகப்பா
ழவித்தை யிருள்கெட வாண்டா னருளாற்
சிவத்திலென் னுண்மை தெளிந்தேன் செருக்கற்
கெவற்றிலுஞ் சற்று மிடமெனக் கின்றே.

### கஉ. சுட்டறிவறல்

(கொச்சகக் கலிப்பா)

915. தொடக்குறுவெம் பாசமனச் சுட்டறிவின் சூதைக்
கடக்கலுற்றேன் யானென்னுங் கற்பனையற் றேய்வால்
இடுக்குமிடுக் கற்ற வியல்வெளியா வுள்ளத்
தடுக்கலுற்ற வாண்டா னருள்விலா சத்தே.

### கங. மயக்கமறல்

(கொச்சகக் கலிப்பா)

916. ஐயப்பன் ஞான வருளப்பன் மன்னுயிர்க்கு
மெய்யப்ப னாக விளங்கு ரமணப்பன்
செய்யப் படைத்த திருவருளாற் சிச்சடவெம்
பொய்யப் பியமயக்கப் பொல்லாங் ககன்றதே.

### கச பாசமறல்

(குறள்)

917. பசாசமன மாயமறப் பார்ப்பா னருளால்
உசாவுதிறம் பற்றிற் றுணர்வு.

918. அழன்றமுத் தாபமற வாண்டா னருளால்
கழன்றதுவெம் பாசக் கலி.

919. உடையா னருளா லொழிந்ததுவெம் பாசப்
படையால் விளைந்த படர்.

920. மற்றொரு பற்றும் மனத்தி லெழாமலெனைப்
பற்றிற் றிறைவனருட் பற்று.

(வெண்பா)

921. ஒளியா விளங்கு முடையா னருட்சீர்
விளைவா லுளங்கட்டு விட்டே—வெளியாய்ப்
பலமுப் புடியும் படர்நிழல்க ளாக
இலகுவதற் காயிற் றிடம்.

குறிப்பு:-வெளி—சிற்பரவெளி, சிதாகாசம்; இடம்-ஈண்டு அசைபடக் காட்சியில் ஆதாரத் திரைச்சீலை போன்ற அறிவுருவான அதிஷ்டானம்.

## கசு. மோகமறல்

(குறள்)

922. அவிர்ந்த சொரூப வருள்விலா சத்தாற்
றவிர்ந்ததுபாழ் மோகத் தமம்.

## கசு. வேட்கையறல்

(கொச்சகக் கலிப்பா)

923. கள்ளங் கலந்தமனக் கற்பனை பேதமறத்
தெள்ளத் தெளிந்த சிவக்கே வலமாக
உள்ளங் கலந்த வுடையான் சொரூபவருள்
வெள்ளந் திளைத்தலால் வேட்கையறக் கெட்டதே.

## கள. இதயம் மலர்தல்

(கொச்சகக் கலிப்பா)

924. மருளுற் றுலக மயக்கக் கனவில்
வெருளுற்ற பேத விகற்ப மனக்கா
ரிருள்வற்றக் கண்ட விறைவன் சொரூப
வருள்வெற்றி யாலே யகந்துலங்குற் றேனே.

## கஅ. சற்கதி

(குறள்)

925. ஆணவப்பே யாக வலைந்தேன், அருட்டிறத்தாற்
காணலுற் றேன்சற் கதி.

## கக. அருள் வெற்றி

(குறள்)

926. அஞ்சலென்ற வாண்டா னருள்வலியால் உள்ளத்தில்
விஞ்சியது வெற்றி விறல்.

### உ0. விழிப்பு

(வெண்பா)

927. அனுபவ மோன வருள்விளக்கத் தாலே
தனுகரண மோகந் தணந்தேன்—நனவிற்
சுழுத்தியாம் போதத் துரியமியல் பாக
விழித்தேன் சிவத்தில் விசைத்து.

### உக. அகந்துலங்கல்

(குறள்)

928. அகந்துலங்குற் றேன்கா ணருள்விலா சத்தா
லிகந்தொழியப் பொய்மா லிருள்.

### உஉ. உணர்வுரு

(குறள்)

929. உள்ளத் துணர்வுருவா வுள்ளேன் குருவருளாந்
கள்ளமன மாயை கழன்று.

### உங. பூரண உண்மை

(கொச்சகக் கலிப்பா)

930. பன்மைதீ ரோர்மெய்ப் பரமனருள் பாலித்த
நன்மையா தென்று நவின்றிடின்மெய்ஞ் ஞானத்
[தாற்
றன்னையலா தன்னியமோர் சற்றுமிலா முற்றமுழுத்
தன்மையா முண்மையே தானெனக்கு நல்கியதே.

### உச. மெய்யுணர்வு

(குறள்)

931. பெருமா னருளாற் பிறங்கியதென் னுள்ளத்
தொருமாசு மற்ற வுணர்வு.

932. ஆண்டவன்சற் போத வருள்விளக்கத் தாலிதயத்
தீண்டியதென் னுண்மை யியல்.

933. ஆண்டா னருளா லகங்கிளரப் பெற்றேனுக்
கீண்டியதென் னுண்மை யியல்.

934. மாட்சிசே ருண்மை மடுத்தேன் சொரூபவரு
ளாட்சியால் யானற் றகத்து.

(வெண்பா)

935. ஆடித் திளைக்க வருட்கடலா வென்னகத்திற்
கூடியவென் னுண்டான் குணக்கடல்வாய்—ஆடித்
திளைத்தலாற் சித்தமலந் தீரத் தெளிந்தாங்
குளத்திலுற்ற துண்மை யுணர்வு.

(கொச்சகக் கலிப்பா)

936. தேகத் துவமதியாற் செத்தேன் பழிபாவ
மோகத் தொழுத்தையொடு மோகித் துடனுடிச்
சோகித் தொழிந்தநான் சுத்தமெய்ஞ் ஞானகுரு
யோகத் திறத்தால் உணர்வுபெற் றுய்ந்தேனே.

937. பாழிலே வீழ்ந்து பசாசப் பதைக்கலுற்ற
வேழையே னுள்ளத் திறையருளாற் பொங்கியது
பீழைதீர் சுத்தப் பிரம்ம சொரூபமா
வூழிதோ றூழி யுலப்பருதன் னுண்மையே.

938. கல்லாத மோகக் களிசே ரகங்காரப்
பொல்லாமை மாற்றித்தன் பொற்கழலுக் காண்டவனை
யல்லாது சற்றும்வே றல்லாத வென்னுண்மை
நல்லாங் கனுபவமா நண்ணிற் றருளாலே.

939. விண்மையே போன்ற வியாமோகக் கற்பனையு
டண்மி யமுங்கினேற் காண்டா னருட்டிறத்தாற்
றிண்மைசேர் மெய்ப்பதமாத் தேறக் கிடைத்ததுதன்
னுண்மைநிறை வான வுணர்வொளிசே ருள்ளமே.

940. எய்த்தொழிந்த வென்னை யிதயத் தகமுகமா
வுய்த்துநா னுரென் றுசாவித்தோ னின்னருளால்
மெய்த்தன்மை யாக விளங்குவது வித்தகமா
வொத்தெங்கு முள்ளதோ ரொட்பநுட்ப வுண்மையே.

941. கலையார வாரக் கடையிலே சென்ற
மலைவான மோக மனக்கலக்க மற்றேன்;
அலையாத மோனமுற வாண்டா னருளால்
உலையாத வுண்மையுணர் வுள்ளஞ்சேர் வாலே.

942. அத்துவித மோன வருட்சிற் பரசொருப
வித்தகவாழ் வுள்ளம் விளையிலன்றிப் புத்திதேர்
புத்தகஞா னத்தாற் புலப்படா வுண்மைஎனக்
கத்தனரு ளாலிதயத் தாயிற் றனுபவமே.

943. பட்டி மனத்தின் பராக்கறமெய்ஞ் ஞானவருட்
சிட்டனென் பாலருளிச் செய்தவிஞ் சைத்திறத்தால்
சுட்டுணர்வா மைம்புலத்தின் சோகமோ கங்கெடத்
[தன்
னிட்டைசேர்ந் துண்மைநிலை நெஞ்சத் தொளிர்ந்
[ததே.

## உகு. சிற்பரம்

(குறள்)

944. செழித்து விளங்குசிவச் சிற்பரவாழ் வாகப்
பழுத்ததகத் தாண்டா னருள்.

945. அணவலா லாண்டா னருளொளியென் னுள்ளத்
துணர்வுருவே யாயிற் றுயிர்.

(வெண்பா)

946. பொருவறுசற் போதப் பொருளேநா னாகக்
குருவருளாற் பெற்ற குலாவால்—மருவியது
கற்பனை மோகக் கலக்கமறப் பொங்குசிவச்
சிற்பரவாழ் வான சிறப்பு.

(கொச்சகக் கலிப்பா)

947. அவிச்சைத் திறங்குலைய வாண்டா னருளாற்
சிவச்சிற் பரவுண்மை தேறத் தெளிந்தேன்;
சுவச்சமாத் துன்று சொரூபமே யான
வவிர்ச்சியா லார்ந்ததுமோ னனுபவ வாழ்வே.

948. அற்புதமா வைகு மனந்த சிவாம்புதியிற்
புற்புதமே போலப் புலப்படவே தோன்றுலகக்
கற்பனையை மெய்யாக் கலங்குங்காற் கைவல்யச்
சிற்பரமா மூண்மை திருவருளாற் பொங்கியதே.

949. ஊனவகப் பேயா வுருவெளித்தோற் றத்திலுழன்
றீனமுற்றே னுள்ளத் திறையருளாற் பொங்கியது;
நானதுவாத் தூன்றுமெய்ஞ் ஞானமோ னனுபவத்
தேனருவி யானசிவச் சிற்பரவாழ் வன்பெழவே.

950. மருவுசுபக் கைவல்ய மாட்சிசேர் உண்மைத்
திருவடியிற் றன்மயமாச் சேர்த்தென்னை யாண்ட
குருரமணக் கோமான் குலவு சொரூபத்
திருவருளிற் சிற்பரமாஞ் சீர்மையுற் றேனே.

## உசு. வாழ்வுப் பொலிவு

(குறள்)

951. பொன்மணிக ளெல்லாம் பொருளன்று வாண்டவன்
பொன்னருளால் வாழ்வுபொலிந் தேன். [செம்

(கொச்சகக் கலிப்பா)

952. பின்னமற்ற சுத்தப் பிரம்மப் பிரானருளாற்
றன்னந் தனித்தபர தத்துவமா வென்சொருப
வன்னந் துலங்கு வசீகரமோ னனுபவம்
மன்னும் பரமசுப வாழ்வு மடுத்ததே.

குறிப்பு:—பிரம்மப் பிரான் — பிரம்ம சொரூபமான பிரான் அருளால் வாழ்வு மடுத்தது எனக் கூட்டுக.

953. மோன வுணர்வொளியா முற்றமுழுச் செம்பொருளே
யானெனதற் றுள்ள வியல்வடிவா வென்னகத்துத்
தானவிரப் பெற்றேன் சதாசா ரியனருளால்
மானவபி மான மயக்கச் செருக்ககன்றே.

954. புத்திக் கமுதமாப் பொங்குமியற் சிற்பரத்திற்
சித்தக் கலக்கமாஞ் சிந்தா குலங்கரக்க
அத்தன் கருணையா லார்ந்தமோ னனுபவ
முத்திப் பெருக்கம் முழுமுதல்வாழ் வாவதே.

955. தன்னே ரிலாத சதாசா ரியரமணற்
கென்னேய முற்ற வியல்வித் தொழுகலால்
இன்ன வகந்தை யிறக்க வியற்பரவாழ்
வன்ன னருளா லகங்கிளரப் பொங்கியதே.

## உஎ மெய்ப்பதம்

(கொச்சகக் கலிப்பா)

956\. புத்தியாற் றன்னைப் புறக்கணித்துக் கற்பனையா
நத்தியே மோக நசைபட் டுழன்றநான்
அத்தியா சந்தீ ரருள்விளக்கத் தாலறிந்தேன்
வித்தையா லன்றி விளங்கவொ ணு மெய்ப்பதமே.

957\. வாடித் தவித்த வருத்தமொருங் கற்றொழியத்
தேடித்தன் னுள்ளே திருவருளின் செந்நெறியாற்
கூடிக் களித்துக் குலாவுவதுஞ் சிற்பதமே
பாடிப் பணிந்து பராவுவதுஞ் சிற்பதமே.

958\. யானே யெனதே யெனுங்கலக்க மற்றொளிர்மெய்ஞ்
ஞானனு பூதியா நண்ணியவாண் டானருளால்
ஆனு வியல்பா வகங்கிளரப் பொங்கியது
வானு மலர்ந்தசுப வைகுந்த மாண்பதமே.

## உஅ. பூரணம்

(கொச்சகக் கலிப்பா)

959\. எல்லாமொன் றாக வியல்சிற் பரசொருப
நல்லா னருளொளியென் னள்ளிதயஞ் சார்தலாற்
கல்லா மயக்கமனக் கற்பனு பேதஞ்சேர்
பொல்லா வவிச்சையறப் பொங்கியது பூரணமே.

## உகூ. அதீதம்

(கொச்சகக் கலிப்பா)

960\. சென்றலுத்துக் கற்பனையிற் சீரழிந்து போகாது
தன்றிறமே சார்ந்தேற்குத் தம்பிரா னின்னருளால்
ஒன்றலுற்ற வுள்ளத் தொளிவெளியா முண்மைநிலை
துன்றலுற்ற வாற்றுற் றுலங்கிற் றதீதமே.

## ௩0. துரீயம்

(குறள்)

961\. அரிய துரீயமென் னுண்டா னருளா
லெளிமையா வுற்ற தெனக்கு.

## ௩௧. அறிவு

(குறள்)

962. உகத்தலுற நாயேற் குடையா னருளா
லகத்தில் விளைந்த தறிவு.

963. அறிவே சொரூபமா வாண்டா னருளால்
அறிவா விளங்கிற் றகம்.

964. பிரானருளே யுள்ளத்திற் பேணலாற் பெற்றேன்
புராதனசற் போதப் பொருள்.

(வெண்பா)

965. அன்பு மறிவுமொருங் காண்டா னருளாற்பே
ரின்பமெழப் பொங்க வியல்பாக—முன்புநான்
கண்டறியா மோனக் கடவுட் பரபத்தி
மண்டுவதா நிற்கும் மனத்து.

(கொச்சகக் கலிப்பா)

966. வேடமே மெய்யா மருண்டேன் விசாரத்தால்
வேடத்தை முற்ற விலக்கி வியன்பரமா
நீடு சொரூப நிறைவாம் பரமார்த்தப்
பீடுறுமெய்ஞ் ஞானமுறப் பெற்றே னருளாலே.

967. வெருளுற்ற நோக்கா லுருவெளித் தோற்றத்
திருள்வா தனையா லினைந்தேன் சொரூப
வருளா லகந்தெளிந்தாங் கற்புதமெய்ஞ் ஞானப்
பொருள்வாழ் வகண்டமாப் பொங்கலுற் றேனே.

## ௩௨. திடஞானம்

(குறள்)

968. கடவு ளருளாற் கலக்கமற்ற வுண்மைத்
திடவுணர்வு சேர்ந்தது சீர்த்து.

(வெண்பா)

969. நடக்க வொணுதமெய்ஞ் ஞானு பூதி
இடைக்கணரு தென்று மியல்பா—நடக்கவகத்
தியானறிந்த மட்டி லிறைவனரு ளன்றிமற்
றியான்புரிந்த தேது மிலை.

(கொச்சகக் கலிப்பா)

970. தாஞறு வொளிர்சொருபன் றன்னருளால் என்னகத்தில்
யாஞறு தரஞ்செய்ய வென்னின்வே றென்றுமில்லா
ஞானனு பூதியெனக் கானு வியல்பாக
மானுபி மான மயக்கமறப் பொங்கியதே.

971. அல்லா ணவப்பா ழகற்றியவாண் டானருளால்,
எல்லாமோர் தானு வியல்சொருபச் சிற்பரவாழ்
வல்லாத வெல்லா மலமரல்சேர் கற்பனையா
நல்லாங் கறிந்தடைந்தேன் ஞானனு பூதியே.

குறிப்பு :—ஆண்டானருளால் அறிந்தடைந்தேன் எனக் கூட்டுக.

972. இயல்பான மோன வெழிற்சிற் பதத்துக்
கயலாக யாதோ ரவத்தையு மில்லா
நயமான வந்தமெய்ஞ் ஞானனு பூதி
அயரா தடைந்த தருட்டிறத் தாலே.

973. மீக்குயர்வே தாந்த விழுப்பொருளென் னுள்ளுணர் [விற்
போக்குவர வற்றசிவ பூரணமாப் பொங்கருளால்
ஆக்கமுற்ற வுண்மைஞா னனுபவ வாழ்வெனது
நீக்கமற்ற சொந்த நிலையா வியன்றதே.

974. புண்ணியமொன் றற்றமனப் பொல்லேனை நல்லேன் [போல்
எண்ணியுவந் தாண்ட விறையருளாற் பக்குவ [மாய்க்
கண்ணியப்பே ரின்பக் கடவுள்வாழ் வாவகத்து
நண்ணியது நல்லசிவ ஞானனு பூதியே.

975. கல்வியி னுண்மை கருத்திற் பொருத்திலேன்
புல்லியமா மோகப் புலக்கலக்கம் பேர்ந்தொழிந்து
நல்லசிவ போகமெய்ஞ் ஞானனு பூதியுறச்
சொல்ல வொணுத சொருபவருள் கூட்டியதே.

976. தானேதா ஞனசிவ தத்துவன் கூ ரின்னருளால்
ஊனேநா ஞக வுழன்றவகப் பேய்க்கலக்கம்
போனேனுக் குள்ளுணர்வாப் பொங்கிப் பொலிந்த
நானேநா ஞகமெய்ஞ் ஞானுநு பூதியே. [நிலை

977. ஊன மனப்பா ழுருவொளித்தோற் றங்கரக்க
ஞான சொரூபகுரு நாதனரு ளாலெனக்கு
மோன வருள்வெளியே முத்தி சொரூபமாத்
தானவிர்மெய்ஞ் ஞான சமாதி தழைத்ததே.

## ௯௯. சொரூபாநுபூதி

(குறள்)

978. பொங்கு சொரூபானு பூதித் துலக்கமே
அங்கணனு வாண்டா னருள்.

979. ஆன்ம சொரூப வருளா லவிர்ந்ததகத்
தான்மசொரூ பானு பவம்.

980. அருளா லிதயத் தவிர்சொரூப மோனப்
பொருளேநான் காணும் புலம்.

981. போதவடி வாஞ்செம் பொருளாற்சிந் தாகுலப்பா
ழேதமறப் பெற்றே னினிது.

982. உகந்தேன் சொரூப முளத்தே யருளா
லகந்தைமா மோக மகன்று.

983. ஆண்டா னருளே யடியேன் விழியாக
ஈண்டலாற் கண்டே னியல்.

984. அருள்வாழ்வு வாழப் பணித்தா னருளாற்
பொருள்வாழ்வு பொங்கிற் றுளத்து.

(வெண்பா)

985. என்னைக் கலந்தபே ரின்ப விறைவனருள்
வன்னக் களியொளியால் வாழ்கின்றேன்—என்ன [தியான்
என்னுமயற் சிந்தை யிறந்தொழியச் சிற்பரமாந்
தன்னதியற் சீர்மை தழைத்து.

986. உருவெளியாத் தோன்று முடலுலக மெல்லாம்
தெரிவளவாஞ் சிந்மாத் திரமாக்—குருவருளால்
வெட்டவெளி யாக விளங்கும் பரசொருப
நிட்டையொளி பாய்ந்ததென் னெஞ்சு.

987. பழமுதலா வென்னுட் பயில்சொருப தெய்வக்
கிழமையைநான் கெட்டேன் மறந்தேன்—முழுமுத [லாந்
தானேதா னகவொளிர் தன்னருளாற் பொய்ம்மயல்
தானேநா னேனேன் சதிர்த்து. [போய்த்

988. உவாத்திமெய்ஞ் ஞான வுரவோ னருளாற்
சிவாத்துவித மோனஞ் செழித்து—விவர்த்தமாத்
தோன்ற வுலகு சொரூபத்தே யார்ந்ததெனக்
கான்றவனு பூதி யகத்து.

989. உடையா னருளா லுபசாந்த நீர்மை
யடைவா லடியே னகத்தே—உடலின்
மயல்சேர் முனைப்பற்ற வாழ்வே சொரூப
வியல்வாழ் வெனத்தெளிந் தேன்.

(கொச்சகக் கலிப்பா)

990. ஊனநோக் கத்தா லுடலுலகப் பாழிலுழல்
தீனனு மென்னைத் தெருட்டியாண் டானருளால்
மோனநோக் கங்கிளர மூளப்பெற் றேனிதய
வானத்தில் வானமா வைகியதென் மாட்சியே.

991. துளங்குமகங் காரமனச் சூதற் றெழிய
வுளங்கலந்த வுண்மை யுடையா னருளாற்
களங்கமில்கை வல்லியமெய்க் காட்சிசேர் கண்ணு
விளங்கியதென் சொந்த வியன்சொருப மாண்பே.

992. முத்திநெறி யோர்ந்து முயன்றிடா தைம்புலப்பாழ்ம்
பித்த வுலகிலகப் பேயனுப் பேதுபட்டேற்
கத்த னருளா லகங்கிளரப் பொங்கியது
சுத்தவறி வான சொருபானு பூதியே.

993. தோளா முழுமணியாத் தொக்கசொரு பானுபவம்
மாளா வமுதவியல் வாழ்வாகப் பொங்கியது;
வாளா கழிந்தொழிந்த மத்தனே னுள்ளுணர்வூ
டாளா வடியேனை யாண்டா னருளாலே.

994. தடையான பாசந் தகர்ந்தொழிய வுள்ளத்
துடையான் பதமேயென் னுண்மையுரு வாகத்
தொடையான ஞான சொரூபானு பூதி
யடையாநின் றய்ந்தே னருள்விளக்கத் தாலே.

995. சிவத்தை மறைத்த செகக்கற் பனையா
மவத்தி லழுங்கினேன்; ஆண்டா னருளாற்
சுவத்தமா வுள்ள சொரூபானு பூதித்
தவத்திலே நாளுந் தழைக்கலுற் றேனே.

996. உள்ளும் புறம்பு மொருங்கே வெளியாகக்
கள்ளமனம் போன்றக் கரைந்ததா லாண்டவன்
பிள்ள வொளுத பிரம்மசொரு பானுபவத் [பாற்
தெள்ளமுத வெள்ளந் திளைத்துக் களித்தேனே.

997. இரண்டற வுள்ளத் தியற்சிற் பரமாத்
திரண்ட சொருபச் செழும்பதங் கண்டேன்,
மருண்டு கலங்கிய மத்தனே னுட்புக்
கிருந்தொளிர் வுற்ற விறையரு ளாலே.

998. ஒன்றுபட்ட மோன வுணர்வால் உளந்தேற
நின்றதுமெய்ஞ் ஞேயநிலை நெஞ்சத் தொளிபெறவே
இன்றுநான் காணக் கிடைத்த திறையருளால்
தொன்றுதொட்ட சாந்த சொரூபவியல் வாழ்வன்
[றே.

999. வைத்த நிதிபெண்டிர் மக்கள்குலங் கல்வியென்னும்
பித்த வுலகிற் பிறந்திறந் தெய்த்தொழிந்தேற்
கத்த னருளா லகங்கிளரப் பொங்கியது
சுத்த வொளிவெளியாத் துன்று சொருபமே.

1000. ஞானக் கொழுந்தான நம்ப னடியேற்கு
மோனக் கலைபயிற்றி முன்னின் றருளலால்
ஊனச் செருக்கறவென் னுள்ளத்தே சுத்தவருள்
வானப் பரசொருப வாழ்வு விளங்கியதே.

## ௯௪. பிரம்மாநுபூதி

(வெண்பா)

1001. பரமனரு ளாலே பரமானு பூதி
யருமையுடைத் தாக வடைந்தேன்—கருமகதி
காணே னினிநான் கலக்கமாம் பாசமனப்
பூணற் றொழிந்தது காண்.

(கொச்சகக் கலிப்பா)

1002. வீணச் செருக்கன்பால் வித்தகசற் போதகுரு
மாணப் புரிந்தவிஞ்சை மாட்சியால் என்னகத்திற்
காணக் கிடைத்தவருட் காட்சியிலே யென்னுருவாப்
பேணக் கிடைத்தபெரும் பேறு பிரம்மமே.

1003. நம்பினர் தம்மை நலங்கிளர்சுத் தாத்துவிதச்
செம்பரமாக் காணும் பிரான்கூர் திருவருளால்
இம்பரும்ப ரெல்லா மிகப்பமனக் கற்பனையாச்
செம்பரவாழ் வான சிவானுபவஞ் சேர்ந்ததே.

1004. நாடலுற்று ருள்ளத்து நானுனென் றோரியல்பாக்
கூடலுற்ற வுண்மைக் குலாவாம் புரணமே
நீடலுற்ற தென்னியல்பா நெஞ்சத்து நீயதுவென்
றேடனே னுக்கிசைத்த வெம்மா னருளாலே.

## ௯௫. கைவல்யம்

(கொச்சகக் கலிப்பா)

1005. உள்ளந் தெளிந்தே னுணர்விற் கலக்கமற்றேன்
கள்ளமனக் கற்பனைதீர் கைவல்யங் கண்டுகொண் [டேன்,
தெள்ளியவாழ் வான சிவானுபவ மோனமா
வுள்ளமுறப் புக்க வுடையா னருளாலே.

1006. வீண்டர்க்க வாத விதண்டையோர் யாராலுங்
காண்டற் கரியவருட் கைவல்யங் கண்டுகொண்டேன்
வேண்டற் குரிய விபூதிசேர் சிற்பரவாழ்
வீண்டக் கடைக்கணித்த வெம்மா னருளாலே.

1007. கற்பனையைக் கண்டு கலங்கினே னுள்ளத்திற்
சிற்பரமா மோனத் திருவருளாற் பொங்கியது,
சொற்பதந்தீண் டாத சொரூபப் பரவெளியா
நிற்பதொரு கைவல்ய நிஷ்டானு பூதியே.

1008. வெள்ளமாப் பொங்கு விசுத்த சிவானந்தத்
தெள்ளமுத முண்டு திளைத்திடவென் னுள்ளத்திற்
கள்ளவெம் பாசமனங் காண்டலரு கைவல்யம்
தெள்ளிதா வாண்டான் றிருவருளாற் பொங்கிற்றே.

1009. தள்ளவோ கொள்ளவோ தன்னின்மற் றொன்றுமறத்
தள்ளியமெய்ஞ் ஞான சதாசா ரியனருளாற்
கள்ளமில்கை வல்யங் கருத்திலே சுத்தவருள்
வெள்ளவெளி யாக விரியக் கிளர்ந்ததே.

1010. மண்டு மயக்க வழக்கொழியக் காண்கிற்கும்
திண்டிறல்சேர் சுத்தவருட் சிற்சொருப சற்குருவால்
கண்டு களித்தமனக் கற்பனு பேதமற
வுண்டு திளைத்தே னொருமைசே ருண்மையே.

## ௩௬. அத்துவித வாழ்வு

(வெண்பா)

1011. ஓர்துக் கழுமற் றொழியத் திருவருட்சீ
ராதிக்கத் தின்கீ ழடைதலால் — பேதக்
கலகமயல் வாழ்விற் கழன்று துரீய
நிலவியல்வாழ் வோங்கிற்றென் னெஞ்சு.

(கொச்சகக் கலிப்பா)

1012. சேர்த்துக்கொண் டாண்டசிவச் செம்பிரான் சிற்ப [தத்து
டார்த்தென்னை வைத்ததால் ஆசாபா சங்கழன்றேன்
ஓர்த்துணரத் தன்னின்மற் றொன்றுமிலா வத்துவி
சீர்த்தியில்வாழ் கின்றேன் சிவானுபவங் கூரவே [தச்

## கஎ. பரவெளி

(குறள்)

1013. குருவருளா லுள்ளத்திற் கூடியது சுத்தப்
பரவெளியா முண்மைப் பதம்.

(கொச்சகக் கலிப்பா)

1014. இற்றெனவொண் ணாத விறைவனருட் சித்திரத்தால்
எற்றவோ பற்றவோ யாதுமே பேதமா
மற்றிரண் டற்றவியல் வாழ்வா மடுத்தகத்
தற்றமற்ற சுத்த வருட்கே வலவெளியே.

குறிப்பு:—சித்திரத்தால் மடுத்தது எனக் கூட்டுக.

1015. ஆண்டான் சொரூபமன்றி யல்லா மவுனவுணர்
வாண்டா னருளா லகங்கிளரப் பொங்கலால்
வேண்டார்வம் முற்ற விளைந்த வனுபூதி
ஆண்டான் சொரூப வருட்சிற் பரவெளியே.

1016. மைக்கலக்க மான மஞ்ஞையப்பாழ்ங் கற்பனையிற்
சிக்கலுற்றே னுக்குத் திருவருளின் சித்திரத்தாற்
பொக்க மயக்கமறப் பொங்கியது மோனவொளி
தொக்க சொரூபத் துரியவெளி யாகவே.

1017. உலகி லொருப்பட் டுழன்றநான் உண்மை
யிலகலுற்றே னுள்ளத் திறையருளால் வஞ்சக்
கலகமன மாயையிருள் கால்வாங்கி யோட
வலகிலா மோன வருள்வெளியோங் கிற்றே.

## கஅ. பரவொளி

(குறள்)

1018. நட்பப் பரமார்த்த நோக்கந் திருவருளால்
ஒட்பமா வுற்ற துளத்து.

(வெண்பா)

1019. எங்கு மிலாததோ ரின்பமிங் கிப்பொழுதே
பொங்கவகத் தாண்டகுரு புங்கவன்செய்—துங்க
வளியா லடியேனுக் காயிற் றிதய
வெளியே விசுத்த வொளி.

குறிப்பு:—அளியால் வெளியே ஒளியாயிற்று என்க.

(கொச்சகக் கலிப்பா)

1020. பிளவரியா வத்துவிதப் பெட்பாற் சொரூப
வொளிவெளியா வுள்ளவென் னுண்மைப் பிரானைத்
தெளிவா வறிந்தேன் றிருவருளால் வஞ்சக்
களியனேன் யானெனும்பொய்க் கற்பனைதீர் வாலே.

1021. நன்றிசேர் ஞானகுரு நாதனருள் கூர்தலால்
அன்றினே ஞணவஞ்சே ராசாபா சத்தொடரை;
வென்றிசேர் வாழ்வு விளங்கவருட் சிற்பரத்தோ
டொன்றினே னேங்குபர வுண்மையொளி சூழவே.

1022. இளிவா மகந்தை யெழுச்சியால் உள்ளத்
தொளியாக வுள்ளதோ ருண்மையையுற் காணேன்;
வெளியாக வுள்ள விசுத்தத் துரிய
னளியா லறிந்தேன் அகந்தைமுனைப் பற்றே.

குறிப்பு:—அளியால் அற்று அறிந்தேன் என வியையும்.

## ௩௪. சிவ வாழ்வு

(குறள்)

1023. கூர்மையா லாண்ட குருபிரான் சுத்தவருட்
சீர்மையால் வாழ்ந்தேன் சிவத்து.

1024. அருளா லறிந்துகொண்டே னென்ம சொருபத்
தெருளான சுத்த சிவம்.

1025. தெளிந்தவருட் பெற்றியாற் சித்தஞ் சிவமா
வொளிர்ந்த தகந்தை யொழிந்து.

1026. தெளிந்தியல்சற் போத சிவானுபவ வாழ்வா
அளைந்தது நல் லாண்டா னருள்.

1027. அவஞால மோக மகன்றருளா லுற்றேன்
சிவஞான சித்தித் தெளிவு.

(வெண்பா)

1028. பழுத்த மனத்திற் பராற்பரமெய் யாகச்
செழித்து விளங்கு சிவத்தைப்—புழுத்தலைபுன்
ஞயே னகத்துமெய்ஞ் ஞானு பூதியா
ஏயே யிலக்கிற் றருள்.

1029. அறிவா விளங்கு மகண்டமா மோனச்
செறிவான சுத்த சிவத்தை—அறிவான
வாண்டா னருளா லகத்தி லடங்கலுறப்
பூண்டேன் பொலிவுபெற் றேன்.

(கொச்சகக் கலிப்பா)

1030. வேண்டார்வம் முற்ற விளையாதேன் சாதனையொன்
றீண்டாதேன் எந்நலமு மில்லாதேன் ஏதுவற்ற
வாண்டா னருளா லகப்பா மிருளினின்று
மீண்டே னறிவா விளங்கு சிவகதிக்கே.

குறிப்பு:—வேண்டார்வம் - சுபேச்சை.

1031. இளிவரல்சே ருத்தை யிழிசினேன் மோகக்
களியிலே யாழ்ந்த கசட்டு மனத்தேன்
ஒளிவெளியா வுள்ள வுடையா னருளாற்
றெளியலுற்றேன் சுத்த சிவக்கே வலமே.

1032. மித்தைசேர் மாயா விலாச வவத்தைகளு
டெய்த்தே யுழலா திதயத்தே சுத்தவருட்
சித்தியல்வாழ் வாகச் சிவானுபவஞ் சேர்த்தவன்மாட்
டத்தகநிற் கின்றே னருளா லடியேனே.

1033. ஆற்றப் பெரிய வருட்பிரா னின்னருளாற்
றேற்றக் கிடைத்தேன் சிவானுபவ மோனநிலை
சோற்றுத் துருத்தியே நாளுஞ் சுமந்துலகச்
சேற்றிற் கிடந்துழன்ற சீடச் சிறியேனே.

1034. மடம்படுபாழ் வஞ்ச மயக்க மனத்தா
லுடம்பையே நானென் றுடும்புபோற் பற்றி
யிடும்பையுற்ற நாயே னிறையருளா லார்ந்தேன்
திடம்படுமெய்ஞ் ஞானச் சிவானுபவ வாழ்வே.

1035. பீடுசேர் ஞானப் பிரானருளால் அங்குநின்
றூடுபே ராமெய் யுறையுளெனக் கெய்தியது,
நீடுபே ரின்ப நிலைக்களமா மோனவியல்
வீடுபே றாக விளங்கு சிவத்திலே.

குறிப்பு:-அங்குநின்று-சிவத்தினின்று, செய்யுளாதலிற்
சுட்டு முன்வந்தது.

1036. இளிசே ரகந்தை யிகத்தலான் மோன
வெளியே வடிவா விளங்குசிவம் பெற்றேன்
களிசேர்ந்த மோகமனக் கற்பனைதீ ருண்மைத்
தெளிவான சுத்தத் திருவருட்பேற் றாலே.

1037. அவத்தைமோ கத்தா லறிவு கலங்கி
அவத்தி லுழன்றநா ளுண்டா னருளால்
விவத்தைசே ருண்மை விளங்கலுற் றன்ற
சிவத்திலே வாழ்வு செழிக்கப்பெற் றேனே.

1038. உள்ள மறக்க வொணாத சொரூபவருள்
வெள்ள மெனக்குள் விளைதலால் யானெனும்பொய்க்
கள்ளமனம் பொன்றக் கரைந்தொழியச் சிற்பரமெய்த்
தெள்ளமுத மான சிவானுபவங் கூடியதே.

1039. மருவலுற்ற கற்பனை மாயா விலாசத்
தெருமரல்சேர் மோகச் செருக்கறச்செற் றாண்ட
குருவருளா லுள்ளங் குலாவியது சற்றுந்
திரிதரவில் லாதசிவச் செம்பொருளின் மாண்பே.

## ௪0. பரமானேன்

(கொச்சகக் கலிப்பா)

1040. மருண்டமனக் கற்பனை மாயச் செருக்கால்
இரண்டுபடக் கண்ட வெலாமொன்றே யாகத்
திரண்டசற் போதத் திருவருளால் உள்ளத்
திருண்டவகப் பாழ்கெட் டியற்பரமா னேனே.

1041. அசுத்த மலத்தி லழுந்த வமிழ்ந்த
நிசித்தக் கடையனை னெஞ்சத் தருளால்
விசுத்தப் பரமா விளங்கியதென் னுண்மை
முசித்தொழிய நானென்னும் மோகப் பிசாசே.

1042. தேற்றக் கடவசிவச் சிற்பரமோ னனுபவப்
பேற்றிற் களித்தேன்; பிழைசேர் பிரமாதக்
கூற்றைக் கடந்தேன்; குருநாதன் கூரருளா
லாற்றப் பெரிய வகன்பரமாத் தீர்ந்தேனே.

1043. செய்வகை தேராச் சிதடனே னுள்ளத்துத்
தெய்வ கதியாகச் சேர்ந்த திருவருளால்
உய்வகைதன் றெட்பநுட்ப வுண்மை யுருவோயா
ஐயத்தி னீங்கித் தெளிந்தே னரும்பரமே.

## சச. பேரின்பம்

(குறள்)

1044. இறையருளா லெய்தியபே ரின்பமெனக் கென்றும்
குறைவிலனு பூதிக் குவால்.
குறிப்பு:—குவால் – குவியல்.

1045. எம்மான் பதத்திலெனக் கீண்டியபே ரின்பவுணர்
வம்மாவவ் வாண்டா னருள்.

1046. ஆக்கமா வாண்டா னருளா லகந்துலங்கிற்
றேக்கமில்பே ரின்ப வியல்.

(வெண்பா)

1047. உணர்வொளிசேர் வாழ்வென் னுடையா னருளாற்
புணர்தலாற் புந்திப் புலத்தே—உணர்வொளியாத்
துன்று சொரூப சுகானுபவப் பேரமுது
மன்ற நிரம்பியதென் மாட்டு.

1048. அடையத் தகுவதுதன் னன்பே யதுநா
னடையப்பெற் றேன்றன் னருளால்—தடையறுமவ்
வன்பே சிவமா வவிர்தலா லின்பமய
நம்பனையே நானடைந் தேன்.

(கொச்சகக் கலிப்பா)

1049. உண்ணெக் குருகு முபாசனு யோகமின்றி
எண்ணப் படாதபே ரின்பப் பரவெளியை
நண்ணக் கிடைத்தேன்மெய்ஞ் ஞான சொரூபமா
வண்ணப் பரஞான வள்ள லருளாலே.

1050. பெருத்த முயற்சிசெய் பேரின்ப வாழ்வு
கருத்தனு வாண்டான் கருணையா லென்னுட்
பொருத்திய மோனனு பூதியாற் சும்மா
விருத்தலே யாக விளைந்த தியல்பே.

1051. ஊனப்பா ரான வுடல்வடிவாத் தன்னைமயங்
கீனப்பா ரான வியற்கையற வென்னகத்தில்
யானிப்போ துற்ற விறையருளால் ஒட்பநுட்ப
வானப்பே ரின்ப வளவியல்வாழ் வுற்றதே.

## சஉ. சாந்தி

(வெண்பா)

1052. உளத்துக் கதிபதியா வோங்குமென் னுண்டான்
விளைத்தசிவ போகவருள் வெள்ளம்—களைத்துக்
கலங்குமகங் காரமயற் கற்பனையைச் செற்றுத்
துலங்குவது சாந்தி சுரந்து.

1053. உள்ளும் புறமுமொக்க வுண்மைஞா னநுபவ
வெள்ளம் பரக்க விளைதலால்—வெள்ளமாப்
பம்பிய சாந்திப் பனிமதியே யாயிற்று
வெம்பிறவிப் பாலை வெயில்.

1054. கள்ளமறக் கண்ட கருத்திற்பே ரின்பவருள்
வெள்ளமெழுப் பொங்கி விசைத்தலால்—துள்ளு
மகந்தைமனே வேக மறக்கெட்ட சாந்தி
திகந்தமெலா மூருந் தெளிந்து.

(கொச்சகக் கலிப்பா)

1055. இரங்கிநா னிவ்வுலகத் தேங்கி வருந்தா
தொருங்கு மனக்கவல்செற் றுள்ளொளியா வான்
பரங்கருணை யாலே பரமோப சாந்த [டான்
வரங்கெழுமெய் வைப்பெனக்கு வாய்க்கலுற் றேனே.

1056. இன்றி யமையா விறைவன் கருணையெனக்
கென்று மியல்பா விதயஞ் சுரத்தலால்
ஒன்றியபே ரின்ப வுணர்வான சாந்தியில்யான்
மன்றவாழ் கின்றேன் மனக்கலக்கஞ் சற்றுமற்றே.

1057. மைத்தவகங் கார மயக்கா லெதிர்புலத்தா
டெய்த்துழன் ற நாயேன் இறைவன்கூ ரின்னருளாற்
சித்தத்தி லன்றியருட் சிற்பரத்தில் யாதுமின்றென்
றுய்த்துணர்ந்தாங் குள்ளத் துபசாந்தி யுற்றதே.

1058. சிவத்திலே யுண்மை தெளிந்தமெய்ஞ் ஞானத்
தவத்தரே சாந்தி தலைப்படு கிற்பார்
சுவத்தமா மோனத் துலக்கமார் சாந்தி
அவத்தனே ஞுர்ந்தே னருட்டிறத் தாலே.

1059. மோகவகப் பேயை முடுக்கித் திருவருளால்
ஏகவியற் சீர்மை யிலக்குங் குருபரன்பால்
தேகமயற் பாசச் செருக்காகத் துன்றுமஞ்ஞே
வேகமறப் பொன்ற விளைந்ததுப சாந்தியே.

1060. ஒருத்தனு வுள்ளத் தொளிர்மெய் யுடையான்
குருத்துவ மான குலாச்சே ரருளால்
விருத்தமா மோக வியாகுலந் தீரத்
திருத்திசேர் வாழ்வு திளைக்கலுற் றேனே.

## சுஅ. அமரத்துவம்

(வெண்பா)

1061. அளப்பிலா மோன வருட்பெருஞ் சோதி
திளைப்ப வெனக்கருள் செய்தான்—களைப்பற்
றமுத சொரூபஞா னுபவ வாழ்வால்
அமரநிலை கூடிற் றகத்து.

1062. நெருக்கடியி னின்றகல நீக்கி யெனைத்தன்
னருட்குடியா வாண்டா னருளாற்—செருக்குமகப்
பேய்முனைப்பின் பீடையறப் பேர்ந்தெனக்கு வாய்த்
சேமநிலை யான சிறப்பு. [ததியற்

(கொச்சகக் கலிப்பா)

1063. பிழையே பெரிதுடைய பேதையா மென்னை
விழைவா லுவந்து விரும்பித் தனக்கோ
ருழையனு வாண்ட வுடையா னருளா
லழியாத வுண்மைநிலை யார்தலுற் றேனே.

## சுசு. முத்தி

(வெண்பா)

1064. உலைவிலா வுண்மை யுணர்வொளிசேர் பாதத்
தலைவனருட் பாங்காற் றழைத்தேன்—தொலைவிலா
மாட்சிசேர் சாந்தி மடுத்தலான் முத்தியுல
காட்சி யுறப்பெற் றகத்து.

1065. அகமதுவா வாண்டா னருளா லறிந்தேன்
அகமதுவே யாக வமைந்தேன்—அகமதுவே
யாகக் கிளரவ் வநுபவமே சுத்தசிவ
போகமா முத்திப் புணர்வு.

(கொச்சகக் கலிப்பா)

1066. தானமோ வன்றித் தவமோ புரிந்திலா
வீனனே னுள்ளத் திறைவனருட் சீர்மையால்
ஊனமொன்று மற்ற வொளிவெளியாப் பொங்குசுப
மோனமார் கைவல்ய முத்திசித் தித்ததே.

1067. வேறென்று மற்ற வெறுவெளியா வுள்ளத்தில்
வீறென்று சுத்தவருள் வெற்றியால் யானடைந்தேன்
ஊறென்று மற்ற வுதாரப் பரசிவமாத்
தேறென்று மோனத் திளைப்பான முத்தியே.

## ௬. மோனம்

(குறள்)

1068. கலங்கலென்று மற்றவருட் கைவல்ய மோனம்
துலங்கலுற்ற தாண்டா னருள்.

(கொச்சகக் கலிப்பா)

1069. வேதவே தாந்த விளக்கமா வுள்ளகுரு
பாதமே பாசப் படரகலக் கேவலசற்
போதமா வென்னுளத்திற் பொங்கலாற் பொங்கியது
மோத சொரூபசிவ மோனநு பூதியே.

1070. மத்த மனோமயமா மாயக் கனவினின்று
சுத்தமெய்ஞ் ஞான சொரூப குருவருளாற்
சித்தந் தெளிந்தேன் சிவானுபவ மோனமுற்றேன்
வித்தகமெய்ஞ் ஞான விலாசமா வாழ்வுறவே.

குறிப்பு:—வாழ்வு விலாசமா(க) வுற என்க.

1071. மத்த மனக்கலக்கம் மாற்றியசற் போதவருள்
வித்தகத்தை யெண்ணியெண்ணி விம்மிதமீக் கூர [வெனக்
கெத்தனமில் லாதே யிறைவனருள் கூட்டியது
முத்தியுணர் வானசுப மோனநு பூதியே.

1072. துன்னியசற் போத சொரூப குருவருளாற்
பொன்னியலே யான பொலங்கலம்போற் சிற்பரமாந்
தன்னியலே யென்னியலாத் தத்துவஞா னங்கிளர
மன்னியமோ னனுபவ வாழ்வு தழைத்ததே.

1073. புத்திக் கலக்கமாம் பொல்லா வகந்தைதீர்
சுத்த வறிவுத் துலக்கமா மோனமே
அத்த னருளா லடைந்த பிரசாதப்
புத்தமுத வாழ்வுசிவ போகமாப் பொங்குவதே.

1074. என்புதசை யானவுடல் யானெனுமோ கக்கடும்பாழ்
வம்புசேர் துன்ப மனத்தால் வருந்துவேற்
கின்பவுணர் வாக விதயத் திறையருளால்
அன்புணர்வூற் றனமோ னனுபவம் பொங்கியதே.

1075. தேனே யனைய சிவானுபவச் சீர்பெருக
நானு னெனவகத்து நள்ளலூற்ற நாதனருள்
வானகை வெங்கும் வளைத்தலால் வாய்த்தபெரு
மோனனு பூதியிலே முற்றியதென் னற்றவமே.

1076. நம்ப னளித்தமெய்ஞ் ஞான வருட்படையால்
பம்பியவெம் பாசவகப் பாழ்கடந்து மேம்பட்டேன்
உம்பரார் காணவொணு வொட்பங்கூர் வீட்டுலகச்
செம்பதமா மோனவியற் சீர்மை செழிக்கவே.

1077. தரமான பக்குவமோர் சற்றுமற்ற வீண்பா
மரனை நான்சொருப மாட்சிபெற்று வாழ
வரஞான சித்தனருள் வண்மையால் உண்மைப்
பரமோனப் பார்வையொளி பற்றிற் றகத்தே.

1078. உருவாக நானென் றுதியா துடற்றி
உரமாக வுள்ளத் தொளிவெளியாத் துன்றும்
பரமான்ம ஞானப் பரமார்த்த மோனம்
திரமாக வாழ்விற் றிருவருள்கூட் டிற்றே.

1079. * மதுவறிவா முண்மை வடிவைமறந் துள்ளத்
ததுவிதுவா மன்னியம்போ லாய்ந்தேன்; அருளாற்
பொதுவெளியா வுள்ளசிவ பூரணமே நானு
மதிதெளிய வுற்றதகம் மௌனவியல் வாழ்வே.

*மதுமறிவா முண்மை வடிவு—சச்சிதானந்த சொரூபம்.

1080. உளைந்து வருந்தியவென் னுட்கலக்கந் தீரத்
தெளிந்தபர மார்த்தத் திருவருளால் உள்ளத்
தளைந்தசிவ ஞானமோ னனுபவ வாழ்வா
விளைந்ததுபே ரின்பவியல் வீட்டுணர்வு தானே.

1081. தெளிந்தமைந்த மோனந் திளைக்க வெனக்குள்
விளைந்த சொரூபவருள் விஞ்சையா லுய்ந்தேன்,
உளைந்துலகப் பாழி லுடலபிமா னத்தாற்
றளைந்துவருந் தூத்தைமனச் சூனியப்பே யேனே.

1082. பெம்மா னருளாற் பெருகலுற்ற துள்ளத்திற்
சும்மா வொளிர் சொருபத் துங்கமோ னனுபவம்,
விம்மா வெருவா வியாமோகக் கற்பனையூ
டம்மா வழுங்கலுற்ற வாசா பிசாசனுக்கே.

## 14. ஞானமுறல்

(குறள்)

1083. யானெனதென் னின்ற வெலாமோகக் கற்பனையாப்
போனதுமெய்ஞ் ஞானப் புலத்து.

1084. கற்பனையிற் பட்டுக் கலங்கியநான் கற்பனையாச்
சிற்பரஞா னந்தெளிந் தேன்.

குறிப்பு:—கற்பனையாகக் கலங்கிய நான் கற்பனையாக ஒழிய.

1085. பரமான மோனவருட் பார்வையே ஞான
வுரமாக வூன்றிற் றுளத்து.

(வெண்பா)

1086. பொந்து படாதவருட் போதப் பொலிவாக
விந்தையனு பூதி விளைதலாற்—சிந்தையியல்
சிற்பரமே யாகத் திளைத்துக் களித்தலுற
வற்புதமா நின்ற தறிவு.

(கொச்சகக் கலிப்பா)

1087. ஆணவமா மோக வகந்தைமுனைப் பற்றொழிய
மாணவிளங் கோட்பநுட்ப வாலறிவா மோனமே
காரண வொருணுதவருட கைவல்யக் காட்சியென்பர்
நாணவெனை நக்கதுமெய்ஞ் ஞான வருட்பரமே.

1088. போதக் கழல்விளங்கப் புக்கவருட் புண்ணியனாற்
பேதக் கலக்கவகப் பேய் கரக்க வுள்ளத்து
மோதக் கடல்சுரக்கும் மோனனு பூதியா
மேதக்க ஞான விபூதி விளைந்ததே.

## 15. போதமுறல்

(குறள்)

1089. பேதுகடிந் தாண்ட பிரான்சற் குருரமண
போதமே முத்திப் புலன்.

1090. தெள்ளியசற் போதவருட் செவ்வியெனக் கென்று
தொள்ளியன்பாற் கண்டே னுவந்து. [மகத்

குறிப்பு:—செவ்வி உண்டாகக் கண்டேன் என ஒரு சொல் அவாய் நிலையால் வருவித்துக் கொள்க.

(வெண்பா)

1091. இரண்டற்ற மோன வியல்வாழ்க்கை யுள்ளந்
திரண்டொளிர்வ தாகச் செழிப்பா—மருண்ட
வகந்தைமுனைப் பான வநாதிமயல் போக்கி
முகந்ததருட் போதவொளி மூண்டு.

## 16. அறிவு

(குறள்)

1092. அறிவினால் அந்த வறிவையே யன்றி
யறிகிலேன் மற்றோ ரயல்.

1093. அறிவிற் சிறந்த வருந்துணைவே றில்லை
அறிவையே பற்ற லறிவு.

1094. அறிவாக வுள்ளவெனக் கன்னியமொன் றில்லை
அறிவே யறிபடுமெல் லாம்.

குறிப்பு:—அறிபடுவனவே யன்றி அறிபவனும் அவ்வறிவுருவே யென்பது அறிவாக வுள்ள வெனக் கென்றதனால் உய்த்துணர்ந்து கொள்க. திரிபுடி பேத மனைத்தும் ஏக சின்மாத்திரம் என்பதாம்.

1095. அறிவான தன்னையே யன்றிமற் றொன்றை
யறியாது சுத்த வறிவு.

1096. இன்பமய வாழ்வா விதயத் தியல்வதுமெய்
யன்புமய மோன வறிவு.

1097. அறிவான வுண்மையா வாண்டவனை நானவ்
வறிவா லனுபவிக்கின் றேன்.

1098. அறிவன்றி யில்லை யகிலமென் றுள்ளத்
தறிவுதெளிந் தான்றமைந் தேன்.

1099. தெளிந்தமைந்த மோனவருட் சித்தத் தனைந்த
தியற்பரவாழ் வூற்றுப் பெருக்கு.

1100. உண்டுண் டுறங்கினே னுள்ளுணர்விற் றெள்ளியது
கண்டுணர வொண்ணாக் கழல்.

1101. அறிவின் பயன்யா னடைந்தேன் இறைவனுக்கே
யாயினவாற் றூலவ் வறிவு.

1102. அறியா வறிவே பரமார்த்த மாக
வறிவு விளங்கிற் றகத்து.

1103. அறிவே சிவசொரூப மாக விளங்கிற்
றறிவு தெளிந்தமைந் தாங்கு.

1104. அறிவு தெளிதலா லவ்வறிவே நானா
நிறைவு துலங்கிற்று நெஞ்சு.

1105. இதுவென் றதுவென் றியம்ப வொணாமெய்
யதுவா வலர்ந்த தறிவு.

(வெண்பா)

1106. ஊனு ருயிரா ருணர்வா ருலகமார்
யானு றெனத்தேரா வென்னகத்தே—தானுக்
கலந்துநின்ற மோனவருட் காவலன்முன் முற்ற
வலர்ந்ததுமெய் யான வறிவு.

1107. அறிவான தானேநா னுகவறிந் துண்மை
யுறவானேன் றன்னே டுளத்தே—உறவான
மெய்யன்பே யின்ப விளைவாக வாருயிரிற்
சைவந் தழைத்தது தான்.

1108. அறிவே யடியேனுக் கன்புமய வாழ்வாம்
பிறவில்பே ரின்பப் பெருக்காய்க்—கிறிசேர்
கலக்கயா மோகக் கடும்பிறவித் துன்ப
முலக்கவொளிர் கின்ற துளத்து.

1109. சுத்த வறிவே சொரூபமாக் காண்டலான்
மத்தமனச் சுட்டறிவு மாய்ந்ததே—பொய்த்தொழியப்
போன மனத்தாற் புழுக்கமாஞ் சிந்தையறத்
தானளவிற் றன்பு தழைத்து.

(கொச்சகக் கலிப்பா)

1110. அறிவான தன்னை யகமுகப்பட் டாழ்ந்தவ்
வறிவான சுத்த வருளா லறிந்தேன்;
மறதியா லுற்றமனே மாய வகப்பே
யறிவான பேத மகன்றதுதன் மாட்டே.

1111. அறிவிலே யந்த வறிவன்றி யில்லா
வறிவே சொரூப வருள்வடிவா முண்மை;
அறிவா மதையவ் வறிவா லறிந்தேற்
கறிவே யமுதவெளி யாகநிரம் பிற்றே.

1112. அறிவான வென்னை யறிவான *யாதொன்
றறிவா முலகத் தறிவாற் றளைய
வறிவான முத்தி யறிவா லடைந்தேன்;
அறிவே யலாம லறிவின்வே றின்றே.

* யாதொன்று - அநிர்வசனியமான ஏதோ ஒன்று,
என்றது மாயையை.

# 17, சும்மா விருத்தல்

(குறள்)

1113. சும்மா விருந்து சுவானுபவந் துய்ப்பதே
அம்மா னருள்வாழ் வகத்து.

(கொச்சகக் கலிப்பா)

1114. எம்மா னருளா லிதய நிரம்பலால்
எம்மா லியற்றவினி யாது மியல்வதன்று;
செம்மாண் பரம சிவானுபவத் தெண்கடலிற்
சும்மா வமிழ்ந்து சுகித்திருக் கின்றேமே.

குறிப்பு—நிறைகுடந்தான் நீர்கொளுமோ நிச்சயமா மோன, முறையுணர்ந்தார் யாதை முயல்வார்..............."
—47 உடல் பொய்யுறவு - தாயுமானவர்.

1115. செம்மா ணடியே தியானித் தொழுகலுற்றேற்
கம்மா னருளா லகந்தைமுனைப் பற்றொழியச்
சும்மா விருத்தலே சுத்த சொரூபவருட்
பெம்மானைப் பூஜிக்கும் பெற்றியா முற்றியதே.

குறிப்பு:—பாவ பலத்தினல்........... தத்துவ முந்திபற
—உபதேசவுந்தியார் -9.

1116. உழக்க வொணுதவல் லூழின் வருந்தி
ஒழிக்கு முபாய மென்னென்றேர்ந் தோர்ந்துணர்வு
தொழிற்படவொண் ணுதுடனச் சோர்வுமற்றுச் [சும்மா
விழிக்கலுற்ற வெல்லே விளங்கிற்றென் மெய்யே.

1117. ஊனென்று மோகவுணர் வோய்ந்தொழிய வுள்ளத்
தானென்ற வொன்று தலைப்படலாற் றற்பரமா [தூத்
யானென்ற வொன்றே யிலாதொளிர்சிற் பூரணத்தல்
டானியற்ற வேண்டுவதா யாதொன்று மோரேனே.

1118. எண்ணமற்ற வுண்மை யியல்பான மோனவருள்
வண்ணமா வாழ்வு மலர்ந்து விளங்கலால்,
உண்ண லுடுத்த லுறங்கலே யன்றியென்ளுற்
பண்ணவொன் று மில்லை பரமார்த்த சாதனையே.

1119. கற்பனு பாசபந்தக் கட்டறுத்த வாண்டவன்செம்
பொற்பதவாழ் வான்றவருட் பூரணமாப் பொங்கலாற்
றப்பலரு சுத்தசிவத் தற்பரயோ ஞனுபவ
நற்பயனுர் வுற்றேற்கு நண்ணவினி யாதுமின்றே.

1120. மத்தமனக் கற்பனையா மங்கமற் றெல்லாமே
சுத்தத் துரிய சொரூபானு பூதியாம்
புத்தமுத வாழ்வு புணர்தலுற் றேனுக்குக்
கர்த்தவ் வியமாக் கடவதொன் றுங் காணேனே.

## 18. சொரூபாநுபவம்

(குறள்)

1121. சுத்தவறி வான சொரூபானு பூதியாற்
பொய்த்ததகங் காரப் புலம்பு.

1122. தூணமா வுள்ள சொரூபானு பூதியிலென்
வேணவா முற்றவிளை ந் தேன்.

1123. காணலுற்ற சுத்தவருட் கைவல்ய பூமியிலென்
வேணவா முற்றலுற் றேன்.

1124. ஒருபடித்தா வுள்ளத் தொளிர்சொருபப் பார்வை
குருவருட்பே றூர்ந்த குலா.

1125. எங்கெங்கு முள்ள வியற்சிற் பரநுட்பம்
பொங்கியதென் னுள்ளப் புலத்து.

1126. காண வொணுதசிவக் கைவல்ய வுண்மைநிலை
மாணவிளங் கிற்றென் மனத்து.

1127. சுத்தப் பரசிவமே சொந்த சொரூபமாச்
சித்தத் தலர்ந்தது சீர்த்து.

1128. குணங்கடந்த சுத்தவருட் கோமான் சொரூப
வணங்கலந்த தென்புன் மனத்து.

1129. கண்டடைந்த வுண்மைக் கடவுளியற் கைவல்யம்
பண்டுதொட்ட வென்மெய் வடிவு.

1130. குருசிவமாக் கூர்த்தவருட் கொள்கையாற் கண்டேன்
பரசொருப ஞானப் பயன்.

1131. நெஞ்சத் தறிவொளியா நின்றான் சொரூபத்திற்
கிஞ்சித்தும் காணேன் கிறி.

1132. வாழ்வா வொளிர்சொருப மாட்சியா லற்றதகப்
பாழ்வா தனையின் படர்.

1133. நிராலம்ப மோன நிலையா விளங்கிற்
றொராறொருதன் னுண்மை யுணர்வு.

1134. நெஞ்சமே மோன நிலையா வியல்சொருப
விஞ்சை விளங்கலுற் றேன்.

1135. நீக்கமற வெங்கு நிறைசொரூபச் சிற்பரமே
மோக்கமா முற்றிற் றுணர்வு.

1136. சொரூபமா வுண்மை துலங்கலால் வாழ்வில்
விரோதமொன்றுங் காணகில் லேன்.

1137. விளங்கிற்றென் னுண்மை விசுத்தப் பரத்திற்
களங்கமின் றாகக் கலந்து.

1138. நிதியா வுளது நிறைந்த சொரூப
மதுரா புரியின் வளம்.

1139. அறிவு தெளிந்தமைந்தாங் கான்ம சொரூப
நிறைவு துலங்கிற்று நெஞ்சு.

1140. தன்னியலே யென்னியலாத் தான்விளங்கக் காட்டிய
தன்னியலா மோனச் சதிர். [தோர்

குறிப்பு:—ஓர் தன் - ஏகான்ம சொரூபமான இறை வனது.

1141. தோற்றமறை வற்ற சொரூபப் பரமபதத்
தாற்றவிளங் குற்ற தறிவு.

1142. விளிதலில் லாத விசுத்தவியற் சித்தாத்
தெளிதலுற்றே னென்மெய்த் திறம்.

1143. தன்சொருப ஞான சமாதி யுணர்ச்சியெனக்
கன்புமய மாயிற் றகத்து.

1144. சிக்கெனவே தன்பாற் செறிந்தழுந்துற் றூரறிவிற்
பொய்க்கெனவே போலும் புலம்.

1145. துணையாக வுள்ள சொரூபமே நாளு
மணையாக வுற்ற தறிவு.

1146. எதுவுமே யானன் றெனத்தெரிந்தாங் கெவ்வெவ்
வெதுவுமே யானு யினேன்.

1147. பரசொருப மாகப் பயின்றவருட் பார்வை
உரவொளியா வுற்ற துளத்து.

1148. அளத்தலரு மோன வருள்வெளியா வைகும்
உளத்தியல்பா லூன்று முணர்வு.

1149. வித்தகவாழ் வாக விளங்குவதென் னுள்ளத்தில்
ஒத்தசம நோக்க வுணர்வு.

(வெண்பா)

1150. அறிவொளியா வோங்கு மனந்தசிவ சத்திச்
செறிவுளமா மோனகுரு தேவன்—குறிகுணந்தீர்
சுத்தவருட் கேவலமாத் துன்றுநிறை வென்னரு
தத்துவமாக் கண்டேன் சதிர்த்து. [மைத்

குறிப்பு:—சத்திச் செறிவான மோனமே தன்னுள்ள
மான; நிறைவே என்னருமைத்தத்துவமாக.

1151. சிவமாத் தெளிந்தவருட் சித்தோப சாந்தத்
தவமேவாழ் வாகவகஞ் சார்வால்—அவமா
மனக்கவல்சேர் சொப்பனமா மாயப் பிறப்பற்
றினிக்கலந்த துண்மை யியல்.

குறிப்பு:—இனி - இப்பொழுது.

1152. பேதமறு மோனம் பிறங்கலாற் கேவலசற்
போதவியல் பானவருட் செம்புலமா—ஏதமனச்
சுட்டறிவா(ம்) மோகச் சுழற்சியற்ற தற்பரமா
ஒட்டியதென் னுண்மை யுரு.

1153. செழிப்பதா முண்மைத் தெளிவான மோன
விழிப்பிலே சாந்தி விளைவால்—விழுப்பதப்பே
ரின்பவெளி தானே யெனது சொரூபமா
வன்புவளர் வுற்ற தகத்து.

1154. மிக்க சொரூபவருள் வேட்கையால் ஐம்புலத்துத்
தொக்கபிற வாசை தொலைந்திடவே—சிக்கெனவென்
னுள்ளே சொரூப வொளிப்பிழம்பாத் துன்றுசிவ
வெள்ளங் கிளர்ந்ததுமேன் மேல்.

1155. வண்மைசேர் சாந்தி வளர்தலுற வாழ்விலெனைக்
குண்மை தலைப்பட் டொளிர்தலால்—உண்மயல்சேர்
பேதக் கனவாம் பிழைதீர் சொரூபவருட்
போதமய மாயென் புலம்.

1156. அறிவே யெலாமா வறிந்தநா னந்த
வறிவேதா னாக வமைந்தே—அறிவிற்
பிறிதொன்று மில்லாப் பிரம்ம சொரூப
வுறவொன்றி நின்றே னுளத்து.

1157. வாழ்விற் கலந்தவருள் வள்ளற் பிரான்சொருப
வாழ்வே யெனக்குரிய வாழ்வாக—காழ்வளர்சாந்
தானுபவ மோன மலர்ந்து விளங்கலால்
வானளவிற் றென்சொருப மாண்பு.

1158. தெரிய வரிய சிவனிவ் வடியேற்
குரிய சொரூபமா வோர்ந்தேன்—துரியவியற்
சோதியா மான்ம சொரூப னகப்புத்திக்
காதியாத் தானொளிர்கின் றுன்.

1159. சுட்டறிவுக் கேதுவாத் துன்று மகந்தையறக்
கெட்டொழிய வென்னுட் கிளர்சொருபம்—கெட்ட
[மலப்
பாழிருளுக் கப்பாற் பராற்பரமாத் துன்றுமியற்
காழுறுசத்* தான சிவம்.

* சத்தான – சத்தாமாத்திரமான, உண்மையளவான.

1160. முனைக்கு மகந்தை முனைப்பற் றெழுந்து
தனக்குறவு பூண்டு தழைக்க—எனக்குத்
துணையாக நின்ற சொரூபமே மோன
வணையாக நின்ற தறிவு.

1161. மதித்தற் கறியவுயர் மாட்சிசே ருண்மைப்
பதத்திற் கருத்தைப் பதித்தேன்—மதர்த்தியல்சற்
போத சொரூபவருட் பூரணத்திற் சிந்தையற
வாதனையற் றேய்ந்தது மன்.

குறிப்பு:—போத சொரூப வருட் பூரணமே உண்மைப் பதமாக உணரத்தக்கதாம்.

1162. ஒருமயமா மோன வுணர்வொளிசேர் சாந்தப்
பெருமையிலே யென்சொருபம் பெற்றேன்—கருமமல
ஆணவமா மோக வகப்பேய்க்கூத் தாட்டமறக் [சேர்
காணருமெய்க் காட்சி கலந்து.

1163. நீக்கமற நிற்பதென் னெஞ்சத்தே யொன்றேடுந்
தாக்கற் றொளிர்பரமாந் தன்சொருபம்—மோக்கமென்
றோதப் பெறுவதவ் வுண்மையள வாகவொளிர்
போதப் புலத்தின் பொலிவு.

1164. யானென தெல்லா மிறைவனருட் செம்பதத்தே
தான்றன தாகத் தழைத்தலால்—யானடைந்தேன்
சித்தக் கலக்கமறு சிற்சொரூ பானுபவப்
புத்தமுத போகப் பொலிவு.

1165. மாயப் பகையான வஞ்சவகப் பேய்கரப்பத்
தேசப் பிழம்பான சித்தகமாய்ப்—பாசமறக்
கெட்டொழிய ஞானங் கிளர்தலாற் றன்சொருபம்
பெட்டொழுகப் பெற்றேன் மகிழ்ந்து.

1166. யாதொன் றிதயத் தியல்பா விளங்குந்தன்
மீதன்பு பொங்கவருள் வெற்றியால்—சூதொன்
றகந்தையறப் பெற்றூர்க் கடியே னதனை
முகந்தேன் முனைப்பற் றொழிந்து.

குறிப்பு:—பெற்றூர்க்கு விளங்கும் எனக் கூட்டுக.

1167. பற்றுசிவ போதவருட் பார்வையாற் பற்றுக்கோ
டற்றொழிய மோக வகந்தைமதி—உற்றதெனக்
கன்புசிவ மான வகண்டசொரூ பானுபவம்
துன்பவின்ப தொந்தந் தொலைந்து.

1168. அதிசூக் குமமா வவிர்பதத்தே நானென்
மதிசூக் குமமா மடுத்தேன்—மதியாற்
றெரியக் கிடந்த திரிபுடிபோ யொன்று
விரியக் கிளர்ந்ததுதன் மெய்.

1169. உணர்வே சொரூபமா வுள்ளேன் சொரூப
வுணர்வா லயறபுலமோன் றூரேன்—உணர்வை
உடலொடுசம் பந்தித் துழலு மகங் கார
மடமன்றோ மாய வுலகு.

1170. ஊன வகந்தை யொழிதலா லென்சொருபம்
மோனவெளி யாக முடிந்ததே—ஈன
விளிவரல்சேர் சிந்தையெனக் கில்லேன் சொரூப
வொளிவரலா லென்ற னுளத்து.

1171. சுவத்தமா வுள்ள சொரூபானு பூதித்
தவத்திலே மோனந் தரித்தேன்—விவர்த்தமாம்
இவ்வுலக வாழ்வி லியற்றினுமென் னென்னவெனக்
கவ்வியல்பு மாறா தகத்து.

1172. ஒருமை யுணர்ச்சியா லுண்மைசேர் மோனப்
பெருமையென் னுட்பொலியப் பெற்றேன்—இருமை
பேதமறப் பொங்கும் பிரம்ம சொரூபானு [சேர்
பூதியியல் பாகப் புணர்ந்து.

1173. உள்ளவொனு மோன வொருமைசே ருள்ளுணர்வாற்
கள்ளமனே மாயையறக் கண்டமைந்தேன்—விள்ளா
வருட்சிற் பரமென் னகவுருவே யான
தெருட்சித் திறத்திற் செறிந்து.

குறிப்பு:—உள்ளுணர்வால் மாயை யறக் கண்டு, தெருட்சித் திறத்திற் செறிந்தமைந்தேன் எனக் கூட்டுக.

1174. அகத்தடங்க லுற்ற வருள்விருத்தி யாலே
தகத்துலங்கு கேவலமெய்த் தன்மை – அகத்துருவா
நிற்றலா லான்ற நிறைவா மனுபூதி
உற்றதியல் பாக வுளத்து.

1175. காணு மனேமயமாங் காட்சியன்று பேதமே
பேணுமகங் காரவுருப் பேர்ந்ததால்—வேணவா
வானவருள் வேட்கை யதிசா ந்த மாவொளிர்சிற்
பானசொரூ பானு பவம்.

1176. தோன்றுதொட்ட மோகமனச் சுட்டுணர்வாம் பேத
வொன்றுபட்ட யோக வுணர்விலே—குன்றிலிட்ட [மா
தீபமே போலத் திகழ்சொருபம் பூரணமெய்த்
தாபரமா மன்னுந் தழைத்து.

1177. தன்னையலால் வேறொருமெய்த் தத்துவமுண் டாக [மனத்
துன்னவொனு மோன வொருமையிலே—என்னியல்
வோர்ந்தே னனுபவமா வுள்ளத்திற் பேதமறத்[வாழ்
தீர்ந்தேன்யா னென்னுஞ் செருக்கு.

1178. வேறுபா டற்று விளங்கு சொரூபமே
ஊறுபா டற்றவென் னுண்மையாத்—தேறலான்
மாயா விகார மயக்கமறப் பொங்குசுப
நேயானு பூதிநிறைந் தேன்.

1179. புத்திக் கலக்கமறப் போக்கு சொரூபவருள்
வித்தை விளங்க விளைதலால்—சித்தப்
புழுக்கமறப் பொங்குசிவ போகமார் சாந்தி
செழிக்கத் திளைத்தே னுளத்து.

1180. மன்ற விளங்கியசீர் மங்கலவாழ் வென்னுளத்துத்
துன்றுபரஞ் சோதி சொரூபமே—என்றுமெனக்
கன்புகுன் றாத வருட்பரமாஞ் சிற்பதப்பே
ரின்பவடி வான வியல்.

1181. தானேதா னாகத் தலைப்பட் டொளிர்சொருப
னானேநா னென மெய்ஞ் ஞானவொளி—மானே
முதலாய பேதமற முற்றும் விழுங்கி
யதனு லதீதமா னேன்.

1182. அகத்தி லளைந்த வனுபூதி யாலே
யிகத்தும் பரத்துமெனக் கெல்லாம்—மகத்தா
விரிந்த சொரூப விபூதியாய் மோனம்
பரந்ததியல் பாகப் பழுத்து.

1183. ஞானப் பரசொருப நாட்டத்தால் என்னகப்பா
லூனப் பசையறுபே ருள்ளுணர்வால்—ஈனக்
கலக்கச் சுழற்சிசேர் காம மயக்க
வலக்கணறப் பெற்றே னகத்து.

1184. விஞ்சையிலே மிக்கபெரு விஞ்சையா மோனவருள்
விஞ்சையென் னுள்ளே விளங்கலாற்—செஞ்செவே
தாக்கற் றுளிர்சொருபத் தத்துவமே புத்தகமாய்
நோக்கலுந்றே னுண்மை நுனித்து.

(கொச்சகக் கலிப்பா)

1185. தேட வொணுமெய்த் திரவியமாஞ் சிற்பதத்து
நீடியபே ரின்ப நிலையான சொந்தவியல்
வீடுபே றாக விளங்குவது சிச்சடத்தை
யூடுருவி யுள்ளத் தொளிர்சொருப நோக்கமே.

1186. மட்கவோ வன்றி மறக்கவோ பாசத்தாற்
றட்கவோ மற்றென்றுற் றுக்கவோ சற்றுமொண்ணுப்
புட்கலமாங் கேவலசற் போத சொரூபமே
நட்கலுறு மோன நயப்பாக வுள்ளதே.

1187. அவத்தமகற் றுண்டா னருளால் உலகு
விவர்த்தமே யாக விளங்கலால் என்னுட்
சுவத்தமா வுள்ள சொரூபானு பூதி
சிவத்துவவாழ் வாகத் தெளிந்தமைந் தேனே.

1188. மூடுமோ கப்பாழ்ம் முனைப்பற்ற மோனவியல்
விடுபேற் றுண்மை விளக்கமாச் சற்றுமுளத்
தூடுபே ராம லொளிர்சொருபச் சிற்பதமே
பீடுசேர் சுத்தப் பிரம்மபத மானதே.

1189. உண்மைத் துலக்கமா வுள்ளத் தொளிர்சொருப
வண்மையே யன்றிமற்றோர் வண்மைநான் கண்டி
விண்மையே போன்ற வெறுங்கற் பிதமாக [லேன்
வுண்மயலாற் றேன்று முலகப் புலன்களிலே.

1190. முழுமுதல்வாழ் வானசிவ மோனனு பூதி
நழுவா திதயத்து நண்ணலாற் கண்டேன்
எழுவா யிறுவா யிலாதொளிரென் மெய்யே
எழுதா மறையி னிலக்கியமா மென்றே.

1191. வெளியா விளங்குறுமெய் வித்தகன்பால் வஞ்சக்
களிசேருன் மத்தவகங் காரங் கரக்கத்
தெளிவா வொளிர்சொருபச் சிற்பதவாழ் வுள்ளத்
தனிவா லகன்பரமே யாயிற் றகமே.

1192. வெளியாக வுண்மை விளங்கலுற் றேனுக்
கொளியாக வுற்ற துடையா னருளே
தெளிவான மோனத் திறத்தா லறிந்தேன்
எளியேன் சொரூப மிறைசொருப மென்றே.

1193. அவமான மோக வகப்பேய் கரக்கச்
சிவமே சொரூபமாத் தேறத் தெளிந்தாங்
கவரோ கணமேமற் றுரோ கணமே
தவறுன மாயமாத் தப்பின தாமே.

1194. முனைந்த வகந்தை முடிச்சறக் கண்ட
வனந்த சொரூப வருட்சிற் பதத்திற்
கனிந்தமெய் யன்பாற் கலிதீர்ந் தொழிய
மனந்தெளி வுற்று மலிந்தது மாண்பே.

1195. அறிவியல்வாழ் வாக வகத்தில் விளங்கும்
நிறைவெளியே நான்கண்ட ஞேய சொரூபம்
மறவிசே ருன மயக்க வகந்தைத்
துறவிலே துன்று துரீயப் பதமே.

1196. ஏக்கறவு சேர்ந்தயா னென்னுமுனைப் பற்றொழியத்
தாக்குபர மோன சதாசிவமா வென்னகத்து
நீக்கமற நின்றொளிர்மெய்ஞ் ஞேய சொரூபமே
நோக்கமா நோக்கியது நுட்பவொட்ப விட்புலமே.

1197. அருளிற் கரைந்தமெய் யன்பு மனத்தால்
இருளற் றொழிந்த விதய வெளிக்கட்
பொருவில் சொரூபப் புரணு பூதி
மருவிச் சிதாகாச மாட்சிபெற் றேனே.

1198. கொந்துமா சாபாசக் கொந்தளிப்பா(ம்) மோகவகச்
சிந்தைக் கலக்கமறச் சித்தந் தெளிதலாற்
சொந்தவியல் பான சொரூபமுள்ள துள்ளபடி
விந்தைசேர் சுத்த வெளியா விளங்கியதே.

1199. களங்கமா மோகமனக் கற்பனைதீர் உண்மை
வளங்குலவு சுத்தவருள் வைப்பா வகத்தில்
விளங்குசிவ ஞான விழுப்பதமே சற்றுந்
துலங்கலரு சொந்த சொரூபவியல் *பாய்த்தே.

* ஆய்த்து - ஆயிற்று.

1200. தெளிவா விளங்கத் திளைத்தே னகத்தில்
வெளியாக வுள்ள விசுத்த சொரூபம்;
ஒளிசேர் சொரூப வுணர்வால்யா ஞேரேன்
களிசே ரகந்தைமனக் காரா ணவமே.

## 19. உன்மனீபாவ முறல்

(வெண்பா)

1201. பரம சிவத்திற் படிந்த மனத்தாற்
றருமா தருமந் தணந்தேன்—ஒருமையாந்
தன்மையிலே பன்மை தழைத்தொளிரத் தன்மயமா
வுன்மனீ பாவமுற் றேன்.

## 20. விசாரமும் விளைவும்

(குறள்)

1202. குடைநிழற்கோ வாகக் குலவலுற்றேன் உள்ளத்
தடையலால் வந்தவழி யாய்ந்து.

(கொச்சகக் கலிப்பா)

1203. முனைக்கலுற்ற நானென்னும் மோகப் பசாச
மனக்கற் பனையறவே மாற்று முசாவாற்
றனிக்கே வலசொருபத் தன்மைசார்ந் தேனுக்
கினிக்கலக்க மின்ரு வியல்வதுபே ரின்பே.

1204. இறவா நிலையடைந்தேன் யானுரென் றுள்ளத்
தறிவாக வென்னை நா னுய்ந்தறிந்த வாற்றுற்
பிறவா விறவாமெய்ப் பெற்றிசே ரந்தச்
செறிவான சுத்த சிவத்திற் கலந்தே.

குறிப்பு:—அந்தச்செறிவு – அறிவுச்செறிவு;
பிரஜ்ஞான கனம்.

1205. தற்பரமா முண்மை தலைப்படுமா ருய்ந்தாய்ந்து
சிற்பரமா வுள்ள சிவன்கழலே தேர்ந்ததனுற்
கற்பனைதீர் சுத்தவருட் கைவல்ய மாண்பான
பொற்பதமென் னுள்ளுணர்விற் பூமாவாப் பொங்கி
[யதே.

1206. பொய்த்தத் துவங்களிலே புக்கழுந்தி நானெனதென்
றெய்த்துக் கலங்கியநான் யானுரென் ருராய்ந்து
சுத்தசச் சித்தாத் துளங்குசொரூ பானுபவ
வித்தகத்தாற் கைவல்ய வீடடைந்தேன் மித்தையற்றே.

## 1. இதயம்

(குறள்)

1207. தோன்றுபல பேதத் துயக்கற் றொழியவகத்
தூன்றியதோ ருண்மை யொளி.

1208. கள்ளமனக் கற்பனைதீர் கைவல்யக் காட்சியால்
உள்ளமே யாயிற் றுணர்வு.

1209. உண்மைத் திறந்தெளிந்த வுள்ளமவ் வுண்மையே
யாக வலர்வுற் றது.

(வெண்பா)

1210. மோனமே கைவல்ய முத்திப் பரசுகமா
யானடைந்த வாழ்வா மிதயமே—ஊனமில்சச்
சிற்பரமா வோங்குசிவத் தேஜோ மயலோகம்
மைப்பசுபா சங்கடந்த வைப்பு.

(கொச்சகக் கலிப்பா)

1211. சுத்தப் பரசிவமாத் தூன்று சொரூபவருள்
வித்தகமெய்ஞ் ஞான விபூதியா வேதாந்த
மெய்த்தவவாழ் வானந்த வெள்ளமா உள்ளமே
நித்தியமா முத்தி நிலையாக விஞ்சியதே.

1212. உள்ளதே வாழ்வா வுவத்தலுற்ற வென்னுணர்வூ
டுள்ளதே யன்றிமற் றென்றுங் கலத்தலில்லை;
தெள்ளிதா வுள்ளசிவச் சிற்பரமோ னனுபவ
வெள்ளமே யாக விளைந்ததென் னுள்ளமே.

1213. துள்ளு மகந்தைமனச் சுட்டற் றொழிதலால்
உள்ள வொழாத வொருமையுணர் வூறவருள்
வெள்ளவொளி யாக விளைந்த சதாசிவமென்
னுள்ளமே யாக வொளிர்தலுறப் பெற்றதே.

1214. எள்ளளவுங் கள்ள மிலேனுகை வென்னகத்துத்
தெள்ளியதோ ருள்ளமாச் சேர்ந்தபிரான் மாட்டெ
தள்ள வொழாத சதாசிவசாந் தானுபவ [னக்குத்
வெள்ளமே யாக விளைந்ததுகா னுள்ளமே.

குறிப்பு:—ஆனந்த வெள்ளமா வுள்ளமா யினையே.
(சேந்தனா)

1215. சுத்தத் துரீய சொரூபப் பரசிவத்திற்
செத்த மனத்தாற் செழிக்கநான் வாழ்கின்றேன்;
நித்தமா வுள்ள நிரதிசயா னந்தசுப
வித்தகவாழ் வாக விளங்கியதென் னுள்ளமே.

1216. மனவடிவே யாக மனத்தில் விளங்குந்
தனதடியே மிக்கபரந் தாமமாத் தங்க,
நினைவுமற வற்றொழிய நீடுவதோர் சுத்த
நனவொளியே யுள்ளமா நண்ணலுற்ற வாறே.

1217. ஈன வகந்தை யெழாது நசித்தொழிந்த
மோனவுணர் வேசொருப முத்தியா வுள்ளொளிர்
ஞானமுற் றேற்கசுமே நல்ல சிவசொருப [மெய்ஞ்
வானமா வெங்குமென் றும் மன்னியதொன் றாகவே.

1218. என்றுமொன் றான வியற்சிற் பரவுண்மை
மன்றவிளங் குற்ற மனத்தால், விகற்பமறத்
துன்றுசொரூ பானுபவச் சூழலா மெய்யிதயம்
வென்றிசேர் கைவல்ய வீடா வியன்றதே.

1219. உள்ளுணர்விற் றெள்ளிதா வுண்மை விளங்கலாற்
கள்ளவுணர் வான கலக்கங் கழன்றொழிய
உள்ளமே யாக வொளிர்சொருப மாட்சியுற்றேன்
வெள்ளவெளி யான விசுத்தப் பரசிவத்தே.

1220. வீடுபே றாக விளங்கு சொரூபவருட்
பீடுசேர் ஞானத்தாற் பேயா ணவங்குலைய
நீடுயர்பே ரின்ப நிலையமா மோனவெளி
யூடுருவி யுள்ளத் துளமேயா வைகியதே.

1221. துலங்க விளங்கு துரீய சொரூபப்
புலங்கிளர்மெய்ஞ் ஞானனு பூதிசே ருள்ளம்
வளங்கிளர்பே ரின்பவருள் வைப்பான மோன
நிலங்கலந்து தன்னியல்பா நீடிற் றினிதே.

1222. இருளியல்சே ராமெய் யிதயமே சுத்தத்
தெருளியல்பா வோங்குசிவச் செம்பதமாத் தேர்ந்
அருளையே நம்பியவென் னுகத் தகச்செம் [தேன்
பொருளியல்பாப் பொங்கிப் பொலிந்தவத னாலே.

1223. விரிசகமாத் துன்றுமன வாசனு *வீசத்
துரிசகல்சுத் தான்ம சொரூப வொளிசேர்
அரசிருக்கை யாக வடைந்தவகம் பாரப்
பரசிவக்கை வல்லியமாப் பற்றியதென் பாலே.

*வீசம் – பீஜம், வித்து.

1224. அலக்க ணுறும்பா ழகந்தை மனப்புன்
கலக்கமறக் கண்டவருட் கைவல்ய வுண்மைத்
துலக்கமார் சொந்த சொரூபானு பூதிக்
கிலக்கமாத் தூன்றிற் றிதயத் தலமே.

1225. தனைத்தவிர்த்தொன் றின்றியெலாந் தன்மயமாப் [பொங்கத்
தனித்தொளிர்சுத் தாத்துவிதத் தற்பரமோ னத்தால்,
மனத்தைக் கடந்த மகத்துவஞ்சே ருண்மை
இனைத்தெனநான் கண்டேன் இதயவெளி தானே.

1226. வெருவர லற்று விளங்குமோ னத்தாற்
றிருவருள் வாழ்வாத் தெளிந்தவென் சித்தத்
தொருகுறை யற்றொளி ருண்மையா லுள்ளம்
பரவெளி யாகப் பரந்துமுற் றிற்றே.

1227. பிறிவற் றொளிர்சற் பிரம்மமன்றி யுள்ளத்
துறவொன்றுந் தோன்று வொளிவெளியா வுள்ளேன்
வெறியுற் றகந்தை விசைத்துநா னென்று
பொறியொன்றி லன்றிப் புலமில்லை யன்றே.

1228. திண்மைசேர் மோகச் செருக்கறச்செற் றுண்டவனுற்
றெண்மைசேர் சுத்த சிவானுபவச் சீர்மைபெற
வண்மைசேர் கைவல்ய வைப்பா வியல்வதெனக்
குண்மை யுணர்வா வொளிர்மெய் யிதயமே.

குறிப்பு:—ஆண்டவனுல் இயல்வது என வினையும்.

1229. துன்பான மோகத் துயர்கெடக்கண் ஞெக்குறுமெய்
யன்பான சுத்த வறிவே சொரூபமா
என்பா லெழுந்தருளி யேற்றுன் றிருவடிப்பே
ரின்பா லியன்றதாக் கண்டே னிதயமே.

1230. வெளியா விளங்கு விசுத்த சொரூப
வொளியே பரமார்த்த வுள்ளமாய் மோகக்
களிசே ரகந்தைமனக் கற்பனைதீ ருண்மைத்
தெளிவான வாழ்வாத் திகழ்கிற்ப தாமே.

1231. வெருக்கொளா வாறு வியாமோகஞ் செற்ற
குருக்களா லென்னுட் குகையொன்று கண்டேன்;
அரக்க வகப்பே யகன்றொழிய நானங்
கிருக்கலுற்றேன் மோன வியற்பரமாத் தானே.

1232. நுண்மைசேர் கூரியகண் ணேக்காலென் னூடுருவித்
திண்மைசேர் மோகவகச் சிச்சடஞ்செற் றுண்டவ
உண்மைப் பதமா வொளிர்ந்ததென் னுயிர்க்கு [னுல்
வண்மைசேர் சுத்தவருள் வைப்பா மிதயமே.

1233. ஒள்ளியா ஞான வொருவனருட் பார்வையெனக்
குள்ளுருவப் பற்றலா லூத்தைமலப் பாழிருள்போய்க்
கள்ளமனக் கற்பனு ஜாலங் கரந்தொழிய
உள்ளம் பரவெளியா வுற்றதுப சாந்தியே.

1234. கள்ளம் பயின்றவகங் காரமுனைப் பற்றொழியத்
தெள்ளத் தெளிந்தசிவச் சிற்பரமோ னுனுபவ
வெள்ளமா யாவும் விழுங்கிப் பரத்தலால்
உள்ளம் பரவெளியே உள்ளம் பரவெளியே.

## 22. நிட்டையும் பயனும்

(குறள்)

1235. பரமா வொளிர்சொருபப் பார்வையா லுள்ளத்
துரமாக வூன்றலுற் றேன்.

1236. சுட்டறிவு சூனியமாத் தூற்றினுன் சிற்பதத்து
நிட்டையிலே யாழ்ந்ததென் னெஞ்சு.

1237. அதிநுட்ப வொட்பமா வாண்டவன்பா லுள்ளம்
பதிவுற்ற தாழப் படிந்து.

1238. சித்தக் கலக்கமறத் தேற்றியதென் னுண்மைநிலை
சுத்தப் பரசொருபச் சொக்கு.

1239. நிட்டானு பூதியா நின்ற னகத்திறைவன்
மூட்டாத சிற்பரமா மூண்டு.

1240. மூண்டு நின் றனையென் னுள்ளத்து மோனமா
வேண்டவென் னுள்ள தெனக்கு.

1241. தனிக்கே வலசொருபத் தன்மையிற் பேதம்
எனக்கே தனக்கே யிலை

குறிப்பு:—தன்மையில் எனக்கும் தனக்கும் பேதமில்லை யென்பது.

1242. இசயத் தியல்பா விருந்தொளிர்சற் போதப்
பதியிற் பதிந்த துணர்வு.

1243. கற்கலுற் றேனுக்குக் கைவல் லியவுண்மை
நிற்கலுற்ற துள்ளத்து நீடு.

1244. கட்டுவீ டற்றவருட் கைவல் லியசொருப
நிட்டையே யாயிற்று நெஞ்சு.

1245. சுத்தவருட் செம்பதத்திற் சொக்கலுற்ற சோம்பலாற
செத்ததுயிர்ச் சேட்டைத் திறன்.

குறிப்பு:—உயிர்ச்சேட்டை - ஜீவபோதச் சேஷ்டை.

1246. ஆன்றசிவ ஞான வருட்பெருவாழ் வாகவகத்
தூன்றியது நிட்டை யுரன்.

1247. நலக்க விளங்குசிவ ஞானனு பூதி
நிலைக்க ணமுந்தியது நெஞ்சு.

1248. நெஞ்சிலுற்ற சுத்தான்ம நிஷ்டானு பூதியாற்
றுஞ்சியது வஞ்சத் துயக்கு.

(வெண்பா)

1249. நானு ரெனத்தெரிமெய்ஞ் ஞான விசாரவொளி
மோனனு பூதிபெற மூண்டதால்—யானென
வென்னை யிழந்திதயத் தின்பவெளி யாகவொளிர்
தன்னை யடைந்துதரித் தேன்.

1250. போதத் தெளிவிலருட் பூரணமாப் பொங்குசிவ
பாதத் தியானமகம் பற்றலால்—வேதச்
சிரஞான மோனச் செறிவான நிஷ்டை
உரமாக வூன்றிற் றுளத்து.

1251. புக்க சிவத்திற் பொருந்தியே நானதுவாத்
தொக்குவளர் போத சொரூபநிஷ்டை—சிக்கென [வென்
னுள்ளத் துறைத்தலா லோய்ந்த துலகியற்பொய்க்
கள்ளவிவ காரக் கனு.

1252. அருட்பரவாழ் வாக வகத்திற் சுடருங்
குருப்பதமா மோனக் குறியில்—விருப்புற்
றிறுகு முணர்வா லெழிற்சிற் பரமா
வுறுவதுநான் காணு முலகு.

1253. பாசவுணர் வான பராக்கொழியத் தன்சொருப
நேச வுணர்வொளிகூர் நிஷ்டையால்—வேசறவாப்
பற்றியசிந் தாகுலவெம் பாழ்ம்பிறவித் துன்பமற
முற்றியது முத்தி யுணர்வு.

1254. ஆசையாம் பாசபந்த மற்றொழிய வெட்டுசிவ
நேசமாக் கூர்சொருப நிட்டையொளி—நீசமனக்
கூட்டுறவா லுற்ற கொடும்பாவ மோகமற
வோட்டியதென் னுள்ளத் துறைந்து.

1255. அறிவா மெனக்கோ ரறிவுநான் காணேன்
அறிவேதா னுள்ளவே கான்மா—அறிவான
வொன்றே யலான்மற் றுபயமென் றுமின்றாக
நின்றேன் சொரூப நிலை.

1256. மங்கலமா முண்மை மகிழ்ச்சிதரும் போதவருட்
புங்கவொளிப் பார்வை பொருந்தலாற்—பங்கமறப்
பொங்கு சொரூபப் புலத்திலே புத்திமனந்
தங்குவன சாந்தி தழைத்து.

1257. பேரின்ப மாகப் பிறங்கும் பதத்திலன்றிக்
கூரன்பு மற்றெதிலுங் கொள்கிலேன்—ஓரம்
படாமலென் புத்தி பராற்பரமாந் தன்னின்
மடாநின் றதுதன் மயம்.

1258. சோகமோ கங்கெடுத்துச் சொக்கன ருளென்னகத்தா
டேகரச மாக விளைதலான்—மோகக்
கலையிலே சென்ற கருத்தொழிந்து சாந்த
நிலையிலே நின்றதென் னெஞ்சு.

1259. *செஞ்சொற் பொருளாத் திகழ்சொரூ பானுபவ
விஞ்சையா முண்மை விளக்கத்தால்—நெஞ்சிற்
பரமான மோனப் பழம் பொருளாம் பாதத்
தரமாக வூன்றிற் றுணர்வு.

*செஞ்சொல் - வேதாந்த மகாவாக்கியம்.

1260. உள்ளலெழு மூலத் துணர்வொளிப்பே ரின்பவருள்
வெள்ளமா மோன வெளியாகக்—கள்ளமனச்
சுட்டுணர்வு வெட்கச் சுடர்சொருபக் கைவல்ய
நிட்டையுரு வாயிற்று நெஞ்சு.

1261. தண்ணிழலா முற்றத் தழைத்தசிவ பாதவருள்
வண்ணமே யென்சொருப *வண்ணமாய்—எண்ணு
சுட்டறிவு மாளத் துலங்கு சிவானந்த [மனச்
நிட்டையிலே நின்றதென் னெஞ்சு.

* வண்ணமாய் நின்றதெனக் கூட்டுக.

1262. எல்லையிலாக் கண்ணு விருந்தொளிருந் தன்சொருப
நல்லியல்சேர் ஞானநிட்டை நண்ணலாற்—புல்லிய
[பாழ்ம்
பொய்ம்மயக்க மான புணர்ப்பற்று மோனவருட்
சின்மயத்தே வாழ்க்கைதிளைத் தேன்.

1263. உள்ளதாந் தன்மெய் யுணர்ந்தியல்சற் போதநிஷ்டை
தெள்ளிதா வுள்ளுணர்விற் சேர்தலால்—வெள்ளமா
மோனவருள் வாரிதியின் மூழ்கித் திளைத்தலியல்
பானவாழ் வாயிற் றகத்து.

1264. நியம மனைத்துமென் னெஞ்சினின்று முற்றப்
பெயரவருட் சோதிப் பெருக்கால்—அயர்வற்
றியல்சகஜ மானபே ரின்பநிஷ்டை கூடிற்
றுயிர்பரமே யாக வுணர்ந்து.

1265. செறிவதன்றி நானென் செயக்கடவே துண்டா
னறிவே பொருளா வளித்தான்—குறிகுணஞ்சே
ரஞ்சறிவு வாழ்க்கை யபத்தமன்றோ வாலறிவாந்
தன்சொருப வாழ்வைத் தவிர்த்து.

(கொச்சகக் கலிப்பா)

1266. சுட்டறிவின் சேட்டையறத் துன்றுசிவக் கேவலவாழ்
வுட்டெளிவாய் மோன வுரம்பெற் றொளிர்தலால்
துட்டவகங் காரமனத் தோற்றமாங் கற்பனைதீர்
நிட்டையே தன்னியல்பா நெஞ்சமுறப் பற்றியதே.

1267. அறிவே சொரூபமா வாண்டவன் மோனக்
குறியே யெனக்குட் குலாவலால் வேற்றுக்
குறியொன் றிலேமனங் கூடாமல் உண்மை
நிறைவொன்று ளேய நிலையிற்கூ டிற்றே.

1268. பட்டி மனத்தாற் படைப்புண் டியல்கின்ற
கட்டுவீ டாதிக் கலக்க மகன்றதாற்
பட்டர் பிரான்பாற் பரமோப சாந்தசுக
நிட்டையே தன்னியல்பா நீடியதென் னெஞ்சமே.

1269. பட்டியா யுண்மைப் பதியைமறந் தாதரத்தோ
டொட்டியா வேசித் துலகிலுழன் றேனுக்குத்
திட்டியா லென்னைத் தெருட்டிஞா னுனுபவ
நிட்டையார் வித்தவன்பா லூன்றியது நெஞ்சமே

1270. அறிவே சொரூபமா வாண்ட பிரானோ
டுறவு கலந்தே னொருதன் மயமெய்ந்
நிறைவா மனுபூதி நிஷ்டையா லுள்ளத்
தறிவி லெனைத்து மவலமில் லேனே.

1271. தொக்கவறி வான சொரூப வொளிகிளரப்
புக்கவிறை தாளாணுப் புந்தி யுறைப்பநின்று
மிக்கபர ஞான விறல்வாளால் வெட்டினேன்
வற்கெனவே காழ்த்தபிர மாத மறலியையே.

1272. சொற்பனமா மாயமனச் சூதொழியக் கைவல்யத்
தற்பரவாழ் வான சதாசிவத்திற் றங்கலுற்றேன்
அற்புதமா வாண்டசீ ரங்கனுன் சுத்தவருட்
சிறுபதமென் னுள்ளஞ் செழிக்கலுற்ற வாற்றாலே.

1273. அஞ்சவிரண் டற்ற வருட்சிற் பரசொருப
விஞ்சையா லென்னை விளக்கினன் மெய்ப்பதத்து
நெஞ்சமுறைத் தூன்றுசிவ நிஷ்டானு பூதியொளி
வஞ்சவகப் பாழிருளை மாயமாப் போக்கியதே.

1274. இதமகமென் றெண்ண விரண்டிலா வாற்றால்
இதயவொளி யான விறைவன் வடிவில்
மதியை யொருதன் மயமாப் பதிவித்
திதமுறவாழ் கின்றேன்பே ரன்பவியல் பாலே.

குறிப்பு:—மதிக் கொளிதந்து என்ற உள்ளது நாற்பது
இங்கு ஆய்ந்தறியத் தக்கது.

1275. விருத்தமாத் துன்று விகற்ப மனத்தாற்
பரத்தை யகன்று பரிதபித்தே னுள்ளத்
தூரத்தசற் பத்தி யுணர்வளித்தாண் டான்பாற்
கருத்தை யிருத்திக் களித்தலுற் றேனே.

1276. வெட்டெனவே யல்லாது மெத்தெனவு வேண்டாத
துட்டவியல் வன்கணர்பாற் றேரா தடியேனைச்
சிட்டரினஞ் சேர்த்தவருட் சிற்பிரான் பொற்பதத்து
நிட்டையா லின்பநிலை நெஞ்சமுறப் பற்றியதே.

1277. வண்மைசே ரின்பமகிழ் வாழ்வான கைவல்ய
வுண்மைப் பதத்தி லொடுங்கலுற்ற வுள்ளுணர்வால்
விண்மையே போன்ற விகற்பமுளத் தொட்டாது
நண்ணியது மோனமெய்ஞ் ஞான சமாதியே.

1278. பெட்டாங் குலகிற் பிழைபட நா னூழ்த்தொழியா
துட்டா னறிவொளியா வுறறபிரான சிற்பதத்து
நிட்டானு பூதி நிறைதலால் வாழ்விலெனக்
கொட்டா தொழிந்த துடலுலக வாஞ்சையே.

1279. ஒட்டி யுடல்வடிவா யூன்றுணர்வாற் றோன்றலுற்ற
கட்டுவீ டெல்லாமே கற்பனையாத் தப்பியது
பட்டனருட் சிற்பதத்திற் பற்றலுற்ற நிட்டையால்
வெட்டவெளி யாக விளங்கியவென் னுண்மையிலே.

1280. அருட்சிற் பரவெளியின் பற்றுக்கோட் டால்என்
மருட்கற் பனைவிகற்ப மாயமற்ற வாற்றால்
பொருட்பெற்றி யானஅநு பூதியுளம் பொங்க
இருப்புற்றேன் மோன வியற்செம் பதத்தே.

1281. சிற்கணமா வுள்ள சிவத்திற் பதிந்துமனஞ்
சிக்கென நிற் கின்ற திறத்தாற் சிவபதமாத்
தொக்கநனு வான துரீயப் பரவொளிவாழ்
வொக்க நிரந்தரமா வூடுருவிப் பாய்ந்ததே.

1282. சுட்டற் றெழுந்த வுணர்வே சொரூபமெனிற்
கெட்டொழிய வேண்டியதே யானிதுவென் னுங்கிறி [யென்
றுட்டெளியப் பெற்றதா லொட்டொழியப் பெற்றேனுக்
கொட்டியது மெய்ஞ்ஞான யோகநிஷ்டை யோவாதே.

1283. பிரிந்தொழிய மோகவகப் பேயாட்சி யென்பாற்
*றிருந்தியது தெய்வத் திருவருட்சீ ராட்சி
இருந்தொளிர்வ தான வியற்சிற் பரத்திற்
பொருந்தியது புத்திமனப் புன்கலக்கந் தீர்ந்தே.

குறிப்பு:—*திருந்தல் - தெளிவாகப் பொருந்தல்.

1284. சிவமே யகமா வியல்வதெனத் தேற்றும்
தவமோன ஞான சமாதித் திறத்தால்
தவமாய மாகத் தவிர்ந்ததுநா னுற்ற
பவமான மோகப் பகலிற கனவே.

1285. தானேதா ஞகச் சதிர்த்த சமாதியே
வானேயா வுள்ள மகத்தான தன்னியல்பு
தானேதா ஞகத் தலைப்பட்ட வவ்வுணர்வில்
யானே யிதுவே யெனும்பேதம் யாதுமின்றே.

1286. மடந்தருபா ழான மனக்கற் பனையைக்
கடந்த சிவத்திற் கருத்தைப் பதித்தேன்;
படர்ந்தவகங் காரமதே பாவனையை முற்றக்
கடந்தசிவக் கேவலமாங் காட்டையுற் றேனே.

1287. ஊன்றலுற்ற வாற்ற லுளத்தூடு தற்பரமா
வான்றநிறை வானஞா ஞன்மநிஷ்டை யார்ந்ததனல்
மான்றகஞ வாக மயங்குலகக் கற்பனைக்குச்
சான்ற விளங்கலன்றிச் சதிரழிந்து மாழ்கேனே.

1288. சலிக்கலரு சுத்தசிவ தத்துவத்திற் சிந்தை
நிலைக்கலுறு மெய்ஞ்ஞான நிஷ்டை யுறலால்,
மலைக்கலுற்ற பேதமதே மாயமாம் பாச
வலைக்கணின்று தப்பி மடுத்தேன் பரமே.

1289. எல்லாமோர் மாய வியற்சித் திரவிளையாட்
டல்லாற் பரமார்த்த மன்றென் றனுபவமா
நல்லாங் கொளிர்சொருப ஞானநிஷ்டை மோகப்பா
ழல்லாட லுற்றே னகத்தருளாற் பொங்கியதே.

1290. நினைப்பற்ற மோன நிலையிலே ஞேயந்
தனைப்பற்றி நிற்கை ததாகார நிஷ்டை;
வினைப்பற் றொழிய விசிராந்தி யுற்றேன்
எனைப்பற்று மற்ற வியற்சிற் பரத்தே.

1291. கட்டுப் படாதவருட் கைவல் வியசொருப
நிட்டையே தன்னுருவா நெஞ்சங் கிளர்தலாற்
சுட்டறிவாம் பல்விகற்பத் தோற்றங்க ளோடெனக்கோ
ரெட்டுணையும் யாதோ ரியைபுமறந் தீர்ந்ததே.

1292. உண்மைக் கடவுட் குறையுளா வுற்றவருள்
வண்மைசே ருள்ளத்தில் வாழக் கிடைத்தலாற்
கண்மயலாத் தோன்றுலகக் கற்பனைமா யங்கரக்க
நுண்மைசேர் மெய்ஞ்ஞான நோக்கங் கிளர்ந்ததே.

1293. அறிவா விளங்குமான் மானுபவ மோனம்
பிறவில்லே ரின்பப் பெருக்கா வளத்து
மறிவிலாக் கைவல்ய வாழ்வு துலங்க
உறைதலுற்றேன் சுத்த வொளிவெளியாச் சீர்த்தே.

1294. தன்சொருப மாட்சி தனக்கே யறிவறியான்
முன்செய் தவத்தாலென் முன்னியலக் காண்டலால்
என்செயலே யன்றிநா னென்னு முனைப்புமறத்
தன்சொருப நிட்டை தரித்தேன்சச் சிற்பதத்தே.

1295. பட்டி மனத்தின் பதற்றமறத் தன்பதத்திற்
கட்டி யெனக்குக் கருணைபா லித்தானை
நிட்டையுணர் வானமெய்ந் நேச வுபாசனையாற்
பெட்டொழுக லுற்றேன் பிரம்மபதம் பெற்றேனே.

1296. நிட்டையிலே யென்னை நிறுவியமெய் ஞானவருட்
பட்டன்பா லார்ந்த பராபத்திப் பான்மையாற்
சுட்டறிவு கெட்டொழியத் துன்றியதந் தக்கரண
முட்டுப்பா டற்றபர மோனனு பூதியே.

## 23. யோகம்

(குறள்)

1297. சிக்கெனவென் னுள்ளஞ் சிறக்கவுறை சிற்பரத்தோ
டொக்கவியல் கின்ற துணர்வு.

(வெண்பா)

1298. பவரோக மோகப் படரகன்று வாழ்ந்தேன்
அவிரோத வுண்மை யறிவால்—சிவயோகம்
என்றுமுள்ள வுண்மை யியல்பான தன்சொருபம்
மன்ற வியோகம் மறப்பு.

## 24. கிரந்தி பேதம்

(குறள்)

1299. அறிவே வடிவா வவிர்ந்தாங் குடலோ
டுறவற் றொழிந்த துயர்க்கு.

(வெண்பா)

1300. திரண்டமயற் சிற்சடத்தைத் தேர்ந்துநா னென்
றிரண்டுபிள வாக வெறிந்தேன்—மருண்ட
பிறப்பிறப்பாஞ் சித்தப் பிராந்தியறப் பேர
வுறப்புணர்ந்த துண்மை யுரு.

1301. ஒன்றை யிரண்டா வுறழ்ந்தமயற் சிச்சடத்தை
வென்றிரண்டு கூறாக வெட்டினேன்—வென்றிசே
ரத்துவித ஞான வருள்வாளால் ஏகான்ம
தத்துவமா வுள்ளந் தரித்து.

1302. அரந்தையா லேங்கி யழுங்ககந்தை மோகங்
கரந்தொழிய மோனவெளிக் கண்ணே—கிரந்தி
விடுபட் டொளிர்சொருப விஞ்சையாற் பேதம்
பொடிபட் டதுமுப் புடி.

1303. இகலுற்ற* மோக விதயக் கிரந்தி
பகலத் திறந்தவெளி யாகப்—பகல்போலத்
தேறத் தெளிந்த சிவத்துவத்தாற் சீவமதித்
தூறற் றெழிந்த துளத்து.

*இகலுற்ற - பகைப்பட்ட. அகலத்திறத்தல் - முற்றத் திறத்தல்.

1304. கைவந்த நெல்லிக் கனியாச் சுயசொருப
தெய்வந் தெளிந்த திறப்பாட்டால்—மைவந்த
சித்தக் கலக்கமாஞ் சீவபோ தச்சேட்டை
பொய்த்துக் குலைந்ததகப் பூட்டு.

குறிப்பு:—நானென்னும் அகந்தைவடிவான இதயக் கிரந்தி.

(கொச்சகக் கலிப்பா)

1305. அத்துவிதப் பெற்றிசே ரான்ம சொரூபவியற்
சித்துவத்திற் பேதத் திறமனைத்துங் கற்பனையாப்
பொய்த்தொழியப் பொங்கிப் பொலியுமோ னனுபவ
வித்தையிற்பே தித்ததுகாண் மித்தியா பந்தமே.

1306. வெளியில் வெளியா விளைந்த சொரூப
வொளியே யொளியாக வுண்மை தெளிந்தேன்
களிவளர்வெம் பாசக் கலக்கமா வுற்ற
விளிவரல்சேர் சிச்சடப்பொய் யாப்பொழிவுற் றேனே.

1307. திரவியமா வுள்ள சிவத்துவவாழ் வோங்கப்
பரவியல்பா மோனவருட் பார்வை படைத்தேன்;
பரவியது சொந்தப் பரமார்த்த வுண்மைத்
திரவியல்பு சித்தமலச் சிச்சடம்பே தித்தே.

1308. முனைக்கலுற்ற வாணவப்பாழ் மோகவகங் கார
மனக்கட் டவிழ்ந்து மலர்ந்தமோ னத்தாற்
றுனிக்கவல்சே ராத சுகந்துலங்க லுற்றேற்
கினிக்கலக்க மில்லை; இயல்வதுசச் சித்தே.

1309. மோனந் துலங்குசுப முத்தியுணர் வின்பவருள்
வானமா முற்ற வளைத்தலா லுள்ளத்தில்
யானென்று சிச்சடக்கட் டாவெழுந்த பாழகப்பேய்
போன துருக்குலைந்து பொன்றவறி தாகவே.

குறிப்பு:—முத்தியுணர்வு வானமா உள்ளத்தில் வளைத்தலால் எனக் கூட்டுக.

1310. மாறுன மாய மனங்கழிய வாழ்வுசிவப்
பேறுக வாண்டவன்றுள் பேணுமென் னுள்ளத்தே
வீறுப் பறவகந்தை வெட்கித் தலைசாயக்
கூறுகச் சிச்சடப்பொய்க் கூட்டங் குலைந்ததே.

1311. வினைத்தொடர்பாம் பாசவுடல் *வீக்கவுணர் வற்றுப்
பணைத்தெழுந்தோங் குண்மைப் பரவெளியாத் தேற
எனைத்தெளிந்து கொண்டேன் இதயந் திறக்க
வனைத்துமொன் றுங் கேவலசுத் தான்ம பதத்தே.

*வீக்கம் - கட்டு, பந்தம்.

1312. ஒளிவெளியை யன்றியெனக் குண்மைப் பொருளாத்
தெளிவுறமற் றென்றுந் தெரியாத் திறத்தால்
இளிவரல்சேர் மோக விரட்டை விகற்பக்
களியுறுநா னென்னுமகக் கட்டற்ற தாமே.

1313. அஞ்சியமெய் யன்பரைநன் காதரிக்குந் தம்பிரான்
வஞ்சகனென் றென்னை மருதருட்கண் ணோக்கலால்
வஞ்ச மனத்தா மரைமொட்டுக் கட்டுவிட்டு
விஞ்சைசேர் சுத்த வெளியா மலர்ந்ததே.

1314. பிறிதிலா வத்துவிதப் பெம்மான் சொரூப
வறிவொளியென் னுள்ளத் தவிர்தலால், மாயக்
குறிகுணஞ்சேர் சிச்சடப்பாழ்ங் கோச வகப்பே
யறிவு குலைந்த தருட்கே வலத்தே.

1315. கில்லுறுமோ கப்பாழ்ங் கிரந்தி அடியேற்கு
நல்லமெய்ஞ் ஞான நடுநிலைகாட் டிக்கொடுத்த
சொல்லருசுஞ் ஞானத் துரீய சொரூபனருள்
வல்லமைகூர் நோக்கால் வகிர்பட் டொழிந்ததே.

## 25. துரீயம்

(குறள்)

1316. துரியானு பூதி துலங்கலால், இல்லேன்
பிரிவான மோகப் பிழை.

1317. தொடர்ந்துவிளங் கிற்றோர் துரீயம் புறத்து
நடந்துநடந் தெய்த்தே னகத்து.

1318. துய்ய துரீய சொரூபமே நானடைந்த
வைய னருட்சே வடி.

(வெண்பா)

1319. சிவத்தையன்றி யுள்ளத்துத் தேருத மோன
வவத்தைத் துரீய வறிவால்—சிவத்தில்
அசைபடக் காட்சியே யாவிவ் வகிலம்
இசைவுறத் தேறுகின் றேன்.

1320. அசுத்தமொரு காலு மடையா வனுதி
விசுத்தமா மோன வெளியாய்—நிசித்தமா
மூத்தை மலப்பா முடலகந்தை நோக்கமற்று
மாத்துரிய மாயிற்று வாழ்வு.

1321. மருவு துரீயமே வாழ்வா வுளத்தா
டுருவு சொரூப வொளியால்— உருவுபெயர்
மாத்திரமாத் துன்றுலக மாயமாம் பொய்க்கனவு
கோத்தகொடும் பாழ்குலைந்த தே.

1322. அன்பு மறிவு மொருங்கு திரண்டொளிர்பே
ரின்பவருட் செவ்வி யியல்விளங்கத்—தன்பரமா
நானற் றியங்கு நலஞ்சே ரனுபூதி
மோனத் துரீயப் பதம்.

(கொச்சகக் கலிப்பா)

1323. சூதுசேர் வஞ்சச் சுழலான மாயமன
வாதனையால் வட்கியுயிர் மாழ்கலுற்றே னுள்ளுணர்
பீதிசேர் பேதவகப் பேய்க்கலக்கம் பேரவருட் [வில்
சோதியா மூண்டதொரு சுத்தத் துரீயமே.

## 26. துரீயாதீதம்

(கொச்சகக் கலிப்பா)

1324. கரவுறுபொய்ம் மாயமனக் கற்பனைதீர் சுத்தப்
பரவெளியா முண்மைப் பதமே சொரூபத்
திரவியல்வாழ் வாகத் தெரிய விளங்கு
துரிய மதீதமாத் துன்றியது நன்றே.

## 27. தன்னிழப்பு

(குறள்)

1325. அறிவிலே யென்னையணை ந் தாண்டவற்கு நானென்
குறிகுணந்தோற் றென்னையிழந் தேன்.

(வெண்பா)

1326. என்னைத்தா னாக வியன்றெளிரச் செய்தசிவத்
தென்னை நான் முற்ற விழந்தொழிந்தேன்—அன்னி
பேத மயக்கப் பிழைசே ரகந்தைமதிக் [யமாம்
கேதமறு மோனங் கிளர்ந்து.

குறிப்பு:—தானாக - சிவமாக.

1327. எனைக்குறித்து நானேன் கவல்கின்றேன் யானென்
றனைக்கொடுத்து விட்டுத் தனக்கே—தனைக்கருத்தா
டன்னியமா நான்கருத யாரேநா னுண்டதனக்
கென்னை யிழந்தொழிந்த யான்.

1328. வான்கெட்டும் மண்கெட்டும் மன்னுசிவக் கேவலமாந்
தான்கெட் டறியாத் தலைவனுக்கு—நான்கெட்
டருட்பிழம்பாத் துன்று மனுபவத்தா லில்லை
மருட்புலம்பாத் துன்றும் மனம்.

1329. மானவகங் கார மயக்காற் செருக்கினேன்
மோனவருட் செம்மலா முற்றேன்றி—ஞானவெற்றி
வல்லாள ைக வலிந்தாண்ட வள்ளலுக்கென்
நல்லாண்மை நானிழந் தேன்.

(கொச்சகக் கலிப்பா)

1330. என்னு லியற்றவினி யாது மியலாவா
றென்னு ருயிரா வியல்சிவமோ னுனுபவத்
தென்னை யிழந்தாங் கியற்சிற் பரவெளியாத்
துன்னிதய மான சுவத்தவியல் சார்ந்ததே.

1331. தன்னையே முற்றத் தழுவலுற்ற மெய்யுணர்வால்
என்னது நா னென்னும்பொய் யெல்லா மிகந்தொழிந்
மன்னியபே ரின்ப வளாகமா மோனவெளி [தேன்;
துன்னியது சொந்த சொரூபமா வுள்ளத்தே.

1332. ஞான விறல்சான்ற நம்பனென் னுள்ளத்து
மோனவுணர் வாக முயங்கலுற் றனடிக்கீழ்
யானென்னும் மோக வெழுச்சியற்ற தன்னிழப்பால்
வான வகன்பரமா மன்னியதென் னுண்மையே.

1333. உன்னைநீ யாரென் றுணர்தியென வுள்ளுணர்வு
டென்னையாய் வித்தே யிதயத் திமைப்பொழுதிற்
றன்னையே யென்னுருவாச் சார்வித்த சற்குருவுக்
கென்னையே நானிழந்தே னின்பதுன்ப மற்றேனே.

1334. மயலறிவா மோக மனக்கற் பனைதீ
ரியலறிவா வுள்ள விறையோ னடிக்கீழ்ச்
செயலறநிற் கின்றேன் செயக்கடவ தோரேன்
முயல்வுறநா ன் யாதோர் முனைப்புமில் லேனே.

## 28. செத்துயிர்த்தல்

(குறள்)

1335. செத்தே னுயிர்த்தேன் சிவசொருபச் சிற்பதத்தில்
வைத்ததா லென்றன் மனம்.

1336. செத்துயிர்வாழ் கின்றேன் சிவாயநமச் சிந்தனையாற்
சித்துவமோ ஞனுபவஞ் சேர்ந்து.

(வெண்பா)

1337. சிவசத்திக் கூஞகைச் செத்துப் பிழைத்தேன்
அவசத் துயில்விட் டகன்றேன்—சுவசத்
துரீய வெளியிற் றுயிலுணர்ந்தேன் காண
மரீசிகையே யாயிற்று வாழ்வு.

குறிப்பு:— மரீசிகை - கானல்நீர்.

1338. சித்தித் திறந்தெளிந்த சிற்பரத்தில் யானென்னும்
புத்திக் கலக்கமறப் பொன்றலால்—செத்துப்
பிறந்தே னடியேன் பிரம்ம சொரூபத்
திறந்தொழிவே னல்லே னினி.

## 29. தன் மெய்யிய லறிதல்

(வெண்பா)

1339. அறிவுக் கறிவா வடியே னகத்திற்
செறிவா விளங்கு சிவத்திற்—பிறிவிலா
மோனவருட் பார்வையான் முப்புடியு மொன்றுபட
யானடைவுற் றேன்மெய் யியல்.

1340. பரம பதத்திற் பயின்றெழுகும் மோனத்
திரவுணர்வாற் சித்தஞ் சிவமாய்க்—கருமக்
கலக்கஞ்சேர் புத்தி கடைப்பட் டொழிந்தாங்
கிலக்கமுற்ற தென்மெய் யியல்.

1341. மறப்பற் றியல்சொருப மாண்பதத்தை நான்முற்
றுறப்பற்றி நிற்க வுளத்தே—திறப்புற்றுச்
சிச்சடமா மோகத் தெருமரல்சேர் பாசபந்தம்
மெய்ச்சுடரா மிஞ்சியதென் மெய்.

குறிப்பு:—பாச பந்தம் திறப்புற்று என இயையும்.

1342. வெளியே யுருவா விளங்குகுரு பாத
வொளியாலென் னுண்மையுளத் தோர்ந்தேன்—
மதுவே யியல்பா மனுதி யுருவாகக் [வெளியா
கதுவலுற்ற தென்றன் கருத்து.

## 30. தன்மயம்

(குறள்)

1343. உற்றமற் றெல்லா மொருதன் மயமாகப்
பற்றியது முற்றப் பரம்.

1344. தன்மெய் யறிவு தலைப்பட் டொளிர்தலால்
இன்மை யெனவொன் றிலை.

(வெண்பா)

1345. அறிந்தே னறிந்தே னருட்பதமாந் தன்னோ
டுறழ்ந்துமற் றென்று முருமே—சிறந்தொளிரவ்
வான்ம சொரூபத் தனைத்து மதன்மயமாத்
தான்மருவு சத்தித் தரம்.

1346. புத்தியோ கத்தாற் பொருந்து சொரூபசிவ
சித்தியா மோனந் திளைக்கவே—புத்தியா
*லேறிட் டறிந்தவை யாவுமொரே தன்மயமா
மாறிற் றருட்கே வலத்து.

* ஏறிட்டறிந்தவை—வேறாகச் சுட்டியறிந்த விஷயங்கள்.

1347. குருவருட் கோலவொளி கூடலா லுள்ளத்
தருவருக்க வன்னியமொன் றின்றி—வெருவரக்காண்
மோகக் கலக்கமற்று முப்புடியுந் தன்மயமே
யாகத் தழைத்த தறிவு.

1348. ஒன்றுநீ யல்லைநின் னன்றியொன் *றில்லையாம்
வென்றிசே ருண்மை விளங்கலால்—தொன்று
துன்றுமே கான்ம சொரூபப் பரவெளியா [தொட்டுத்
நின்றதென் னெஞ்சு நிறைந்து.

* இல்லையாம் - இல்லையான எனப் பெயரெச்சம்.

1349. ஒளிவெளியே யுள்ளமா வோங்கு முணர்ச்சித்
தெளிவியல்பா நின்ற திறத்தால்—இளிவரல்சே
ரூனவுடற் பாச வுணர்ச்சிகூர் பந்தமனம்
போனதுருப் பொய்த்தவ் வுளத்து.

1350. ஒளிவெளியே கண்ணு வொளிவெளியே யோர்ந்தவ்
வொளிவெளியே போகமா வுண்பேன்—ஒளிவெளி
தங்கு சொரூபவருட் சச்சிதா னந்தவியல் [யாத்
பொங்குவதென் புத்திப் புலத்து.

1351. ஒளிக்கொளியா வுள்ளவுணர் வுண்மை யொளியைக்
களக்கமறக் கண்டு கருத்தில் – விளக்கமா
மோனவெளி யாக முயங்கினே னத்துவித
ஞான சொரூபமாய் நான்.

1352. அறிவான பத்தியளித் தாண்டவனை விட்டுப்
பொறிவாயி லைம்புலத்திற் போகேன்—பொறிவாயி
லைம்புலத்திற் போனு லவையெல்லாந் தன்சொருபச்
செம்புலமாத் தேர்ந்தியல் வேன்.

## 31. உண்மையியல்பு

(குறள்)

1353. அன்பான சுத்த வறிவிலே கண்டேன்பே
ரின்பான வுண்மை யியல்.

(வெண்பா)

1354. காட்சியே யாட்சியாங் கண்ணு ரமுதசிவ
மாட்சியா லுள்ளம் மகிழ்பொங்கச்—சாட்சியாத்
துன்று சொரூபத் துரீயசுயஞ் சோதியெனக்
கென்றுமுள்ள வுண்மை யியல்.

1355. அருள்வாழ்விற் பற்றியமெய் யன்பா லகத்தூ
டிருள்சேர் மனமயக்க மின்ருய்—மருள்சே
ருலகவாழ் வுக்கோ ரொதுக்கிடமங் கின்றி
இலகலுற்ற தூண்மை யியல்.

(கொச்சகக் கலிப்பா)

1356. பேரியல்வாழ் வான பிரம்ம சொரூபவருள்
வாரிவழங் கொள்ளியசீர் வள்ளியான் ஊனவகக்
காரிருளை வாரிக் கடுக விழுங்கியெனக்
கோரியல்பா முண்மை யுணர்வொளியா வுள்ளானே.

## 32. உள்ளுணர்வு

(கொச்சகக் கலிப்பா)

1357. உள்ளுணர்வே யானவென் னுண்மையையே [நானெனும்பொய்க்
கள்ளவுணர் வானமனக் கற்பனையா லெய்த்தநான்
உள்ளுணர்வா வுள்ளத் தொளிபெறத்தா னுள்ளதை
வுள்ளுணர்வே காட்டி யுதவலா லோர்ந்தேனே. [அவ்

1358. *உள்ளதன்றி யில்லை யுணர்வென்று மோனத்தா
லுள்ளவா றுள்ளத் துணர்ந்துகொண் டேனுக்கு
வெள்ளமாத் துன்றுபல விஞ்ஞான கோடியுமவ்
வுள்ளவுணர் வான வெனையன்றி யொன்றுமின்றே.

* "உள்ளதல துள்ளவுணர் வுள்ளதோ"
—உள்ளது நாற்பது.

## 33. உண்மையுணர்வு—ஸத் தர்சனம்

(குறள்)

1359. வளங்குலவு வாழ்வா மலர்ந்த தருளா
லுளங்குலவு முண்மை யுணர்வு.

1360. களங்கலந்த சிச்சடப்பொய்க் கட்டறவே சாடிற்
றுளங்கலந்த வுண்மை யொளி.

1361. உள்ளவுணர் வேயென் னுருவா வொளிர்தலாற்
கள்ளமயல் காண்கின் றிலேன்.

1362. துருகமா முண்மை துலங்கலுற்றேன் சுத்த
சொரூபவிலா சத்தா லுளத்து.

1363. இனிது விளங்கிற் றிதயத் தியல்பா
நினைவரிய வுண்மை நிலை.

1364. ஆன்றமைந்த சுத்த வறிவே சொரூபமா
யான்றெளிந்தே னுண்மை யியல்.

(வெண்பா)

1365. பரசிவஞா னுனுபவம் பற்றலே யுண்மைத்
தரிசனமா வுள்ளுணர்வு சார்ந்தேன்—பரசிவத்துக்
கன்னியமா நானென் றகந்தைமுத லொன்றுண்
டுன்னியமா மோக மொழிந்து. [டென்

1366. வெருள்சே ருலக விகற்ப மயக்க
விருள்சேர்ந்த சங்கத் திடையே—அருளால்
எனக்கெளிதிற் றுன்றவகத் தேகாந்த வாழ்க்கை
எனக்கிலகிற் றுண்மை யியல்.

(கொச்சகக் கலிப்பா)

1367. தன்னாலே தான்விளங்கு தற்பரத்தா வேகாண்மற்
றன்னியங்க ளெல்லா மறிபடுப வாதலால்
உன்னலரு மோன வுணர்வுருவா வுள்ளசிவத்
துன்னலற வுள்ளொடுங்கி யுண்மை யுணர்ந்தேனே.

1368. துன்றுபர மார்த்த சொரூபமே மன்றவென்
றென்றுமுள வுண்மை யியல்பா வறிந்தேற்குக்
கன்றியபொய்ம் மாயமனக் கற்பனையா மங்கியது
முன்புநா னுண்மையா மோகித்த முற்றுமே.

1369. இறக்கப் பிறக்கவோ ரேதுவாம் பாழ்ம்பொய்
யுறக்கக் கலக்கமற வுண்மை தெளிந்தேன்;
மறக்க வொண்ணாதவருள் வாலறிவா வென்னுட்
சிறக்க விளங்கு சிவச்செம் பதத்தே.

1370. வெளியா விளங்கு விசுத்த சொரூப
வொளியாற் பரமார்த்த வுண்மை யுணர்ந்தேன்
களிசே ரகந்தைமனக் கற்பனையற் றேயத்
தெளிவான சாந்தசிவச் சீர்மைதிளைத் தேனே.

## 34. யான் - நான்

(குறள்)

1371. ஆணவப்பா ழானவகப் பேயிகப்ப வென்னகத்து
மாணவொளிர் சிற்பரமே நான்.

1372. ஒன்றுன வொன்றே யுளதுணர்வா வுள்ளத்து
நன்றும் பரமார்த்த *நான்.

* நான் - நான் என்பதன் உண்மைப் பொருளான சுத்தான்ம சொரூபம்.

1373. *நானேநா னாக நயந்தாண் டருளியது
தானேதா னந்தத் துவம்.

*ஈண்டு நான் என்றது தான் என்ற சொல்லால் உணர்த்தப்படும் தத்துவ சொரூபத்தை; நான் என்பதன் முடிந்தபொருள் அதுவே யாகலின்.

1374. எனக்கிறைவன் யானே, எனக்கடிமை யானே
பனற்கருமான் மானு பவம்.

குறிப்பு:—ஆன்மானுபவம் - ஏகான்ம சொரூபானுபவம்.

1375. ஆன்மானு பூதியா வாண்டவன்மெய் விச்சையால்
யான்மாறித் தானுயி னேன்.

1376. அறிவான நானே யதிட்டான மாகப்
பிறியா தெவற்றிலுமுள் ளேன்.

குறிப்பு:—எவற்றிலுமுள் ளோன் எனவும் பாடம்.

## 35. மெய்ந் நான்

(வெண்பா)

1377. என்றுமெனக் குண்மை யியல்வடிவாச் சிந்தைகடந்
தொன்றுபரந் தாம வுணர்வொளியால்—மன்ற
மனத்திலன்றி யொன்றுமற்ற மாண்புறுகை வல்யத்
தனைத்துமொன்று முண்மை யகம்.

1378. யானே வெளியே னுலகியலா லென்னினுமவ்
யானே மிகவரியேன் மெய்த்திறத்தால்—ஆனலோ
முன்னதுமற் றெல்லோருந் தாமறிவார் பின்ன
தெனைத்தவிர யாருமறி யார்.

குறிப்பு:—என்னினும்-என்றலும். உலகியலால்-உல
கியல் நோக்கத்தால்.

1379. எனக்குரிய வாழ்வா வியல்சொருப மாட்சி
நினைக்கரிய மோன நிலைகாண்—தனிற்கரியாத்
தானேதா னகத் தழைத்தொளிரவ் வேகான்மா
யானேதா னவியல்கின் றேன்.

1380. அதுதானே யாவிலுமோ ராருயிரா நிற்கு
மதனலே மற்றெதுநா னல்லேன்—எதனல்
அனைத்துப் பிறவு மறிபடுமோ தானத்
தனித்துவிளங் கப்பரமே தான்.

குறிப்பு:—அதனலே, அவ்வெல்லாவற்றுக்குஞ் சாக்ஷி
யாய்த் தானே தானகத் தனித்து விளங்கும்
(ஏகசச்சித்தான) அந்தப் பரமே நான்
(ஆவதன்றி) மற்றெதுவும் நானல்லேன் என்
பதாம்.

1381. இரண்டற்ற வுண்மை யெனதியல்பா வுள்ளந்
தெருண்டேன் சிவகதியிற் சேர்ந்தேன்—மருண்ட
[மனப்
பேயகந்தை காணேன் பிரம்மமாச் சேர்சொருப
நாயகந்தா னவுளது நான்.

(கொச்சகக் கலிப்பா)

1382. தோன்றக வுள்ள சொரூபவருட் கண்ணேக்கால்,
ஒன்றன தற்பரமா வுள்ளத் தியல்சொருப
நன்றன வுண்மையே யெக்காலு நாமன்றி
என்றனும் வேற விருந்ததின்மை கண்டோமே.

குறிப்பு:—கண்ணேக்காற் கண்டோம் என இயையும்.

1383. கற்பனு ஜாலங்கள் கைவல் லியசொருபச்
சிற்பரத்தின் மேலே திரிதரலா லூனமுண்டோ ?
தற்பரஞா னுனுபவத் தன்மையால் யானசங்கன்;
சொற்பனமே போலவென்பாற் றேன்றுவது முப்
[புடியே.

1384. அறிவி லறிவா வனைத்துமொடுங் குண்மைச்
செறிவுசிவ மாகத் தெளிந்தொழுக லுற்றேன்;
* இறவுபிற வந்த வியற்பதமெய் வாழ்விற்
சிறிதுமில்லே; சுத்த சிவமேகாண் யானே.

* இறவுபிறவு - மரணஜனனம்.

1385. அனியனு னல்லே னகிலத் தெவர்க்கும்
இனியனு வுள்ளேன்யா னேகான்மா வாக
மனியபர மார்த்த மகோதயமா நீடு
தனியனு மென்னிற் சலமாயை யின்றே.

1386. அகிலங் களுமே யசைபடங்க ளாகத்
தொகவோர் விசித்திரமாத் துன்றுகனு வேயா,
விகலமற்ற மோன விசுத்த சொரூபப்
பகலா விளங்குமென்பாற் பாசமென்று மின்றே.

1387. அறிவான வென்னே யறிவிப்பார் யாவர்
அறிவான நானே யவிர்கின்றேன் றுனு
அறிவான வென்மெய் யவிர்ச்சியா லன்றே
அறிபடுப வெல்லா வகிலங் களுமே.

குறிப்பு —'கண்ணுக்குக் கண்ணுய்க் கண்ணின்றிக் காணுனேக், காணுவ தெவர்பா ரருணசலா' என்னும் அக்ஷர மணமாலே (15. ) இக் கருத்தே இலக்குவதாகத் தேர்க.

1388. பிறிதா மகந்தையறப் பேரவிளங் குண்மை
யறிவாக நானே யவிரிலன்றி யுள்ளத்
தறிவான வென்னேமற் றுரே யறிவார்;
அறிவான சுத்த வருட்சத்தி நானே.

1389. அறிவான வென்னி லயல்யாது மில்லே;
அறிவான நானேசுத் தாத்துவித வுண்மை;
அறிவான வென்னே யறிதலுற்றூர் என்னிற்
பிறிதா மகந்தைமயல் பேர்ந்தொழிவர் தாமே.

1390. அருளிற் பிறந்தே னருளில் வளர்ந்தேன்
அருளில் விழித்தே னருளிற் றுயின்றேன்
அருளே யுணவா வயின்றேன் சொரூப
வருளாலவ் வுண்மை யறிந்தேனிப் போதே.

1391. நிறைவான மோன நிலேயிலே நானற்
றுறைவாக வுள்ளத் தொளிர்சொரூப வுண்மைப்
பொறையா லகிலப் புலவுலகங் கட்குந்
தறையாக வுற்றுமுற்றத் தாங்குகின்றேன் யானே.

1392. கதுவு மனேமயப்பொய்க் கற்பனு ஜாலத்
தெதுவுநா னல்லே னிடம்பொழுதொன் றில்லேன்
*எதுவிளேவு காணே னிதயத் தருட்சிற்
பொதுவெளியா வெங்கும் பொலிந்துநின் றேனே.

* எது விளேவு - காரண காரியம்; எது - ஏது என்பதன் குறுக்கல்.

## 36. நித்தமுக்தி

(வெண்பா)

1393. சற்போத மாகத் தழைத்த சொரூபவுண்மை
எப்போது முள்ள திதயத்தே—இப்போ
தறிந்தடைந்த வாற்று லயர்வற் றொழிய
நிறைந்துவிளங் கிற்றென் னிலே.

1394. பாதவொளி யானவருட் பார்வையாற் பாசபந்தஞ்
சேதமுறச் சித்தந் தெளிதலாய்—மேதகவா
மோனப் பராவமுத முத்திநிலே நித்தசித்த
மானவியல் சார்ந்தே னகத்து.

(கொச்சகக் கலிப்பா)

1395. சிந்தைசேர் மோகச் செருக்கழிவாந் தன்னிழப்பால்
அந்தமிலா மோன வருட்சிற் பரவெளியிற்
பந்தம் பகற்கனவா மங்கப் பரமுத்தி
சொந்தவியல் பாகத் துலங்கிற் றனுபவமே.

1396. கற்பனு மோகக் கலக்கமறக் கண்டவருட்
சிற்பரா னந்த சிவத்திலே கைவல்யத்
தற்பரவாழ் வான சதாமுத்தி விஞ்சலால்
அற்பமனம் பொய்த்தொழியப் பொங்கிற் றருள்
[வெளியே.

## 37. ஸோஹம்

(வெண்பா)

1397. ஒளிவளர்மெய் யுள்ளத் துபசாந்த போகக்
களிவளர்பே ரின்பங் கலக்கத்—தெளிவுற்றேன்
மோன வுணர்வு முதிர்ந்து பழுத்தலால்
யானவனு முண்மை யியல்.

1398. கண்ணு தியபொறியாற் கண்டுகேட் டுண்டுயிர்த்துற்
றெண்ணிமனம் புத்தி யினுலுணர்வேன்—உண்ணுடி
நானுரென் றென்னுருவை நானவனு வுள்ளுயிர்த்து
மோனமா வாழ்வேன் முகந்து.

1399. கள்ளனே னை கசடனேன் செய்தபிழை
யுள்ளியே யென்னையா னெள்ளினேன்—வெள்கினுன்
வள்ளியா னைபே ரொள்ளியான் யான்றனையே
யெள்ளினுற் போலெண்ணித் தான்.

## 38. சிவோஹம்

(குறள்)

1400. தன்னிலே தானுத் தழைத்தொளிர்தல் கண்டு
என்னிலிரண் டற்ற விறை. [கொண்டேன்

1401. என்னியல்பே யாக விதயத் தொளிர்தலால்
என்னினும்வே றல்ல னிறை.

1402. தன்னினும்வே றல்லாமெய்த் தன்மை தகத்தெளிவால்
என்னினும்வே றல்ல னிறை.

(கொச்சகக் கலிப்பா)

1403. நிறைவான வுண்மை நிலையிலே யென்னைப்
பிறிவறவாழ் வித்தவருட் பெம்மான் சொரூப
வறிவா லகந்தையற்ற வாற்று லகத்திற்
பிறிவறநிற் கின்றசிவப் பெற்றியில்வே றின்றே.

குறிப்பு:—பெம்மான் சொரூபப் பெற்றியில் வேறின்று
எனக் கூட்டுக.

1404. சிவஞான சித்தித் தெளிவா லிதயத்
தவஞால மோகமற வாண்ட பிரான்பால்
அவனுக வென்னை யறிந்தேன்; அறியேன்
பவமான மோகவகப் பாழா ணவமே.

1405. தன்னை யுணர்ந்தவர் தற்பரமாச் சார்தலாற்
றன்னதுகை வல்லியமெய்த் தன்மையே சாந்தியாத்
தன்னதியல் கண்டு தழைத்தலுற்றே னுக்குமற்
றன்னியமொன் றில்லை யகம்பரமல் லாமலே.

1406. இளிசே ரவிச்சை யிருட்பாழ் கரக்கத்
தெளிவா விதயக் கிரந்திபே திக்க
வெளியாம் பிரம்மமே வெற்றிசேர் ஞான
வொளிசேர் சொரூபமா வுள்ளுணர்வோங் கிற்றே.

1407. தன்னிலே தானுத் தழைத்தான் சொரூபமெனக்
கென்னிலே யானு வியைதலாற் கற்பனு
பின்னபே தந்தீர் பிரம்மமே யாகவகம்
மன்னுமியல் வன்னம் மலர்ந்ததுமாண் போங்கவே.

## 39. அத்துவிதம்

(குறள்)

1408. உள்ளங் கவர்ந்த வுடையான் சொரூபமென்றால்
உள்ள மறக்க வொணுது.

1409. பனற்கருசுத் தாத்துவிதப் பான்மைத்தே தன்னே
டெனக்குளதா முண்மை யியைபு.

1410. உறவு சொரூபமா வுள்ளான் உளத்திற்
பிறிவிலா வுண்மைப் பிரான்.

1411. ஓராஞே ருருவுநா ஞேரே னுளத்திற்
பிரானுருவை யன்றிப் பிறிது.

1412. சிற்பிரா ஞன சிவச்செம் பிரானின்மற்
றற்பமுமான் மாவே றலன்.

1413. ஒன்ருக வுள்ளா னுடையான் அவனினும்யா
னென்ரு யினுமிரண்டல் லேன்.

1414. அத்துவிதத் தன்மையா லாண்டவனே யென்னுருவா
மெத்தவிருப் புற்றேன் விழைந்து.

(வெண்பா)

1415. மோனப் பரவெளியா மூண்ட சிவானுபவ
ஞான மெனக்கிமையா நாட்டமாத்—தானளித்த
வாண்டான் சொரூப வருட்பே ரொளியிலெனக்
கீண்டாது காண்டற் கிரண்டு.

1416. உற்றமெய் யன்பருளத் தூண்மைசே ரத்துவித
வெற்றியுணர் வூட்டி விளங்குகுரு—அற்றமறத்
தேற்றியவென் னுண்மையாற் சிற்பரத்தி னின்
வேற்றுமைநான் காண்கின் றிலேன். [றெனக்கோர்

(கொச்சகக் கலிப்பா)

1417. களியனே னுள்ளங் கலத்தலா லாண்டான்
ஒளிவெளியா வென்மெய் யுருத்துலங்கத் தெள்ளத்
தெளியலுற்றேன் சுத்த சிவாத்துவிதச் சீர்மை
அளியனே ஞன வடிக்கடைநா யேனே.

1418. கள்ள வகந்தைமனக் கற்பனையற் ருேய்ந்தொழிய
வுள்ளத்தே தன்மெய் யொளிர்வித்த சுத்தவருள்
வள்ளற் பிரான்சொருப வாழ்வு மடுத்தலாற்
றெள்ளியது சுத்த சிவாத்துவிதச் சீர்மையே.

1419. ஆன்ம சொரூப வருட்பிரா னேனுமகத்
தியான்முளேக்கிற் றன்னுருவு தான்கரப்பா னென்
ஆன்ம சொரூப வவனினும்யான் வேறன்றென் [றலும்,
றன்மவறி வார்ந்தவிப்பா லாகங் கரவானே.

குறிப்பு:—உருவு, ஆகம் - சொரூபம்.

1420. கருத்தி லியல்பாக் கலந்த சொரூபக்
கருத்தன் வடிவைக் கருதுங்கால் அந்தக்
கருத்தென் மடமையைக் கண்டுநான் வெட்கச்
சிரித்த லறிந்து தியானம்விட் டேனே.

1421. மருண்ட வகந்தை மனக்கற் பனேசே
ரிரண்டென்று மற்றவவ் வொன்று வியன்றேன்
திரண்ட சொரூபச் செழும்பிழம் பாகத்
தெருண்டியல் கின்றேன் சிவச்சிற் பரத்தே.

குறிப்பு:—இயன்றேனுடைய சொரூபம்.

1422. குறிகுணஞ்சேர் பொய்ம்மாயக் கூத்தனு மென்னை
அறியப் படாத வறிவான வுண்மை
நிறைவுபெறக் கண்ட நிஜானந்த போதன்
பிறிவிலா வத்துவிதப் பெட்பறிந் தேனே.

1423. இன்றெனக்கு முன்னின் றிறைவனே தேற்றலால்,
தொன்றுதொட்டென் னேடு தொடர்ந்தசிவச் சீர்மை
[யுணர்ந்
தொன்றுபட்ட மோன வுணர்வொளிவாழ் வுள்ளத்துத்
துன்றியது; வென்றதொரு சுத்தாத் துவிதமே.

1424. உள்ளங் கலங்கா வுரஞ்சேர்மெய்ஞ் ஞானவருள்
வெள்ளங் கலந்த விசுத்தமனத் தன்மையால்
உள்ளந்தா னுக வுளானுருவை நான்மறுத்துத்
தள்ளவோ கொள்ளவோ சற்றுமிரு பேதமின்றே.

1425. தெரிவான் தெரியப் படுபொரு ளில்லாத்
தெரிவே சிவசொருபச் சிற்பரமாத் தேர்ந்தேன்;
குருவா விதயங் குலவுசிவக் கோமான்
துரியவியல் பேக சொரூபமென் றனே.

1426. ஞான சொரூபகுரு நாதன் பதவொளியாம்
மோனவுணர் வுள்ளத்து மூண்டொளிரப் பெற்றதால்
வான வளாகசிவம் வைகு நிலைக்கடலாப்
பேனமா யாவுலகும் பேதமறப் பேர்ந்ததே.

குறிப்பு:-சிதாகாச வடிவானசிவம் கடலாகவும், செகம் பேனமாகவும் தெரிதலால், சிவசெகங்களின் பேதம் தீர்ந்த தென்பதாம்; பேனம் - நுரை.

1427. அன்னியமல் லாதமெய் யன்புணர்வுண் டாகவகத்
தென்னதியல் கண்டே னிறைவனருட் சிற்பதத்தில்
உன்னவொரு சற்று முபயமின்று வற்றொழிந்த
தென்னதுநா னென்னு மயக்கவிருட் கற்பனையே.

1428. தன்னியனு நான்சிறக்கத் தன்னதருட் சிற்பதத்துக்
கென்னை நிவேதனமா வேற்றுக்கொண் டாண்டவன்
[பால்
அன்னியந்தோன் றுதகுத் தாத்துவிதத் தன்மை
[பெற்றேன்
துன்னுமே கான்ம சொரூபவியல் வாழியே.

1429. மனக்கலக்க மான மயக்கமற வுள்ளத்
தெனக்குந் தனக்கு மியைந்ததோ ருண்மை
நினைக்கவொணு வத்துவித ஞேய சொரூபம்
எனக்கண் டமைந்தே னியற்செம் பதத்தே.

1430. இயக்கமற வென்னை யிதயத் தொடுக்கி
மயக்கமனக் கற்பனையை மாற்றினன் றுட்கீழ்
உயக்கமற்ற வுண்மையுணர் வொட்பமுற்ற வாற்றல்
வியக்க நயக்கவென்னின் வேறென்று மின்றே.

1431. ஆண்ட பிரானுக் கறிவே சொரூபமா
ஈண்ட வறிந்தே னெனக்குமனைத் தாதலால்,
மூண்டஞா னுபவ மோனப் பரசிவவாழ்
வாண்ட பிரானடிக்கீ ழத்துவிதத் தன்மைத்தே.

1432. கூரியமெய்ஞ் ஞானக் குலாவால் உலகுக்கோர்
சூரியனே போலச் சுடர்விட் டொளிர்சொருபச்
சீரியனு லுள்ளத்திற் செந்நெறிகாட் டப்பெற்றேற்
கோரியல்சே ருண்மைநிலை யுள்ளுணர்வூ டார்ந்ததே.

1433. யான்றானு முண்மை யியல்விளங்க வுள்ளத்துத்
தான்றானு மோனந் தழைத்தொளிர்மெய்த் தற்பரன்
[பால்
ஊன்றுநின் றேனுக் கொழிந்ததொரு தன்மயமாய்,
மூன்று விரண்டா முகிழ்த்தமனக் கற்பனையே.

1434. மத்தனேன் மாய மயக்கறுத்த கண்ணேக்காற்
புத்தமுதா வூறுசிவ போகவருட் பெம்மானைச்
சித்தங் குளிரத்தித் திக்க நினைந்துநினை ந்
தொத்த வுணர்வா லுபயமறத் தீர்ந்ததே.

1435. என்னுண்மை யாக விதயத் துளானைமற்
றென்னின்வே றக விரண்டுபட வெண்ணினேன்;
துன்னுமே கான்ம சொரூபஞா னனுபவத்
தன்னவனென் னன்மாவே யாக வறிந்தேனே.

1436. அறிவான சுத்த வருள்விளக் கத்தால்
இறையோன் சொரூப வியல்கண்டு கொண்டேன்;
நிறைவா விளங்கலுற்ற ஞேய நிலைக்கட்
பெறவோ விழக்கவோ பின்னமொன் றின்றே.

குறிப்பு:—சுத்த வறிவான அருள்விளக்கம் என மாற்றிக் கொள்க.

1437. சுத்தவருட் போத சொரூபப் பிரானடிக்கண்
வித்தகசற் பத்தி விளைதலா லுள்ளத்திற்
புத்தமுத வாழ்வாகப் பொங்கு சிவானுபவத்
தத்துவித மோன வகன்பெருமாண் பார்ந்ததே.

1438. ஆவவென் றுண்டா னருளியதன் மெய்யுணர்வாற்
சாவெனும்பாழ் மோகத் தடுமாற்றந் தீர்ந்தொழிந்
[தேன்;
கூர்வயிர ஞானங் கொளுவியவாண் டான்சொருபச்
சீர்வளர்வாழ் வேயாத் தெளிந்தேனென் ஜீவியமே.

1439. பெரியபரஞ் சோதிப் பிரானால் விளங்கத்
தெரியலுற்றேன் சுத்த சிவாத்துவித வுண்மை,
விரியலுற்ற சுத்த வெளியாகப் பொங்கு
துரிய சொரூபமாத் தோய்ந்தவாற் றாலே.

1440. உள்ளமே யாக வுளசொச் சொரூபனைத்தா
னுள்ளத்தா லுள்ளுவதவ் வுள்ளமன்றாத் தான்மறுத் [துத்
தள்ளலும்அவ் வத்துவிதத் தத்துவமாந் தற்பரனை
எள்ளலுங்காண் யானென் றெழுந்த முனைப்பாலே.

1441. இறைவன் திருவடிப்பே ரின்பநிலை கண்டேற்
கறிவுபிறி தற்ற வருட்கே வலத்தே
மறவி நினைவு மகிழ்வு துயர்வோ
மறவி பிறவி யெதிர்படத்தோன் றாவே.

1442. என்றுமென் னுள்ளத் திடங்கொண்ட வெம்பெரு
முன்றிலெங் கெங்குமே முற்ற வளைத்தலால் [மான்
மன்றவென் வாழ்வு மலர்ந்துசிற் பூரணமா
வொன்றியது தற்பரத்தோ டோர்பெற்றித் தாகவே.

1443. சுத்த வறிவொளியாத் துன்று சொரூபவருள்
வித்தையின்முன் மற்றெல்லா வித்தைகளுங் கற்பனை [யாப்
பொய்த்தொழியு மென்னிலருட் பூரணமோ ரனுபவ
சித்தியா மத்துவிதச் சீர்மையையென் செப்புவதே.

## 40. அத்துவித பூஜை

(கொச்சகக் கலிப்பா)

1444. புலங்கடந்த சுத்தவருட் *போத சொரூப
நலங்கிளர்மெய்ஞ் ஞானகுரு நாதனையே தானாத்
துலங்க விளங்கு சொரூபானு பூதிப்
புலந்தெளிந்த புந்தியாற் பூஜிக்கின் றேனே.

*போத சொரூபமாகிய ஞான குருநாதன் எனக் கூட்டுக.

1445. தஞ்சமாத் தன்னருளே தாரகமாச் சார்ந்தேனைச்
செஞ்செவே யாண்ட சிவசொருபச் செம்மலுக்கென்
நெஞ்சமே யாலயமாம் நீராட்டு மெய்யன்பாம்
மிஞ்சுமபி மானமயல் வேட்கை நிவேதனமே.

1446. அருச்சனைபாட் டேயாக வாண்டவனைப் போற்றி
உருச்செபமாத் தேர்ந்த வுபாசனையா லுற்றேன்
அருட்செம் பதத்திலெனக் கார்வமுறப் பொங்கும்
பொருட்சம் பிரமப் பொலிவான வாழ்வே.

1447. தெளிவான ஜீவன் சிவசொருப மென்ன
ஒளிசே ருணர்வோ ருரைத்தவவ் வுண்மை
வெளியாக வென்னை விளக்கியாண் டானுக்
கொளிசே ருணர்வே யுபாசனைமற் றன்றே.

## 41. சிவம்

(குறள்)

1448. உண்மை நிலையா வொளிர்வதுளத் தொட்பநுட்பத்
திண்மைசேர் சுத்த சிவம்.

(கொச்சகக் கலிப்பா)

1449. மடவெள்ளை யேன்புன் மனத்தா டருளாற்
கடவுள்வாழ் வாகக் கலந்தசிவம் மோனச்
சுடர்வெள்ள மான சொரூபவெளி யாகப்
படர்வள் ளியல்புசிவ பாக்கியமெய்ப் பேறே.

## 42. எல்லாம் சிவமயம்

(கொச்சகக் கலிப்பா)

1450. அல்லா ணவப்பா ழனர்த்தவகப் பேய்முனைப்பாம்
பொல்லாங் கொழியவருட் பூரணமா வுள்ளத்த
நல்லாங் கவிர்சொருப ஞானனு பூதியால்
எல்லாஞ் சிவமயமா வேய்ந்ததோர் பெற்றியே.

1451. பொற்புடைமோ னனுபவப் பூரணமாத் துன்றுமியற்
சிற்பரமே யாகத் தெளிந்தவருட் சித்தமெனக்
கற்புதவாழ் வாக வகங்கிளரப் பொங்கலாற்
சொற்பனமாங் கற்பனையே தோன்றும் புலவுலகே.

## 43. சித்தம் சிவமே

(குறள்)

1452. சித்தந் தெளிந்தேன் சிவந்தெளிந்தேன்; சுத்தவருட்
சித்தத் தியல்பே சிவம்.

1453. சுத்தப் பரசிவத்திற் சொக்கியவாற் றுலெனக்குச்
சித்தம் பரம சிவம்.

(வெண்பா)

1454. அமுதவாழ் வாகவெனக் காரத் திளைக்க
வமிதமா வுட்பொங் கருளா—லமைதிசேர்
சித்தமே சுத்த சிவானுபவப் பாற்கடலா
வுத்திதமா மோன வுணர்வு.

1455. பரசிவத்தைப் பேணும் பரிசயத்தாற் சித்தம்
திரிசியத்தி னின்று திரும்பித்—தெரிசகத்தைத்
தேரு தொழியத் தெளிவான சுத்தவறி
வாரு வியல்கின் றது.

1456. அதாச்சிறந்த மோனஞா னனுபவத் தாலே
சதாச்சிரய வாழ்வு தழைக்க—யதேச்சையாச்
சித்த விருத்தி சிவசொருப மானவுல
கத்தே சரிக்கின் றது.

1457. ஓங்குசிவ பாத வுணர்வொளியே யென்னுளத்திற்
பாங்குபெறு மோனமாப் பற்றலா—லோங்கு
சிவமயமாத் தீர்ந்தது சித்த மெனக்குத்
தவமதுவே யாகத் தழைத்து.

1458. சித்தமெங் கெங்கெனக்குச் செல்கின்ற தோவங்கங்
கொத்தொளிர்வ தோங்குபர வுண்மையே—ஒத்தொ
சிற்பரமா வுள்ள சிவக்கே வலத்திலொன் றும் [ளிர்சச்
கற்பனையா லன்றியில்லை காண்.

(கொச்சகக் கலிப்பா)

1459. களித்துலக வாழ்விற் கலங்கியவென் மோகந்
தெளித்தலுற வாண்டான் சிறக்கவெனக் கன்பா
லளித்தசிவ ஞானத் தழுந்தலுறு மோனந்
திளைத்தமனம் பார சிவலோகந் தானே.

1460. பேரவொணு மோனவியற் பெற்றியால் என்னைத்தன்
சீரடிமை யாகச் சிறக்கவாட் கொண்டவன்செய்
பேரருளா லென்னுட் பிறங்கலுற்ற செம்பதமே
பார சொரூபப் பரப்பிரம்ம மென்பதே.

1461. உள்ளலுற்ற வாற்ற லுடையா னருட்பதத்தை
உள்ளலற வுள்ளுவதோ ருண்மை யுணர்வுற்றேன்;
தள்ளவொணு மோனவருட் சால்பா மனுபூதி
உள்ளமுறப் பொங்க வுயிர்பரமாத் தீர்ந்ததே.

1462. சுத்தவிஞ் ஞான சொரூபத் திருவருளாற்
சித்தமலப் பாழகன்ற சிந்மாத் திரத்தெளிவால்
நித்தசுத்த மோனநிலை தன்னியல்பா நிற்றலாற்
சித்தம் பரசிவமே சித்தம் பரசிவமே.

1463. உணவாக வாண்டவனுக் கூன மனச்சுட்
டுணர்வா *மகந்தை யொழிவால் இயல்வெற்
றுணர்வாத் தெளிந்ததோ ருள்ளமே உண்மைப்
புணர்வா மனுபவமாப் பொங்கியது நன்கே.

* அகந்தை ஆண்டவனுக்கு உணவாக ஒழிவால் எனக் கூட்டுக.

1464. வெற்றிசேர் ஞான விசுத்தத் திருவருளின்
பெற்றியாற் பாசவகப் பேயுணர்வை மாற்றினேன்
பற்றிலா மோனப் பரவெளியா வுள்ளுணர்வு
பற்றினேன் சித்தம் பரம சிவந்தானே.

1465. சொருபத்தில் வாழ்வு துளைகையே மோன
குருபத்தி யாகக் குலாவலுற்ற வாற்றல்
வெருவற் கிடமிலா விசுத்தசற் போதத்
திருவுற்ற சித்தஞ் சிவக்கே வலமே.

1466. தெள்ளமுத வாழ்வாத் திளைப்பதுநான் பாசமறத்
தெள்ளத் தெளிந்தவருட் சித்தமே, ஆங்கதுவே
ஒள்ளியபே ரின்ப வுணர்வான வுண்மையாற்
றள்ள வொணுதசிவ தத்துவமாச் சார்வாலே.

1467. வித்தகமோ தேரு வெறித்துழல்பாழ் வீணனேற்
கத்தமியா மோன வருட்சிற் பரசொருபப்
புத்தமுதா வாழ்வைப் புதுக்கினன் பொற்பதத்திற்
செத்தொழிவாற் சித்தஞ் சிவமயமாத் தீர்ந்ததே.

## 44. சிவானுபவம்

(குறள்)

1468. அறிவிற் பிறந்தசுத் தானந்த மோனச்
செறிவிலே கண்டேன் சிவம்.

1469. இனிக்கவென் னுள்ளத் தியல்வ துணர்வாத்
தனித்தசிவத் தன்மையே தான்.

1470. அருள்வாரி யான வனந்த சிவச்செம்
பொருள்வாழ்வி லுற்றேன் பொலிவு.

(வெண்பா)

1471. அறிந்தே னறிந்தே னகத்தின் பொருளைச்
செறிந்தேன் செறிந்தேன் சிவத்தே—இறந்து
பிறந்தேன் பிறந்தேன் பிரம்மபதத் தென்றும்
மறந்தேன் மறந்தேன் மயல்.

1472. களைத்தமனப் புன்கலக்கங் காணு தொழியத்
திளைத்தலுறப் பெற்ற சிவத்தில்—அளித்தபெருந்
தன்மையி னுண்மை தலைப்பட் டபரிமித
தன்மபதச் சால்புதனைத் தேன்.

1473. ஆக்கக்கே டற்ற வறிவொளியாந் தன்சொருப
நோக்கமெனக் குள்ளே நுனித்தலால் தேக்கமுற்றுச்
சிற்பரமா மந்தச் சிவசொருப மென்னுளத்தே
தற்பரமா வோங்கிற்றுத் தான்.

1474. சுத்த சொரூபச் சுடரொளியிற் காரிருள்சேர்
மத்த மனங்கரந்த மாட்சியால்—புத்தமுத
வாழ்வாக வென்னை வளைத்ததுசற் போதசிவம்
பாழ்வா தனைபாழ் படுத்து.

1475. அறிவுருவே நானு வறிந்துகொண்ட பின்னர்ப்
பிறிதுபட்ட மோகம் பிழையாய்ச்—செறிவுறுசச்
சிற்பரமா மோன சிவானுபவ வாழ்வியல்பா
நிற்பதென் னெஞ்சு நிறைந்து.

1476. ஊக்கமுற்ற மோக வுலகியல்விட் டாசையுற்றேன்
ஆக்கமா வுள்ள வருட்பதத்தே—ஆக்கமாத்
தேக்குசிவா னந்தத் தெளிவா மனுபூதி
யூக்குவதா லஃதே யுளத்து.

1477. நயக்க நயக்கமெய்ஞ் ஞானனு பூதி
பயக்கும்பே ரின்பவருட் பாதங்—கயக்குமனத்
துன்பக் கலக்கமறச் சொக்கு சிவானுபவ
சம்பத்தாச் சார்ந்த தெனக்கு.

1478. விருப்பமெழப் பொங்கருளால் வெம்பிறவித் துன்ப
நெருப்பவியத் தண்ணென்று நெஞ்சிற்—குருப்பத
தங்கும் பரமோப சாந்த சிவானுபவம் [மாத்
பொங்குமெனக் கன்பு புணர்ந்து.

1479. நல்ல சிவத்தைநான் பொல்லாங்கு கூறினேன்
நல்லறிவு கெட்டமனப் புல்லறிவால்—நல்ல
சிவத்தருளாற் பெற்ற சிவானுபவ ஞானத்
தவத்திற் கழுவாய்கண் டேன்.

குறிப்பு: கழுவாய் - பிராயசித்தம்.

1480. சிவமே சொரூபமாத் தேர்தலான் மோனத்
தவமேவாழ் வாகத் தழைத்தேன்—சிவமயமே
யாகச் சிறக்கு மனுபவத்தாற் கெட்டதுபொய்ம்
மோகச் செருக்கா(ம்) முனைப்பு.

1481. உளத்திலே வாழ்வா வொளிர்வதெனக் கன்பு
திளைத்தலுறப் பொங்கு சிவமே—அளத்தலரும்
போகமா மோனவருட் பூரணமே மெய்ஞ்ஞான
யோகமா வுற்ற துணர்வு.

1482. சிவாத்துவித வுண்மைத் தெளிவான வாழ்வு
சுவைத்தியமா வுள்ளந் துலங்க—அவாத்தொகைசேர்
மோக வகந்தை முனைப்பற் றெருடுங்கியருட்
போகவுணர் வூறிற் றகத்து.

1483. அல்லற் பிறவி யகன்றொழியத் தன்சொருப
மல்லற்பே ரின்பவருள் வாழ்வுபெற—நல்ல
திடமெய் யுறவு சிவத்திலே பூண்டேன்
உடல்பொய் யுறவா வுணர்ந்து.

1484. கலக்கமெனக் கொன்றுங் கருத்தி லெழாது
துலக்கமா மோனத் துரியம்—இலக்கியது
தானேதா னென சதாசிவமே யென்னகத்தில்
யானு விளங்குவது மென்று.

1485. சிறக்கநான் பெற்ற சிவானுபவப் பெற்றி
துறக்க வொண்ணாத சொரூபம்—மறக்கவோ
வன்றி நினைக்கவோ வன்னியமல் லாமையால்
என்று மியலா வியல்.

1486. சுத்தவருட் சத்திச் சுடரொளியா லென்னுளத்து
மத்தவகப் பேய்கரப்ப மாயமாய்—எத்தனமற்
றோங்கு சொரூப வுதாரப் பரசிவமே
ஆங்கு நிறைந்ததுநா னாய்.

1487. உள்ளத் தியல்வெற் றுணர்வே யுருவாகத்
தெள்ளத் தெளிந்த சிவசொருபம்—மெள்ளமெள்ள
யானதுவா முண்மைவிளங் கின்பப் பரவெளிதா
னனதுமோ னனுபவத் தால்.

1488. தப்பலற்ற வெற்றிசேர் சற்போதக் கேவலமாச்
செப்பலுற்ற மோன சிவோகநிலை—ஒப்பலுற்றென்
னுள்ளத்தா டொன்ற வொளிபெருக்கி நின்றதனைத்
தள்ளத்தா னாகுமோ தான்.

1489. தேசப் பளிங்கொளிபோற் சித்தந் தெளிந்துமனப்
பாசக் கலக்கமற்ற பார்வையாற்—கோசமயற்
சிச்சடம்பே தித்துச் சிவோகஞா னானுபவ
நிச்சயத்தே நின்றதென் னெஞ்சு.

(கொச்சகக் கலிப்பா)

1490. உள்ளமுறு முண்மை யுணர்வொளியால் யான்முத
கள்ளவுணர் வானமனக் கற்பனா ஜாலமற, [லாக்
வெள்ளவருள் வாழ்வா விளைசிவஞா னானுபவத்
தெள்ளமுத முண்டுமகிழ் தேக்கியதென் சித்தமே.

1491. இடம்சேர் வுருதபே ரின்பவெழில் பொங்கு
சுடர்சேர் துரீய சொரூபப் பதத்திற்
படர்சேர்வெம் பாசவகப் பாழ்கடந்து கண்டேன்
திடமான மோன சிவானுபவ மாண்பே.

1492. ஆக்கமா வுள்ள வறிவான வுண்மையே
மோக்கமா வுள்ளலர்ந்த மோனஞா னத்தாடு
நீக்கமற வெங்கும் நிறைந்துள்ள சுத்தசிவத்
தேக்கமே வாழ்வாத் திருத்தி விளைந்ததே.

1493. சிவத்திற் பிரிந்து செருக்க வொணுமெய்த்
தவத்தொளிர் ஞான சமாதித் திறத்தால்
அவத்தமா மோக வனர்த்தப் பிறப்பற்
றுவத்தலுற் றேனுளத் துள்ள சிவத்தே.

1494. ஊசிமுனைக் கூரானு மூடறுக்க வொண்ணுமெய்த்
தேசவொளிப் பூரணமே சிட்ட ரறிந்தசிவம்;
பாசவகப் பாழுக்கப் பால்விளங்கு சுத்தசிவத்
தாசைமிகப் பூண்டேற் கருள்விளக்கம் பற்றியதே.

1495. சாந்த வுணர்வாத் தழைத்த சிவத்திலெனக்
கார்ந்தமெய் யன்பே யமுதானு பூதியாக்
கூர்ந்தது நா னென்னுங் குடிலவகப் பேய்குலேயக்
காந்த வசீகரமாங் கைவல்யத் தன்மையிலே.

1496. அவத்தன்மை யானபா ழாணவந்தீர் சுத்த
சிவத்தன்மை தேறத் திளேத்தலுற்றேன், பல்வே
றவத்தைகளாத் துன்று மலமரல்கெட் டான்ற
சுவத்தவியல் பான துரீயப் பதத்தே.

1497. ஆணவப்பே யான வகந்தையைச்செற் றுள்ளத்து
மாண வொளிர்சொருப மாண்பா மனுபவத்தாற்
பேணவோர் சற்றும் பிறிதின்றி முற்றமுழு
வேணவா வான விசுத்தசிவம் முற்றியதே.

1498. தெள்ளியமெய்ஞ் ஞானத் திருவருளா லன்றிமற்
றுள்ளலரு முண்மை யொளிவளரத் தன்னியல்பா
வுள்ளமுறப் பொங்கு முதாரமோ னுனுபவத்
தெள்ளமுத வாழ்வு சிவாத்துவிதச் சீர்மைத்தே.

1499. காணக் கடவதோர் கைவல் லியவுண்மை
மாணச் சிறந்தொளிர்தன் மாத்திரமாக் காண்டலாற்
பூணக் கடவசிவ போதானு பூதியெனக்
காணவமற் றேய்ந்த வருட்பதத்தில் வாய்த்ததே.

1500. ஒன்றுன வுண்மை யுணர்வொளியா லென்னுருவு
நன்று விளங்கியது நல்லசிவச் செம்பொருளா
என்றுமெல் லாமுமவ் வேகமே வாத்துவித
மொன்றவே கைவல்ய வுண்மைப் பரத்திலே.

1501. விள்ளவொ ணு வுண்மை விருப்பான சுத்தவருள்
வெள்ளமென் னுள்ளத்து மேன்மேற் சுரக்கலாற்
றெள்ளமுத மான சிவோகஞா னுனுபவந்
தள்ளரிதா வென்றுந் தழைத்துமீப் பொங்கியதே.

1502. களிவளர்மோ கப்பாழ்ங் கலக்கமற வுள்ளத்
தொளிவளர்ஞா னுனுபவ வுண்மைப் பிரான்பால்
வெளிவளர்வாழ் வாக விளங்கியது மோனத்
தெளிவுசால் சுத்த சிவோகவுணர் வூற்றே.

1503. இருள்வெளிக் கப்பா லிருந்தொளிர் சுத்த
வருள்வெளி கண்டங் கமைந்தேன் அகத்திற்
பொருள்வள மானமெய்ப் பூரணம் பொங்கத்
தெருள்வடி வான சிவோகமுற் றேனே.

## 45. மாயை அனன்னியம்

(கொச்சகக் கலிப்பா)

1504. தோன்றுன சொந்த சொரூபத்திற் பேராது
மன்ற விசித்திரமா மாயா விலாசத்தால்
ஒன்றுன தன்னைப் பலவா மயக்குறுமந்
நன்றுன சிற்சத்தி நம்மியலாக் கண்டோமே.

குறிப்பு:— பேராது – பேராமலே; மாயாவிலாசத்தால் மயக்குறும் என வியையும்.

## 46. பசு பாசம் பொய்

(கொச்சகக் கலிப்பா)

1505. சுத்தவித்தை யான சொரூபவருட் பார்வையாற்
புத்தமுத்த மானசிவ பூரணமென் னெஞ்சத்து
நித்தசித்த மான நிலையேயாக் கண்டுகொண்டேன்
வித்தகத்தி லத்தனையும் மித்தையாங் கற்பனையே.

குறிப்பு:— பார்வையாற் கண்டுகொண்டேன் என வியையும்; அத்தனையும் என்றது பந்தமுத்தி முதலான அகில விவகாரங்களை.

1506. சுத்தவருட் போத சொரூபானு பூதியால்
மைத்தமனக் கற்பனு மாயமற்ற வுள்ளுணர்வில்
வித்தகவாழ் வாக விளங்கு வியோமபதத்
தத்தனையும் பொய்த்தோற்ற மாகக் கழிந்தனவே.

1507. அறிவொன்று மில்லை யறியாமை யில்லை
குறியொன்று மில்லை குணமொன்று மில்லை
பிறிதொன்று மில்லை பிறப்பிறப்பொன் றில்லை
நிறைவொன்று கேவலமெய்ஞ் ஞேயநிலைக் கண்ணே.

1508 இருப்பறிவு மட்டே யெனுதியல்பாக் கண்டேன்
விருப்பமுற வென்னின் விடயமொன் றில்லை.
அருட்பெருவாழ் வாக வகந்தெளியின் மற்றை
மருட்புலவாழ் வூனமனே மாயக் கனவே.

1509. அருளா லவிர்ந்தாங் கபார வதீதப்
பொருளே சொரூபமாம் போதானு பூதி,
மருளா லடைந்தபொய்ம் மானுபி மான
விருள்சே ரகப்பா ழிலாமைகண் டேனே.

## 47. பேதம் மனக்கற்பனை

(குறள்)

1510. சுத்தவறி வான சொரூபத்திற் கற்பனையாப்
பொய்த்ததுபல் வேற்றுப் புலம்.

(கொச்சகக் கலிப்பா)

1511. காண்பான் சொரூபமே காணக் கடவபெரு
மாண்பான காட்சியா மாணப் பிறங்கலாற்
காண்பான் சொரூபவருட் கைவல்யச் சிற்பரத்திற்
காண்குறுபே தங்களெல்லாங் கற்பனு ரோபமே.

1512. தள்ளவோ கொள்ளவோ சற்றுமறப் பொங்குசிவ
வெள்ளமே யாகவொளிர் வித்தகமெய்க் காட்சியாற்
கள்ளமனக் கற்பனையே யாகக் கழிந்ததுமுற்
றுள்ளுமகப் பேய்முனைப்பாற் றேன்றியபே தத்
[தொகையே.

1513. மான்ற மனங்கரக்க வாலறிவாங் கேவலத்தி
லூன்றலுற்ற வாற்று லுபசாந்தி யுற்றேனுக்
கான்ற வகன்பரமே யல்லாது கற்பனையாத்
தோன்றலுற்ற வேற்றுமைகள் சூனியமாத் தொக்கதே.

1514. உண்மை யியல்பென் னுடையானே டென்னுயிர்க்குத்
திண்மைசேர் சுத்தவருட் சிற்பரத்திற் கண்டுகொண்
[டேன்
வண்மைசே ரந்நிலையின் மாட்சியால் வேற்றுமைகள்
விண்மையே போல வெறுங்கற் பனைகளே.

1515. பருப்பதமாஞ் சோதிப் பரவா ரியனு
லருட்பெருவாழ் வாக வகத்தே துலங்கு
மிருப்புணர்வா மென்மெய் யியலிலே பேதம்
மருட்படுபாழ் மாய மனக்கற் பனேயே.

1516. உண்டுண் டுறங்கி யுலகிலுழன் றேனுள்ளத்
துண்டுண் டொருபொருளென் றோர்க்க வனுபவமா
மண்டி யொளிர்சிவச்செம் மாண்பொருளின் மாட்சி [யாற்
கண்டவையுங் கேட்டவையுங் கற்பனேயாப் போயி [னவே.

## 48. உலகு கற்பனே

(குறள்)

1517. உணர்வான வென்னே யொழியநா னேரேன்
*உணர்வாம்பல் பேத வுலகு.

* உணர்வாம் - உணரப்படுவதான.

1518. அருள்விளங்க லூற்ற வகத்தே யகன்ற
திருள்சே ருலக வியல்.

1519. கண்டுகொண்ட வுண்மைக் கடவுட் பரசொருபத்
தொண்டியது மாய வுலகு.

குறிப்பு:—ஒண்டியது – ஒன்றியது.

1520. வெளியாக வுண்மை விளங்கு சொரூப
வொளியிற் கரந்த துலகு.

1521. வெளியா வகத்தில் விளங்கு சொரூப
வொளியிலே காணே னுலகு.

1522. பரவெளியிற் காணும் படங்களே, தோற்றங்
கரவுசேர் காட்சியெல் லாம்.

(கொச்சகக் கலிப்பா)

1523. வண்மைசேர் சுத்தவருள் வாழ்வுதரு மோனவியற்
றிண்மைசேர் கேவலசச் சித்தாப் பரமார்த்த
வுண்மையுணர்ந் துள்ளந் தெளிந்தாங் குலகவுரு
விண்மையே யாக வெறுவிதாப் போனதே.

1524. சொந்தமா வுள்ள சொரூபானு பூதியால்
அந்தமில்பே ரின்ப வருள்வெளியா நிற்கின்றேற்
குந்துமனேல் லாச வுருவெளித்தோற் றங்களே
விந்தைசே ரிந்த விவகார முப்புடியே.

1525. மாயமா மோக மனக்கற் பனையகற்றித்
தோயலுற்ற சுத்தத் துரீய சொரூபத்திற்
பேயகந்தை யோய்வாற் பிழைசே ருலகமயற்
சாயம் வெளுத்ததுமஞ் சட்பொலிவு தோன்றுதே.

1526. சொச்சமா வுள்ளத்துத் தூன்று சொரூபவருள்
விச்சையா லுண்மை வெளியா விளங்கலாற்
றுச்சமனக் கற்பனை சொப்பனமா மங்கியது
நிச்சயமெய் போலநிகழ் மாயப் புலவுலகே.

1527. காணக் கடவவருட் கைவல்ய வுண்மையியல்
பேணக் கடவசிவப் பேரு விதயத்து
மாணத் துலங்கலான் மற்றனைத்துங் கற்பனையா
நாணிக் கழிந்ததுமெய்ந் நாட்டத் திலாமலே.

## 49. பந்த முத்தி பொய்யாயிற்று

(கொச்சகக் கலிப்பா)

1528. அந்தமில்கண் ணான வருட்சிற் பரவெளியே
சொந்த சொரூபமாத் தூன்றுமனு பூதியாற்
சிந்தியது மோகச் செருக்கோடு கற்பனை
பந்தமுத்தி யெல்லாம் பகற்கனவாப் பற்றற்றே.

1529. பந்தமென்று மில்லையருட் பார்வைமீக் கூர்தலாற்
சிந்தைசென்ற சென்ற திசையெல்லாந் தீர்த்தமாம்
சொந்தமா முத்தி சொரூபத்திற் பந்தவுணர்
வெந்தவா றந்தநா ளெய்திற்று விந்தையே.

## 50. பரம்

(குறள்)

1530. அருள்வெளியாந் துங்க வகத்தே யகச்செம்
பொருள்வளங்காண் குற்றேன் பொலிந்து.

1531. உகைக்கவேண் டாததோ ரூர்தியா வுற்றேன்
பகுக்க வொண்ணாத பரம்.

(வெண்பா)

1532. சாந்தியே மிக்க சதாசிவமாஞ் செம்பொருளாப்
போந்தியல்சுத் தான்மானு பூதியாற்—பேர்ந்தொழி [யக்
கற்பனையாம் பேதங் கருத்தூ டொளிர்ந்ததுசச்
சிற்பரமாந் தெய்வத் திறம்.

1533. பத்தித் தவமுளத்திற் பற்றலாற் சுத்தசிவ
புத்தத் துவம்புணர்ந்த புத்தியிலே—சித்த
விருத்திக்கு வேறு விஷயமின்றாய்ச் சித்தம்
பரத்துக்கே யாயிற்றுப் பற்று.

## 51. பரந்தாமம்

(குறள்)

1534. சுரந்தூற மோனந் துலங்கிற் றிதயப்
பரந்தாம வுண்மைப் பதம்.

1535. இப்பாலுக் கிப்பா லிறையருளாற் சேர்ந்ததுமற்
றப்பாலுக் கப்பா லது.

(வெண்பா)

1536. வீடாக வென்னுள் விளங்குவது மிக்கவருட்
பீடான சுத்தப் பிரம்மபதம்—கோடாத
மோனவருட் கேவலமா முந்துமதிஷ் டானநிலை
யானெனதற் றுள்ள வியல்.

1537. தத்துவ ஞான சமாதியா மோனவொளி
சத்துவவாழ் வாகத் தழைத்தலால்—வித்தகமெய்க்
கைவல் லியமாங் கடவுட் பரந்தாமம்
கைவந்த நெல்லிக் கனி.

1538. மோனக் குறியகத்தே மூண்டொளிரக் காண்டலால்
ஏனைக் குறிதுணை நோக் கின்றாக—ஊனப்
பசையற்ற வாழ்வே பரமபத வாழ்வா
இசைவுற்ற துள்ளத் தெனக்கு.

(கொச்சகக் கலிப்பா)

1539. தன்னந் தனியான தத்துவன்மெய்ப் பாதவொளி
வன்னமென் மாட்டு மலர்தலாற் கற்பனையாத்
துன்னும் பலவிகற்பத் தோற்றஞ்சே ராணவம்போய்த்
தன்னந்த மற்றபரந் தாமந் துலங்கியதே.

1540. கணக்கிட வொண்ணுக் கடவுட் பரத்தி
லிணக்கமாஞ் சித்த வியல்பே முழுமெய்
வணக்கமா(ம்) மோன வழிபாட்டாற் பாசப்
பிணக்கற் றடைந்தேன் பிரம்மபதப் பேறே.

## 52. மெய்ப்பதம்

(குறள்)

1541. வாழ்வா வகத்தே மலர்ந்ததுகாண் மோகவகப்
பாழ்வா தனைதீர் பதம்.

குறிப்பு:— வாதனை தீர்பதம் - வாதனையினின் றியல்
பாகவே நீங்கிய வாலறிவான மாண்பதம்.

1542. மங்கலவாழ் வாக மகிழ்சிறக்க வுள்ளுணர்விற்
பொங்கியதோ ருண்மைப் பொருள்.

1543. அருட்சீர்மை யாலே யனந்தசிவ மாமெய்ப்
பொருட்சீர்மை பொங்கிற் றுளத்து.

1544. தொக்க சொரூபவருட் சூழலெங் கெங்குமாப்
புக்கொளிர்வ துண்மைப் புலம்.

## 53. வேதாந்த நிலை

(குறள்)

1545. அறிவொளியா மோன வெறுவெளியிற் கண்டேன்
நிறைவுறுவே தாந்த நிலை.

1546. வேதாந்த வுண்மை விளக்கமா மோனமே
போதாந்த மாஞ்செம் பொருள்.

## 54. பொறை

(குறள்)

1547. நிறைவா விளங்குசிவ நேயானு பூதிப்
பொறையா லெலாம்பொறுக்கின் றேன்.

## 55. அஜாத சித்தாந்தானுபவம்

(கொச்சகக் கலிப்பா)

1548. சுத்த வெளியே சொரூபமா வுள்ளத்து
மெத்தத் தெளிவா விளங்கலாற் கற்பனையா
வத்தனையும் போக அஜாதப் பரசொருப
வித்தகவாழ் வான விலாசம்மீப் பொங்கியதே.

1549. கற்பனைதீ ருண்மைக் கடைட்பிடியோர் கேட்கிலோ
சிற்பரமா வுள்ள சிவாத்துவித வுண்மையாந்
தற்பரமோ ஞனுபவச் சார்பாற் றரித்ததுளத்
தற்புதமா மன்னுசித் தாந்த வஜாதமே.

1550. மறவியெனக் கென்றும் மடுத்ததே யின்றென்
றறிவான வென்னை யறிந்ததாற் கண்டேன்
செறிவான சுத்தவியற் சிற்பரமா(ம்) மோன
நிறைவான மூத்திநிலை நித்தவியல் பாமே.

1551. இழந்தது மில்லை யடைந்தது மில்லை;
உழந்தது மில்லை மகிழ்ந்தது மில்லை;
அழன்றது மில்லை குளிர்ந்தது மில்லை;
கழன்றது கற்பனை யாமற் றெலாமே.

## 56. அதீத ஸஹஜ நிலை

(வெண்பா)

1552. பண்டென்னை யாண்ட பரிசாலே தன்மயமா
வுண்டென்னை யுண்மை யுணர்த்தினன்—மண்டியு
[ளத்
தென்கடவு ளாக வியல்சொருபச் செம்பொருளுக்
கென்கடவேன் சிந்தை யினி.

1553. பண்டுபடு தொண்டுப் பணிபுரியேன் ஞானிபோ
லுண்டுடுத்துச் சும்மா வுலவுகின்றேன்—மிண்டுபடு
மென்னிலைமை யாதோ விறைவனே தானறிவான்
தன்னிரண் டற்றபரன் றான்.

1554. பித்தனே போலப் பிதற்றுகின்றே னென்மனத்துக்
கொத்தாங் குரைபலநா ளொற்கமிலேன்—சுத்தசச்
சித்தான தெய்வத் திருவருளே தானறியும்
சத்தா மனுபூதிச் சால்பு.

(கொச்சகக் கலிப்பா)

1555. ஆன்ற சொரூப வருட்சிற் பரவெளியா
ஆன்றமைந்த மோனஞா னனுபவ நோக்கமகத்
தூன்றலால் எல்லா மொருதன் மயமாகத்
தோன்றத் துரீய மதீதமாத் துன்றியதே.

1556. களிசே ரகந்தைமனக் கற்பனைதீர் மோன
வெளியா வுளத்தில் விளங்கலுற்ற வுண்மைத்
தெளிவே சொரூபத் திருவருளாச் சேர்வா
லளைதலுற்ற தன்மை யதீதப் பரமே.

## 57. பூமா

(வெண்பா)

1557. அகமே பொருளா வகந்தெளிந்த மோனத்
துகவுசேர் சாந்தி யுறலால்—தகவியல்சற்
போதவருட் சூழலே பூமாவாம் பெற்றியறிந்
தாதரமிக் கார்ந்த தகத்து.

1558. உள்ளுணர்வா வோங்குசிவ யோகவருட் பேரின்பத்
தெள்ளமுத மோனந் திளைத்தலால்—கள்ளமனப்
புன்கலக்கக் கற்பனைதீர் பூமாவே யென்னுருவாத்
தங்கலுற்ற துள்ளந் தழைத்து.

1559. சிவத்தையே யெண்ணிச் சிவாயநம வென்று
சிவமயமாச் சிந்தை தெளிந்தேன்—சிவத்தையன்றி
மற்றொன் றிலாதபெரு மாட்சிசேர் பூரணமா
வுற்றொளிரப் பெற்ற துணர்வு.

(கொச்சகக் கலிப்பா)

1560. ஆணவமா மோகவகக் காரறிவை வாலறிவா
லூனமா வுட்கொண் டுளத்தே உபசாந்த
வேணவா வாக விளைந்த சொரூபன்பாற்
பூணலரு சுத்தவருட் பூமா விளங்கியதே.

1561. அற்பனே னுள்ளத் தருள்வெளியாப் பொங்குசிவச்
சிற்பரமோ ஞனுபவந் தேற்றிக் கொடுத்தபிரான்
பொற்பதவாழ் வாகப் புணர்தலுற்ற பூமாவிற்
கற்பதற்கோ கேட்பதற்கோ காணே னயல்களே.

1562. இதுவே பொருளோ வதுவே பொருளோ
வெதுவோ பொருளென் றெளியே னெதுவுங்
கதுவா விதய கமலத் தறிவா
மதுவே பொருளா வவிர்ந்ததான் மாவே.

1563. சிக்கெனவென் னுள்ளஞ் சிறக்கலுற்ற சுத்தவருட்
சொக்கன் சொரூபவொளி சூழப் பரந்தாங்கு
சற்கதியா நாளுந் தழைத்தொளிர்தற் பூரணத்தா
டொக்கமற் றெல்லா வுணர்வுகளும் பொய்த்ததே.

1564. அற்பனே னுள்ளம்புக் காண்டா னறிவுருவாப்
பொற்பவொளிர் மோனனு பூதியாற் பூமாவாக்
கற்பனைதீர் சுத்தவருட் கைவல் லியசொருபச்
சிற்பதமே யென்னுற் றிளைக்கப் பெறுவதே.

குறிப்பு:—பூமாவாத் திளைக்கப் பெறுவது எனவியையும்.

1565. அறிவா வமைந்தே னகத்திலே யான்ற
நிறைவான பூமா நிலாவியது கண்டீர்!
அறிவாலுன்றி வன்றி யறிபுலமோ வில்லை
செறிவான சுத்தசிவச் சிற்பரமல் லாதே.

1566. சிற்பரமே தானுத் தெளிந்தவனு பூதியாற்
கற்பதற்கு மற்றோர் கலையுமறக் கைவல்யப்
பொற்புறுசற் போதவருட் பூமாவா வுள்ளொளிர் [மெய்த்
தற்பரமா மந்நிலையிற் சாற்றுவதற் கென்னுளதே.

## 58. உலகு பரமாயிற்று

(குறள்)

1567. பரமசிவ ஞானவொளி பாய்ந்தாங் ககத்திற்
பரமசிவ மாயிற் றுலகு.

1568. வெளியாக வென்னை விளக்கினன் பாத
வொளியா விளங்கிற் றுலகு.

1569. சிவமே சொரூபமாத் தேர்ந்தியல்கின் றேற்குச்
சிவமேகாண் காணுஞ் செகம்.

1570. இனிமையெலாம் போக விதய வருட்சீ
ரொளிமயமா வொன்றிற் றுலகு.

(வெண்பா)

1571. என்னி லெனக்கரும்பே ரின்பவருட் பாதவொளி
தன்னிலே மோனந் தழைத்தலால்—உன்னலரு
முன்மனியா முண்மை யொளிபடர்ந்த வுள்ளத்தே
தன்மயமா முற்றுஞ் சகம்.

1572. அவத்தி லுழன்ற வடியே னருளாற்
சிவத்திலென் னுண்மை தெளிந்தேன்—விவர்த்தமாத்
தோன்று முலகு சொரூபமே யாகவெனக்
கான்றதனு பூதி யகத்து.

1573. அறிவிலே தோன்று மகிலங் களுமவ்
வறிவுருவே யாக வறிந்தேன் அறியும்
அகமிதமாம் பேத மறத்தீ ரறிவா
மகம்பரமா வுற்ற தகத்து.

1574. கேவலமா மோனக் கிளர்ச்சிசேர் சுத்தவருள்
வாழ்வலர வுள்ளம் மலர்தலால்—பாழ்வளர்வெம்
பாசபந்த மானமனப் பைத்தியமாங் கற்பனைகெட்
டோர்சிவந்தா னுயிற் றுலகு.

1575. தேற்றமா மோனச் சிவசொரூபச் செம்பதவாழ்
வூற்றமா வுள்ளத் தொளிர்தலால்—தோற்றுமனக்
கற்பனு பேதக் கலக்க மறத்தெளிந்து
சிற்பரமாக் காணுஞ் செகம்.

1576. தங்கலுற்ற சுத்தவருட் சைதன்யப் பார்வையொளி
பொங்கலா லிவ்வுலகு பொன்மயமாய்த்—துங்கநலம்
தோய்ந்த புதுப்பொலிவுத் தோற்றம் புதுப்படைப்புற்
றேய்ந்தன்ன காட்சி யுடைத்து.

1577. ஐயமற நன்கு வறிந்தே னறிவான
வையனுரு வாமிவ் வகிலமென்றே—தெய்விகமெய்
யன்பளைந்த வாற்று லகில வுயிர்க்குமவ்
வன்புசிவ மாயிற் றகத்து.

(கொச்சகக் கலிப்பா)

1578. யானென் றிதுவென் றிரண்டுபடப் பேதுற்ற
ஊன வகந்தையுணர் வுள்ளத் தொடுங்கலால்
ஈனமோ கப்பா ழிடைத்தோன் றியவகிலம்
மோனவெளி யாக முயங்கலுறக் கண்டோமே.

1579. எண்ணுபிற வானமற் றேதிலவை போற்றனைநா
னெண்ணவேண் டாம லிதயத் தறிவொளியா
நண்ணலுற்ற சுத்தமெய்ஞ் ஞான சொரூபனருள்
வண்ணமே யாக மலர்ந்த தகிலமுமே.

1580. ஆன்ம சொரூப வறிவொளியா வென்னையணை ந்
தான்ம சொரூபமே யாக்கியவென் னுண்டவன்பால்
ஆன்ம சொரூபஞா னுனுபவம் பெற்றேனுக்
கான்ம சொரூபமே யாயிற் றகிலமே.

1581. சித்தமலஞ் சேர்ந்த செருக்கா மகப்பேய்நோக்
கத்தி லனந்தபே தங்களாத் தோன்றியது
தத்துவநோக் காகவியல் சாந்தஞா ஞனுபவத்
தொத்தவொரே தன்மயமா வுள்ளத் தொளிர்ந்ததே.

குறிப்பு:—மரத்தை, மறைத்தது, பொன்னை மறைத்தது என்ற இரண்டு திருமந்திரங்களும் இங்கு உதகரிக்கத் தக்கன.

1582. வானமே யாக வளர்சிற் பரசொருபத்
தானமே காண்க சதோதயமாத் தங்குவது;
யானிதுவென் கின்றவெலாம் *ஏழைமனக் கற்பனை
போனதுகாண் சுத்தவருட் போதானு பூதியிலே. [யாப்

* ஏழை - அறியாமை.

1583. பரசொருப ஞானத்தாற் பற்றலுற்ற துள்ளத்
தரசுரிமை யான வதீதநிலை; சுத்தப்
பரசிவமா மோனப் பதவொளிசேர் கண்ணுற்
றெரிவனவெல் லாமோர் சிவமயச்செம் பொன்னே.

1584. இளியார்ந்த மோக விருட்பா ழகந்தைக்
களியார்ந்த சித்தக் கலக்கந்தீர் சுத்த
வெளியாக வென்மெய் விளங்கலா லுள்ளத்
தொளியாம் வெளியுருவே யாயிற் றுலகே.

குறிப்பு:— சுத்தவெளி - துரியவெளி; ஒளியாம்வெளியுரு –அறிவுருவான அருள்வெளித்தோற்றம்.

1585. உண்மைப் பரசிவத்தோ டொத்தொழுகும் மோன
வண்மைசேர் வாழ்வின் வசீகரத்தா லிவ்வுலகு [வருள்
மண்மயமல் லாது *வசிச்சிவச்செம் பொன்மயமா
நண்ணியதென் றுலகு நாட்டத்தின் பான்மைத்தே.

* வசி – வசியம்.

## 59. அன்பறிவு

(குறள்)

1586. இன்பவருள் வாழ்வா விதயம் பிறங்கலால்
அன்புருவே யாயிற் றறிவு.

1587. ஆக்கமாத் துன்றுமெய் யன்பருளி, யானெனும்பா
ழேக்கங் கடிந்தா னிறை.

(வெண்பா)

1588. *அன்பறிவா லன்றி யடையப் படாதவிறை
தன்பதத்து வாழ்வு தலைப்படலால்—அன்பறிவின்
மெய்ப்பாட் டொருமை விளங்குசொரூ பானுபவ
வைப்பாப் பொருந்தியது வாழ்வு.

* அன்பு . . . இறை -சிலர் கூறுகின்றபடி அன்பாலோ அல்லது வேறு சிலர் கூறுகின்றபடி அறிவாலோ அன்றி, அதனதன் மறுதலையால் அடையப்படாத இறை.

1589. இன்ப வியல்பா வியல்வதா லன்றேபே
ரன்பியல்பாத் தன்பா லமைவதென்றே—அன்புக்
குரியபே ரின்பமா வுள்ள சொரூபந்
தெரியலே ஞானத் திறன்.

1590. ஒழுக்க மெனக்குத்தன் னுண்மையுணர் வோங்கப்
பழுத்த வருட்பாத பத்தி—செழித்தொளிர்மெய்ப்
பத்தியா மந்தப் பரமோப சாந்தவுணர்
வத்துவித மோன மகத்து.

## 60. மோனக் கல்வி

(கொச்சகக் கலிப்பா)

1591. கலக்கமறக் கண்டவருட் கண்ணுளன் சுத்தத்
துலக்கமாத் துன்று துரிய சொரூப
நிலைக்கணே யென்னை நிறுவினன் மோனக்
கலைக்கணே முற்றியதென் கல்வித் துறையே.

1592. விரிதலுற்ற மோன வெளியொளியாந் தன்மெய்த்
தெரிவிலென் மோகச் செருக்கற் றொழிவாற்
புரிவதெல்லாம் பூசனையாப் புக்கதுகாண் சற்றுஞ்
சுரிதலற்ற ஞான சொரூப னடிக்கே.

குறிப்பு:—ஒழிவாற் புக்கதென வியையும்.

1593. அற்பனு மென்னை யருட்சிற் பதவொளியாற்
பொற்புறவாழ் வித்தசற் போதகுரு மோனத்திற்
கற்பதற்கெல் லாமோர் கரைகண்டேன் கைவல்யத்
தற்பரமே யாகத் தழைத்தலா லென்னுருவே.

1594. புத்தகத்தை யோதிப் புலம்பினேன் கற்றறிந்த
மற்றவித்தை யெல்லாமே மங்கவுளத் தோர்தானே
சுத்தவித்தை யாகத் துலங்கலுற்ற வாண்டவனை
முற்றவத்தா லெய்தலான் மோனநிலை வாய்த்ததே.

## 61. மோனத் தவம்

(குறள்)

1595. சிற்பரமா வுள்ளந் தெளிதலாற் பொங்கியது
தற்பரமா மோனத் தவம்.

(கொச்சகக் கலிப்பா)

1596. சுவத்தமா மோனந் துலங்கவென் னுள்ளத்
தவத்தமா மோக வகந்தையறக் கண்ட
சிவத்திலென் னுண்மை தெளிந்தாங் குதாரத்
தவத்திலே வாழ்வு தழைத்தலுற் றேனே.

## 62. மோன வழிபாடு

(கொச்சகக் கலிப்பா)

1597. ஊனவகப் பேயை யுடற்றியென் னுள்ளுணர்விற்
றூனவிர்வுற் றேங்கு சதாசா ரியனடிக்கண்
மோனவழி பாடு முகத்தலாற் சிந்தனைசே
ரேனை வழிபா டியற்றநான் கில்லேனே.

குறிப்பு:—சிந்தனை – தியானம்; முகத்தலாற் கில்லேன் என வினையும்.

1598. உண்மையிலே யென்னை யொடுக்கலால் என்னுரு [வவ்
வுண்மையே யாக வுணர்த்தியவென் னாண்டவனை
வண்மைசேர் சுத்த மனோமவுன வாயிலா
உண்மைசேர் நல்ல வுபாசனைசெய் கின்றேனே.

## 63. மோனம்

(குறள்)

1599. சுவத்தமா மோனந் துலங்கியது சுத்த
சிவத்திலே நானறச்செத் தாங்கு.

1600. அறிவாக வென்னையடிக் காண்டவன்பா லார்ந்தேன்
நிறைவான மோன நிலை.

(வெண்பா)

1601. சுத்த வருட்பரமாத் துன்றுங் குருரமணப்
புத்தமுத ஞானனு பூதியால்—சித்த
விருத்தி யகண்ட விலாசமா மோனப்
பரத்தியலே யாயிற்றுப் பண்பு.

1602. பரமான மோனம் பழுத்ததெனக் குள்ளத்
தூரமான வுண்மை யுணர்வால்—பரமாக
வென்னையாட் கொண்ட விறைவனருட் பாதவொளி
என்னியலே யாக வியைந்து.

1603. மூலத்தை யாய்ந்தறிந்த மோனமே மெய்ஞ்ஞான
சீலத் திறமாத் தெரிதலால்—ஏலவயற்
சீலமொன்றுந் தேருது சிற்பரமா மோனவருட்
சீலமொன்றே தேர்ந்துதிளைத் தேன்.

1604. மோதங் கிளர்சொருப மோனனு பூதியாற்
கேதமாஞ் சிந்தைக் கிலேசமற—வேதப்
பொருளா விளங்குறுசற் போதமே யல்லால்
அருள்வே றறியே னகத்து.

குறிப்பு:—சற்போதமே அருள் வடிவென்பதாம்.

(கொச்சகக் கலிப்பா)

1605. மோனவருள் வாயிலா முத்தி விளங்கலுற்றேன்;
மோனவருள் சற்குரு மூர்த்தி யருளினன்;
மோனவருள் வாழ்வு முகத்தலா லுள்ளத்து
மோனவருள் பொங்குசுப முத்திநலன் கூடியதே.

1606. பேதவியா பாரப் பிழைதீர் சொரூபவருட்
போதவெளி யாகப் பொலிதலா லென்னுண்மை
வாத வகந்தைமனம் மட்கலுறப் பொங்கியது
மோதமார் சுத்தசிவ மோனநு பூதியே.

1607. கோசாகங் காரமனக் கொந்தளிப்பாத் துன்றும்பா
மூாசாபா சஞ்செற் றகத்தே அறிவொளிசேர்
நேசானுபூதி நிரம்பலாற் கற்பனையால்
மூசா வகண்டசுப மோனம் பிறங்கியதே.

1608. தொலைவிலருட் பார சொரூபமா(ம்) மோன
நிலையிலகப் பட்டமுந்தி நின்றேற் கதனின்
றிலைபுறத்து மீட்சி இருட்பா மிகப்பா
லுலகமனக் கற்பனையற் றேய்ந்தவாற் றுலே.

1609. அறியாமை யென்ப தறியாமை யாகச்
செறிவாக வுள்ள சிவக்கே வலவெற்
றறிவான வுண்மையா வான்ற சொரூப
நிறைவான மோனமே ஞேயமா யிற்றே.

1610. அறிவாக வுள்ளதோ ரத்துவித மோனச்
செறிவே சிவசொருபச் செல்வமாக் கண்டேன்
வெறிசே ரகந்தைமன வேகந்தீர் சாந்த
நிறைவாக ஞேய நிலைவிளங் கிற்றே.

1611. இறைவன் பதத்தி லியல்வுற்ற மெய்யன்
புறவா லருட்பரமெய் யொட்பமுற்ற வுள்ளத்
தறிவே சொரூபமா வான்றமைந்த மோன
நிறைவே முந்தமெய்ஞ் ஞேயநிலை யாமே.

1612. போற்றவோ வன்றிப் புறக்கணிக்க வோதானும்
வேற்றுமையொன் றற்று விளங்குசுத் தாத்துவிதத்
தேற்றமா மோனந் தெளிந்தமைந்த வுள்ளுணர்வே
ஆற்றமே தக்க வருட்பரவாழ் வாயிற்றே.

1613. தவத்தியல் சாரத் தழைத்துச் செழித்த
சுவத்தமா மோனத் திறத்தாற் சொரூப
சிவத்திலல் லாது செகத்திற் சிறிதும்
விவத்தையில் லாமை விளங்கலுற் றேனே.

1614. அடந்தருநா னென்னு மகந்தைமுனைப் போயக்
கடந்ததோ ருண்மை கலத்தலால் ஊன
மடந்தவிர்மெய்ஞ் ஞானவருள் வாழ்வான மோனந்
தொடர்ந்ததென் சொந்த சொரூபமாத் தானே.

1615. அருக்கனு வுள்ளவென் னுண்டவன் பாதத்
துருக்கமுறு மெய்யன் புணர்வால் அகந்தை
யுருக்கெட் டதிநுட்ப வொட்பவுணர் வாக
இருக்கலுறு மோனமெனக் கின்பவியல் வீடே.

1616. அதுவாக வுள்ளே னலாதுநான் மற்றே
ரெதுவா கவுமிலே னென்றறிந்த வாற்றாற்
பொதுவாக வுள்ளவருட் பூரணமா மோன
மதுவா மனுபூதி வாய்த்ததுதன் மாட்டே.

1617. தெய்வப் பிரானருளிற் சித்தங் கரைந்துகரைந்
துய்தலுறப் பெற்ற வுணர்வா லுளங்கிளர
மைதவிர்வாழ் வாக மடுத்ததுநா னற்றெழிவாற்
செய்வதற்கொன் றற்ற சிவானுபவ மோனமே.

1618. அருட்சிற் பரவாழ் வளித்த பிரான்பால்
இருட்கற் பனைகளுக்கோ ரெல்லைகண்டேன், பாச
மருட்சிப் படர்சேர் மனோெல்லாச நோக்கற்
றிருக்கலுற்றேன் மோன வியற்செம் பதத்தே.

1619. காதுமகங் காரமனக் கற்பனு ஜாலமாம்
பேத மனைத்தும் பிறக்கிட் டொழியவொளிர்
போத சொரூபப் பொலிவான மோனத்தில்
வேத முணர்த்துபல *வித்தைகளும் பொய்த்ததே.

*வித்தை யவித்தையே எனவும் பாடம்.

1620. ஆண்டவன்பா தத்தி லடைக்கலமாப் புக்கொடுங்கி
மீண்டுலகில் வாரா விசுத்தவருட் கைவல்யங்
காண்டலுற்றே னுக்குமனக் கண்ணுக்குங் கண்ணகை
மூண்டொளிர்வ தொட்பநுட்ப மோனவியற் சிற்
[பரமே.

1621. முத்தப் பிரான்சொருப மூதுணர்வால் என்னுளத்
பெத்த மயக்கமனப் பித்தலாட் டம்பேர்ந்து [திற்
சுத்தப் பிரம்ம சொரூபப் பரவெளியா
முத்தித் துலக்கமெழ மூண்டதுமோ னம்பரந்தே.

1622. ஓலமிட்டா ருள்ளுணர்வூ டோமென்று சுத்தவருட்
பாலனக்கண் ணேக்கப் பயன்மலியத் தங்குபிரான்
மூலவகப் பாழ்முசிக்க மூண்டவருட் பாதவொளி
யாலகிலம் போர்த்தலால் ஆர்ந்ததுமோ னப்பொலி
[வே.

1623. அறிவாக வென்னை யடக்கி யொடுக்கி
நிறைவா வகத்து நிகழ்சொருபப் பெம்மான்
பிறிவிலா மோனவருட் பேரொளிசேர் பாதக்
குறியிலே நாளுங் குலாவலுற் றேனே.

1624. முத்திப் பெருநலமா மூண்ட சொரூபசற்
பத்தி யுணர் விற் பரானுபவ மோனமுற்றேன்;
மெய்த்தத் துவமா விளங்குசிவ பூரணத்திற்
பொய்க்கற் பனைகள் புலம்புற் றொழிந்தனவே.

1625. உள்ளந் தனக்கேமுற் றூட்டா முரிமையாக்
கொள்ளலுற்ரு னுக்கென் குடிலமனக் குற்றமற்
[றேன்
உள்ளலற வுள்ளத் துணர்வொளியாம் பேரின்பத்
தெள்ளமுத மோனஞ் செழிக்கவாழ் கின்றேனே.

1626. தாரகமாப் பற்றியமெய்த் தத்துவன்சீ பாதமெனக்
காரமுத வாழ்வா வகங்கிளரப் பொங்கலாற்
பாரசிவ மோனம் படைக்கலுற்றேன் சுத்தவருட்
பாரவெளி யாகப் பரந்த சொரூபத்தே.

1627. தன்மையா லென்னைத் தடுத்தாண்ட சுத்தவருட்
சின்மயமே போற்றுந் தியானமனப் பான்மையாற்
பன்மைசேர் பாசப் பராக்கற் றொழியவுளத்
துன்மனியா மோன வுணர்வொளிசேர் வுற்றதே.

1628. கற்பனைதீர் சுத்தவருட் கைவல்ய வுண்மையா
அற்பனே னுள்ளத் தவிர்சொருபப் பெம்மாற்குத்
தற்பொழுதே யன்று சதாகால பூஜையாப்
பொற்புறவென் னுள்ளுணர்விற் பொங்கியது
மோனமே.

1629. பேத மயக்கவகப் பேய்முனைப்பைச் சாடியசற்
போத சொரூபவருட் புண்ணியனால் உள்ளத்து
நீதமோ ஞனுபவ நிஷ்டை நிரம்பலின்மற்
றேதவோ வன்றி யுணரவோ வொன்றுமின்றே.

1630. ஊனு மகந்தையுணர் வோய்ந்தொழிய வுள்ளத்திற்
றுனக வென்னைத் தலைப்படுவித் தாண்டவன்பாற்
றுனதி யான சகல நலங்களுமா
மோனனு பூதி முகத்தலால் வாழ்ந்தேனே.

குறிப்பு:—தானதியான சகல நலங்கள் - தானந் தவம் வேள்வி என்றும் உள்ளது நாற்பது அனுபந்தம் 13வது செய்யுளில் 'தானம் முதல் இன்பம் ஈருக எடுத்தோதப் பட்டவையும். அன்ன பிறவுமாம்.

1631. யோகப் பொலிவா முடையானென் னுள்ளுணர்வூ
டாகமகம் புத்தி யகற்றலால், இன்பவருட்
போகமாப் பொங்குசிவ யோகமோ னந்தெளிந்தேன்
ஊகங் கடந்துவிளங் கொட்பநுட்பச் செம்பதத்தே.

1632. கள்ளக் கருத்தைக் கவளமா வுண்டவருள்
வெள்ள மதக்களிற்று வித்தகன்கண் ணோக்கத்தாற்
றெள்ளத் தெளிந்த சிவானுபவச் சீர்மையுளத்
துள்ளவொண் மோன வுணர்வான வொட்பமே.

1633. அருளான பெம்மா னடியே னகக்கா
ரிருளான மோகமற வெற்றலால் உண்மைப்
பொருளான சுத்தசிவ பூரணமாப் பொங்கு
தெருள்வாழ்வா மோனந் திளைக்கலுற் றேனே.

1634. நேரா வொளிர்சொருப நின்மலன்செம் பொற்பதத்
காரா ணவப்பாழ்ங் கலக்க மகன்றெழிந்தேற் [திற்
காரா வமுதா வகங்கிளர்மோ ஞனுபவம்
பேராத சுத்தசிவப் பேரியல்பாப் பற்றியதே.

1635. உத்தமசற் போத வொளியா லுளம்புக்கு
மத்தமனக் கற்பனையை மாற்றினன் றன்குறிப்போ
டொத்தொழுக லுற்றே னுளத்தே யுபசாந்தப்
புத்தமுத மோனனு பூதிப் புணர்ந்ததே.

1636. அணுக வணுகவகத் தள்ளூற மெய்யன்
புணர்விலே யென்னை யொடுக்கினன் பாதத்
தணவியது சுத்த வருட்பரவாழ் வாகப்
புணர்வசிய மோனனு பூதிப் புலமே.

1637. பெற்றி பிறர்க்கரிய பெம்மா னடிகளை நான்
பற்றலுற்றே னுக்குப் பரசொருபப் பார்வையால்
அற்றமற்ற சுத்த வருட்சிற் பரவெளியா
முற்றியதென் னுள்ளத்து மோனனு பூதியே.

1638. சுத்தவருள் வாலறிவாத் தொக்க சொரூபன்பாற்
பொய்த்ததால் யானெனும்பாழ்ம் பொக்க வகந்தை
வித்தகவாழ் வாக விளைந்தமோ னனுபவப் [மதி
புத்தமுத முண்டு பொலிந்தேன் பரத்திலே.

1639. கவித்த வகப்பாழ்ங் கலக்கமறப் பொங்கு
சுவத்தவாழ் வான சொரூபானு பூதி
அவத்தனே னுள்ளொளிர வாண்டா னளித்த
சிவத்துவமோ னத்தாற் செழிக்கலுற் றேனே.

1640. பிரிவிலா மோனவருட் பெம்மான் சொரூப
விரிவிலே வாழ்வு விளங்கலால் யாதுந்
தெரியவே றில்லாச் சிவபூ ரணமெய்த்
துரியமோ னனுபவந் துய்க்கலுற் றேனே.

1641. வெளியா விளங்குமியல் வித்தகன்சீ பாத
வொளியாலே யானெனும்பா முன்மத்தந் தீரத்
தெளிவான சுத்தவருட் சிற்பரமா மோனந்
திளையாநின் றேன்சிவத்திற் சித்தங் கரைந்தே.
குறிப்பு:—'கலந்தே' எனவும் பாடம்.

1642. காண்டலரு முண்மைக் கழலே சொரூபமா
மூண்டஞா னுபவ மோனத்தாற் கண்டுகொண்
வேண்ட வெனக்கயலா வெறென்று மற்றெழிய [டேன்
மாண்டதுநா னென்னு மயக்கவகப் பேய்மனமே.

1643. கட்டறவே யென்னுட் கலந்தவருட் சிற்பரனை
நட்டமனத் தாலியல்பா நாளுமுபா சித்தலால்
வெட்டவெளி யான விபுத்துவஞ்சேர் மோனவுணர்
வொட்டியது தற்பரமென் னுண்மையுரு வாகவே.

## 64. தாள்தலை

(வெண்பா)

1644. ஆண்டவன்றருளி லழுந்த வடைந்ததலை
மீண்டுவெளிப் பேர விதியில்லை—யாண்டுமொளி
மூள்வதாஞ் சிற்சொருப மோனத்தா லுற்றதுமெய்த்
தாள்வடிவே யந்தத் தலை.

## 65. கிருத கிருத்தியத் தன்மை கிளத்தல்

(வெண்பா)

1645. உண்ட லுடுத்த லுறங்கலன்றி மற்றெந்தத்
தொண்டுஞ்செய் யாதுசும்மா தூங்குகின்றேன்—
மண்டுசிவக்
கைவல் லியசொருபக் காட்சியிலே கண்டிலேன்
செய்வல்ல தாவோர் செயல்.

1646. எண்ணற் கரிய வியல்பாமோ ரத்துவித
வண்ணக்கை வல்ய மலர்ச்சியால்—பண்ணக்
கடவதொரு சாதனையுங் காண்கிலேன் பண்ணி
யடைவதொன்றும் யானறியே னுங்கு.

(கொச்சகக் கலிப்பா)

1647. சுடர்வயிர மாகத் துலங்கு சொரூபத்
திடவறிவா மோனவியல் சேர்தலின்யா னென்னப்
படர்வுறுகர்த் தத்துவம்பொய்ப் பட்டதாற் செய்யக்
கடவதொன்று மின்றிக் கழிந்ததுசித் தத்தே.

1648. தீனனேன் மிக்க சிவானுபவங் கூடஉயர்
ஞான தயாசொருப நாதனைக்காட் டிக்கொடுத்து
ஞான சொரூபநிதி நண்ணுவித்த வாற்றால்ஒ
ரூனப் பிறப்புமெனக் கொண்பயன்செய் வித்ததே.

1649. பொய்வல்ல மாயைப் புணர்ப்புமுற் றக்கரப்பால்
உய்வதற்கு நானென் றுஞற்றவேண் டாதவருட்
கைவல் லியசொருபக் காட்சிசேர் சாட்சியாய்
மெய்வளர்சற் போத விபூதிநிலை சார்ந்ததே.

1650. எண்ணமற்ற மோன வியற்சிற் பதத்திலருள்
வண்ணமா நிற்கு மனத்தால், அவசியமாப்
பண்ணவோ பண்ணிப் படைக்கவோ யாதுமறத்
திண்ணெனவு சான்றபர சித்திசார் வுற்றதே.

1651. சுத்தப் பரமாத் துலங்கு சொரூபவருள்
வித்தைத் திறத்தால் விளங்கலுற்ற வுண்மையிற்கர்த்
தத்துவமே மோகத் தவறுத் தவிர்ந்தவருக்
கெத்தொழில்கர்த் தவ்வியமா வேற்புடைத்தோ
காணீரே.

1652. ஊறற்ற வுண்மை யொளிப்பரப்பே யுள்ளமாத்
தேறத் தெளிந்த சிவானுபவ மோனவருட்
பேறுற்ற வாற்றற் பிறவிப் பயன்பெற்றேன்
வீறுற் றியல்பா விளங்கு வியன்பதத்தே.

## 66. நல்லடிமை - நல்லபிள்ளை நான்

(வெண்பா)

1653. கணக்கு வழக்கைக் கடந்த சொரூபத்
திணக்கமுறு பத்தியுணர் வெய்த—வணக்கியெனைத்
தன்பதத்துக் காண்ட சதாசிவமா மோனகுரு
நம்பனுக்கு நல்லடிமை நான்.

1654. கவலையுறும் மோகக் கலிகடிந்து நாயேன்
பவிசியன்று வாழப் பதத்தே—சிவசொருபச்
செம்பொற் கிழியீடென் சித்தத்தே தேற்றியவென்
னப்பற்கு நல்லடிமை நான்.

1655. சற்கதியாம் போத சமரசமா மோனவொளித்
தற்பரமென் னுள்ளே தழைத்தொளிர க்—கற்பனைதீர்
ஞானவருட் பத்தி நடையளித்த நம்பனுக்கு
நானடிமை நாயகமுற் றேன்.

1656. நல்லடிமை யாகமெய்ஞ் ஞானகுரு நாதனடிக்
கொல்லும் வகையாற்செய் யூழியத்தால்—புல்லியபாழ்
வஞ்சச் செருக்கு மடிந்தொழிய வாய்த்ததென் றன்
னெஞ்சத் தொளிசேர் நிலை.

1657. சிவக்கே வலமாச் சிறக்கவெனைச் செற்ற
வவற்கே யடிமைநா னன்றி—எவற்கும்
அடிமையலே னற்ப வகந்தையிலா வாற்ருன்
மிடிமையிலேன் வீற்றிருக்கின் றேன்.

1658. அடியே சரணு வடைந்தநா னுட்க
இடையே யடியா ரெதிரில்—கடிதாகச்
சோதனைசெய் தென்னையருட் சோதியா வாண்டகுரு
நாதனுக்கு நல்லபிள்ளை நான்.

1659. சிற்பரத்துக் காண்டகுரு தேவனருட் சீர்ப்பாதக்
கற்பகத்துக் கீழ்க்கன்ருங் கான்முளையாய்—உற்ப
நானகத்து நல்லசிவ ஞானக் கொழுந்துவிட்டு [வித்து
மோனநகை பூத்தேன் முகத்து.

1660. அருட்குமர ஞக வடியேனை யேற்ருன்
மருட்கவலை யோய மனத்தே—இருக்கு
மியற்கையாற் சும்மா விதயத்தே யின்ப
முயக்கமுற மோனப் பதத்து.

1661. பல்விக் கினமும் பறந்தோட ஞானவருட்
செல்வக் குமாரனுச் செய்துகொண்டான்—கல்விக்
கரையாக வாழ்சக் கரவர்த்தி யிந்தத்
தரையிலே யென்னைத் தனக்கு.

# 67. அனுபவத்தை மேலிட்டுக் கூறியது

## க. அடியார்க் குறுதி கூறல்

(குறள்)

1662. அண்ணு மலைரம ணுரியன்மாட் டேகபத்தி
பண்ணுநின் ருர்பாக் கியர்.

1663. பேணுவார் சித்தம் பிரம்மபத மாக்காண்பான்
மாண விளங்கருட்பெம் மான்.

(வெண்பா)

1664. பாசமுள்ள தந்தை பரமன் பராசத்தி
நேசமுள்ள தாயாக நெஞ்சத்தே—வாசமாச்
சேர்ந்தொளிரும் மெய்கண்டார் சித்தோப சாந்தநிலை
யார்ந்தொளிர்வர் தம்மெய் யகத்து.

1665. அசலமா நின்ற வடிகளடிச் சார்பாற்
குசலமா வாழ்க்கை குதிர்ந்தேன்—அசலமாந்
தாணு நினைப்பே சதாசார மாகவுளம்
பேணுவார்க் கில்லை பிழை.

1666. செம்மாந் தடியேன் சிறக்கவுயர் வாழ்வளித்த
தம்மா னருட்பதச்சீ ராட்சியே—நம்மா
லியற்றக் கடவதொன்று மில்லை மனத்தைப்
பயிற்றலன்றி யாண்டான் பதத்து.

1667. பத்தியாற் சித்தம் பழுக்கிற் பரஞ்சுடரா
அத்தனரு ளீண்ட வவிர்தலான்—மத்தமனப்
பாச மயக்கமறப் பார்வை பரவெளியாக்
கோசமறும் பேதங் குலைந்து.

(கொச்சகக் கலிப்பா)

1668. காணக் கிடைப்பதல்லாக் கைவல் லியசொருபம்
பூணக் கிடைத்ததுசற் போதானு பூதியா;
வீணிற் கலங்க விதிவசமேன் வீட்டுணர்வா
மாணக் கிளர்சொருப மன்னன் குடிகளுக்கே.

1669. எம்பிரான் சேவடிப்பே ரின்பக் கடலாடி
வம்பரா லுற்ற மனக்கவலே மாற்றினேன்;
தம்பிரா னுகத்தற் சார்ந்த ததியரைமெய்த்
தம்பமாத் தாங்கித் தலையளிப்பா னம்மானே.

குறிப்பு:—மனக்கலக்கம் மாற்றினேன் எனவும் பாடம்.

1670. எற்றென் றிரங்கி யிடர்ப்படார் சுத்தவருட்
பற்றையே முற்றமுற்றப் பற்றி யொழுகுவோர்;
மற்றுவமை யற்ற மகேசனருட் சிற்பதமே
கற்றெழுகு மாற்றாற் கவலறவாழ் கின்றேனே.

1671. கடியவே தக்கேன் கடவுட் பிரானுக்
கடியனு வுற்றுங் கருட்பரவாழ் வுற்றேன்
அடிகளேயே நம்பி யருட்சிற் பதத்திற்
குடிகளா வுற்றோர் குடிலப் படாரே.

1672. அருட்கே வலத்தா டளைந்த மனத்தோர்
மருட்கே வலத்து மயங்கிடார்; சுத்த
வருட்கே வலமா வவிர்சொருப நோக்கா
லிருட்கே வலப்பா ழிகத்தலுற் றேனே.

### உ. அகந்தையின் விரிவான அனைத்துலகும் பொய்

(குறள்)

1673. மாயமனக் கற்பனையா மாறிற் றுலகுஜடக்
காய வகந்தைகழி வால்.

1674. உள்ளமே மோன வுணர்வொளியாத் துன்றலாற்
கள்ளமனே வாழ்வோர் கனவு.

1675. வெளியேயென் மெய்யா விளங்கலாற் காணேன்
களிசே ரகந்தைக் கருத்து.

(வெண்பா)

1676. உன்னொளிசற் றோர்ந்த வுளத்திலே யுன்னின்மற்
றன்னியமாம் பேத மகறலால்—மன்னியமெய்ஞ்
ஞான சொரூபமா நண்ணுசிவத் திவ்வுலகு
கானலுருக் கற்பனையே காண்.

1677. சுத்தவறி வாகச் சுடர்சொருப மோனவருள்
வித்தையுரு வாக விளங்குமெய்யன்—சுத்தப்
பரவெளியா வெங்கும் பரந்தபரந் தாம
னுருவெளியே பல்வே றுலகு.

(கொச்சகக் கலிப்பா)

1678. சுத்தவரு ளாகத் துலங்கு சொரூபத்திற்
செத்ததுநா னென்னுமயற் சிச்சடப்பொய்ப் பேய [கந்தை;
வித்தகவாழ் வாக விளங்குமோ னுனுபவ
முத்தியிலெக் காலுமில்லை மோகமனப் பாசமே.

1679. மறவிசேர் யானெனும்பொய்ம் மானமற வுள்ளத்
தறிவு தெளிந்தமைந்தா லன்பு விளங்கும்;
பிறிவிலா வுண்மைப் பிரான்சொருப நேய
நிறைவிலே பேத நினைவனைத்தும் பொய்யே.

1680. புன்புலமே நோக்கிப் புலம்பாது சிற்சொருப
நன்புலமே நோக்கினேன் நானதுவா வொன்றினேன்;
தன்புலமே தானறியத் *தக்கதன்றி வேறுகத்
துன்புலம்போற் றேன்றுவது சொற்பனமாங் [கற்பனையே.

* தக்கது — தக்கவுண்மை.

1681. நன்றுங் கதியாக நண்ணியதென் னுள்ளத்துத்
தொன்றுன சொந்த சொரூபமே யாதலாற்
கன்றியபொய்ம் மாயமனக் கற்பனு சொப்பனமே
யென்றறிந்து கொண்டே னிறந்த பிறப்பிறப்பே.

குறிப்பு:—இறந்த பிறப்பிறப்பு—கழிந்துபோன பிறப்புக்கள்.

1682. பூரணத்தைக் காட்டிக் கொடுத்தவருட் பூரணன்சிற்
பூரணவாழ் வென்னுட் புணர்ந்தவியற் காட்சியாற்
பூரணத்திற் கண்டேன் புணர்ப்பின்மை; பந்தமுத்திக்
காரணமேல் யானெனும்பொய்க் கற்பனு மோகமே.

1683. எனதியற்கை யான விருப்புணர்வா மின்பு
நனிதுலக்க மானமெய்ஞ் ஞானானு பூதி
கனவருட்கை வல்லியமாக் காண்டலாற் பந்தம்
மனமயக்கக் கற்பனையா மாய்ந்தொழிந்த வாறே.

### ௩. சக்தி விலாசம் பொய்

(குறள்)

1684. சத்தனு மென்னிடத்தே சத்திவிலா சங்களா
மத்தனையுங் கற்பிதமே யாம்.

1685. இம்பரும்ப ரெல்லாம் இதய வொளிவெளியில்
வம்பறிவா மாய வழக்கு.

1686. நுட்பவொட்ப மாக நுனித்தவருட் பார்வையால்
விட்புலமா வொன்றும் விகற்பு.

(வெண்பா)

1687. வீறிட் டகத்து விளங்கு சொரூபத்தில்
வேறுற்ற மோக விகற்பமில்லை—தேறுற்ற
முற்றுமொரு தன்சொருப மோனப் பரவெளியூ
டுற்றபடக் காட்சி யுரு.

1688. யாவுமொருங் குண்மை யியல்பிலே தன்மயமா
மேவுமொரு தன்மெய் விளங்கலான்—மேவுறுசச்
சிற்பரமா மேக சிவசொருபத் தூடுநிழ
லொப்பனவாம் பேத வுலகு.

1689. யாதைநா னெண்ணுவது யானே யிரண்டில்லேன்
போதமா மென்னினயல் பொய்யாகும்—போதமே
யத்துவித மானசத் தாதலா லெண்ணமறச்
சித்தமழிந் துள்ளேன் சிவத்து.

குறிப்பு:—ஆதலால் பொய்யாகும் என இயையும்.

1690. யானு கியவென் னியற்பெருந் தன்மையில்
வானு தியபல் வளாகமொருங்—கூன
நுரைத்திரளின் மிக்கசிறு நொய்தாகத் தோன்றி
யுருத்தொழிவென் மாயை யுணர்.

### ௬. சொரூபமே ஐசுவரியம்

(வெண்பா)

1691. துரிய சொரூபத் துலக்கமே யான்ற
விரிவா விளங்கு விபூதி—தெரியில்
அதுவன்றி மிக்க வருள்வாழ்வாச் சேர
எதுவொன்று மில்லை யெமக்கு.

குறிப்பு.—ஆன்ற - நிறைந்த; விபூதி—ஐசுவரியம்.

1692. சிற்பரமாத் துன்று சிவானுபவ மன்றியுயிர்க்
கற்பமுமெய் யாகவோ ராக்கமில்லை—தற்பரமா
மந்தவருட் கேவலத்து டாழ்ந்தொளிரப் பெற்றவுயிர்
பந்தமற்ற வுண்மைப் பரம்.

1693. எங்கு நிறைந்த வெனுது சொரூபமதி
துங்கமா மோனத் துரீயவெளி—அங்கமகம்
புத்தியாம் பாசமறப் பொன்றினுர்க் கென்றுமது
சித்தியா முண்மைச் சிறப்பு.

(கொச்சகக் கலிப்பா)

1694. தன்னுலே தன்னைத் தழுவலுற்றேன் சுத்தவருட்
பொன்னு மனுபூதி பொங்கலா லுள்ளுணர்விற்
பின்னேது மில்லைநான் பெற்றுவக்க; முற்றமுழுத்
தன்னியல்வாழ் வேகாண் சதாசிவசாம் ராச்சியமே.

### ௯. இரண்டில்லை அத்துவிதமே

(குறள்)

1695. தனித்தவருள் வாழ்வாத் தழைத்தலுறு மோனத்
தெனைத்தவிர மற்றென் றிலை.

1696. காணக் கிடைத்தவருட் கைவல் லியத்திலில்லை
மாணப் படாத மயல்.

1697. பிறிதொன்று மில்லை பிரம்ம சொரூப
வறிவான வுண்மை யகத்து.

1698. தன்னின்மற் றென்றுமற்ற தத்துவமாஞ் சித்துவவாழ்
வென்னிற் பிரியா வியல்.

1699. அதுவகமா வாய்ந்தறிந்த வவ்வறிவா முள்ளத்
தெதுவுமில்லை யென்னையலா தே.

(வெண்பா)

1700. சொருபத் தியானமே சுத்தசற் போத
குருபத்தி யாகக் குலவ—ஒருவத்து
வாகத் துலங்கு சொரூ பானுபவக் காட்சியால்
ஏகத் துவமே யியல்.

1701. அருள்வழிபா டாற்றினேற் கார்ந்தது சற் போதப்
பொருள்வளஞ்சேர் மோனானு பூதி—இருள்வளர்
மோகக் கலக்கமே முப்புடியின் பேதவகை [பொய்ம்
ஏகத் துவமே யியல்.

1702. தானேதா னாகவொளிர் சற்குருவாற் கூடியது
நானேநா னாவொளிர்மெய்ஞ் ஞானபதம்—வானேவா
னாக வழங்கல்போ லான்மானு பூதிநிலை
ஏகமே வாத்து விதம்.

1703. பரத்திற் படிந்தவருட் பார்வையால் வேதச்
சிரத்தின் கருத்துத் தெரிந்தேன்—திருத்தமா
வுள்ளதொன் றன்றி யுபயமில்லை யுள்ளத்தே
தெள்ளிதாத் துன்றுஞ் சிவம்.

1704. விசுத்தமா மென்சொருப மெய்யிலே யில்லை
பசுத்துவமா மோக வசுத்தம்—அசித்தெனவொன்
றில்லவே யில்லை யிரண்டற் றொளிர்சொருப
வல்லமைசேர் சிற்கே வலத்து.

1705. விராமமுறச் சித்த விருத்தியென் னுள்ளே
நிராமயமா மோன நிகழ்வால்—ஒரேமெய்யாம்
பொன்னி லிரண்டில்லாப் பூண்போ லறிவொளியா
மென்னிலே யில்லை யிரண்டு.

1706 வீடாக வென்னுள் விளங்குவது சுத்தவருட்
பீடார்ந்த மோனப் பிரம்மபதம்—வாடாத
மாட்சிசே ரந்த மலர்ச்சியிலே பேதமயற்
காட்சிசே ராட்சி யிலை.

(கொச்சகக் கலிப்பா)

1707. பொன்னையே போன்றசற் போத சொரூபமாந்
தன்னையே நானாகத் தானொளிரப் பெற்றமையாற்
றுன்னு முபாதிபற்றித் தோற்றுமெவ் வேற்றுமையுந்
தன்னியலே யன்றிமற் றன்னியமோர் சற்றுமன்றே.

1708. பின்னலாஞ் சிச்சடம்பே திக்கிலன்றிக் கண்ணுதலே
சொன்னலுந் தோன்றுது சுத்தாத் துவிதவுண்மை;
தன்னலே தான்விளங்கு தற்பரமெய்த் தன்மைகண்
[டால்
என்னை யென்னை யில்லையிரண் டென்றுமே.

## ௬. சொரூப இயல்பு

(குறள்)

1709. பொன்னம் பலசொருபம் புந்திசெய்தார் தம்முணர்வு
மன்னும் பரமசிவ மாண்பு.

1710. முயற்சிசேர் மோக முனைப்பற்று ருள்ளத்
தியற்சிற் பரங்காண் குறும்.

1711. அருட்பரமா வுள்ளத் தவிர்சொருப வாழ்வில்
இருட்கலக்க மென்று மிலை.

1712. சச்சிற் பரமான *தானென்றே எவ்விதத்து
மெச்சிற் படாத பொருள்.

* தான் – கேவலாத்துவிதமான சுத்தான்ம சொரூபம்.

1713. கண்டுகொண்ட மோனவருட் கைவல்ய வாழ்வுசற்றும்
விண்டொழிய வொண்ணு வெளி.

1714. யாதா மதிசயமு மில்லைகை வல்லியசற்
போதானு பூதிப் புலத்து.

## எ. உண்மை இயல்

(குறள்)

1715. போத சொரூபமாப் பொங்கலே யாங்கண்ட
வேதமற்ற வுண்மை யியல்.

(கொச்சகக் கலிப்பா)

1716. மனக்கற்ப ஞசத்தி மாண்டவகந் தானே
எனக்குண்மை யாக வியைந்தவருட் பேற்ருல்
தனிக்கலுற்ற சுத்த சதாசிவமே சற்று(ம்)
நினைக்கலரி தானமெய்ஞ் ஞேயநிலை யாமே.

## அ. சொரூபமே பெருந் தெளிவு

(குறள்)

1717. உளனென்னுந் தன்சொருப வுண்மைபோல் வே
தெளிவுநான் காண்கின் றிலேன். [ற்ரூர்

1718. அருள்விளங்கப் பெற்ற வகத்தில் விளங்கும்
பொருள்விளக்க மாமெய்ப் புலன்.

(வெண்பா)

1719. மறவியாம் பாச மயக்கமற வுள்ளத்
தறிவியல்சேர் தன்மெய் யறிந்தாற்—பிறியா
வறிவான மோனத் தனைவோரு மொன்ரு
வுறவாடிக் கொண்டே யுளோம்.

## கூ. உள்ளுணர்வு

(குறள்)

1720. ஒப்பமா வுள்ள துலகத்தென் னுள்ளுணர்விற்
செப்பமா வுள்ள சிவம்.

(வெண்பா)

1721. உள்ளுணர்வே யன்றியுயிர்க் கோருறுதி யில்லையவ்
வுள்ளுணர்வே தன்சொருப வுண்மையாம்—உள்ளு
[ணர்வைப்
பற்றலுற்றே மோனப் பரகதிவாழ் வாகவெனக்
குற்றதுபே ரின்ப வுணர்வு.

(கொச்சகக் கலிப்பா)

1722. உள்ள துணர்வா வுணர்வே யுளதாகத்
தெள்ளத் தெளிகிற்பின் சீவன் சிவசொருபம்;
கள்ளப் புலன்களு(ம்)மெய்க் கண்ணு வொளிர்
வெள்ள வுணர்வின் விலாச வுருக்களே. [சொருப

## கo. அறிவுக் கண்

(குறள்)

1723. விண்ணே கண் ணாக விளங்கலா லுள்ளத்திற்
கண்ணுக்கில் காட்சிப் புலம்.

(வெண்பா)

1724. ஜீவன் சிவவுருவாத் தேறத் தெளியவகப்
பார்வையியல் பாகப் படர்தலால்—ஆர்வ
வருட்பதமா வுள்ள வகவொளியே சோணப்
பருப்பதமெய் யான பரம்.

## கக. இன்ப வெளி

(குறள்)

1725. உள்ளமா வுள்ளத்தே யுள்ளதுகாண் சுத்தவருள்
வெள்ளமா மின்ப வெளி.

(கொச்சகக் கலிப்பா)

1726. யானெனதென் றெண்ணி நா னேழைமைப் பட்டது [போய்த்
தான்றனதாக் கண்டு சதாசிவசம் பத்தடைந்தேன்;
யானுமில்லை நீமுதலா வேதுமில்லை, மோனவருள்
வானவெளி யாவகத்து வைகும் பரசிவத்தே.

**சஉ. மோனமே முடிந்த சிறந்த நிலை**

(குறள்)

1727. சுருங்கலற்ற வாளுத் துலங்கும் இதயத்
தொருங்கலுற்ற மோன வுணர்வு.

(வெண்பா)

1728. ஊன மகன்ற வுணர்வா வொளிர்சொருப
மோனமே யாருயிர்க்கு முத்திநிலை—தீனவகப்
பான்மைசேர் மோகப் பதைப்பொடுங்கில் வாலறி
தான்மருவு வாழ்க்கை யது. [வாத்

1729. கண்ணன்றி யில்லை கடவுள் அருட்பர
விண்ணன்றி யில்லையெவ் வித்தகமும்—உண்ணின்ற
சிற்பரமா மோனத் திறமன்றித் தேர்ந்தடைய
எப்பரமு மில்லை யெனக்கு.

குறிப்பு.—அண்டங்களேழும் ... கண்டசிவனுமென்
கண்ணன்றி யில்லையே (திருமந்திரம்)

1730. போத சொரூபப் புலமே யருட்புலமா
மேதக்க வாழ்வில் விளங்குவதால்—பேதப்
புலங்கடந்த மோனப் புலந்தானே யின்ப
நலங்களின்மே லாமெய்ந் நலன்.

1731. பிழைதீர் சொரூபவருட் பெற்றியென் னுள்ளே
நுழைவுற்ற நுட்பவொட்ப நோக்கால்—ஒழியா
வுணர்ச்சிசேர் மோன வொளிவெளியாம் போதப்
புணர்ச்சியே முத்திப் புலன்.

1732. உண்மை யளவா வொளிர்சொருப மோனமே
திண்மைசேர் கைவல்ய சித்திமுத்தி—வண்மைசேர்
சாந்தியில்ல மான சதாசிவமாந் தன்சொருபஞ்
சேர்ந்தியல்கம் பீரச் சிறப்பு.

(கொச்சகக் கலிப்பா)

1733. உகந்தமெய்ஞ் ஞான வுறவாம் பிரேமை
இகந்தொழிய வொண்ணு வியல்பான வுண்மை;
பகிர்ந்துபடு மோகமனப் பான்மையங் கில்லை;
முகந்துகொள வேண்டுவதம் மோனவருள் வாழ்வே.

### கஙு. அருள் வாழ்வு

(கொச்சகக் கலிப்பா)

1734. *அதுவா வழிந்தோர் அறிவா மிதயப்
பொதுவான சுத்தவருட் பூரணமா வாழ்வார்;
பதியான வுண்மைப் பரமசிவ போதச்
சதிர்படவாழ் கின்றேன் அகந்தைச்சா வாலே.

* அது – பிரம்ம வாசகம்.

1735. அருள்வாழ்வு பெற்ற வடியனேன் காண
இருள்வாழ் வெனவொன்றெங் கெங்குமே யில்லை;
அருள்வாழ்வே காண்க வதீதவுண்மை யாகத்
தெருள்விளங்கு சுத்த சிவானந்த வாழ்வே.

1736. ஈசன்பால் வேணவா வேய்தலாற் சுத்தசிவ
நேசமே யாக நிறைந்த வுணர்வூடு
பாசப் புலவுலகப் பற்றுள்ளஞ் சற்றுமற்ற
*வாசமே தெய்வ வசீகரவாழ் வாவதே.

* வாசம் – ஜீவியம்.

### கச. ஊணுதலே அருள் வாழ்வு

(வெண்பா)

1737. ஞான விலாசத்தே நாணலாய் நானென்னு
மூன முனைப்பற் றொழிதலால்—மோனவருட்
செம்பதமென் னுள்ளே தெளிந்தேன் குருரமண
நம்பனையே நம்பலுற்ற நான்.

(கொச்சகக் கலிப்பா)

1738. என்னை யிழந்தேற் கிறைவனருட் சிற்பரவாழ்
வென்னியல்பாத் துன்ற வியன்றதுமோ ரனுபவம்;
மன்னியபே ரின்பவியல் வாழ்வு விரும்புவோர்
தன்னையிறைக் கூணாகத் தாமளிக்க வேண்டுமே.

## ௪௫. உலகு பரம்

(குறள்)

1739. வெள்ளப்பே ரின்ப வெளியா வுலகொளிரும்
உள்ளத்தே யுண்மையுணர்ந் தால்.

1740. சிற்பதமே யாகச் செழிக்கலுற்றேன்; கற்பனை
சொப்பனமே தோற்று முலகு.

(வெண்பா)

1741. அறிவாக வென்னை யறிந்தபின்னு மந்த
வறிவுமய மான வகிலம்—அறிவான
என்னி னயல்போ லியல்விவகா ரத்தொடர்ச்சி
பொன்னி லணிகளே போன்ம.

1742. எங்கெங்கு முள்ள வியற்பிரம்மப் பான்மையால்
அங்கங்குத் தோன்று மகிலமுமென்—பங்கமில்சற்
போதவருட் பார்வைப் பொலிவிலே முப்புடியின்
பேதமகன் றொன்றப் பெறும்.

1743. கடந்த சொரூபவருட் கைவல்யக் காட்சி
படர்ந்தமனந் தானே பரமாம்—படர்ந்த
அருட்சிற் பரவெளியே யன்றியன்றே யஃது
மருட்கற் பனைசேர் மனம்.

குறிப்பு:—அஃது பரவெளியே யன்றிக் கற்பனைசேர் மனமன்று எனக் கூட்டுக.

(கொச்சகக் கலிப்பா)

1744. எங்கெங்கே யேகினுநான் எவ்வெதுவே தேர்கினு
[நான்
அங்கங்குந் தன்கருணை யல்லதுவே ரோர்கிலேன்;
எங்கெங்கு மெவ்வெதுவும் ஏகான்மா வாகவிளங்
கங்கணுன் போத வருள்விலா சங்களன்றே.

### கசு. அன்பே பேரின்ப சிவம்

(குறள்)

1745. தானேநா னாகத் தழைத்தொளிர்சாந் தானுபவத்
தேனேநான் கண்ட சிவம்.

(வெண்பா)

1746. எண்ணிலாமோன வியற்பதவாழ் வென்னுயிர்க்கு
வெண்ணிலா வான விசிராந்தி—தண்ணிலா
வாகத் தழைத்தொளிர்மெய் யன்புசிவ ஞானவருட்
போக நுகர்ச்சிப் புலன்.

### கஎ. பிரமாதமே பிழை

(குறள்)

1747. தன்னை யறியாத் தவறுபோல் யாங்காணேம்
பின்னையொரு மாயப் பிழை.

1748. பிழையான மாயப் பிரமாதப் பீடை
யொழியிலன்றி யில்லையுயிர்க் குய்வு.

(வெண்பா)

1749. யானேதா னாக விருந்தொளிர்சச் சிற்பரத்தை
நானே மறந்த நடலையென்கொல்—மோன
வருட்கே வலமா மதீத சொரூபத்
தொருக்கானு மில்லை மறப்பு.

### கஅ. புறச்சின்னம் பயனின்மை

(குறள்)

1750. தற்குறியிற் றன்னியல்பா நிற்கலுற்றே னுக்குமற்
றெக்குறியா லென்னே பயன்.

### கசு. அருளே பிரதானம்

(கொச்சகக்கலிப்பா)

1751. ஆண்டா னருளே யலாம லடியாருக்
கீண்ட லரும்பே ரிருநிதியம் வேறில்லை;
ஈண்டலுற்ற முற்றவத்தா லெய்தலுற்ற துள்ளத்திற்
காண்டலரு தெய்வக் கடவுட் பிரானருளே.

### உ0. தன்னழிவே தியானம்

(கொச்சகக் கலிப்பா)

1752. விண்ணுருவா வுள்ள விசுத்தப் பரசிவத்தை
யெண்ணுறுவோ ரெவ்வாற்று லெண்ணுகின்ற ரோ [வறியேன்;
எண்ணளவே யானற் றிறந்தொழியத் தன்மயமா
விண்ணுருவு வேற்றுமையின் றாக விளங்கியதே.

### உக. சிவோஹம்

(வெண்பா)

1753. சித்தக் கலக்கமறத் தீர்ந்து சிவோகமெனும்
புத்தித் தெளிவு பொருந்திடலே—பத்திப்
பரிசான மோனப் பரமோப சாந்தத்
துரியானு பூதி துணி.

### உஉ. வாக்கால் கூறி வராது ஞானம்

(கொச்சகக் கலிப்பா)

1754. தானேதன் ஞலடையத் தக்கதோர் சித்தியாத்
தானேதா ஞனவொரு தத்துவன்சார் வித்ததுண்டு;
தானே தனக்காகத் தன்ஞற் றலைப்படுமெய்ஞ்
ஞானே தயசொருப நல்லருள்யார் சொல்லுவதே.

### உரு. பற்றே துன்ப காரணம்

(கொச்சகக் கலிப்பா)

1755. எனக்கென் றெதுவுமிலேன் யானும்; இயல்பாற்
றனக்கென் றெதுவுமிலா னுண்டவனும்; சந்தித்
தெனக்கெனக்கென் றுள்வேர்த் திகல்வார் தமதே
மனக்கவல்குன் றுமயக்க வாழ்வா முலகே.

### உசு. நிட்டை பெறுக

(கொச்சகக் கலிப்பா)

1756. ஒற்கமற வுண்மை யொளிர்தலா லுள்ளத்திற்
கற்கலுற்ற வெல்லாமே கற்பனையாக் கண்டுகொண்
கற்கலுற்ற ஞானக் கலைக்கற்றை மோகமற [டேன்;
நிற்கலுற்ற ஞானன்ம நிஷ்டைமனம் பற்றுகவே.

### உஎ. ஆடாமல் ஆட்டுகின்றான்

(கொச்சகக் கலிப்பா)

1757. ஊடுபே ராம லுணர்வுருவா வுள்ளத்திற்
பீடுபெறத் தங்கு பிரானருளாற் கண்டுகொண்டேன்
ஆடுகின்றாற் போல்கினுஞ்சிற் றம்பலவன் சற்றுந்தா
னாடுகிலான் மற்றனைத்து மாட்டுவிப்ப தன்றியே.

## 68. என்னவை

### க. என்மனம்

(குறள்)

1758. மோனவுணர் வான முழுமுதற்பே ரின்பவருள்
வானமே யென்றன் மனம்.

1759. ஈசன் பதத்திலுயிர்க் கின்பந் துலங்கலால்
வாசமாங் கேயென் மனம்.

1760. எண்ணவொண் ணாத விறைவன் சொரூபவருள்
வண்ணமே யாமென் மனம்.

1761. உண்ணனவாப் பொங்கு முபசாந்த போகவருள்
வண்ணமே யாமென் மனம்.

1762. பொய்ப்பாச மற்ருெழியப் பொங்குசுப மோனவருள்
வைப்பா வியலும் மனம்.

1763. ஜீவியமாத் துன்று சிவானுபவ மோனவருட்
காவியமா மென்றன் கருத்து.

(வெண்பா)

1764. பார சொரூபவருட் பார்வையா லென்னுயிருக்
காரமுத மான வனுபூதி—காரறிவாம்
பாசபந்த மோகப் படலமறக் காண்டலான்
மாசிவந்தா ளுமென் மனம்.

1765. சற்போத மாகத் தழைத்த சதாசிவமெவ்
வெப்போது முள்ளத் திலகலால்—துர்ப்போத
மான வகப்பே யறக்குலைந்து சுத்தவருள்
வானவடி வாமென் மனம்.

1766. முத்தி சொரூபமா மூண்டொளிர்சற் போதசிவ
பத்தி ரசானுபவப் பான்மையால்—வித்தகமெய்ப்
புத்தமுத போகமாப் பொங்குறுமென் சுத்தவருட்
சித்தமது தானே சிவம்.

1767. அலையா தெனைத்தன் னருட்பதத்திற் கூட்டிக்
குலையாத மோனங் கொடுத்தான்—மலைபோற்
சலியாத மோன தயாசொருபப் பார்வை
நிலையாக நின்றதென் னெஞ்சு.

1768. நேயானு பூதிநிலை நிற்றலான் மோகவகப்
பேயாசை யானதுயர் பேர்ந்தொழிய—வாயா
வரம்பில்பே ரின்ப வளமான சாந்தி
நிரம்பலுறப் பெற்றதென் னெஞ்சு.

1769. சிற்றம் பலமே சிவமான வுண்மையா
வற்றமறத் தேறு மனுபவத்தால்—எற்றிப்
பொருவிகற்ப மாமுப் புடிகளிலும் மாரு
நிருவிகற்பங் கண்டதென் னெஞ்சு

1770. தம்பமா வூன்றுமொளித் தற்பரமா மோனவருட்
செம்பதத்து டென்சொருபந் தேறலாற்—பம்புமனச்
சுட்டறிவு கெட்டுச் சுடர்சொரூ பானுபவ
நிட்டையிலே நின்றதென் னெஞ்சு.

1771. மயல்சே ரகந்தை மனக்கற் பனையால்
அயல்பாய் முனைப்பற் றகத்தே—இயல்வா
லறிவே சொரூப வருட்பரமாய் மோன
நிறைவா வொளிர்வதென் னெஞ்சு.

1772. தாழ்க்கையற வென்னைத் தடுத்தாண்டான் சீர்ப்பாத
வாழ்க்கையிலே சாந்தி மடுத்தமனம்—பாழ்க்கைசேர்
புன்புலமற் றுன்றவருட் போத சொரூபசிவ
நன்புலமே தேர்வது நன்கு.

1773. தான்றனு வுள்ள சதாசிவமே தானாக
வான்ற சொரூப வறிவாலே—ஊன்றுதிட
மோனம் படைத்தலான் முட்டுப்பாடற்றவருள்
வானமா வாழும் மனம்.

1774. திண்மைசே ருண்மைத் தெளிவான ஞானவருள்
வண்மைசேர் சாந்தியே வாழ்வாக—அண்மையிலு
மண்மையா வோங்கு மதீத சொரூபசுக
வண்ணமா மென்றன் மனம்.

## உ. என் தியானம்

(வெண்பா)

1775. கருத்தெனக்கு நாளுங் கருத்தன் பதத்தைத்
திருத்தமாத் தேறித் திளைப்பே—கருத்தயலிற்
பாயா தருட்செம் பதத்தி லழுந்தலுறத்
தாயான தானே சரண்.

(கொச்சகக் கலிப்பா)

1776. ஒருக்காலு முண்ணின் றுழியா துணர்வாற்
கருக்காவல் பூண்டருளிக் காக்குங் குஞ்ஞளன்
இருக்கோல மிட்டேத் திறைவன்சற் போதத்
திருக்கோலம் யான்செய் தியான வடிவே.

## ௬. என் உரு

(குறள்)

1777. கைவல்ய வாழ்வாக் கலந்தியல்சுத் தானுபவத்
*தொய்வில்லை அஃதென் னுரு.

*ஒய்வு — நீக்கம், விட்டொழிவு.

1778. உலகனைத்துந் தோன்றியொடுங் *கொட்பவெளி யாக
இலகலுற்ற தென்மெய் யியல்.

*ஒட்பவெளி — சுத்தவெளி, பரவெளி,

1779. வெள்ள வொளிவெளியில் வேற்றுமனக் கற்பனையற்
றுள்ளதென் னுண்மை யுரு.

1780. தெள்ளிதா வுள்ளசிவச் செம்பதவாழ் வாகவகத்
துள்ளதே யென்மெய் யுரு.

1781. கண்ணோதா னுகக் கலந்தசிவ சுத்தவருள்
விண்ணேகாண் என்மெய் யுரு.

1782. நெஞ்சமே மோன நிறைவான வுண்மையா
விஞ்ச விளங்கியதென் மெய்.

1783. கண்ணு விளங்குசிவக் கைவல்ய மோனவருள்
விண்ணு விளங்குவதென் மெய்.

1784. ஊறுபடா வொட்பநுட்ப வுண்மையே உள்ளத்து
மாறுபடா வென்மெய் வடிவு.

(வெண்பா)

1785. பரசுகமா மோனம் பளிச்சிட் டொளிர
விரிசொருப மாக விளங்கும்—குருசொருபச்
சிர்தா மணியாஞ் சிவமணியே *யென்சொருப
சொந்தமாம் போதச் சுடர்.

*சொருப சொந்தமாம் போதச்சுடர் – போதச் சுட
ரான சொந்த சொரூபம்.

1786. முகங்குறுகித் தன்னையே முற்றமுற்ற நம்பிப்
புகலடைந்த வந்தப் பொழுதே—அகம்புக்
கிருள்சே ரகந்தையற வென்னுருவா வாண்டா
னருளே யடியேன் வடிவு.

1787. பரம சிவத்திலருட் பண்பறிந்த வாற்றாற்
பரம சிவத்திலன்பு பற்றிப்—பரம
சிவத்தையே முற்றமுற்றத் தேர்தலாற் கண்டேன்
சிவத்திலே யென்மெய்த் திறம்.

### ச. என் உயிர்

(குறள்)

1788. உணர்வில்வாழ் கின்றே னுணர்வாவாழ் கின்றேன்
உணர்வேயென் னுண்மை யுயிர்.

### ரு. என் உயிர்ப்பு

(குறள்)

1789. வெளியில் வெளியா விளைந்த சொரூப
வொளியேயென் னுண்மை யுயிர்ப்பு.

1790. உண்மையுயிர்ப் பாக வுளந்தெளிந்த சுத்தவருள்
வண்மையே நானடைந்த வாழ்வு.

### சு. என் உள்ளம்

(வெண்பா)

1791. சித்தா சனத்திற் சிறக்கவமர்ந் தற்புதப்பே
ரத்தாணி மண்டபத்தே யங்கணன்—சுத்தான்ம
போதவருட் சோதியாப் புக்குறையு மென்னுள்ளம்
போத சொரூபமே யாம்.

1792. மிக்க வருட்சீர் விளங்குசிவ லோகமெனக்
* கொக்க வுணர்வொளிசே ருள்ளமே—பொக்கமறப்
பொங்குமதி நுட்பப் பொதுவாம் பரவெளியாத்
தங்குவதவ் வுள்ளத் தலம்.

*ஒக்க — எங்கு மொக்க

## எ. என் இருப்பு

(வெண்பா)

1793. உள்ளமே யென்று லுபாசிக்கத் தக்கதென்
றுள்ளுணர்வாய்த் தானே யுணர்த்தலால்—உள்ளு
லுள்ளத் துணர்ந்தவவ் வுள்ளமே பற்றிநா [ணர்வா
னுள்ளத் தொழுகுகின் றேன்.

1794. உள்ளுணர்வா வென்னை யுடையான் பதஞ்சுட்டி
வுள்ள வொளுத வொருமையால்—உள்ளலற
வுள்ளுவதா மோன வுணர்வா யவன்சொருப
வுள்ளமே யாக வுளேன்.

குறிப்பு:—உள்ளதல துள்ளவுணர் வுள்ளதோ—(உள்ளது நாற்பது—மங்கலம்) எனவரும் பகவான் பாசுரம் ஈண்டு ஆராய்ந்தறிய வேண்டுவதாம்.

1795. தொக்கவொரு சுத்த சுவானுபவ மோனமே
மிக்கபெரு வாழ்வா விளங்கலாற்—சொக்கமனம்
மண்டுபே ரின்ப மலர்ப்பதத்திற் பொங்குமது
வுண்டுநான் வண்டா வுளேன்.

## அ. என் உண்மை

(கொச்சகக் கலிப்பா)

1796. அற்பனேற் காண்டா னருளா லுபசாந்தப்
பொற்புறுமோ னனுபவம் பொங்கவுளத் தொட்பநுட்
சிற்பரமே யாகத் தெளிந்தவென் னுண்மைநிலை [பச்
கற்பனையா வுங்கடந்த கைவல்யத் தற்பரமே.

1797. கள்ளமனக் கற்ப ை பேதக் கனவுலகு
தெள்ளத் தெளிந்தாற் சிவக்கே வலசொருபம்;
உள்ளதொன் றேயா வுளம்பொங்கு சுத்தவருள்
வெள்ளப் பரசிவமா விஞ்சியதென் னுண்மையே.

1798. மோனவருள் வெள்ளம் முகக்கவென் னுள்ளத்து
ஞான சொரூபமா நண்ணியவென் னுண்டவனுக்
கூன வகந்தையுணர் வூறுக விஞ்சுபர
வானமே யாக வளர்ந்ததென் னுண்மையே.

1799. ஆன்ம சொரூப வறிவின் றுலக்கமாத்
தான்மருவு மோன சமாதியிலே சாந்தியடைந்
தூனமற வுள்ளே னுளஞ்சிற் பரவெளியாத்
தான்மருவு சுத்த சதாசிவமாத் தற்பரமே.

## க. என் கல்வி

(குறள்)

1800. ஜீவியமா வுள்ளசிவச் செம்பதமே சுத்தவருட்
காவியமாக் கற்றுவக்கின் றேன்.

(வெண்பா)

1801. இருட்குலமின் றுக வி்தயத்தே யீச
னருட்பெருஞ் சோதியா வாண்டான்—அருட்புலமை
மேவிற் றெனக்கு விசுத்தவருட் சீபாத
சேவைக் குதவியாச் சீர்த்து.

1802. இம்பரே யன்ப ரிதயத் தியல்பாகச்
செம்பதமெய் வாழ்வு திருத்துவோன்—அன்பர்
செவிக்கமுத மானவருட் சீர்த்தியே நான்சொல்
கவிக்கமுத மான கருத்து.

## கo. என் நலன்

(வெண்பா)

1803. துன்னுற்ற யோகத் தொடர்பா லிதயத்து
நன்னர்த் தெளியலுற்ற நல்லறிவால்—தன்னிற்றுன்
பண்பட் டொளிர்சொருப பத்தியே நானகத்து
நண்புற்ற வுண்மை நலன்.

## கக. என் விருப்பம்

(குறள்)

1804. அகப்பே யகற்றி யறிவுருவா வாண்டா
னுகப்பே யடியே னுகப்பு.

(வெண்பா)

1805. தன்னியலு வாண்ட தயாசொருப சற்குருவைத்
துன்னியவே கான்ம சொரூபமா—அன்னியமி
லன்பால் வழிபட் டவன்பதமே யான்றசிவ
நன்பதமா நானடை வேன்.

1806. பிறக்கிற் பிறக்க விறக்கி விறக்க
மறக்கலின் றுக மனத்தே—சிறக்குமுயர்
சச்சித்தா மோன சதாசிவசற் பத்தியொளி
யிச்சித்தே னென்று மினிது.

1807. பொய்யடிமை யில்லாப் புலவோருக் கன்புபட்டு
மெய்யடிமை யாக விரும்பினேன்—ஐயறிவு
வாலறிவாந் தன்சொருப வாழ்வுறத்தன் சிற்பதத்தின்
பாலுறவாம் பத்தி படைத்து.

1808. காணக் கிடைக்குமோ கண்மணியின் காட்சிநான்
பூணக் கிடைக்குமோ பொற்பாதம்—மாணவருட்
பேரின்ப மாட்சி பெறுவேனோ தன்மயமா
வூரன்பு பெற்றென் னுளத்து.

1809. அயத்தனமாச் சும்மா வமர்ந்துசுக முண்ண
மயர்த்தனமாம் பொய்ம்மனத்தை மாற்றி—உயிர்த்
[துணையா
வாண்டவன்பா லன்பே யடியேனுக் கேழ்பிறப்பும்
வேண்டுவதா முண்மை விருப்பு.

கஉ. **என் பற்று**

(வெண்பா)

1810. சோதிக்க லுற்றூர்க்குத் துப்பாக மோனஞா
ஞதிக்க வாழ்வொளிசே ராணையாற்—போதிக்கும்
போத சொரூபவருட் பூரணனுங் காரணன்மெய்ப்
பாதமே யாமுடைய பற்று.

கந. **என் வியப்பு**

(குறள்)

1811. பந்தப்பட் டாற்போற் பதறுமனப் பான்மையினும்
விந்தைநான் கண்டறி யேன்.

### கஎ. என் நாட்டம்

(குறள்)

1812. நாட்ட மெனக்கு மெய்ஞ் ஞானகுரு என்னுருவாக்
காட்டியசற் போதக் கழல்.

### கஅ. என் கண்

(வெண்பா)

1813. ஞானசிங் காதனத்து நல்லவருட் பேரரசு
நானசங்க மாக நடாத்தவே—ஞானசிங்க
மாகவிளங் காண்டா னருள்கூ ரகண்டசிவ
யோகவுளங் கண்ணு மெனக்கு.

அசங்கமாக நின்று என, அவாய் நிலையால் வருவித்துக் கொள்க.

### கக. என் கருத்து

(வெண்பா)

1814. உகந்தெழுந்து நானென் றுருத்துழலும் போதம்
இகந்தொழிந்த வென்கருத்தே தென்னில்—அகந்தை
துள்ளலறு மோன சொரூபப் பரவெளியை [மனத்
யுள்ளலற வுள்ள லுகந்து.

1815. பத்திசெயத் தக்க பரமனிவன் ருனேயென்
றெத்திசையுங் கொண்டா டிறைரமணன்—ஒத்திசை [யும்
பாலுந்தே னும்போற் பரத்தொடுஜீ வைக்கியமெக்
காலுஞ்சேர் வாழ்வென் கருத்து.

குறிப்பு:— என்னுள்ளமே, ரமணன் சொரூபமான பரத்தோடு என் ஜீவனுக்குண்டான ஐக்கிய ஞானுபூதி (கங்கை கடலொடு கலந்தாற் போல்) என்றும் இடையரு நிகழ்ச்சி சேர் வாழ்வென்பதாம். பிறந்த தெவன்றன் (உள்ளது நாற்பது, அனுபந்தம்-II) என்னும் பகவான் பாட்டோடு, உணர்ந்தார்க் குணர் வரியோன் என்னும் திருக்கோவையாரும் அதனுரையும் உற்று நோக்குக. ஈசஜீவர் உண்மையில் ஒரே தன்மைய ராதலால் அவர்தம்மில் கலத்தல், ஒத்திசையும் பாலுந் தேனும் போல் என அவற்றின் கலப்போடு உவமிக்கப் பட்டது.

## கஎ. என் குறிப்பு

(குறள்)

1816. நீடுங் குருபாத நிஷ்டையே யென்னுருவாக்
கூடுவதென் வாழ்க்கைக் குறி.

(வெண்பா)

1817. துருவபத மான சொரூபமய மாகத்
திருவருளாற் சித்தமலம் போக்கித்—திருவடிக்காட்
கொண்டான் குறிப்பே குறியாக் குறித்தலன்றிக்
கொண்டிலேன் மற்றோர் குறிப்பு.

## கஅ. என்புலம்

(குறள்)

1818. தன்னியலா வுள்ளவருட் சைதன் னியசொருபப்
பொன்னியலே நான்காண் புலம்.

## கக. என் தொழில்

(வெண்பா)

1819. தனது சொரூபவருட் சார்பயர்த்துப் பேய்போ
லெனுதியா னென்றுடலோ டேங்கி—அனுதியாக்
காழ்த்த வகந்தைமயற் கட்டறுத்த வாண்டவன்சீர்
வாழ்த்தலே யென்சீ வனம்.

1820. தனக்குவமை யில்லாத் தலைவ னகம்புக்
கெனக்குமகிழ் வாழ்வளித்த வீசன்—எனக்குக்*
கழலொன்று மோனக் கருத்தா லுரித்தாத்
தொழலன்றி யில்லை தொழில்.

* எனக்குத் தொழலன்றித் தொழிலில்லை என
இயையும்

## உ0. என் இறைபணி

(வெண்பா)

1821. நாதன்றுள் வாழ்கவென நாவார வாழ்த்துறுமவ்
வீதொன்றே யான்செய் யிறைபணி—நாதன்
மிகப்போது மான விழுப்பணிபோ லிஃதே
யுகப்போடு கொண்டா னுளத்து.

1822. ஈண்ட மகிழ்தரும்பே ரின்பமெனக் கன்பிலென்னை
யாண்டரம ணேச னருட்பணியே—மூண்டபெரு
மோனக் கிளர்ச்சியான் மோக வகந்தைசேர்
தீனக் கலக்கந் தெறும்.

1823. அண்ணலருள் வாழ்த்து மதேதவமா வென்னுளத்து
நண்ணலான் மோக நசித்தலாய்—நண்ணியது
பண்ணுமவை யெல்லாம் பரம னருட்பணியா
நண்ணுமுயர் ஞான நலன்.

## உக. என் வாழ்வு

(குறள்)

1824. தேசிகன்சீர் பாடித் திளைத்தலே செய்தவமாத்
தேசுயர்ந்த வாழ்வென் னுயிர்க்கு.

1825. உண்மையா லென்னை யுடையான் சொரூபவருள்
வண்மையே நானடைந்த வாழ்வு.

1826. ஒராவொருபே ரின்ப வுணர்வான மோனப்
பிரானருளே யென்ஜீ வியம்.

1827. எண்ணவொணு மோன வியல்பான சொச்சொருப
வண்ணமே நான்பெற்ற வாழ்வு.

1828. சிவமான மோனந் திளைத்தலா லுண்மைத்
தவமாத் தழைத்தது வாழ்வு.

1829. அந்த ரியாமியா வாண்டா னியக்குமவ்
விந்தையே நான்வாழ் விதம்.

1830. எம்மலமும் பற்று வியற்சிற் பரசொருபச்
செம்மலுணர் வென்சீ வியம்.

1831. குலாவாக நின்றசிவக் கோலமே நோக்கி
நிலாவலுற்றே னிந்த நிலத்து.

(வெண்பா)

1832. அரதையற வென்னை யருட்பார்வை யாலே
சரதமா வாண்ட தயாளு—பரதெய்வ
வள்ளலையா னுள்ளி வழுத்துவதே வாழ்வாக
வுள்ளுவதா மென்றன் னுயிர்.

1833. சுத்தசிவ மான சொரூபவருட் பார்வையே
மெய்த்தவமா வென்னுள் விளைதலாற்—சித்த
முழைத்து வருந்தா துடையா னருளை
வழுத்தலே யாயிற்றென் வாழ்வு.

1834. செழித்தமெய் யன்பர் திரள்காண நாயேன்
குழைத்ததமிழ்ச் சொன்மாலை கொண்டே—அழைத்து [மிகத்
தன்னுறவா மத்துவிதச் சார்புணர்த்தி யென்னுளத்து
மன்னுகுரு மாமணியென் வாழ்வு.

1835. மனக்கற் பனையறவே மாற்றியுளத் தாழ்ந்து
தனிக்கத் தனிக்கவொளிர் சாந்தி—எனக்கியல்பா
நீடுசிவ கங்கையா நெஞ்சம் பரவெளியாக்
கூடுவது வாழ்க்கைக் குலா.

1836. வினையினின்று நீங்கி விழுப்பதத்திற் சேர
மனையினின்று மாற்றிய மாண்பால்—முனைவனு
வாண்டவனைப் பேணு மறிவே யடியேற்குப்
பூண்டவருள் வாழ்க்கைப் பொலிவு.

1837. பங்கமில்வாழ் வாகப் பயில்வதெனக் கார்வமெழப்
பொங்கு சொரூபவருட் பூரணமாய்—அங்கமகம்
புத்தியா மோகப் புலையகந்தைச் சுட்டகன்ற
சுத்தவறி வான சுகம்.

1838. போதவடி வாகப் பொருந்துமெனக் கோருடலில்
வாழ்தலொடு சாதல் வறுங்கலக்கம்—வேதகமார்
சுத்தவெளி யாகச் சுடரும் பரப்பிரம்ம
வத்துவிலே யுள்ளதென் வாழ்வு.

1839. சொந்தவுரு வாகத் துலங்கிமனஞ் சொக்கலெனக்
கந்தமில்பே ரின்ப வழகனுரு—எந்தவித
வெண்ணமுமின் றாக வியல்சொரூ பானுபவ
வண்ணமே யந்த மனம்.

(கொச்சகக் கலிப்பா)

1840. மரமான வென்னைத்தன் மாணடிக்கா ளாவாண்
டுரமான வுண்மை யுணர்வால் அதீதப்
பரமான தன்மெயென் றுற் பாடுவித்துக் கொண்டான்
திரமான சுத்தவருட் சீர்மையென் வாழ்வே.

1841. காமனையெல் லாமகலக் கற்பகமா வுள்ளத்திற்
சேமவியல் வாழ்வு சிறக்கவளித் தானடிக்கீழ்
ஓமெனவென் னுள்ளூ றுணர்வே யுபாசனையா
நாமம் பிதற்றி நடப்பதென் வாழ்க்கையே.

1842. என்மனே பீஷ்டப்பே ரின்பவியற் சிந்தனையேல்
கன்மவெம் பாசக் களையகற்றி யுள்ளத்திற்
சன்மசா பல்யச் சதிர்செய்ஞா னுனுபவ
தன்மவாழ் வாகத் தழைத்தகுரு பாதமே.

1843. நோவித்தென் னுருயிரை நூழில்செய்த பொய்ம்மயலைக்
கோவித் *திதயக் கொளைசெற் றகமகமென்
றுவிர்ப் பவித்த வருட்புரணக் கண்மணியைச்
சேவித் திருக்கைசுக ஜீவனமென் னுருயிர்க்கே.

* இதயக்கொளை – இதயமுடிச்சு, இதயக்கிரந்தி

1844. அழுது குடும்பத் தழுங்கியவென் றன்னைப்
பழுதறவாட் கொண்டவருட் பார்ப்பான் பதத்தைத்
தொழுது வழுத்தலே தொக்கபே ரின்பப்
பொழுதுபோக் காகப் பொருந்தியதென் னெஞ்சே.

1845. பிறிதுபடு மோகப் பிழைசே ரகந்தை
வறிதுபட மோனவருள் வாழ்வொளிசே ருள்ளத்
தறிதுயில்கொள் கின்றேற் கலகில்பே ரின்ப
வுறுதிசேர் சாந்தியா வுற்ற துயிர்ப்பே.

1846. அறிவான வுண்மையி லாழப் படிந்த
செறிவே சிவத்துவமாத் தேர்ந்தசித் தத்திற்
பிறிவிலா வுண்மைப் பிரம்மபத மோன
நிறைவே யெனக்கு நிலைக்களவீ டாமே.

1847. சொரூப வொளியாற் றுலங்கியவென் னுண்மை
விரூபவெளி யான விசுத்தத் துரீயம்;
அரூபமா மந்த வருள்வெளியில் மோகக்
குரூப வகக்கொடும்பேய்க் கோட்டாலை யின்றே.

1848. மத்தவகப் பேயா மருண்டுநான் மாழ்கலுற்ற
மித்தையைக்கண் ணேக்கால் விளிவித்து வீறுசால்
சுத்தவருள் வாழ்வாத் துலங்குமோ னப்பதத்தில்
வைத்தென்னை யாண்டவன்சீர் வாழ்த்தலென் வாழ்க்
[கையே.

குறிப்பு:—மித்தை - மித்தியாப் பிரபஞ்ச மயக்கத்துக்கு இருமடியாகு பெயர்.

## உஉ. என் உறையுள்

(வெண்பா)

1849. தெரியா தவைக்குந் தெரிபவைக்கு மொக்கக்
கரியான மோனக் கருத்தாற்—பிரியா
வுறையுளெனக் குள்ளத் துணர்வுருவா வுள்ள
விறைவனருட் பாத நிழல்.

## உ௩. என் பொருள்

(குறள்)

1850. துங்கப பரசிவமாத் துன்று சொரூபவருட்
புங்கமென் செங்கைப் பொருள்.

1851. மத்த வகந்தை மனக்குறையாந் தைனியஞ்சேர்
சித்தமல மற்றுச் சிவபதத்தே—சுத்த
வறிவாக வுள்ளவெனக் கன்பான மோன
நிறைவேபே ரின்ப நிதி.

1852. வேணவாக் கொள்ளவொரு வேற்றுப் புலமறநான்
காணக் கிடைத்தவருட் கைவல்யம்—மாண
விளக்கமா மோன விபூதியா வென்றுந்
திளைக்கவெனக் குள்ள திரு.

(கொச்சகக் கலிப்பா)

1853. புத்திக் கமுதமாப் பொங்குசிவ போதவருள்
வித்தைக் கதிபதியா மேவுங் குருரமணன்
சித்திகளுக் கெல்லாமே சித்தியாச் சேர்சொருப
முத்திப் பதமெனக்கு முற்றமுழுச் செல்வமே.

## உச. என் உடைமை

(வெண்பா)

1854. பாத மெனக்குப் பரம்பொருளாஞ் சேமநிதி
போதம் பரமசிவ புண்ணியமாம்—ஓதுசிவ
யோகம்பே ரின்ப முபயமறு கேவலத்தில்
வேகமகல் சாந்தியே வீடு.

1855. செல்வ மெனக்குத் திருவருளே தேர்தலுறுங்
கல்வியெனக் கண்டான் கழலறிவே—சொல்லரிய
மோதமெனக் கான்றசுப மோனமே முத்திதரு
நீதமெனக் குண்மை நிலை.

## உரு. என் ஒழுக்கம்

(வெண்பா)

1856. மயல்சே ரகந்தைவளர் மாயமாஞ் சீவச்
செயலகன்ற மோனத் திறத்தால்—இயல்பாம்
பழக்கமெனக் கோங்கும் பரபத்தி யாக
வொழுக்கமெனக் கான்ற வுணர்வு.

## உசு. என் தவம்

(குறள்)

1857. சிவமேவாழ் வாகத் தெளிந்தியன்ற மோனத்
தவமேநான் செய்யுந் தவம்.

(வெண்பா)

1858. துலங்குறுமெய் வாழ்வு சொரூபமே யாக
மலங்குலையச் செற்றவருள் வள்ளல்—கலங்கலறச்
சித்தந் தெளிந்த திருத்தொண்டர் கூட்டுறவே
மெய்த்தவமா மேவு மெனக்கு.

குறிப்பு: வள்ளலது திருத்தொண்டர் என இயையும்.

1859. ஆரா தனையடியே ஞற்றுவது தன்னடியிற்
பேரா வுணர்வாப் பிறங்கலால்—பூராய
மானவருட் போத வவிச்சின்ன தாரையே
தானியல்பா நான்செய் தவம்.

குறிப்பு: உணர்வே ஆராதனையாப் பிறங்கலால் என விகுதிபிரித்துக்கூட்டித்தேற்றே காரமும் வருவித்துக்கொள்க.

## உஎ. என் வேண்டல்

(கொச்சகக் கலிப்பா)

1860. எத்தனைதான் கற்றாலுங் கேட்டாலும் யாதுபயன்
செத்தொழியி லன்றிச் செருக்கறவே சிற்பதத்தா
டத்தகவே நிற்கு மதுவல்லால் வேறெதுவும்
வித்தகமெய்த் தத்துவன்பால் வேண்டே னடியேனே.

## உஅ. என் தீர்த்தம்

(குறள்)

1861. தெள்ளும் பரமசிவ தீர்த்தமென் னுருயிருக்
குள்ளந் தெளிந்த வுணர்வு.

## உக. என் வணக்கம்

(கொச்சகக் கலிப்பா)

1862. இணங்கியோர் தாமே வணங்குவோ ரல்லால்
வணங்கியோ ரெல்லா மிணங்குவோ ரல்லர்;
மணங்கலந் தாண்ட மணாளன்மாட் டன்பா
லிணங்கியதே யேற்ற வணங்கலா யிற்றே.

## ௩௦. என் வழிபாடு

(குறள்)

1863. அருட்சிற் பரமா வனைந்த வுணர்வே
யருச்சனை நா ளுற்று வது.

(வெண்பா)

1864. அயர்ந்தொழிய கில்லே னடிகளுரு மெய்த்தன்
மயந்தெளிந்து வாழு மனத்தால்—உயர்ந்த
வருட்பாத பூஜை யனன்னியமா வாற்றி
யருட்பார்வை யாலுயிர்க்கின் றேன்.

1865. துலக்கமா வாண்டோன் சொருபமா வொன்றிக்
கலக்கமற வாழ்விற் கலந்தான்—உலக்கருமவ்
வொன்றாக வுள்ளானை யுன்மனீ பாவத்து
நன்று வழிபடுவேன் நான்.

1866 தேசிகனு வென்னைச் சிறக்கணித்தான் றெய்வமணி
வாசகமோர் சற்றென் மனத்தூற—நேசமாய்ப்
பாசமற நானவனைப் பாடிப் பதம்பரவிப்
பூசகனுப் பூசிக்கின் றேன்.

1867. தாயொடு தந்தையுந் தானே யடியேனுக்
காயகுரு தெய்வ மனைவருமாய்—மேயசுக
சச்சித்தா மேகான்ம தத்துவனைத் தன்மயமா
வர்ச்சித்தே னன்பா லகத்து.

1868. நள்ளிரா வூடுமெய்ஞ் ஞானரவி யாகவகத்
தொள்ளிதா வோங்கு சொருபற்குத்—தெள்ளிதாங்
கேவலமெய்ஞ் ஞானக் கிளர்ச்சிசேர் கேண்மையே
ஆர்வம்பொங் காரா தனை.

1869. நல்லேனே பொல்லேனே நானறியே னுண்டவனை
வல்லவா றெல்லாம் வழுத்துவேன்—செல்லவே
சிந்தனையைத் தன்பாற் செலுத்துவே னென்றென்றும்
வந்தனை நான் செய்துவாழ் வேன்.

1870. தொன்றாக வுள்ள சுயஞ்சோதி யென்னிதய
மன்றாடி யானகுரு மாதேவன்—குன்றாப்
பெருமைசே ராண்டவன் பெய்கழலே பேணும்
ஒருமைசேர் மோன வுணர்வு.

1871. ஆன்ம சொரூப வறிவொளியா வென்னகத்துத்
தான்மருவு சாந்த சதாசிவத்தை—வான்மயமா
மேவு மகண்ட விருந்தியா லன்போடு
சேவைசெய் கின்றேன் செழித்து.

1872. ஈசனையென் னுள்ளத் திரண்டறநா னென்றியெய்ந்
நேசவுணர் வென்னியல்பா நிற்றலால்—ஈசனுக்குப்
பூசனை நா னுற்றல் பொருந்து சிவானுபவச்
சாசனவாழ் வேயாந் தகைத்து.

1873. அலகில் பரம னயலன்றி யார்க்கும்
இலகலால் யானென் றியல்பாய்ப்—புலனுங்
குறிகுண மற்றுக் குலவு சொரூப
வறிவேமெய் யாரா தனே.

1874. முளைத்தவகங் கார முனைப்பற் றொழியத்
திளைக்குமனு பூதித் திறத்தால்—வளைத்த
வருட்சிற் பரவெளியே யண்ணலுரு வாக
வருச்சனைசெய் கின்றே னகத்து.

1875. எண்ண லியம்ப லியற்ற லெலாந்தனக்கே
பண்ணு திருப்பணியாப் பற்றலால்—வண்ணவருட்
சீபாத பூஜை சிலர்பலர்செய் கின்றவிதிச்
சார்பாலே சாதியேன் யான்.

1876. அருட்சிற் பரத்தை யனைத்துமா மொன்றை
யருச்சிப் பதற்குநா ஞரே—அருச்சகனு
மென்பா லதுவே யியல்பா வகமகமென்
றன்பா வகங்கிளர்த லால்.

1877. பொங்கு சிவானுபவப் பூரிப்பா வென்னகத்துத்
தங்கு சொரூப சதாசிவத்தை—அங்கமகம்
புத்தி முனைப்பையறப் போக்கியதற் கூறுக
நித்தமுபா சிப்பதென் னெஞ்சு.

1878. காட்டிக் கொடுத்தவருட் கண்ணுள சற்குருவை
நாட்டியுளத் தேதெய்வ நாயகமா—ஊட்டி
நிவேதனமா வென்னுணர்வை நேயநீ ராட்டி
விவேகவழி பாடுசெய் வேன்.

1879. பண்ணுமவை யாவும் பரமபூஜை யாகமனம்
நண்ணுமுயர் வாழ்க்கையொளி நல்கினன்—
அண்ணலருட்
புண்ணியச்செம் பொற்பாதப் பூஜனையை நான்
பண்ணலெவன் சிந்தை படைத்து. [குறுக்கிப்

(கொச்சகக் கலிப்பா)

1880. அணுக்கத் தொண் டான வடியேனறிவில்
வணக்கமா வுள்ள வழிபாட் டொழுக்கம்
பிணக்கமா மோகவகப் பேய்ச்செருக்குத் தோன்று
திணக்கமா யுள்ளத் தழுந்தி யிருப்பே.

கூக. **என் கையுறை**

(வெண்பா)

1881. நின்றவுண்மை யாந்தன் னிலையினின்று தப்பிமனஞ்
சென்றுழலும் புன்புலத்தைச் செம்மியே—ஒன்றவுளத்
துள்ளுணர்வா மோன வொளிபெருக்கி யாண்ட
னுள்ளமே யோர்கை யுறை. [வற்கென்

### கஉ. என் ஆண்டவன்

(வெண்பா)

1882. நம்பன் குருரமண நாதன்மெய்ஞ் ஞானவருட்
செம்பரமா வோங்கு சிவசொருபன்—உம்பருந்தாங்
காண்டலுற வுட்குங் கதிரொளிசால் கூர்விழிசே
ராண்டகையென் னாண்டா னறி.

1883. அழியாப் பொருளொன் றகந்தேற வுண்மை
விழியாக வுள்ள வெளியாய்—மழையாப்
பெருவாரி யானவருள் பெய்துசற் போத
குருவாக் குலவியதென் முன்.

### கக. என் தெய்வம்

(வெண்பா)

1884. பிரானடியே நான்கும் பிடும்பெருந் தெய்வம்
பிரானடியை யன்றிநான் பேணேன்—பிரானடியில்
மூர்த்திதலந் தீர்த்தம் முழுக்க வடங்குமெனக்
கார்த்திசே ரான்மா வது.

### கச. என் துணை

(வெண்பா)

1885. ஆருயிருக் கோருயிரா வான்றசொரு பானந்தச்
சீருயரா நின்ற சிவபதத்தே—கூரியசற்
புத்தியோ கத்தாற் பொருத்தினன் சுத்தவருள்
வித்தையே யென்மெய்த் துணை.

குறிப்பு: பொருத்தினன் வினையாலணையும் பெயர்; அவன் கற்பித்த சுத்தவருள் வித்தை என்க.

### கரு. என் அருட்காட்சி

(வெண்பா)

1886. சுத்த வறிவுத் துலக்கமே நானடைந்த
அத்தனருட் காட்சி யகந்தேற—வித்தகமாம்
அந்தத் தெளிவே யருட்சிற் பரவெளியா
விந்தைசேர் வுற்றவியல் வீடு.

### கூசு. என் யோகம்
(வெண்பா)

1887. இருமைதீர் மோன வொருமையிலே யென்னை
யருமையா வாண்ட வடிகள்—பெருமைசேர்
மெய்கண்ட ஞான விழுப்பதமே தன்னடியேன்
கைகண்ட யோகக் கருத்து.

### கூஎ. என் தாரகம்
(வெண்பா)

1888. பொங்குசிவ போதவருட் பொன்னடிக்கீழ் வாழ்வுபெற
மங்கும் பிறப்பினின்று மாற்றினன்—எங்கட்
கவனடியே மிக்க வருந்துணையாப் பற்றுந்
தவமே யுயர்தா ரகம்.

### கூஅ. என் சஞ்சாரம்
(வெண்பா)

889. ஆண்டா னருட்சே வடிநிழலெங் கெங்குமளை ந்
தீண்டலால் யானெங்கெங் கேகினுந்தான்—மூண்
[டெழுமுத்
தாப(ம்)நா ஞேரேன் சதாசிவசாத் தானுபவஞ்
சேர்பரா னந்தத் திளைத்து.

### கூகூ என் விருந்து
(வெண்பா)

1890. பெற்றியா லென்னைப் *பெரும்பதத்துக் காண்டவருள்
வெற்றியா லின்ப விளைநிலமாய்—முற்றியே
தொக்கவெளி யாகத் துலங்க மனுபூதி
மிக்கவியல் வாழ்க்கை விருந்து.

* பெரும்பதம் - பிரம்மபதம்.

1891. என்றுமெக் காலுமென் னின்னுயிரா வென்னிதயத்
தோன்றலுற்று வீசு மொளியுருவன்—மன்றவெனக்
காரா வமுதப்பே ரன்பின் சொரூபமாப்
பேராத வாழ்க்கை விருந்து.

1892. பொய்யிலா மெய்யனருட் பொங்கலென் னுருயிர்க்கு
நெய்யோ டளைந்துளதென் னெஞ்சிலே - உய்யலாய்த்
தேக்கெறிப்ப வுண்டு திளைத்துக் களித்தலான்
மாக்கலக்க மில்லேன் மனத்து.

## ௪0. என் பொழுது போக்கு

(வெண்பா)

1893. தேட்டுக் கரிய திரவியமாஞ் சிற்பதத்தைக்
காட்டிக் கொடுத்தவருட் கற்பகத்தைப்—பாட்டிற்
புகழ்வதே நல்ல பொழுதுபோக் காக
நிகழ்வதுநா ளுைமென் னெஞ்சு.

1894. தூண்டா மணிச்சுடராந் தோன்றலென் னுள்ளிருந்து
பூண்டோ டகந்தைமயல் போக்கினன்—ஆண்டான்
புகழ்வழுத்தி யான்பொழுது போக்குகின்றே
மகிழ்வடுக்க வென்றன் மனத்து. [னுண்மை

1895. கழுதுபோ லேங்கிக் கலங்கி மலங்கி
யழுதொழியா தாண்டா னடியே—தொழுது
கெழுதகைமை யானவருட் கேண்மைமீக் கூறல்
பொழுதுபோக் காகு மெனக்கு.

## ௪௧. என் நிலை

(குறள்)

1896. ஆசையறச் செற்ற வருட்சிற் பரசொருப
நேசமெனக் கின்ப நிலை.

(வெண்பா)

1897. சாட்சித் துவமாத் தழைத்த சொருபசிவ
மாட்சிசேர் வாழ்வு மனத்தொளிர—ஆட்செய்
யடிய ரகத்தே யகமகமென் றோங்கு
நெடியவன்மெய்த் தாளென் னிலை.

1898. அன்புமய மாமெய் யறிவூற லாண்டவன்பே
ரன்பமெழப் பொங்கு மதயத்தே- நம்பனருட்
சீர்மையா லோங்குசிவச் சிற்பரவாழ் வாரமுத
நீர்மைசே ரென்மெய்ந் நிலை.

1899. அருட்பிரா ஞனவென் ஞண்டான் சொரூபப்
பொருப்பிலே வாழ்க்கைப் பொலிவால்—விருப்பெலாம்
ஆங்கே யமைந்த வடியேன் பிறபுலத்து
நீங்கே னதேயென் னிலை.

## ௬உ. என் பேறு

(வெண்பா)

1900. தன்னிலே தாஞத் தழைத்த சதாசிவமிங்
கென்னிலிரண் டன்ரு வதயத்தே—முன்னிலைச்சுட்
டற்று விளங்கு மகண்டவருட் பூரணமெய்ப்
பெற்றியே நான்பெற்ற பேறு.

(கொச்சகக் கலிப்பா)

1901. ஒன்ரும் பரமார்த்த வுண்மைப் பெருவாழ்வா
மன்றவெனக் காண்டான் மகிழ்ந்தளித்த பேறுரைக்
பொன்ருத சுத்தவருட் பூரணமா வுள்ளத்து [கிற்
நன்ரு வொளிர்சொருப ஞாஞனு பூதியே.

1902. சீரான சோணகிரிச் செம்மலருட் கண்ணேக்காற்
காரா ணவப்பேய்க் கலக்கமற வுள்ளத்து
நேரா வொளிர்சொருப ஞேயப் பரவெளிகாண்
பேராத சுத்தப பிரம்மபதப் பேறெனக்கே.

1903. கற்பனு சொப்பனக் காட்சிசெய் யாட்சியொடு
பொய்ப்பமோ காவரணப் பொல்லாங்காம் பேதமதி,
அப்பனே டொன்ரு வளைந்தஞா ஞனுபவச்
செப்பமே சுத்தவருட் சீர்மைநான் பெற்றதே.

## ௬௩. என் முக்தி

(வெண்பா)

1904. நீதா னெலாமா நிலையுணர்ந்த வென்னறிவிற்
பாதார விந்தம் பதியலால்—வாதாடு
பல்சமயஞ் சாயப் பராற்பரமாத் தானவாற்றை
வெல்சமய மோனமே வீடு.

குறிப்பு: மோனமே எனக்கு முத்தி என்பதாம்.

1905. போதவருட் கண்ணுப் புணர்சொருப மோன
பாத மெனக்குப் பரந்தாமம்—பேதமனக் [வொளிப்
கற்பனைதீ ரற்புதமெய்க் காட்சியா லாண்டவென்
யப்ப னுதாரபத மஃது. [மெய்

(கொச்சகக் கலிப்பா)

1906. ஊனக் கலக்கமற வுள்ளத் தொளிர்சொருப
ஞானக் கழல்காட்டி நாயேனை யாண்டவனுல்
யானற்ற வுண்மை யியற்பரமாத் தானிலகு
மோனப் பதமெனக்கு முத்திப் பதமாமே.

1907. தானுக வுள்ளவொரு தத்துவமே 'சுத்தவருள்
வானுக நன்கு மலர்தலா லுள்ளத்தில்
மானுபி மான மயக்கமறப் பொங்கலுற்ற
மோனுனு பூதியென் முத்திப் பெருவாழ்வே.

1908. அறிவான சுத்த வருள்வெளியாப் பொங்கு
நிறைவா லெனையாண்ட நின்மலன்சீ பாதத்
துறைவா லொளிசே ருபசாந்த போகம்
பிறியா மனத்தியலென் பேரின்ப வீடே.

1909. ஊனமற்ற வுண்மை யுணர்வா முபசாந்தத்
தேனமுத வாழ்வு திளைக்க விளைக்கலுற்ற
ஞான சொரூபகுரு நம்பனருட் செம்பதத்து
மோனமே நான்கண்ட முத்திப் பெருநலமே.

1910. எள்ளக் கடவ விரும்பிறவிக் கேதுவாத்
துள்ளுமகங் காரத் துடிப்புறச்செற் றுண்டவனுல்
உள்ளமே யாக வொளிர்சொருப வாழ்வெனக்குக்
கள்ளமில்பே ரின்பவருட் கைவல்ய முத்தியே.

1911. அழிவற்ற வாண்டா னருளா லவனே
டொழிவறவென் னுள்ளத் தொருமையுணர் வூற
முழுமுதல்வாழ் வாகவொளிர் மோனுனு பூதிக்
கழுமலென் னுருயிர்க்குக் கைவல்ய வீடே.

### ௪௪. என் அரண்

(வெண்பா)

1912. தானந் தவந்தருமம் மூர்த்தி தலந்தீர்த்தம்
ஆன வெலாமெனக்கோர் தானேயாய்—மோன
குருவடிவு கொண்டு குலாவமுன் னின்ற
வருள்வடிவு காணென் னரண்.

1913. துன்றுமனக் கோட்டைவெறுஞ் சூதாக வல்லரணு
வென்றுமெனக் குள்ள திதயமே—கன்றுமனக்
காலனுமே யங்குக் கடுகவொணுன் *காலகலன்
பாலனமா மவ்வரணப் பற்று.

* காலகலன் - காலகாலன் என்பதன் குறுக்கல்.

(கொச்சகக் கலிப்பா)

1914. மூலப் பரமசிவ முத்தித் திருப்பதத்திற்
சாலப் பொருத்தித் தலையளிசெய் தாண்டவனுக்
கோலக்க மண்டபமா வுற்றவென் னுள்ளுணர்வு
காலக் கொடியோன் கடுகவொணுக் கட்டுடைத்தே.

### ௪௫. என் பேரின்பம்

(வெண்பா)

1915. யானுறவு கொண்டுபே ரின்பமுற வென்னகத்தில்
வானுலக மோனவருள் வாழ்வாகத்—தானியல்சுத்
தாத்துவிதத் தத்துவமா வாண்டவனைத் தன்மயமா
ஏத்துவது பேரின் பெனக்கு.

### ௪௬. என் இயல் செயல்

(குறள்)

1916. இறைவனே யென்ற னியல்செயலெல் லாமா
வறிவிலே யார்ந்தொளிர்கின் றான்.

### ௪௭. என் அறிவு

(வெண்பா)

1917. நிலையிற் பெயராது நெஞ்சிலமர்ந் தாங்கே
தலையிற்சூ டாமணியாத் தங்கி—வலிதிற்
கடையேனை யாண்டவருட் கண்ணுர் கழலே
யடியேனுக் கான வறிவு.

### சஅ. என் கதி

(குறள்)

1918. சற்கதியா வுள்ள சதாசிவத்தை யன்றிமற்
றெக்கதியு மில்லை யெனக்கு.

### சகூ. என் நாடு

(குறள்)

1919. பன்னிலங்க ளூடும் படர்ந்தவருட் சிற்பரமெய்ந்
நன்னிலமென் ஞட்சிவள நாடு.

குறிப்பு:- பன்னிலங்களூடும் – பலதிறப்பட்ட எல்லா வுலகங்களூடும்; படர்ந்த - வியாபித்த.

### ருO. என் அரசாட்சி

(வெண்பா)

1920. சித்த மெனக்குத் திருவருட்சிந் தாமணியாம்
புத்திசற் போதவருட் பொக்கிசமாம்—அத்தகவுட்
கூடுசிவ நிட்டை குடைநிழற்கீ ழாட்சிசெய்யச்
சேடுயர் சாம்ராச் சியம்.

குறிப்பு: சேடுஉயர் - பெருமை மிக்க.

### ருக. என் சார்பு

(வெண்பா)

1921. காக்குமியல் சான்றவருட் கண்ணேக்கா லென்னு
காக்கமா நின்ற வடிகளார்—சூக்கமா [யிருக்
மோக்கவொளி யாலகில முப்புடியுந் தன்மயமாத்
தாக்குபரந் தாமமென் சார்பு.

### ருஉ. என் புகல்

(வெண்பா)

1922. அருந்தவமா வுள்ளத் தவிர்சொருபப் பெம்மான்
பொருந்துசிவ போகப் புணரி—திருந்தவருட்
சிற்பரமா மோனச் சிறப்பளித்த வாண்டவன்செம்
பொற்பதமே யென்றன் புகல்.

## ௯௩. என் பரந்தாமம்

(கொச்சகக் கலிப்பா)

1923. மன்னியபே ரின்பவருள் வாழ்வான தன்சொருப
நன்னிதியா வோங்குமெய்ஞ் ஞானனு பூதியால்
என்னகமே புக்கங் கினிதியல்பாத் தங்குமிறை
தன்னடியே மிக்கபரந் தாமமென் னுருயிர்க்கே

1924. பற்றறத் தெளிர்சொருபப் பற்றான பத்தியுணர்
வுற்று ரிதயத் தொளிரும் பரசிவத்தைத்
தெற்றெனவென் னுள்ளத்துத் தேற்றியசற் போதகுரு
நற்று ளடியேற்கு நல்லபரந் தாமமே.

## ௯௪. என் உலகம்

(வெண்பா)

1925. அண்ணு மலைப்பே ரடிக ளருட்பதத்தை
நண்ணுநின் றுண்மை நலஞ்சான்றேன்—உண்ணு
ரமுத சொரூபமா வாண்டா னகண்ட
சமுகமே நான்வாழ் ஜகம்.

குறிப்பு: சமுகம் - திருமுன், சந்நிதி.

## ௯௫. என் சிறப்பு

(வெண்பா)

1926. நினைக்க நினைக்கவென் னெஞ்சம்பூ ரிக்க
வெனக்குள்ளே யானிறுமாப் பானேன்—எனக்குப்
பரமனையே பாடும் பவிசுகாண் பண்டைத்
திருவினையால் வாய்ந்த சிறப்பு.

## ௯௬. என் பொலிவு

(வெண்பா)

1927. தூண்டலுற்ற மோனத் துரியசுயஞ் சோதியா
வாண்டவனுக் கென்முழுமெய் யன்புரித்தாப்—பூண்
கருட்செம் பதமே யகண்டானு பூதிப் [டேற்
பொருட்சிறப்பா வோங்கும் பொலிவு.

### ௨௭. என் விலாசமே யாவும்

(வெண்பா)

1928. சாட்சியா மென்சொருப சந்நிதியிற் றோன்றுவதே
காட்சிசேர் பற்பலவாங் கற்பனையும்—மாட்சிசேர்
சுத்தவருட் போதச் சுடரொளிச்சிற் றம்பலமாச்
செத்தவகத் தாலே தெளிந்து.

குறிப்பு: தெளிந்து தோன்றுவதே எனக் கூட்டுக.
தெளிந்து - தெளிய.

### ௨௮. என் பதம்

(வெண்பா)

1929. மோனவருட் செம்பதமே முத்திப் பெரும்பதமா
யானடையப் பெற்ற வியற்பதங்காண்—தீனவியற்
சிந்தைசேர் மோகச் செருக்கற் றொளிர்சொருப
விந்தைசேர் கைவல் லியம்.

### ௨௯. எனக்கேன் கவலை

(வெண்பா)

1930. அவசமாத் தன்னை யடைந்தோ ருயிரைக்
கவசமாக் காக்குங் கழலோன்—பவிசா
ருக்கனு வென்ற னகத்தே சுடர்விட்
டிருக்கநா னேங்க லெவன்.

(இன்னிசை வெண்பா)

1931. அவனேயென் னம்மை யவனேயென் னப்பன்
அவனேயென் னுண்டா னவனேயென் றோழன்
அவனேயென் னன்ப னவனேயென் னின்பன்
அவனே யெனக்கனைத்து மாம்.

(வெண்பா)

1932. ஆண்ட வடிகளுக்கெவ் வாறோ வருளடிக்கீ
ழீண்டு குடிகளுக்கென் றென்றுமின்பே—ஆண்ட
பாரந் தலைமேற் பரமனுக்கு மற்றெமக்கு [வருட்
வாரம் படலே மனத்து.

1933. ஆண்டவன்பா லென்னை யடைக்கலமாச் சேர்த்ததற்
மீண்டுக் கலங்க விதிவசமேன்—தீண்டற் [பின்
கரும்பெருந் தெய்வ வருட்பதத்தே சாந்திப்
பெரும்பேறு பெற்றமைந் தேன்.

1934. சிறப்பான தேற்றத் தெளிவா வெனக்குக்
குறிப்பாக மோனங் கொடுத்தோன்—பொறுப்பாக
வென்பார முற்றுந்தா னேறறதாத் தேற்றலால்
என்பார மற்றியல்கின் றேன்

1935. மூதண்டம் போனமுழு மோன முடிவிலே
யாதுண்டோ வின்றோ வெனக்கென்ன—சூதண்டாச்
சுத்த சொரூபமாத் துன்றுசிவ மென்னகத்து
நித்தமா வுண்டு நிலைத்து.

1936. யாதும் மனக்கவலை யின்றாக வென்னுளத்தின்
மீதே யிறைவன் விளங்கலால்—யாதானும்
என்பொறுப்புச் சற்றுமின்றி யெல்லா மவன்பொ
அன்பொளிர்வ தாயிற் றகத்து. [றுப்பா

## 69. அவபிரத நீராட்டல்

(வெண்பா)

1937. சிவபதமா மோனத் திறந்தெளிய வுள்ளத்
தவிர்பரமா நின்றவென் ஞண்டான்—அவபிரதப்
புண்ணியநீ ராட்டிப் பொலிவித்தான் செய்தவத்தை
நண்ணியது சாந்தி நலன்.

1938. நித்தாப ரோட்ச நிஜான்ம சொரூபநிஷ்டைக்
குய்த்தா னுடையா ஞெருபடித்தாய்—முத்தாபப்
பீடையொருங் கோய்ந்து பிரம்மானு பூதிவள
ரோடைநீ ராடலுற் றேன்.

1939. சிவபரி பூரணமே சேரத் திளைக்கத்
தவவிரதம் முற்றுவித்துத் தானே—அவபிரதக்
கண்ணேக்க மாட்டினன் கஞ்சப் பதத்திலருள்
விண்ணேக்கம் மேவிற் றெனக்கு.

1940. சிவசொருப வாழ்வாத் தெளிந்தமோ னத்தால்
அவபிரத மாட்டினு ணுண்டான்—அவசியமாங்
கர்த்தவ் வியமாக் கடைப்பிடிக்க யாதுமெனக்
கித்திரையி லில்லை யினி.

(கொச்சகக் கலிப்பா)

1941. சிவசொருப மாகத் தெளிந்தபரஞ் சோதிக்
கவிசொரிந்து நானென் னகந்தையை*முற் றூட்டா
அவபிரத மாடி யருட்கடல்வாய் உண்மைத்
தவநிரம்ப லூற்ற**பெருந் தன்மைசார்ந் தேனே.

* பூரணாகுதி யாதலின் முற்றூட் டெனப்பட்டது.

** தன்மையுண்டேல் (உள்ளது நாற்பது, 14) என்னும் பாட்டைத் தேர்ந்தால் இப் பெருந்தன்மையி னியல்பு இன்னதென நன்கு விளங்கும்.

1942. ஆண்டபரஞ் சோதிக் கறவேநா னுணைக்
காண்டலால் ஊனவகங் காரமயற் கட்டொழிந்தேன்;
நீண்டநெடுங் காலமா நெஞ்சத் திடைவிடா
தீண்டியதோர் வேள்வி யினிதுநிறை வுற்றதே.

1943. கள்ளக் கலக்கமாம் பாசப்பட் டேற்கிரங்கித்
தெள்ளத் தெளிந்தசிவச் சிற்பிரான் கண்ணேக்கால்
உள்ளத்தே சுத்த வுணர்வொளியா வுள்ளவருள்
வெள்ளநீ ராட்டினன் மெய்ப்பரவீட் டாட்சிக்கே.

1944. தவவிரதம் முற்றத் தலைப்பட்டாற் போல்வந்
தவபிரத ஞானநீ ராட்டினு ணுண்டான்
அவசரிதை யான *வகப்பே யிகப்பச்
சுவசொருப வாழ்வியல்பாத் துய்க்கலுற் றேனே.

*அகப்பேய் - அகப்பேயாட்டத்துக் காகுபெயர்.

1945. ஆழ்வா ரகத்தே யருள்வெளியாப் பொங்குசுப
வாழ்வா மலர்ந்த மகோதயன்சிற் பாதத்திற்
பாழ்வா தனைசேர் பசாச வகந்தையற
மூழ்கா நின் றேன்சொருப மோனப் புணரியே.

1946. உள்ளமா வுள்ளதோ ரொட்பநுட்பச் சிற்பரத்திற்
கள்ளமனக் கற்பனைசேர் காரா ணவங்கரக்கத்
தெள்ளத் தெளிவாத் திகழ்வுறுமோ ஞனுபவ
வெள்ளக் கடலாடு வித்தாளுேர் வித்தகனே.

## 70. அம்மானை

(கொச்சகக் கலிப்பா)

1947. பேசற் கரியவருட் பேரளித்த வம்மான்பாற்
றேசுற்ற வாழ்வு சிறக்க வடைதலால்
ஈசத்து வாதி யெதன்கண்ணும் மோகமெனக்
கோர்சற்று மின்றி யொழிந்ததுகா ணம்மானாய்.

குறிப்பு: ஈசத்துவாதி:- அணிமாதி அஷ்டசித்திகளும் அவற்றுளொன்ருன 'ஈசத்துவாதி' என்றதாற் குறிக்கப்பட்டன.

## 71. அச்சோவே

(கொச்சகக் கலிப்பா)

1948. மோனமே யுண்மை முடியா விளங்கிதயத்
தானமே சாந்திபத சாம்ராச் சியமாக
நானறியத் தேற்றியமெய்ஞ் ஞானகுரு நாதனுல்
யானடைந்த பேறுலகில் யார்பெறுவா ரச்சோவே.

## 72. கைமாறின்மை

(வெண்பா)

1949. பெற்றவருட் பேற்றருமை பேயனே னெண்ணுங்காற்
குற்றமுள நான்போற் குறுகுறுப்பேன்—முற்றமுற்றப்
பொல்லேனுக் கின்பவருட் போதம் புகட்டியசீர்
நல்லானுக் கென்கடவேன் நான்.

1950. தன்பதத்திற் சார்ந்தவற்பத் தஞ்சனையா ளாகச்சிற்
றம்பலத்தில் விட்ட வடிகளுக்கே—என்பரஞ்சற்
றின்றியெழுந் தோங்கு மியற்பரவாழ் வாஞ்சிறப்புக்
கென்றுங் கடமைப்பட் டேன்.

குறிப்பு : சிறப்புக்கு - சிறப்புக்காரணமாக.

1951. ஊனமருட் பொல்லேற் குதவினு னென்னுளத்தே
மோனவருட் செம்பதமா முத்திநிலே—யானவனுக்
கென்னேகொல் கைம்மா றியற்றுகேன் றன்பதத்தா
டென்னே யிழந்தொழிந்த யான்.

1952. அவனருளிச் செய்த வபரிமித நன்றிக்
கிவனடிமை யானு னிகத்தே—சிவநிலைதந்
தாண்டவனுங் கிவ்வொருமை யன்றுமற்றே ழேழ்
பூண்டடிமை நின்றுன் புணர்ந்து. [பிறப்பும்

(கொச்சகக் கலிப்பா)

1953. சிந்தித் திருக்குமனச் சீரடியர் வெம்பாச
பந்தக் கருவறுக்கும் பார்வையால் பத்தியிலேன்
புந்தித் தலம்பொலியப் புக்குறையும் புண்ணியனுக்
கெந்தக்கைம் மாறு மியற்றநான் கில்லேனே.

1954. மோனவருட் காட்சி முகத்தலா லுள்ளத்தில்
வானவருக் கெட்டாக்கை வல்லியமெய் வாழ்வுகண்
[டேன்
யானவனுக் கென்கடவேன் இம்மையே யப்பெற்றி
யானடையக் கூட்டியபே ரின்பக் கருணைக்கே.

1955. தன்னேயே தஞ்சமாச் சார்ந்தே னகந்தெளியத்
துன்னுபர மார்த்த சொரூபஞா னுனுபவ
நன்னயமே மெய்ப்பேரு நண்ணுவித்த நாதனடிக்
கென்னசெய்வேன் யானற்ற வேழை யெளியேனே.

1956. தடையாது மற்றபர சாம்ராச் சியவாழ்
வுடையா னளித்தா னுளங்கலந்த வாற்ருல்;
அடியேனு வென்னே யகமகிழ்ந்தாட் கொண்ட
வுடையானுக் கென்கடவே னுற்றபேற் றுக்கே.

1957. கண்ணேதா னுகக் கலந்தசிவக் காட்சியால்
விண்ணேநா னுக விளங்கு சொரூபமுற்றேன்;
உண்ணே ருயிரா வுவந்தென்னே யாண்டவருட்
கண்ணுன வம்மானுக் கென்கடவேன் கைம்மாறே.

1958. கற்பனையைக் கண்டு கலங்காது சுத்தவருட்
சிற்பரமா வென்னைத் தெளிவித்த வாண்டவனுக்
கற்பனே னென்னகைம்மா றாற்றுவேன் யானெனுமவ்
வற்ப வகந்தையையு ணக்கலன்றி யன்புபட்டே.

1959. ஊனப் பசுபாச வூத்தையகப் பாழ்கெடமெய்ஞ்
ஞான சொரூபவொளி நண்ணுவித்த கண்ணேக்கால்
வானத் துரியவருள் வாழ்வளித்த வாண்டவனுக்
கியானென்ன கைம்மா றியற்றுகே னேழையே.

1960. உண்ணு டுபாசனு யோகியர்பல் லோரிருக்கப்
பண்ணாத சுத்தவருட் பாக்கியமா வென்னகத்து
நண்ணு நின் றாண்டகுரு நாதனருட் கென்கடவேன்
விண்ணணப் பேச்சன்றி வேறறியேன் மெய்யனுக்கே.

1961. சொக்குபர மான்ம சொரூப வுணர்வொளியாற்
புக்கிலாப் பொங்குசிவ பூரணமெய்ச் செம்பதத்திற்
குக்கலைவாழ் வித்தவருட் கோமானுக் கென்கடவேன்
கெக்கலிக்கா ளாகக் கிடந்துழன்ற நாயேனே.

குறிப்பு: உணர்வொளியால் வாழ்வித்த என வியையும்; கெக்கலிக்கு...உழன்ற - அறிஞர் பரிகாசத்துக்காளாக ஆணவப்பாழிற் கிடந்துழன்ற.

1962. களிசே ரகந்தைக் கலக்கமகன் றுள்ளம்
ஒளிசேர் வெளியா வொளிர்வுறுமவ் வுண்மைத்
தெளிவாம் பரமார்த்த சித்தியளித் தானுக்
கெளியேன் கடவதா யாதுங்கா ணேனே.

1963. சும்மா துலங்கு சொரூபானு பூதிவளர்
செம்மாண் புடைய சிவக்கே வலனடியேன்
பொய்ம்மா லகன்றொழியப் புந்தியிற்புக் காண்டவருள்
கைமாறு வேண்டாக் கடப்பாடாக் காண்கவே.

1964. அன்பெனக்குத் தன்பா லருளி யகத்தொளிர்பே
ரின்பவுரு வான விறைவனருட் கென்கடவேன்;
வன்புசேர் பாச மனக்கவலை சுத்தமெய்
யன்புசிவ மானஞா னனுபவத் தற்றதே.

1965. இம்மா நிலத்தி லெனக்கா வெழுந்தருளிப்
பொய்ம்மா லகன்றொழியப் புக்குளத்து நான்றனைச்
சும்மா விருப்பித்த சுத்தவருட் சொக்கனுக்குக்
கைமா றியற்றக் கடவதென்னால் யாதுமின்றே

1966. கற்பிலா மூர்க்கக் கடையேற்குக் கண்ணேக்காற்
கற்பனைதீ ரூண்மைக் கழல்காட்டி யுள்ளத்திற்
பொற்புறுமோ னனுபவம் பொங்குவித்த வாண்ட
[வனுக்
கற்பனே னென்னகைம்மா றுற்றுகேன் றேற்றேனே.

1967. துட்டவகங் காரமனச் சுட்டறிவாற் கற்பனையிற்
*றட்டழியா தென்னைத் தடுத்தாண்ட பெம்மானென்
னுட்டெளிவாத் தானே யொருபரமாப் பேரின்ப
நட்டமிடு வானுக்கு நானென் கடவேனே.

* நட்டழிற் – நிலை குலைதல்

1968. கற்பனைசேர் மோகக் கனவுலகின் மாழ்குங்காற்
சிற்பரவாழ் வான சிவானுபவ மோனவருட்
பொற்புறுவாழ் வுள்ளம் புகட்டியவென் னாண்
[டவனுக்
கற்பனே னென்னகைம்மா றுற்றுவதென் றேரேனே

1969. தன்னாலே யன்றித்தான் சற்றேனும் மற்றோரா
லின்னா னெனவறிய வொண்ணா வியல்பினன்
என்னாலே தன்மெய் யியலறியக் கூட்டுவித்த
வன்னா னருளுக் கடியேன் கடவதென்னே.

1970. முற்றமுழுச் சிற்பரமா மோனவருட் கைவல்யப்
பெற்றிசேர் வாழ்வு பெறற்கரிய பேருக
வுற்றிடவென் னுள்ளத் துதவியநல் லாண்டவன்பா
லற்றொழித லன்றிநா னாற்றக் கடவதென்னே.

1971. அன்றியொன் றில்லா வருட்சிற் பரத்தொடுநான்
ஒன்றி யிருக்கவென் னுள்ளுணர்வைத் தேற்றினன்;
வென்றிசேர் சுத்தவருள் வித்தகப்பே ராளனுக்கு
நன்றிநான் கூர்வதுமெய்ஞ் ஞானனு பூதியே.

குறிப்பு: என் ஞானனுபவ வாழ்க்கையே என் ஆண்டவனுக்கு நான் கூறும் நன்றி என்பதாம்.

1972. பாழைப்பா ழாகப் பரஞ்சோதி யாற்கடந்து
வாழப் படைத்தவருள் வாழ்க்கையால் வண்பதத்தா
டேழைத் தொழும்பனைநன் கீடேற் றியதெய்வ
மாழைப் பிரானுக்கென் வாழ்வுகடன் பட்டதே.

1973. அடியே னவனுக்கே யற்றொழித லன்றி
யடியனேன் கைம்மா றறிகிலேன், பற்று
வடியேனைத் தன்மெய் யடியரொடு கூட்டி
யடியேனுக் காண்டா னருளியநன் றிக்கே.

குறிப்பு: செய்யுளாதலிற் சுட்டு முன் வந்தது.

## 73. நன்றி மறவேன்

(குறள்)

1974. அறிவான வுண்மையா வாண்ட பிரானை
மறவா தடியேன் மனம்.

1975. உண்மை யுறவா வுளத்தா டொளிர்சொருப
வண்மை மறக்கற்பாற் றன்று.

(வெண்பா)

1976. எக்காள மூதி யிறையவர்தாம் போற்றிறைமை
தக்கான் குருரமணத் தம்பிரான்—சொக்கவெனக்
கக்கார மாக வகத்தொளிருஞ் சிற்பதச்சீர்
எக்காலு நான்மற வேன்.

1977. ஒட்பமா முண்மை யுணர்ச்சியா லுள்ளூரத்
தட்பமார் சாந்தி தழைக்கவே—பெட்பமர்தன்
சுத்தான்ம ஞான சொரூபமா வாண்டவனை
யெத்தான் மறப்பே னியான்.

1978. ரகசிய மாக ரமித்திடத் தக்க
சுகமய மான சொரூபம்—ரகசியமாக்
காட்டிக் கொடுத்த கடவுட் குருரமணன்
மாட்சியே யுள்ளும் மனம்.

1979. நடவையிலே நான்சரித்து நண்ணுபரம் நின்ற
விடவியலாத் தூன்று மியல்பால்—நடவாத்
தனிவழியா லாண்ட தயாபரன்ற ளன்றி
நினைவறியா தென்றுமென் னெஞ்சு.

## 74. நெஞ்சொடு கிளத்தல்

(குறள்)

1980. நெஞ்சமே வாழி நிறைந்தவருட் சிற்பரத்தா
டுஞ்சதா லூன்மெய் யுணர்ந்து.

## 75. கழிந்தமைக் கிரங்கல்

(குறள்)

1981. அருள்வெளிக்கண் மோக விருளைக்கற் பித்துக்
குருடுபட்டேன் கூடைமட வேன்.

1982. மயலா லயலா மதித்தேன் அகமா
விதயத் தியல்பரத்தை யான்.

1983. நிறைவான மெய்ந்நான் குறைந்தழுங்க லுற்றேன்
அறைபோய வாற்ரு லகத்து.

1984. குத்திரமா மோகக் குடிலமனப் பான்மையாற்
பைத்தியமா னேன்சொப் பனத்து.

(வெண்பா)

1985. பணிந்தொழுகும் மெய்யடிமைப் பண்பான மோனம்
புணர்ந்தொழுக ஞானப் புலவோர்—அணிந்து
செருக்கிநா னென்னைச் சிவோகமென்றே யூனம்
பெருக்கினே னென்னே பிழை.

குறிப்பு:—செறிந்தடங்கிச் சிவோஹ மென இருக்க வேண்டுமென்றி வெறும்பாவனையாற் செருக்க லாகா தென்று கருத்து.

(கொச்சகக் கலிப்பா)

1986. துன்னும் பிரமாத தோஷஞ்சேர் புன்மனத்தாற்
பின்னவுயி ராகவென்னைப் பேதுற்ற தென்னவெட்கம்
பின்னமற்ற சுத்தப் பிரஞ்ஞான மாத்திரமா
மன்னுபர மான்ம மகத்துவஞ்சேர் நான்ருனே.

1987. என்னுருவா வுள்ளத் திருந்த சிவத்தையெனக்
கன்னியம்போ லாக வகந்தை மயக்கத்தாற்
பின்னமனக் கற்பனு பேதபுத்தி செய்ததைஈ
தென்னவறி யாமையென் றெண்ணிநகைக்
[கின்றேனே.

1988. அறிவுசிவ மாக வகந்தெளிந்த மோனத்
திறைவனே நா னெண்ண வியலா தொழிந்தேன்
குறிகுணங்க ளான்முற் குறுக்கி நினைத்த
மறவிசேர் மோக வகந்தைமனத் தேனே.

1989. அறிவே சொரூபமா வாண்டபிரான் றுளிற்
செறிவே பொருளாகத் தேர்ந்தொடுங் காது
வெறிசேர் மயக்க விகற்ப மனத்தாற்
கிறிசே ரகப்பேயேன் கெட்டழிந்தேனே.

1990. உள்ளக் கருத்தடியேற் கொட்பநுட்ப மின்மையால்
எள்ளத் தகாத விறையோன் விசித்திரங்கூ
ருள்ளக் கருத்துநா னேர்ந்தியற்றே னென்றுலும்
வள்ளற் பிராளுல்யான் மன்னிக்கத் தக்கேனே.

1991. ஊனமொன் றற்ற வுணர்வான வுண்மையைமற்
றீனஜடப் பொய்யோ டியைபுபட வூனுடலில்
யானபிமா னங்கொண்ட வேழைமனப் பேதையேன்
ஞான சொரூபகுரு நாதனருட் கேதலனே.

குறிப்பு:—யானபிமானம - யானென்னு மபிமானம்.
ஆண்டானருளுக்குத்தா மருகரன்மை
எண்ணீ யிரங்கியவாரும்.

கற்றூர்க்கே யன்றியறக் கல்லா தவர்க்குமொப்ப
வுற்று னகமகமென் றுள்ளத் துணர்வொளியா;
எற்றே மடவே னிறைவனையா னுவியல்வாற்
பெற்றே யிருந்தும் பெறுததுபோல் மாழ்கியதே.

1993. *ஐதுபட நோக்கிலகத் தாரமுத வாழ்வளிக்க
வுய்தியா முண்மை யுணர்வுருவா வுள்ளிருக்கப்
பொய்தருவெம் பாசப் புலமே புறஞ்சுட்டி
மைதருளு லத்து மடுத்தேன் மடவேனே.

* ஐது - நுண்ணிதாக.

1994. சித்தமா வென்னுட் சிவச்செம் பொருளிருக்க
மத்தவகப் பேயேன் மடுத்தருள்வாழ் வெய்தாமற்
பொய்த்தமனக் கற்பனையிற் புக்கழுந்தி யாணவத்தாற்
கொத்தடிமை யாகக் குறைப்பட்ட மாயமென்னே.

குறிப்பு:—எய்தாமல் - எய்த வறியாமல்.

1995. ஒன்றும் பரமார்த்த வுண்மைப் பொருளையகன்
றென்று மினுநா னிரண்டா விருந்ததில்லை;
ஏன்றுலு மித்துணை நாள் யானென் றகங்கரித்துக்
கன்றினே னேயிதென்ன கண்மாயச் சித்திரமே.

1996. சிற்பர மாகத் தெளிந்து விளங்குபே
ரற்புத வாழ்வென் னகமேதா ஞயிருக்கக்
கற்பனை யாலே கலங்கி மலங்கியவென்
அற்ப மனப்பா ழகந்தையையென் னென்பதே.

1997. உள்ளத்தே யுள்ளமா வுள்ளசிவச் செம்பொருளைத்
தெள்ளத் தெளிந்து சிவானுபவந் தேக்காது
கள்ளத்தேன் காயவகங் காரக் களியனேன்
துள்ளிச் சுழன்றுழன் றேன் சொப்பனமா மாயத்தே.

1998. வேருெருநவ ராற்சற்றும் மெய்ப்பிக்க வேண்டாது
தேறவொளிர் சுத்தசிவச் சிற்பரத்தைச் சோர்ந்
[தொழிந்தேன்
மாறுபா டான மயக்கவிருட் பாழ்மனத்தா
லூறுபட்ட பொய்ம்மதியேன் ஊனக்கோட் டான்
[போலே.

குறிப்பு:—தேறவொளிர் - தெளிவாக விளங்குகின்ற.

1999. தானு விளங்குறுமெய்த் தத்துவமாத் தன்னியலோர்ந்
தானு வமுதசொரூ பானுபவஞ் சாராது
நானு னெனக் குளறி நாமரூ பக்கனவில்
மானுபி மான வழுக்கலுற்றல் லாந்தேனே.

2000. என்றென்று முள்ள வியல்வடிவாந் தன்னுண்மை
மன்ற விளங்கவுந்தன் மாத்திரமா வுள்ளத்து
நன்றென்று மோன நலம்பெறவே நானதுவாத்
துன்றலின்றி யாணவத்தாற் சோகாத்த மாயமென்
[னே.

2001. காரா ணவப்பாழ் கடிந்தவருட் செஞ்சுடரே
நேராக நீநாளு நெஞ்சத் திமைப்பொழுதும்
பேராது நின்ற பெருங்கருணை சற்றுமனத்
தோரா துடல்வடிவா வூழ்த்தொழிந்தேன் பேயேனே.

2002. தான்ருனு வுள்ளதே தத்துவமெய்ஞ் ஞானமா
வூன்ருநின் ருரிதயத் தொட்பநுட்ப மெய்ப்புலவோர்;
ஏன்ருனே வேழைமையால் யானதுவென் றெண்ணி [யெண்ணி
மான்றே வருந்தலுற்றேன் மாயமனப் பேயேனே.

2003. எள்ள வொணுத வியற்சிற் பரசொருப
வுள்ளொளியா வுள்ளத் தொளிர்வுற்ற வாண்டவனைத்
தெள்ளவே தேர்ந்து சிவானந்தஞ் சேராது
கள்ளனேன் மோகமனக் கற்பனையிற் கெட்டேனே.

2004. அருட்சிற் பிரானென் னகத்தி லிருக்க
இரட்சிப் பதற்கென்னை யாரு மிலேனு
மருட்சற் பனைசேர் மனத்தாற் கலங்கி
வெருட்சிப் படரால் விதிர்த்தொழிந் தேனே.

2005. ஊனமா மோகப்பா ழூத்தைமனக் கற்பனைதீர்
ஞான சொரூபமா நள்ளிதயத் துள்ளதனை
மோனமுறை தேர்கிலா மூர்க்கனேன் சுட்டறிவா
லேனை யிரண்டேபோ லெண்ணிமாழ் குற்றேனே

2006. கன்றலுற்ற மோகக் கலக்கவகப் பேய்முனைப்பால்,
என்றென்று முள்ள வியற்சிற் பரசொருப
வென்றிசே ருண்மை விளக்கமே சுத்தவரு
ளென்றுநான் காணவெனக் கித்தனைநாள் சென் [றதே.

குறிப்பு:—பேய்முனைப்பால் சென்றதே என வியையும்.

2007. அளவு படாத வருட்சிற் பரமே
வளவிய வாழ்வா மலிந்திருக்க, என்னைக்
களவுகொண்ட மோகவகங் கார மனத்தா
லிளிவரலுற் றேங்கினேன் ஏழைமைதா னென்னே.

2008. சுத்தவறி வான சொரூபமே யுள்ளத்திற்
பொய்த்தொழிய நண்பகலே கூகைபோற் பொட்டை
மைத்தகா ராணவப்பாழ் வஞ்ச மயக்கத்தா [யாய்
லெய்த்தொழிந்த நாயே னெளிமையிரங் கற்பாற்றே

## 76. எளிமைக் கிரங்கல்

(வெண்பா)

2009. ஓலமிட்டுக் கூவி யுலறிடே னுண்மையுணர்
சீலநிட்டை கூடித் தியானியேன்—மூலமுட்டி
யோகக் கனலை யெழுப்பிடேன் சிற்பரத்தோ
டேகத் துவஞ்சேர் வெவன்.

2010. அறிவுணர்ச்சி யானமெய் யன்புருக்க மில்லேன்
இறைபதச்சீ ரெவ்வா றடைவேன்—நிறைவொளியாஞ்
சிற்பரமோ னத்திற் செழித்தவருட் கைவல்யத்
தற்பர(ம்)நான் சாதிப் பெவன்.

2011. உய்வகையா லென்னை யுடையா னருட்பதத்தில்
மொய்வளர்பொய்ம் மோக முனைப்படங்கி—மெய்
ஞனுபவம் பொங்கலா லாயிற் றபரிமித [வளர்ஞா
வானுலக வாழ்வா மனம்.

2012. பல்லோரு மேத்தப் பணிந்தே சிவனடிக்கீழ்
நல்லோ ருயர்ந்த நலம்பெறவே—கல்லாத
மூடனேன் மூர்க்க வகந்தையா லென்னைவியந்
தாடினேன் றன்னை யயர்த்து.

2013. உய்வகையா தொன்று முணரே னுறுதிபெறச்
செய்வகையா தென்று திகைக்கின்றேன்—பொய்வளர்
வானவுடற் பற்றற் றகன்றிலேன் பற்றலெவன் [வாழ்
மோனவியற் சார்பின் முறை.

## 77. மாந்தரை யழைத்தல்

(வெண்பா)

2014. அடியேனுக் காசையென் ஞண்டான் பதத்திற்
குடியேற யாவரையுங் கூட்டல்—அடியனேன்
பெற்றபே றிந்தப் பெருநிலத்தோ ரெல்லோரும்
பெற்றுய்ய வேண்டும் பெரிது.

## 78. நீர் எங்கு எவ்வாறுள்ளீர் என்றார்க்கு

(குறள்)

2015. யாரேநீ யென்கின்றார்க் கியானேயா னென்பதலாற்
பேரூர்நான் பேசற் கிலேன்.

(வெண்பா)

2016. நானேநா னென்று நவில்வதன்றி நானுமக்கு
யாருரென் றெவ்வா றியம்புகேன்—ஊனு
வுலவு மகந்தை யுணர்வா மயக்கற்
றிலகுமுண்மைச் சிற்பரமே யான்.

2017. இதுவோ வதுவோ வெதனினும்வே றுன
வதுவேநா னுடுமெய் யறிவால்—பொதுவான
யானெதுவு மல்லேன்மற் றென்னையலா லேதுமில்
ஞானவியற் கேவலமே நான். [லேன்

2018. இடத்தேநா னில்லே னிடம்பொழுதெல் லாமென்
னிடத்தே நிழல்போ லியல்வ—நடத்தா
லியல்கினுநான் மற்றவ் விடத்தூடு பட்டு
மயர்கிலே னுண்மை வடிவு.

2019. இந்தப் பெருமிதமெற் கெங்கிருந்துண் டாயதென
விந்தைப் படநீர் வினவுதிரேல்—சிந்தையிலாச்
சிந்தைநிறை வெய்தியது சிற்பரமெய்ப் பூரணனு
மெந்தைரம ணேச னிடத்து.

2020. நானமற்ற தன்சொருப நோக்கமா முண்மையிலே
யானென்று நானொருவ னெங்குள்ளேன்—மோன
வானுக நுட்பமா வைகுறுசச் சிற்பரமாந் [வருள்
தானுன தன்னைத் தவிர்த்து.

2021. பரமா விளங்குசிவ பாதமெனக் குள்ளே
திரமாக நிற்றலாற் செவ்வே—உரமா
வதுதானே யாக வகந்தெளிந்த மோனப்
பொதுவாப் பொலிகின்றேன் யான்.

2022. பாழ்வா தனையகந்தைப் பற்றறவென் னுள்ளத்தில்
வாழ்வாக வுள்ளதே வாலறிவாய்ப்—பாழா
மவிச்சையிருள் சூழ்சுட் டறிவுகளு வாகச்
சுவச்சமா நான்சுடர்கின் றேன்.

2023. வெளியாக மோனம் விளங்கலா லுள்ளத்
திளிவரல்சேர் சிந்தையெனக் கின்றுய்த்—தெளிவியல்
சிற்பரவாழ் வான சிவானுபவங் கூரவருட் [சேர்
பொற்பதத்தி லுள்ளேன் பொலிந்து.

2024. சொரூபவருட் போதச் சுடரொளிகூர் வாழ்வு
திரோதமறப் பொங்குந் திறத்தால்—விரோதமற
யாவற் றொடுங்கலந்தே யாதனொடும் பற்றற்ற
கேவலமா வுள்ளேன் கிளர்ந்து.

2025. குலவு சொரூபக் குறியே குறியா
யிலகவெனை யாண்ட விறையோன்—அலகிலா
மாட்சிசேர் சுத்தவருள் வண்மைசேர் சிற்பதச்சி
ராட்சியில்வாழ் கின்றே னலர்ந்து.

2026. உள்ளதா மென்மெய் யுணர்த்தினு ளெண்பதத்திற்
கள்ளமன மாயங் கரந்தொழிந்து—வெள்ள
வருள்வெளியாத் தன்மெய் யவிர்கின்ற மோனப்
பொருள்வடிவா வுள்ளேன் பொலிந்து.

2027. ஒருபற்று மற்ற வுதாரத் தியாகத்
திருவுற் றொளிருஞ் செழியோன்—அருவிக்
குலம்போ லருளொழுகுங் கோலவொளிப் பாதத்
தலமேயென் வாசத் தலம்.

2028. கடையேனை வாழக் கடைக்கணித் தாண்ட
வுடையா னடிநிழலி னுள்ளேன்—அடியேன்
வெதுப்புமனத் தாப வெயிலி னுழன்ற
பதைப்பகன்று சாந்தி படைத்து.

2029. கைவல் லியவுணர்வே காட்சியா நிற்றலாற்
பொய்வல்ல பேதப் புலங்கெட்டுச்—செய்வல்
லிதுவென்னும் மோக வெழுச்சியற்று மோனப்
பொதுவெளியா வுள்ளேன் பொலிந்து.

2030. கற்பகமா நின்ற கடவுட் பிரான்பகவன்
சிற்பதமா மோன சிவானுபவம்—பொற்புறவென்
புந்தியிலே பொங்கலாற் பூரணமா மவ்வியல்பிற்
சிந்தையிலேன் செய்மாந் துளேன்.

2031. சிவத்திலே யுள்ளேன் சிவமாக வுள்ளேன்
அவத்தைக் கவகாச மில்லேன்—சுவத்தமாம்
போத சொரூபவருட் பூரணமோ ஞனுபவஞ்
சார்தலாற் சஞ்சலமில் லேன்.

2032. தானடிக்கே முற்றமுற்றச் சார்ந்த மனத்தாலே
ஏனவற்றுக் கெல்லா நா னேதிலனுய்ப்—போனவற்றிற்
சிந்தையிலே னன்றியினிச் சேர்பவற்றுஞ் சிந்தை
சிந்தையிறந் துள்ளேன் சிவத்து. [யிலேன்

2033. நித்தமுத்தி யாக நிலாவு சொரூபவருட்
புத்தமுத ஞானனு பூதியால்—இத்தமியேன்
பாசபந்த மானவறும் பாழ்ம்பிறவித் துன்பமறத்
தேசமைந்து நின்றேன் சிவத்து.

2034. நித்தமுத்தி யாக நிகழ்சொருபச் செம்பதத்திற்
செத்துயிர்த்த ஜீவியத்தாற் சிற்பரமாய்—இத்தமியேன்
புந்திக் கலக்கப் புணர்ப்பான பாசபந்தச்
சிந்தையிறந் துள்ளேன் சிவத்து.

2035. பார சொரூபப் பரமானு பூதியெனக்
காரமுத மாகவகத் தார்தலால்—கோரமாம்
பாச மயக்கமனப் பாழ்ம்பிறவித் துன்பமறத்
தேசமைந்து நின்றேன் சிவத்து.

2036. நினைத்த லொழுதமகிழ் நிம்மதிபெற் றுள்ளேன்
தனைத்தா னறியாத் தரத்தேன்—மனத்தா
லளப்பருங் காட்சியளித் தாண்டான் சொரூப
வளப்பெரும் போகம் மடுத்து.

2037. பத்தி யுணர்ச்சி பழுத்தவுளம் மெய்ஞ்ஞான
சித்தியுற நோக்குந் திருவிழியான்—முத்தியொளி
சூழப் பரப்புந் துரீய விலாசத்தில்
வாழப்பெற் றேனுன் மகிழ்ந்து.

2038 வாழ்வுதாழ் வொன்றும் மதிக்கிலேன் போகமா
ஆழ்வகையை யுண்டு கழிக்கின்றேன்—பாழிற்
புலனென கானற் புனலிலே வேட்கை
யிலனாக வுண்மைதெளிந் தேன்.

2039. யானென்னும் மோக விளிவரல்சேர் கன்மமொழிந்
தூனமற வுள்ளே னுபரதியில்—தேனியல்சேர்
நல்லார் நணுகுங்காற் பொல்லா ரகலுங்கா
லெல்லார்க்குங் கைதொழுவேன் யான்.

2040. புறக்கணிக்க வொண்ணாத போதமா வென்னுட்
சிறக்கவொளிர் கின்ற சிவத்தை—மறக்க
வியலாத மாட்சியா லெண்ணலுமாங் கின்றி
இயல்பாக வுள்ளே னினிது.

2041. அறிவான வாண்டா னருளாலே சுத்த
வறிவான வென்மெய் யறிந்தேன்—அறிவில்
விவர்த்தமாத் தோன்றுலகை வேறாகத் தேறேன்
சுவத்தமா வுள்ளேன் சுகத்து.

2042. இடமான வுண்மை யிதயமா வுள்ளேன்
படர்மாயை கற்பனையாப் பார்த்தே—திடமா
விளங்குசிவ ஞான விலாசமா மோனம்
உளங்கலந்த வாற்று லுயிர்க்கு.

2043. பவிசுபெற்றுத் தன்னடிநான் பாடுமா றுள்ளந்
தவிசிருக்கை யாகத் தரித்தே—சிவசொருபத்
தெள்ளியோன் செய்த திருவருளாற் கூர்மைசே
ரொள்ளியே னாக வுளேன்.

2044. உள்ளுணர்வா வென்னை யுடையான் பதஞ்சுட்டி
யுள்ள வொண்ணாத வொருமையால்—உள்ளலற
வுள்ளுவதாமோன வுணர்வொளிசேர் சிந்தையால்
உள்ளமா வுள்ளே னுளத்து.

குறிப்பு:—உடையான் பதத்தை உள்ளலற வுள்ளவாக, உள்ளுணர்வான வுள்ளத்தில் அவ்வுள்ள மாகவே யுறைகின்றேன் என்பதாம். உள்ளதல துள்ளவுணர்வுள்ளதோ (உள்ளது நாற்பது, மங்கலம்) எனவரும் பகவான் பாசுரம் ஈண்டு ஆராய்ந்தறியத்தக்கது.

2045. சுத்தவறி வாகச் சுடர்சொருப வாழ்விதயத்
தொத்தொளிர வென்று மொருபடித்தா— நித்தமுத்தி
என்னியல்பாத் தேறிப்பே ரின்ப வியல்வடிவா
மன்னியுளே னெங்கும் மலர்ந்து.

2046. போதங் கிளரவென் புந்தியுள்ளே புக்குமனக்
கேதங் கெடுத்தவருட் கேண்மையாற்— பேதப்
புலங்கடந்த மோனப் பொருள்சேர்ந்த சாந்தி
நலங்கிளர நானியல்கின் றேன்.

(கொச்சகக் கலிப்பா)

2047. ஆரூரா மோரூர் அழகியசிற் றம்பலவூர்
காரூர் மயக்கமனக் கற்பனைசே ராவிதயச்
சீரூராம் பேரூர் சிவசொருபச் சிற்பரவூர்
*ஊரூர் திரிந்துழன் றேற் குள்ளூரா வுற்றதே.

* ஊரூர் என்றது பல்வேறு கதிகளை.

2048. தூண்டா நின் றென்னைத் துரீய சொரூபமா
வாண்டா னருட்சிற் பதத்தி லரண்கண்டேன்;
ஏண்டாங்கு காலனுள்ளிட் டியாருங் குறுக
[வொண்ணு
மாண்பான காவலியல் வைப்புநான் வாழிடமே.

2049. இரண்டற வுள்ளத் தியற்சிற் பரமாத்
திரண்டொளிர் சுத்த சிவத்துவ மோனத்
தரந்தைசேர் மோக வகந்தை முனைப்பற்
றிருந்தியல் கின்றேன் இராப்பகல்கா ணேனே.

2050. சிவத்திலே சுத்தவருட் செல்வம் படைத்தேன்;
கவற்றுமகங் காரமனக் கற்பனு பேத
வவத்தைகளிற் சிந்தை யலமந்து மாழ்கேன்;
சுவத்தமா வுள்ளேன் சொரூபப் பதத்தே.

2051. ஞாலமேல் வந்து தடக்கலுற்ற சுத்தவருட்
கோலமணி யான குருபதத்திற் கோசமறச்
சாலவியல் பாகத் தழைத்தொளிர்மெய்த் தன்மையால்
வாலறிவா மோன வளம்பெறவாழ் கின்றேனே.

2052. நோதக்க சிந்தையற நூக்கியகண் ணேக்காலென்
பேதக் கலக்கமறப் பேர்வித்து முற்றவென்மே
லாதிக்கங் கொண்ட வருட்சிற் பிரானடிக்கீ
ழோர்துக்க மில்லே னுவக்கவாழ் கின்றேனே.

2053. தெற்றெனநன் குள்ளந் தெளிந்தியல் சாந்தானுபவப்
பெற்றியால் வாழ்கின்றேன் பெற்றிடமற் றென்று [மில்லேன்
முற்றமுழுச் செம்பொருளா மோனப் பரவுணர்வு
பற்றவகம் புக்கவருட் பார்ப்பான் பதத்திலே.

2054. உண்ணு ரமுத வுணர்வூற்ரு வுள்ளத்துத்
தண்ணு ரமைதி தழைத்தவருட் சிற்பதத்திற்
பெண்ணு ணலியல்லாப் பெற்றியால் வாழ்கின்றேன்
அண்ணு மலையா வகங்கிளரப் பொங்கவே.

2055. சுவத்தமார் வாழ்வு துலங்கலுற்றேன் கண்டீர்
அவத்தையிலே மோகித் தழுங்காது ஞானத்
தவத்திலே யென்மனத்தைச் சார்வித் தகப்பா
மூவித்தையறச் செற்றவென் ஞண்டவன்பா தத்தே.

2056. மோகவகங் கார முனேப்பறலாற் கற்பனு
பாகமா முப்புடிதீர் பார்வைசித் தித்தலால்
ஏகமா வுள்ளே னிரண்டிலேன் கைவல்ய
போகமார் சாந்தவியற் பூரணமாந் தற்பதத்தே.

2057. சிவத்துவஞ்சே ருண்மைத் தெளிவான மோனத்
தவத்தியலென் னுள்ளந் தழைத்தலால் யாதோ
ரவத்தையல் லாத வதீதப் பரத்திற்
சுவத்தமா வுள்ளேன் சுபாசுபந்தோ யாதே.

2058. அறிவுமெய் யன்பு மளைந்த சொரூப
நிறைவே யெனுதுமெய்ந் நெஞ்சமாப் பெற்றேன்
மறவி நினைவுமற மற்றுங்கே யொன்ருே
டுறவு துறவுமற வுள்ளேன்வே றற்றே.

2059. முட்டுப் படாதபர மோன வியாபகத்தை
மட்டுப் படுத்தும் மயக்கமனச் சிச்சடப்பொய்க்
கட்டறலாற் கண்டவருட் காட்சியால் வாழ்கின்றேன்
எட்டப் படாத விறைவனியற் செம்பதத்தே.

2060. துயக்கத்துக் கேதுவாச் சுட்டறிவாற் சுற்றும்
மயக்க வகந்தைமதி மாய்ந்தொழிந்த வாற்றல்
இயக்கமற வுள்ளத் திருக்கின்றேன் வேறு
வியக்க நயக்க வெறுக்கவொன் றின்றே.

2061. கிரந்திபே திக்கக் கிளர்சொருப மாண்பால்
அரந்தைசேர் மோக வனர்த்தப் பிறப்பைத்
துரந்தேன் மயக்கமனச் சூதா மிறப்பற்
றிருந்தேன் இதயத் தியற்பரமாத் தானே.

2062. தொற்றுபுலப் பாழிற் சுழல்வுறுவெம் பாசவகப்
பற்றுவிட் டாலன்றிப் பற்ற வொணுதசிவப்
பற்று லுயிர்க்கின்றேன் பற்றுமற் றென்றுமிலேன்
முற்றப் பரந்தமுழு மோனவியற் செம்பதத்தே.

2063. அயர்ச்சிக் கலக்கமா மற்றமில் லாத
வியற்சிற் பரமா வியல்கே வலத்து
முயற்சிப் படர்சேர் முனைப்பெழா வாற்றற்
றுயர்ச்சிக் கவலறத் தூங்குகின் றேனே.

2064. நினையவொண் ணுதமெய்ஞ் ஞேய சொருபத்
தனிமை யுணர்வே சமாதியா வுள்ளத்
தினியனு வுள்ளேன் இரண்டற்ற வாற்றல்
அனியமொன் றின்றி யதீதமா னேனே.

2065. மயர்வா மகந்தை மனப்பிழை யற்ற
வியல்வா லறிவா வியல்வதா லுள்ளத்
தயர்வுசோர் வில்லே னவாவச்ச மில்லேன்
உயர்வுதாழ் வெண்ணி யுயங்கலில் லேனே.

2066. கள்ளவுணர் வானமனக் கற்பனைசற் றுங்கலவா
துள்ளவுணர் வானமெய் யுள்ளமே யுள்ளூராத்
தெள்ளியபே ரின்பவருட் சீவியஞ்செய் கின்றேனுக்
கெள்ளளவும் போதத் தினிக்கலக்க மில்லையே.

2067. உரியாரை யுள்ளுணர்வா முள்ளத்திற் சற்றும்
பிரியாது வைக்கும் பிரானருளால் உண்மைக்
கரியாக முப்புடியின் கற்பனைகட் கெல்லாந்
* தெரிவான சிந்மாத் திரமாவுள் ளேனே.

* தெரிவு - **பிரதீதி,** தோற்றம்.

2068. திருவடித்தொண் டாற்றலாற் சித்தந் தெளிந்தேன்;
வெருவரத்தோன் றுற்ற விகற்பமயல் பேர
வொருபடித்தா வோங்குபர வுண்மையுணர் வுற்றேன்;
சொரூபவிலா சந்துலங்கு சூழலினுள் ளேனே.

2069. கள்ளமனஞ் சற்றுங் கடுகப் பெருதவுணர்
வுள்ளமே சொந்த வுறையுளா வென் றுமுளேன்;
வெள்ளவருள் வாழ்வா விசுத்தமோ னனுபவத்
தெள்ளமுத முண்டு சிவச்சீர்மை கண்டேனே.

2070. நெஞ்சமே யாக நிகழ்ச்சிற் பரவடிவை,
நெஞ்ச வெளியில்யா னென்னு நினைவெழா
விஞ்சைமோ னத்தால் விளங்க நினைந்துகொண்டு
செஞ்சவே சுத்தசிவச் செம்பதத்தி லுள்ளேனே.

2071. பொருந்துசிவ போதவருட் பூரணத்தே பொன்றக்
கரந்தொழிந்த வாற்ருற் களிசே ரகந்தை
நிரந்தரமா மோன நிலைக்களத்தே சாந்தி
சுரந்தெழவாழ் கின்றேன் சுலாவுமன மற்றே.

குறிப்பு :—சுலாவுதல் – சுழலுதல்.

## 79. முடிவுரை

(வெண்பா)

2072. கல்லாத வென்னைக் கருவியாக் கொண்டுசெஞ்
சொல்லா லனுபூதி சொல்வித்தான்—நல்லறிவு
சான்ருே ரவைக்களத்திற் சான்றமதிப் புற்ருெளிரத்
தான்ருனு நின்றகுரு தான்.

(கொச்சகக் கலிப்பா)

2073. செம்பரமா வுள்ள சிவச்சீர் வழுத்தலுற்றேன்;
என்பரமோ வல்ல விறைபெருமை; ஏழையர்சொல்
லம்பலத்துக் கேருதென் ருலும் இதயச்சிற்
றம்பலத்துக் கெய்தயதிவ் வற்பனேன் புன்மொழியே.

# அரும்பதவுரை

| | | | |
|---|---|---|---|
| 164 | விக்ஷேபம் | ... | அலைச்சல் |
| 164 | வெருவரல் சேர் | ... | பயப்படுத்துகின்ற |
| 202 | ஆசமனமாக | ... | உள்ளங்கையிலுள்ள ஒரு துளிர் தண்ணீராக |
| 210 | கொட்கும் | ... | சுழலச் செய்யும் |
| 342 | முசித்தது | ... | இளைத்தது |
| 364 | உக்கது | ... | உதிர்ந்து விழுந்தது |
| 403 | கயங்கு | ... | சோர்வடைகின்ற |
| | உயங்கல் | ... | வருந்துதல் |
| 415 | வீறுப்பு அளிப்பது | ... | தலைநிமிர்ந்து நடக்கச் செய்வது |
| 433 | இழுதையேன் | ... | இழிந்தவனான எனது |
| 494 | பிட்டனேன் | ... | பின் தங்கியவனான என் |
| 503 | ஆதன் | ... | பேதை |
| 536 | அணவு | ... | இணைந்த |
| 551 | மாழை | ... | திரட்சி |
| 589 | ஏடன் | ... | செவிடன் |
| 593 | மொய்வல்ல | ... | மொய்த்துக் கொள்ள வல்ல |
| 631 | கதிர்த்து | ... | ஒளி வீசி |
| 676 | உபய உணர்வு | ... | துவித (இருமை) உணர்வு |
| 693 | பங்கேருகம் | ... | தாமரை |
| 698 | ஏது | ... | காரணம் |
| 731 | புகக | ... | கொத்தாக |
| 733 | களைகண் | ... | காப்பாளனாக, ஆதாரமாக |
| 740 | பம்பு உலகமாம் | ... | பரவிய உலகமாகிய |
| 741 | தெவ்வர் | ... | பகைவர் |
| | பராய் | ... | புகழ்ந்து துதித்து |
| 749 | குரிசில் | ... | ஆடவருள் சிறந்தவன |
| 750 | அருக்கன் | ... | சூரியன் |
| 752 | விபவ அருள் | ... | ஐசுவரியம் போன்ற அருள் |
| 757 | கேத அலமரல் | ... | துக்கத்தால் அறிவு கலங்குதல் |
| 758 | சிலுகாம் | ... | தடை, துன்பம் |
| 759 | மஞ்சன் | ... | மைந்தன் |
| | உஞ்சலாட்டம் | ... | ஊஞ்சலாட்டம் |
| 761 | ஆங்கென்னும் | ... | காலதேசம் காட்டும் |

| | | | |
|---|---|---|---|
| 763 | பவம் | ... | பிறப்பு, இறப்பான உலகு |
| 766 | செவ்வே சேர்ந்தது | ... | செம்மையாகச் சேர்ந்தது. |
| 768 | புற்புதம் | ... | நீர்க்குமிழி |
| 770 | மோசித்து | ... | விடுவித்து |
| | ஓம்படை | ... | காவலாக |
| 771 | அருத்தி | ... | விருப்பம். இங்கே பக்தி |
| | ஒவாது | ... | விடாது |
| 779 | சைதன்யம் | ... | உணர்வு |
| 787 | நிராலம்ப | ... | எவ்விதப் பற்றுக்கோடு மில்லாத |
| | ஆசங்கை | ... | சந்தேகம் |
| 790 | தவிசு | ... | சிம்மாசனம் |
| 793 | புன்கண்மை | ... | அற்பத்தனம் |
| 808 | பம்பு அறிவால் | ... | எங்கும் பரவித் திரிகின்ற அறிவால் |
| 810 | மான்ற மயக்க மனம் | ... | தடுமாறச் செய்யும் மயக்கத்தையுடைய மனம் |
| 811 | சம்பிரம வாழ்வு | ... | சிறப்பான வாழ்வு |
| 813 | உலப்பு இலா | ... | அழிவில்லாத |
| | மலைப்பு | ... | திகைப்பு |
| | அசங்கம் | ... | சேராததால், பற்றற்ற |
| 814 | பொன்றலற்ற | ... | அழிவற்ற |
| 815 | வள்ளியன் | ... | வள்ளல் |
| | அற்ற | ... | நீங்கிய |
| 817 | எள்ள | ... | நகைக்க, பரிகசிக்க |
| 818 | ஒட்ப நுட்பம் | ... | அறிவும் நுண்ணிய தன்மையும் (கொண்ட) |
| 820 | ஒள்ளியான் | ... | ஒளி பொருந்தியவன் |
| | ஒட்பத்தால் | ... | அறிவினுல் |
| | வித்தக | ... | ஞானம்மிக்க |
| 821 | கரக்க | ... | மறைந்து போக |
| 830 | சிற்குறிப்பு | ... | ஞானக்குறிப்பு |
| 834 | எற்றி | ... | உதைத்துத் தள்ளி |
| 839 | வரோதயனு | ... | வரத்தால் தோன்றியவனுக |
| | திரோதம் | ... | மறைப்பு |
| 840 | நியாமகன் | ... | ஏவி நடத்துபவன் |
| | அயாவறு | ... | வருத்தத்தைப் போக்குகின்ற |
| 848 | இழிசினேன் | ... | கீழ்மகன் |
| 851 | இகவாது | ... | நீங்காது |
| | உகவால் | ... | மகிழ்வால் |
| | வாலாயம் | ... | வழக்கம் |

| | | |
|---|---|---|
| 855 | உயங்கல் | ... வருந்துதல் |
| 862 | சதோதயம் (சதா உதயம்) | ... எப்போதும் உதித்துக் கொண்டு |
| | எற்றென்று | ... ஏன் இப்படிச் செய்தோம் என்று |
| 867 | ஆதரிசனம் | ... எடுத்துக் காட்டு |
| 874 | உளக் கமலக்கட்டு | ... உள்ளமாகிய தாமரை மொட்டு |
| 875 | ஏல | ... பொருத்தமாக |
| 887 | தேசா | ... ஒளியாக |
| 916 | ஐயப்பன் | ... வியக்கத்தக்க பெருமையுடையவன் |
| | பொய்யப்பிய | ... பொய்மை நிரம்பிய |
| 922 | மோகத்தமம் | ... மோகமாகிய இருள் |
| 926 | விறல் | ... ஆக்கம் |
| 936 | தொழுத்தை | ... வேசி |
| 937 | உலப்பறு | ... அழிவற்ற |
| 939 | அண்மி | ... நெருங்கி |
| 940 | எய்த்தொழிந்த | ... சோர்ந்து அழிந்த |
| 941 | மலைவான | ... மனத்தை மலையச் செய்கிற |
| 943 | பராக்கு | ... எங்கோ கவனத்தைச் செலுத்தியிருத்தல் |
| 946 | பொருவறு | ... இணையில்லாத |
| 947 | சுவச்சம் | ... தெளிவாக |
| 948 | சிவ அம்புதி | ... சிவமாகிய கடலில் |
| 956 | அத்தியாசம் | ... வேறுபாடு |
| 957 | பராவுவதும் | ... போற்றுவதும் |
| 960 | ஆதீதம் | ... கடந்தது |
| 962 | உகத்தலுற | ... மகிழ |
| 967 | இளைந்தேன் | ... வருந்தினேன் |
| 968 | சீர்த்து | ... பெருமையையுடையது |
| 970 | ஆதரம் | ... அன்பு |
| | ஆனா | ... அழியாத |
| 971 | அலமரல் சேர் | ... (அறிவை) கலக்குகின்ற |
| 987 | கிழமை | ... உறவு, உரிமை |
| | சதிர்த்து | ... சாமர்த்தியமாக |
| 988 | உவாத்தி | ... ஆசிரியன் |
| 990 | தெருட்டி | ... தெளிவித்து |
| 996 | பிள்ள ஒணாத | ... பிளக்க முடியாத |
| 1003 | இகப்ப | ... கடக்க |
| 1014 | எற்ற | ... வேண்டாம் எனத் தள்ள |
| 1022 | அளி | ... கொடை, கருணை |

| | | | |
|---|---|---|---|
| 1028 | ஏஏ | ... | வியப்புக் குறிப்பு |
| 1039 | திரிதரவு | ... | மாறுபடுதல் |
| 1042 | அகன் | ... | அகன்ற |
| 1043 | சிதடன் | ... | அறிவில்லாதவன், குருடன் |
| 1052 | மயற்கற்பனை | .. | மயக்கத்தைத் தருகின்ற கற்பனை |
| 1054 | திகந்தம் | ... | திசைகளின் முடிவு வரை |
| 1055 | வரம்கெழு | ... | மேன்மை பொருந்திய |
| 1056 | மன்ற | ... | நிலைத்து |
| 1058 | அவத்தனேன் | ... | துயருற்றிருந்த நான் |
| 1062 | வாய்த்தது | ... | ஏற்பட்டது |
| 1067 | ஊறு | ... | துன்பம் |
| | தேறு | ... | தெளிவு |
| 1069 | மோத | ... | ஆனந்தம் |
| 1072 | பொலங்கலம் | ... | பொன்னுபரணம் |
| 1087 | நக்கது | ... | சிரித்தது |
| 1089 | பேது | ... | கலக்கம் |
| 1108 | உலக்க | ... | அழிய, ஒழிய |
| 1122 | தூணமா உள்ள | ... | தூண்போல் உறுதியாக உள்ள |
| | வேணவா | ... | ஆசைப் பெருக்கம் |
| 1124 | ஒரு படித்தா | ... | ஒரே தன்மையாக |
| 1128 | வணம் | ... | வண்ணம் |
| 1157 | காழ் | ... | உறுதி |
| 1161 | மதர்த்து | ... | களித்து |
| 1165 | பெட்டு ஒழுக | ... | விரும்பி ஒழுக |
| 1168 | விரிய | ... | மலர |
| 1184 | விஞ்சை | ... | வித்தை |
| 1186 | தட்க | ... | தடுக்க |
| | புட்கலம் | ... | நிறைவு |
| | நட்கலுறு | ... | நெருங்குதலுற்ற |
| 1193 | அவரோகணம் | ... | இறங்குதல் |
| 1196 | ஏக்கறவு | ... | இறுமாப்பு |
| 1201 | உன்மனீ பாவம் | ... | பித்தரைப்போல் எதனையும் உள்ளத்திற் கொள்ளாத நிலை |
| 1210 | மை | ... | குற்றம் |
| | வைப்பு | ... | சேமநிதி |
| 1257 | மடாநின்றது | ... | பருகிநின்றது |
| 1265 | செறிவது அன்றி | ... | ஒன்றுபடுவதைத் தவிர |
| 1271 | வற்கெனவே | ... | வெட்டும் ஒலிக்குறிப்புச் சொல் |
| 1276 | சிட்டர் (சிஷ்டர்) | ... | ஒழுக்கம் நிறைந்த சான்றோர் |
| 1278 | பெட்டாங்கு | ... | விரும்பியபடியெல்லாம் |

| | | |
|---|---|---|
| 1290 | ததாகாரம் | ... அவ்வடிவாகவே |
| 1298 | வியோகம் | ... விடப்பட்டது |
| 1302 | அரந்தை | ... துன்பம் |
| 1304 | திறப்பாட்டால் | ... திறனால் |
| 1315 | கில்லுறு | ... துன்புறுத்துகின்ற |
| | வகிர்பட்டு | ... பிரிவுபட்டு |
| 1316 | எய்த்தேன் | ... இளைத்தேன் |
| 1320 | நிசித்தம் | ... புறக்கணிக்கத் தக்க |
| 1323 | வட்கி | ... கெட்டு |
| 1325 | நான் என் குறி குணம் | ... நான் இத்தேகம் என்ற உபாதி |
| 1342 | கதுவல் | ... நீங்காது பற்றுதல் |
| 1356 | கடுகி | ... விரைந்து |
| 1362 | துருகம் | ... ஊகிக்க முடியாத |
| 1446 | சம்பிரம | ... மிகவும் வியக்கத் தக்க |
| 1449 | வெள்ளை | ... கபடமற்ற |
| 1456 | சதாச்சிரய வாழ்வு | ... எப்போதும் அணைந்தருகிருக்கும் வாழ்வு |
| 1482 | சுவேத்தியமா | ... நன்றாக அறியப்பட வேண்டியதாக |
| 1533 | புத்தத்துவம் | ... அறிந்த தன்மை |
| 1556 | அளைதலுற்ற | ... எப்போதும் ஈடுபடுகின்ற |
| 1581 | உதகரிக்க | ... உதாரணமாகக் காட்ட |
| 1649 | உஞற்ற | ... முயற்சி செய்ய |
| 1652 | வியன் | ... மேலான |
| 1665 | குதிர்ந்தேன் | ... செம்மையான நிலையுற்றேனா |
| 1671 | குடிலப்பட்டார் | ... கோணல் வழியில் ஈடுபட்டார் |
| 1686 | விகற்பு | ... வேறுபாடு |
| 1705 | விராமம் | ... ஓய்வு |
| 1749 | நடலை | ... துன்பம் |
| 1832 | அரதை | ... ஈடுபடாமை |
| 1843 | நூழில் செய்த | ... அழித்த |
| 1850 | துங்க | ... மேலான |
| 1895 | கழுது | ... பிசாசு |
| 1911 | கழுமல | ... கலத்தல் |
| 1945 | புணரி | ... கடல் |